விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

பக்கங்கள்: 32

* விளம்பரங்கள்
* வாழ்த்துகள்

மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:

Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 42 ஞாயிற்றுக்கிழமை 15.09.2019 Sunday 15th September 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com



# எழுக தமிழ் எனது கட்சி சார்ந்ததல்ல!

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும் முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்குப் பிரத்தியேக பேட்டி

## தமிழர்களின் உரிமைக்கான முழக்கமே!

கூட்டமைப்பு எதிர்ப்பு

புளொட் மௌனம்

ரெலோ பூரண ஆதரவு

நாங்கள் எதிர்பார்த்ததைவிட மக்களின் எழுச்சி எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. தமிழ் நாட்டிலிருந்து பல அமைப்புக்கள் தங்களுடைய ஆசியை வழங்கியிருக்கின்றார்கள். ஆதரவைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்கு கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

புலம்பெயர் நாடுகளிபலிருந்தும் மக்கள் தங்களின் ஆசிகளையும் ஆதரவையும் நல்கியிருக்கின்றார்கள். உள்ளூரிலும் எத்தனையோ அமைப்புகள் தங்களுடைய ஆதரவைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே இந்த எழுக தமிழ் நல்லதொரு நிகழ்வாக அமையும் என்று நம்புகின்றேன்.

இது ஒரு கட்சி சார்பில்லாத கூட்டம். ஒரு பேரணி. ஆனால் இதற்கு கட்சி சார்பான வியாக்கியானத்தைக் கொடுத்து சிலர் இதனை தவறாக எதிர்ப்புக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் கூறுவது என்னவென்றால், தயவு செய்து தமிழ் மக்களின் வருங்காலத்தோடு விளையாடாதீர்கள். ஏனென்றால் என்னுடைய கட்சி ஏதோ முன்னிலை வகிக்கப்போகின்றது, இவரை விட்டால்

02 ஆம் பக்கம் பார்க்க



## ஜனாதிபதித் தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணைவோம்

செயற்குழுவின் மூலம் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி வேட்பாளரை வெற்றி பெற செய்வதற்கு அனைத்து ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்களும் ஒன்றாக உள்ளதாக அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

கட்சிக்குள் சிக்கல்

02 ஆம் பக்கம் பார்க்க



## இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைவது சாத்தியமில்லை!

அமைச்சர் சஜித் பிரேமதாச சிறுபான்மை கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் நெருக்கடி நிலைமை தீர்க்கப்படும் என அமைச்சர் பி.ஹெரிசன் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர

02 ஆம் பக்கம் பார்க்க

## போட்டியிடும் வேட்பாளரை தெரிவு செய்வது கட்சியே!

### மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும் – பவ்ரல்

**வவுனியா நிருபர்**

இலங்கையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை கட்சியே தெரிவு செய்கிறது. இதனால் அந்த வேட்பாளர் நாட்டுக்கு பொருத்தமானவரா என மக்கள் சிந்தித்து செயல்பட வேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராட்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் இன்று எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஜனாதிபதித் தேர்தலில் உள்ள முக்கியமான பெரிய சவால்களில் ஒன்று போட்டியிடும் வேட்பாளர்களில் இருந்து ஒருவரை தெரிவு செய்ய வேண்டும். போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வது மக்களல்ல. கட்சியே தெரிவு

02 ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர்–கனிமொழியிடையே கலந்துரையாடல்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தி.மு.க துணைத் தலைவியும் இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பு அலரி மாளிகையில் இடம்பெற்றது.

சந்திப்பில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன், திராவிட முன்னேற்ற கழகத்தின் துணைத் தலைவரும் முன்னாள் கேரள இராஜாங்க அமைச்சர் அப்துல் மஜீத், இந்திய சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முஹம்மத் அபூபக்கர், முன்னாள் பாராளுமன்ற (லோக் சபா) உறுப்பினர் எம். அப்துல் ரஹ்மான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினரும் தமிழ் நாடு வக்பு சபை உறுப்பினர்ருமான பாத்திமா முஸஃப்பர், முன்னாள் இந்திய சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

02 ஆம் பக்கம் பார்க்க



## நாளை திறக்கப்படவுள்ளது தாமரைக் கோபுரம்

தாமரைக் கோபுரம் 16 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது, இதன் நினைவாக முத்திரையும் வெளியிடப்படவுள்ளது.

கொழும்பு, டி. ஆர். விஜயவர்தன மாவத்தையில் பேர வாவிக்கு மிக அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தெற்காசியாவின் உயரமான கோபுரமாக அமையப்பெற்றுள்ள தாமரை கோபுரம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கோபுரத்தின் நினைவாக அன்றைய நாள் இலங்கை தபால் திணைக்களத்தினால் முத்திரை மற்றும் தபால் உறை வெளியிடும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த முத்திரை 45.00 ரூபா பெறுமதியில் வெளியிடப்படவுள்ளது. இதனை கலைஞர் பசுபிட்டியேஜ் இசுரு சதுரங்கா உருவாக்கியுள்ளார்.

356 மீற்றர் உயரமான இந்த தாமரைக் கோபுரம் 104 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் 300 மீற்றர் உயரமான ஈபில் கோபுரத்தினை விட உயரமாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் ஆண்டு சீன நிறுவனத்துடன் இணைந்து இதன் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி 2019 ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் நிறைவுற்று திறந்து வைக்கப்படுகிறது.

நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ, பராளுமன்ற உறுப்பினர்கள், சீன தூதுவர் உட்பட வெளிநாட்டு தூதரக அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## உலகின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் மீது தாக்குதல்



அரேபியாவில் உள்ள ஆரம்கோ எண்ணெய் நிறுவனங்கள் மீது விமானம் மூலம் தீவைத்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சவுதி அரேபியாவில் அப்குவைக் என்ற நகரத்தில் கிழக்கு மாகாணத்தில் எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலை உள்ளது. இதை சுருக்கமாக ஆரம்கோ என்பார்கள். இது தான் உலகின் மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையாகும்.

இங்கு பயங்கர வெடி சப்தத்துடன் தீவிபத்தும் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவம் நேற்று அதிகாலை 3 மணிக்கு நடைபெற்றது. இங்கு 12 முறை குண்டுகள்

02 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை-இந்திய நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவை மேலும் பலப்படுத்த வேண்டும்



இலங்கை - இந்திய நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு உறவை மேலும் பலப்படுத்த வேண்டும் என அமைச்சர் ராஜித்த சேனாரத்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இலங்கை - இந்திய நாடுகளின் நட்பு ரீதியான கலந்துரையாடல் கொழும்பில் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர், இன்றைக்கு 2500 ஆண்டகளுக்கு முன்னர் விஜய குமார அரசனின் வருகையோடு இலங்கை இந்திய உறவு ஆரம்பித்தாக கூறினார்.

ஆகவே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பௌத்த மதத்தைப் மேலும் வலுப்படுத்த முடியும் என சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார்.

02 ஆம் பக்கம் பார்க்க

## குமார் சங்ககாரவிற்கு ஆஸியில் கிடைத்த கௌரவம்!



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சங்ககார வரலாற்று புகழ்மிக்க அவுஸ்ரேலியாவின் மெல்போர்ன் கிரிக்கெட் கிளப்பின் தலைவராக பொறுப்பேற்கவுள்ளார்.

தற்போதைய தலைவர் செப்ரெம்பர் மாதத்தில்

02 ஆம் பக்கம் பார்க்க



## மழை தொடரும்

நாட்டில் தற்போது காணப்படும் மழை நிலைமை அடுத்த சில நாட்களுக்கு மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்

02 ஆம் பக்கம் பார்க்க

## வேற்றுக் கிரகத்தில் மனிதன் குடியேறும் சாத்தியம்

### பூமியைப் போன்று மற்றொரு கிரகத்தில் நீர்

பூமியைப் போன்று தட்பவெப்ப நிலையைக் கொண்ட மற்றொரு கிரகமான K2-18இல் நீர் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


பூமியிலிருந்து 110 ஒளியாண்டு தொலைவில் இருக்கும் K2-18b என்ற கிரகம், பூமியைப் போல் 8 மடங்கு பெரிதானது.



இதுவரை கண்டறியப்பட்ட கிரகங்களிலேயே உயிரினங்கள் வசிப்பதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையைக்

02 ஆம் பக்கம் பார்க்க

## விருதுக்குத் தேர்வு





இலங்கை கலாசார அலுவலக திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2019 ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது வழங்கலுக்கான இறுதி மதிப்பீட்டின்படி பலாங்கொடை வலேபொட தோட்டத்தைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் சிறப்புக்கலை மாணவன் சி.அருள்நேசன் அவர்களால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட 'கல்வியியல் கருத்துக் கோவை' நூல் சிறந்த சுயநானாவித இலக்கிய தொகுப்பிலிருந்து தேசிய விருதுக்காக விதந்துரைக்கப்பட்ட மூன்று நூல்களில் ஒன்றாக பரிந்துரைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் 2800 மும்மொழி நூல்கள் விருதுக்கு விண்ணப்பித்திருந்தபோதும் இறுதியாக 108 மும்மொழி சார்ந்த நூல்கள் விருதுக்கு பரிந்;துரை செய்யப்பட்டது. எனவே தமிழ் பிரிவில் 26 பேரைக் கொண்;ட மதிப்பீட்டுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு இறுதிச்சுற்றுக்;கு தெரிவான 32 சிறந்த தமிழ் நூல்களில் ஒரு நூலாக இந்நூல் இடம்பெற்றுள்ளமை முக்கியமானதாகும்.

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையால் வீதிகள் புனரமைப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் சேதமடைந்த வீதிகளை புனரமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட்டார உறுப்பினர்கள் சபையில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக வருடாந்த வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் உக்கிளாங்குளம், கூமாங்குளம், தோணிக்கல், எல்லப்பர் மருதங்குளம் ஆகிய கிராமங்களின் வீதிகளின் புனரமைப்பே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனை பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் மற்றும் வட்டார உறுப்பினர்கள் கண்காணித்து வருகின்றனர்.



## தமிழ் மக்களின் இருப்புக்காக எழுக தமிழில் அனைவரும் கலந்து கொள்வோம்!

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இன்று வரை எட்டப்படவில்லை என்பதுடன் இறுதிப் போரின்போது நடைபெற்ற யுத்தக் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் மனித குலத்திற்கு எதிராக நடாத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் உண்மைகளை கண்டறிந்து நீதி நிலைநாட்டப்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியும் இன்று வரை வழங்கப்படவில்லை அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை தெரிவிப்பதற்கு அரசாங்கத்திற்கு இன்னமும் துணிவு வரவில்லை.

அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணக்க அரசியலின் மூலம் கடந்த நான்கு வரவு செலவுத்திட்டத்திலும் பாதுகாப்பு தரப்பினரின் செலவீனங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகரித்த நிதிக்கும் ஆதரவு அளித்துக் கூட எமது மக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை மாறாக கையெடுத்து வணங்கவேண்டிய புத்த பெருமானை நில ஆக்கிரமிப்பாளராகவும் அரச அனுசரணையுடன் வடக்கு கிழக்கில் தமிழர்கள் தாயக பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத்தின் சின்னமாகவும் இலங்கை அரசாங்கம் முன்னிலைப்படுத்துகின்றது. புதிய அரசாங்கம் இரண்டு பிரதான கட்சிகளை உள்ளடக்கியதாக உள்ளது அதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கண்டுவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கனவுகள் கூட தகர்த்தெறியப்பட்டுள்ளது.ஆகவே எமது நாளாந்த பிரச்சினை முதல் அரசியல் தீர்வுவரை எந்தவொரு விடயமும் தீர்க்கப்படவில்லை என்பதை இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் மிகவும் வலிமையுடனும் உறுதியுடனும் ஜனநாயக ரீதியிலும் போராடுவதற்கு தமிழ் மக்கள் பேரவை ஒன்றே எமக்கு இன்று இருக்கும் ஒரு பிரதான தளமாகும்

அரசியல் கட்சிகளுக்கு ஒரு முக்கிய வேண்டுகோள் உங்களின் கட்சிகளின் இருப்புக்காக நீங்கள் எத்தகைய நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்தாலும் தமிழ் தேசிய இனத்தின் உரிமைக்காகவும் அதன் இருப்பினையும் அதன் அடையாளத்தையும் நாம் தக்கவைப்பதற்கு நீங்கள் தொடர்ந்தும் தமிழர் தாயகத்தில் அரசியல் நடவடிக்கை முன்னெடுப்பதற்கு எழுக தமிழில் இணையவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

## முள்ளிப்பொத்தானை விகாரையின் வளாகத்தில் இரத்ததான முகாம்



**ஹஸ்பர் ஏ ஹலீம்**

தம்பலகாம பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை விகாரையில்உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் இரத்ததான நிகழ்வொன்று இடம் பெற்றுள்ளது

குறித்த இரத்த முகாமானது கிண்ணியா தளவைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பலரும் இரத்தங்களை வழங்கி இரத்த வங்கி பிரிவுக்கு ஒத்துழைப்பு நல்கினார்கள்.

இதனை கிண்ணியா தளவைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா, டாக்டர் சிதாரா ஆகியோர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## இங்கிலாந்தில் உயர்கல்விக்காக செல்லும் இலங்கை மாணவர்களுக்கு புதிய திட்டம் அறிமுகம்

தங்களது உயர் கல்விக்காக இங்கிலாந்தைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு புதிய 'பட்டதாரி குடிவரவு பாதை' ஒன்றை இங்கிலாந்து அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி அவர்கள் படிப்பை நிறைவு செய்தபின்னர் இரண்டு ஆண்டுகள் அந்த நாட்டில் தங்குவதற்கும் வேலை செய்வதற்கும் அனுமதிக்கிறது என்று பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

புதிய திட்டமானது, இங்கிலாந்தில் தங்கள் உயர் கல்வியைத் தொடரும் மாணவர்கள் தங்கள் கல்வி முடிந்ததைத் தொடர்ந்து இரண்டு வருடங்கள் தங்குவதற்கும் வேலை செய்வதற்கும் அல்லது வேலை தேடுவதற்கும் அனுமதிக்கிறது என்று அது அறிக்கையில் கூறியுள்ளது. திறமையான சர்வதேச மாணவர்கள் தங்கள் படிப்பை வெற்றிகரமாக முடித்தவுடன் இரண்டு ஆண்டுகள் இங்கிலாந்தில் தங்குவதற்கு இது அதிக வாய்ப்புகளை வழங்கும்.

அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி வழங்குநரிடம் பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்த அனைத்து மாணவர்களுக்கும் இந்த பாதை கிடைக்கும். புதிய திட்டம் 2020 - 2021 கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்.

உலகெங்கிலும் உள்ள சிறந்த மாணவர்களை ஈர்ப்பதில் இங்கிலாந்து கவனம் செலுத்துகிறது மற்றும் உறுதிபூண்டுள்ளது என்பதை பட்டதாரி பாதை நிரூபிக்கிறது, மேலும் இங்கிலாந்து மற்றும் அதன் பொருளாதாரத்திற்கு சர்வதேச மாணவர்களின் பங்களிப்பு குறித்து நாம் வைக்கும் மதிப்பை நிரூபிக்கிறது என பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் ஓபி தெரிவித்தார்.

வெளிநாடுகளில் படிக்க விரும்பும் இலங்கை மாணவர்களுக்கு இது ஒரு சிறந்த செய்தி. இது அவர்களுக்கு முதல் தர இங்கிலாந்து கல்வியைக் கட்டியெழுப்புவதற்கான நெகிழ்வுத்தன்மையைக் கொடுக்கும். இது இங்கிலாந்து மற்றும் இலங்கைக்கு கிடைத்த வெற்றியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய பட்டதாரி பாதை திறமையான சர்வதேச மாணவர்கள் இங்கிலாந்தில் படிக்கலாம், பின்னர் வெற்றிகரமான வாழ்க்கையை உருவாக்க செல்லும் போது மதிப்புமிக்க பணி அனுபவத்தைப் பெறலாம். இது எங்கள் உலகளாவிய கண்ணோட்டத்தை நிரூபிக்கிறது, மேலும் சிறந்த மற்றும் பிரகாசமானவற்றை நாங்கள் தொடர்ந்து ஈர்ப்பதை உறுதி செய்யும் என்று பிரிட்டிஷ் உள்துறை செயலாளர் பிரிதி படேல் கூறினார்.

பெரும்பாலும் 'பிந்தைய படிப்பு வேலை விசா' என்று குறிப்பிடப்படும், புதிய பட்டதாரி பாதை 2020/21 மாணவர்களை இங்கிலாந்து பல்கலைக்கழகங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக தொடங்கப்படும். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, விசாவின் திறன் தேவையை பூர்த்தி செய்யும் ஒரு வேலையைக் கண்டால் அவர்கள் திறமையான பணி விசாவிற்கு மாற முடியும். மேலதிக விபரங்கள் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

விசா பட்டம் பெற்ற பிறகு வேலை செய்ய அல்லது வேலை தேடுவதற்கான வாய்ப்புகளை வழங்கும். இந்த புதிய விசாவில் உண்மையான, நம்பகமான மாணவர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள் என்பதை உறுதி செய்வதற்கான பாதுகாப்புகளும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மழை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு, ஊவா, வடமத்திய, மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில்75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென் மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் புத்தளத்தில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

### குமார்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தனது பதவியிலிருந்து விலகியவுடன் சங்ககார அந்தப்பதவியை ஏற்றுக்கொள்வார்.

மிகவும் பழமைவாத மிகவும் மதிப்புமிக்க மற்றும் பிரத்தியேகமான கிரிக்கெட் கிளப்என்ற பெருமையை பெற்றுள்ள இந்த அணி, தனது பாரம்பரியத்தை மீறி குமார் சங்ககாரவை 2019- 2020 ஆம் ஆண்டுக்கான தலைவராக தேர்ந்தெடுத்து கௌரவப்படுத்தியுள்ளது.

232 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட மெல்போர்ன் அணிக்கு வெள்ளையினத்தவர் அல்லாத ஒருவர் தலைவராக தேர்ந்டுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

தனது சொந்த நாட்டில் கிடைக்காத கௌரவம் மற்றும் மரியாதையை அந்நிய தேசமொன்றில் சங்ககார பெற்றுக்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

இருந்தாலும் ஜனாதிபதி தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### இரண்டு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் சுவை மற்றும் அனுபவம் தொடர்பில் நன்கு அறிந்தவராவார் எனவும் பி.ஹெரிசன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் ஒருபோதும் கட்சியின் சின்னத்தை மாற்றுவதற்கு இணங்க போவது இல்லை எனவும் அதனால் குறித்த இரண்டு கட்சிகளும் ஒன்றாக இணைவது சாத்தியமில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### உலகின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

வெடிக்கப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர். இதனால் நிறுவனத்தை சுற்றி கரும்புகை சூழ்ந்துள்ளது. இந்த பயங்கர தீவிபத்தால் அப்பகுதியில் உள்ள மக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த தீவிபத்தை ஆளில்லா விமானம் ஏற்படுத்தியதாக கூறப்படுகிறது.

ஆலைக்கு தீ வைத்த விமானம் குறித்தும் தீயை வைக்க வைத்த நபர் யார் என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் ரியாத்திலிருந்து 150 கி.மீ. தூரத்தில் உள்ள குரைஸ் எண்ணெய் வயலிலும் தீவிபத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### வேற்று...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கொண்டுள்ள, பூமி அல்லாத ஒரேயொரு கிரகம் இதுவாகும்.

K2-18 என்ற நட்சத்திரத்தைச் சுற்றி வரும் அந்த கிரகத்தில் தண்ணீர் இருப்பதை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம், மற்றும் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் விண்கல தொலைநோக்கிகள் கண்டறிந்துள்ளன.

அந்த நீரும் திரவ வடிவில் இருப்பதற்குத் தகுந்த தொலைவில் தனது நட்சத்திரத்தை K2-18b கிரகம் சுற்றி வருகிறது. அந்த வகையில், மனிதர்கள் வசிப்பதற்குத் தேவையான திரவ நிலை நீரைக் கொண்டிருக்கக் கூடிய, பூமி அல்லாத ஒரே கிரகம் K2-18b என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

மனிதர்களை வேற்று கிரகத்தில் குடியேற்றுவதற்கான ஆய்வில், இந்த கண்டுபிடிப்பு மிக முக்கியமான திருப்புமுனையாக அமையும் என Nature Astronomy அறிவியல் இதழில் வெளியாகியுள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

### இலங்கை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அதனுடன் பின்னி பிணைந்த கலாச்சாரம், கலை மற்றும் கலை நுட்பங்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கிடைத்தாகவும் அமைச்சர் கூறினார்.

முன்னர் தென்னிந்திய அரசர்கள் யுத்தத்தில் பாதிப்புகளை எதிர்கொண்ட போது இலங்கையின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டதாகவும் வரலாறுகளில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோல் இலங்கை அரசர்களும் யுத்தத்தின் போது இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதாகவும் அமைச்சர் கூறினார்.

பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது முதல் இல்கை இந்தியாவுடன் நெருங்கிய உறவை கடைப்பிடிப்பதாக தெரிவித்த அவர், குறிப்பாக இந்திய சுதந்திரத்துக்கு வித்திட்ட மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு ஆகியோருடன் அப்போது டீ.எஸ்.சேனாநாயக்க சுமுகமான உறவை பேணியதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவில் அரசியல் கட்சிகள் உருவாக பேராசிரியர் கொல்வின் ஆர்.சில்வாவும் பங்களிப்பு வழங்கியதாக தெரிவித்த அமைச்சர் எனவே முன்பு போன்றே தற்பாதும் இலங்கையுடனான இந்தியாவின் நெருங்கிய உறவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வை ஒழுங்கு செய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் அமைப்பையும் அமைச்சர் பாராட்டினார்.

### பிரதமர்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும் பலாலி விமான நிலையம் யாழ்ப்பாணம் விமான நிலையமாக பெயரிடப்படும். இங்கிருந்து அடுத்த மாதம் (ஒக்டோபர்) இந்தியாவின் முக்கிய நான்கு நகரங்களுக்கிடையில் மேற்கொள்ளப்படவுள்ள நேரடி விமான சேவை மற்றும் இதற்காக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து பிரதமர் இதன் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்து கொண்டார்.

### போட்டியிடும்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

செய்கிறது. கட்சி வேட்பாளராக நிறுத்துபவரையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும். கட்சி முன்னிறுத்தும் வேட்பாளர் மக்களுக்கு தேவையானவரா என்பது தெரியாது. இது மக்களுக்கு உள்ள பெரிய சவால். தாய்வான் போன்ற நாடுகளில் வேட்பாளரின் தகுதி என்ன, அவருடைய திறமை என்ன, கல்வி நிலை உள்ளிட்ட விபரங்கள் ஒவ்வொரு வாக்களரின்ன் வீட்டுக்கும் அனுப்பப்படும். ஆனால் இங்கு அப்படியில்லை.

கட்சி நியமிப்பவருக்கு தான் நாங்கள் வாக்களிக்கின்றோம். இதனால் சரியான ஒருவரை தெரிவு செய்ய முடியுமா என்ற சவால் மக்களுக்கு இருக்கிறது. கடந்த தேர்தல்களைப் போல் அல்லாது மக்கள் சிந்திக்க வேண்டும். கட்சி என்று பாராது தாம் போடும் வேட்பாளர் யார் என்று பார்க்க வேண்டும். அவருக்கு இந்த நாட்டை ஆட்சி செய்யக் கூடிய தகமை இருக்கிறதா?, நாட்டை கொண்டு நடத்தக் கூடிய திறமை இருக்கிறதா?, மக்களின் தலைவராக செயற்படக் கூடியவரா என்று சிந்திக்க வேண்டும். அவ்வாறு வாக்காளர்கள் யோசித்தால் மட்டுமே சரியான ஒரு வேட்பாளரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

### எழுக...

**01 ஆம் பக்கம் தொடர்ச்சி** அப்படி நடந்துவிடும் என்று நினைத்து நடவடிக்கைகள் எடுப்பது சிறுபிள்ளைத்தனம்.

ஏனென்றால் கட்சி சம்பந்தமாக நான் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் தமிழ் மக்கள் பேரவை தன்னுடைய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் கன வித்தியாசங்கள் இருக்கின்றன. நானும் ஒரு இணைத்தலைவர். என்னுடன் டாக்டர் லக்ஷ்மண் ஒரு இணைத்தலைவர். வசந்தராஜா ஒரு இணைத்தலைவர். ஆனால் இது சம்பந்தமாக நடவடிக்கைகளில் இறங்குபவர்கள் தமிழ் மக்கள் பேரவையோடு சம்பந்தப்பட்டவர்கள், அதிலே இருப்பவர்கள். அவர்கள் அங்கும் இருக்கலாம். இங்கும் இருக்கலாம். பல கட்சிகளிலும் இருக்கலாம்.

ஆனால் அதற்காக அவர்களுடைய கட்சி சார்பைக் காட்டி தமிழ் சம்பந்தமாக ஒரு விடிவை நோக்கி பயணிக்கும் எங்களுடைய யாத்திரையை நிறுத்த வேண்டாம். தடை செய்யவேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன். இதிலே மக்கள் பலவிதமான எண்ணங்களை, வருத்தங்களை, அபிலாசைகளை மனதிலே வைத்துக் கொண்டு வெளிக்காட்ட முடியாமல் இருக்கின்றார்கள். இந்த விதத்திலே இந்தப் பேரணியும், கூட்டமும் மக்களுக்கு உள்எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு, அதனைத் தெரியப்படுத்துவதற்கு, உலகம் அறிவதற்கு ஏற்றவாறு அதனைச் செயற்படுத்துவதற்கும் ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. அதனை மக்கள் வெளிக் கொண்டு வருவதை எவருமே தடை செய்ய வேண்டாமென்றுதான் நான் மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன். மக்கள் பலவிதமான இடர்களுடன் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்களுக்கு நாங்கள் கூறுவது என்னவென்றால் இதிலே பங்குபற்றுங்கள், அந்தப் பங்குபற்றுதல் மூலமாக உங்களுடைய மனோநிலையை தெரிவியுங்கள். ஏனென்றால் நாங்கள் எத்தனைபேர் இதில் சேர்கின்றோமோ, பங்குபற்றுகின்றோமோ அந்தளவிற்கு மக்களுடைய கரிசனையை, அவர்களுடைய மனோநிலையை, அவர்களுடைய ஏக்கங்களை, வருத்தங்களை நாங்கள் பிரதிபலிக்க முடியும். மக்கள் எந்தளவிற்கு இதில் பங்குபற்றுகின்றார்களோ அது தமிழ் மக்களினுடைய மனோ நிலையின் பிரதிபலிப்பாகத் தான் அது அமையும். அந்தளவிற்கு எங்களுடைய ஆதரவைத் தெரிவிப்பதன் மூலம் தமிழ் மக்கள் ஒன்றித்து ஒருமித்து தங்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வேண்டி நிற்கின்றார்கள் என்ற செய்தியை உலகத்திற்கும் அரசாங்கத்திற்கும் நாங்கள் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

நாங்கள் எந்தநேரத்திலும் வன்முறையில் ஈடுபடுபவர்கள் அல்ல. வன்முறைகளோடு சேர்ந்தவர்கள் அல்ல. நாங்கள் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்றோம். அந்த உரிமைகளுக்குப் போராடும் போது மக்களின் மனோநிலை அந்த உரிமைகள் தேவை என்ற எண்ணத்தை வெளிப்படுத்துவதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆகவே தமிழ் மக்கள் பெருவாரியாக இந்தக் கூட்டத்திலே, பேரணியிலே சேரவேண்டும். தங்களுடைய கருத்துக்களை, எண்ணங்களை, வருத்தங்களை பிரதிபலிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போதைய காலகட்டத்திலே உலகளாவிய தமிழ் மக்களிடையே ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அதாவது, எழுபது வருடங்களாக எதுவுமே நடைபெறவில்லை. அரசாங்கங்கள் எங்களை ஏமாற்றிக் கொண்டு வருகின்றது என்பது உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்ல, புலம்பெயர் மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரியும். அந்த நிலையிலே தங்களுடைய ஆதரவினை நல்கி வருகின்றார்கள். அது வரவேற்கத்தக்கது. ஏனென்றால் தமிழ் மக்கள் என்ற முறையில் நாங்கள் எல்லோரும் ஒரு மொழியால் அனைத்துத் தமிழ் மக்களும் இணைக்கப் பட்டுள்ளோம்.

சிலர் தமிழ்மொழி தெரியாதவர்கள் கூட அந்தப் பாரம்பரியத்தை நன்றாக அறிந்தவர்கள் தமிழர்களாக விளங்குகின்றார்கள். ஆகவே அவர்கள் எல்லோரும் இது சம்பந்தமாக ஒரு கரிசனையை வெளிக்காட்டி வருகின்றார்கள். அந்தவிதத்தில் தான் தமிழ்நாட்டில் இருக்கும் பல கட்சிகள், அமைப்புகள் தங்களுடைய ஆதரவை வெளிக் காட்டியிருக்கின்றார்கள். அவர்கள் எல்லோருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.அதேநேரத்தில் நாங்கள் செல்லும் பாதையில் அவர்கள் எல்லோருடைய ஆன்மீக உணர்வும், ஆதரவும் எமக்குக் கிட்டுமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கடையடைப்பு கோரிக்கையை நிராகரிக்கின்றோம்

## வவுனியா. வர்த்தகர் நலன்புரிச் சங்கம்

**வவுனியா நிருபர்**

'எழுக தமிழ்' நிகழ்வு சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றோம். ஆனால் 'எழுக தமிழ்' நிகழ்வை முன்னிறுத்தி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாதவகையில் செயற்படவேண்டும். யாழ் நகரில் நடைபெறும் கூட்டத்திற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல மாவட்டங்களில் உள்ள வர்த்தக நிலையங்களைப் பூட்டுமாறு கோரிக்கை விடுவது ஏற்றுக் கொள்ளமுடியாத விடயம். வர்த்தகர்கள் பல வழிகளில் பல சிரமங்களை எதிர் நோக்கிய வண்ணமுள்ளனர். பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் வர்த்தக நிலையங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை யாரும் புரிந்துகொள்வதில்லை.

கடையடைப்பு செய்வதால் விவசாயிகள் தங்களது விளைபொருட்களை சந்தைப்படுத்துவதற்கு சிரமப்பட வேண்டிய நிலை ஏற்படும். 'எழுக தமிழ்' நிகழ்விற்கு சகல மக்களும் உணவுடன் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு கோருவது நியாயமானது. ஆனால் கடையடைப்பு செய்யுமாறு கோருவது முறையற்றது.

ஏற்கனவே இரண்டு 'எழுக தமிழ்' நிகழ்வுகள் நடைபெற்ற போது கடையடைப்போ, ஹர்த்தாலோ நடைபெறவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒற்றுமையாக செயற்படாமல், குறிப்பிட்ட ஒரு சில கட்சிகள் அரசியல் வளர்க்க பொது மக்களை பயன்படுத்துவதை அனைவரும் நிறுத்தவேண்டும்.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பொருளாதார மத்திய நிலையத்தை வவுனியா மக்களின் விருப்பத்தையும், கருத்துக்களையும் கணக்கிலெடுக்காமல் தனது தனிப்பட்ட விருப்பப்படி பொருத்தமற்ற இடத்தில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் அமைத்தது வவுனியா மாவட்ட மக்களுக்கு செய்த பெரிய துரோகமாகும். அதேபோல் புதிய பேருந்து நிலைய மாற்றம் தொடர்பாகவும் வவுனியா மாவட்ட மக்களினதும் வர்த்தகர்களினதும் நலன்களை கருத்திற்கொள்ளாமல் சர்வாதிகாரப் போக்குடன் செயற்பட்டமையானது வவுனியா மக்களுக்கு செய்த மிகப்பெரிய பாதிப்பான செயற்பாடாகும். ஆகையால் அவரது இணைத் தலைமையுடன் நடைபெறும் செயற்பாட்டிற்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியவில்லை.

யுத்தம் நடைபெற்ற காலங்களிலும் மற்ற காலங்களிலும் அனைவரினதும் வேண்டுகோள்களின் போதும் ஹர்த்தால் கடையடைப்பு கோரிக்கைகளுக்கு வவுனியா வர்த்தகர்கள் முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கி வந்திருக்கின்றார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆகையால் 16.09.2019 திங்கட்கிழமை அன்று நடைபெறும் 'எழுக தமிழ்' நிகழ்விற்கு கடையடைப்பு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# சிறுபோக நெற்செய்கையில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈட்டு வழங்கும் நிகழ்வு

**கந்தளாய் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட 375 பேருக்கு நஷ்டஈட்டு வழங்கும் நிகழ்வு கந்தளாய் பிரதேச செயலாளர் வியாழக்கிழமை (12) கந்தளாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது 76 இலட்சம் ரூபா பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

கடந்த வருடத்தில் பெரும் போகத்தின் போது பாதிக்கப்பட்ட 2600 விவசாயிகளுக்கு நிதி கிடைத்தவுடன் வழங்கப்படவுள்ளதாகவும் கம நல சேவைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சேருவில தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் சந்திப் சமரசிங்க,விவசாய காப்புறுதி சபையின் தலைவர் எல்.எம்.சுனில் மற்றும் விவசாயிகளும் கலந்து கொண்டார்கள்.

# 6 நாட்களாக காணாமல் போன வவுனியா மாணவன் கண்டு பிடிப்பு

**வவுனியா நிருபர்**

கடந்த 6 நாட்களாக காணாமல் போயிருந்த 14 வயதுடைய வவுனியா மாணவன் மீட்கப்பட்டுள்ளதாக இன்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூந்தோட்டம், காந்திநகர் பகுதியைச் சேர்ந்த 14 வயதுடைய ஜெயராசா கனிஸ்டன் என்ற பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் தரம் 9 இல் கல்வி பயலும் மாணவன் கடந்த 7 ஆம் திகதி வேப்பங்குளம் பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு செல்வதாக வீட்டில் இருந்து புறப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் உறவினர் வீட்டுக்கு குறித்த மாணவன் செல்லவில்லை. வீட்டுக்கும் திரும்பவில்லை. இதனையடுத்து குறித்த மாணவனின் பெற்றோர் உறவினர்களுடன் இணைந்து தேடிய நிலையில் மாணவன் கிடைக்காமையால் வவுனியா பொலிசில் முறைப்பாடு செய்தனர். பொலிசாரும் விசாரணைகளை முன்னெடுத்து இருந்ததுடன், ஊடகங்களிலும் மாணவனை காணவில்லை என்ற செய்தி வெளியாகியிருந்தது.

இதனையடுத்து நேற்று இரவு (வவுனியா, வெளிக்குளம் பகுதியில் உள்ள மாணவனின் நண்பன் ஒருவரின் வீட்டில் குறித்த மாணவன் நிற்பதாக நண்பனின் சகோதரனால் மாணவனின் சகோதரர்களுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அங்கு சென்ற பெற்றோரும், உறவினர்களும் மாணவனை அழைத்து வந்ததுடன், வவுனியா பெலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், நண்பனின் வீட்டிற்கு கரம்போட் விளையாடுவதற்காகவே சென்றதாக பொலிசாரிடம் மாணவன் கூறியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# திருமலை நகரசபையின் வேலைத்திட்டங்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல்

**சேனையூர் நிருபர்**



திருகோணமலை நகரசபையின் வேலைத்திட்டங்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தல் மற்றும் பொதுமக்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளைப் பெறுகின்ற கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நகராட்சி மன்றத்தின் தலைவர் நா.இராஜநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த தலைவர் இவ்வாறு தெரிவிக்கின்றார்.

கடந்த காலங்களில் மக்கள் நகரசபைளை தேடி வந்து குறைகளை சுட்டிக்காட்டி தீர்வு பெற்றுச் சென்றனர் தற்போது பொதுமக்கள் வாழ்கின்ற வட்டாரங்களுக்கு சென்று அவர்களின் கருத்தக்களையும் ஆலோசனைகளையும் கலந்துரையாடல்கள் மூலம் பெற்று வருகின்றோம்.

மேலும் பொதுமக்களினால் வழங்கப்படகின்ற வரி மூலமாக நடைபெறுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அவர்களிடம் வெளிப்படையாக தெரியப்படுத்தியும் வருகின்றோம்.இதன் மூலம் மக்களுடைய பிரச்சினைகளை நேரடியாக சென்று பார்க்கப்படுவதுடன் அவர்களுடைய அனுபவத்தையும் ஆலோசனையையும் வைத்து அப்பிரச்சினையை தீர்க்க முடிகிறது.என்றார்

நகரசபை எல்லைக்குள் உள்ள அன்புவழிபுரம் வட்டாரம் காந்திநகர் மற்றும் மனையாவெளி வட்டாரம் முதலானவற்றில் இக்கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளது தொடர்ச்சியாக ஏனைய வட்டாரங்களிலும் இக்கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளது.என நகரசபைத் தலைவர் நா.இராஜநாயகம் தெரிவித்தார்.



**சர்வதேச கணித பாட தினத்தை முன்னிட்டு கொழும்பு -12, பாத்திமா முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் தரம் 11 மாணவர்கள் கணித பாட கண்காட்சி ஒன்றை நடதத்தினார்கள். ஆசிரியை அனுஷாவின் வழி நடாத்தலில் அண்மையில் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படிக் கண்காட்சியை பாடசாலை அதிபர் திருமதி சிஹானா அஸ்லம் திறந்து வைத்தார்.**

**படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்**

# திருக்காளஹஸ்தீஸ்வரர் உருத்திராபிஷேகம்

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை, கப்பல்துறை வைரஊற்று கிரமத்தில் மலைக்கோயிலாக அமைந்திருக்கும் ஞானப்பூங்கோதைத் தாயார் உடனுறை அருள் தரு திருக்காளஹஸ்தீஸ்வரர் ஆலயத்தில் 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு உருத்திராபிஷேகம் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது.

அன்றைய தினம் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து பெருமானினதும்,பெருமாட்டி தாயாரினதும் திருவருளை பெருமாறும், அலயத்திற்குத் தேவையான பூசைப் பொருட்களைத் தரவுதவும் அடியார்கள் நேரகாலத்துடன் தந்துதவுமாறு கேட்டுக் கொள்ப்படுகின்றனர். திருவிழா நிறைவடைந்ததும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

# எழுக தமிழுக்கு தென்மராட்சி பொது அமைப்புகள் பூரண ஆதரவு!

தமிழ் மக்கள் பேரவையால் வரும் 16 ஆம் திகதி யாழ் மண்ணில் முன்னெடுக்கப்படவிருக்கும் எழுக தமிழ்-2019 எழுச்சிப் போராட்டத்திற்கு ஆதரவுகோரி தென்மராட்சி பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் தமிழ் மக்கள் பேரவையினர் மேற்கொண்டிருந்த சந்திப்பையடுத்து எழுக தமிழுக்கு பூரண ஆதரவினை வழங்குவதென ஏகமனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள மண்டபமொன்றில் நேற்று(12.09.2019) மாலை 4.30 மணிக்கு நடைபெற்றிருந்த இச்சந்திபில், ஒன்றுபட்ட தேசமாக தமிழர்கள் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்று பலப்படுத்துவதன் அவசியம் குறித்தும் முன்னாயத்த ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட வர்த்தக சங்கங்கள், சிற்றூர்திகள் சேவைச் சங்கம், கடற்றொழிலாளர் சங்கங்கள், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், மாதர் சங்கங்கள் உள்ளடங்கிய பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள் என சுமார் ஐம்பதிற்கு மேற்பட்டவர்கள் பங்கேற்ற இக்கலந்துரையாடலின் முடிவில் தென்மராட்சி பகுதிக்குட்பட்ட வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்குவதுடன் எழுக தமிழுக்கு பூரண ஆதரவினை வழங்குவதெனவும் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் கடும் மழை

**வவுனியா நிருபர்**



நீண்ட வரட்சியின் பின் வவுனியாவில் கடும் மழை பெய்தது.

நாட்டில் ஏற்பட்ட வரட்சியான காலநிலை காரணமாக வவுனியா மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது. பல்வேறு பகுதிகளிலும் குடி நீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வந்த நிலையில் தீடிரென பெய்த கடும் மழை காரணமாக மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

காற்றுடன் கூடிய மழை காரணமாக மக்களது இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்திருந்தது.

# கணணிகூட திறப்பு விழா

**மூதூர் நிருபர்**




பாராளுமன்ற உறுப்பினரும் கல்வி அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினரும், மூதூர் பிரதேச அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான இம்ரான் மகரூப் அவர்களின் முழு முயற்சியின் பயனாக டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சினால் உருவாக்கப்பட்ட கணணி நிலயம் கிளிவெட்டி தமிழ் வித்தியாலயத்தில் வெகு விமர்சயாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ் வில் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ.இம்றான் மகரூப், கிண்ணியா நகரபிதா நளீம், மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், வட்டார வேட்பாளர் கேதீஸ் உட்படபலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



**வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டு. தில்லை மண்டூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 20 நாள் திருவிழா இடம்பெற்று மட்டு வாவிக் கரையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடை சூழ முருகப்பெருமானின் தீர்த்தோற்சவம் நேற்று (14) இடம்பெற்றது.**

**படங்கள் :- துறைநீலாவணை நிருபர்**



# காஃபி சிந்தியதால் பாதியில் தரையிறங்கிய பயணிகள் விமானம்



பயணிகள் விமானம் ஒன்றின் காக்பிட்டில் இருக்கும் கன்ட்ரோல் பேனலில் காஃபி சிந்தியதால், 337 பேர் பயணித்த விமானம் ஒன்று பாதியில் தரை இறக்கப்பட்டதாக பிரிட்டன் விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. எனினும், இப்போதுதான் இதை அவர்கள் பொது வெளியில் தெரிவித்துள்ளனர்.

அந்த விமானம் ஜெர்மனியின் பிராங்ஃபர்ட் நகரில் இருந்து மெக்சிகோவின் கான்குன் நகருக்கு சென்று கொண்டிருந்தது.

காஃபியின் சூட்டால் விமானியின் ஆடியோ கண்ட்ரோல் பேனல்கள் உருகத் தொடங்கியதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது காக்பிட்டில் புகை உண்டாகியுள்ளது. விமானிகள் உடனடியாக ஆக்சிஜன் மாஸ்க் பயன்டுத்தியுள்ளனர்.

ந்த விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தில் இந்த விபத்து நடந்தது என்று விமான விபத்துகளை விசாரிக்கும் பிரிட்டன் அரசின் பிரிவு தெரிவிக்கவில்லை என்றாலும் அது கான்டோர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் என்று பிளைட் சேஃப்டி பவுன்டேஷன் எனும் அமைப்பு தெரிவித்துள்ளது.

விபத்து எப்படி நடந்தது?

விமானம் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்தபோது மேல் மூடி இல்லாத குவளை ஒன்றில் காஃபி பரிமாறப்பட்டுள்ளது.

அதை தலைமை விமானி தனது டிரேயில் வைத்துள்ளார். பின்னர் அதை தெரியாமல் தட்டி விட்டுள்ளார்.

குவளையில் இருந்த காஃபி பெரும்பாலும் விமானியின் மடியில் சிந்தினாலும், சிறிதளவு கண்ட்ரோல் பேனல் மீது சிந்தியுள்ளது.

காஃபி சிந்தியதால் தரைக் கட்டுப்பாடு அறைகளுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல் எழுந்துள்ளது.

இதனால் அந்த விமானம் அயர்லாந்தில் உள்ள ஷெனான் விமான நிலையத்தில் தரை இறக்கப்பட்டது.

# 2 0ஆண்டுகளுக்கு முன் நீரில் மூழ்கி இறந்த ஒருவரின் உடல் எச்சங்களை கண்டறிந்த கூகுள் மேப்ஸ்



இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு, அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில், நீரில் மூழ்கிய காரில் பயணம் செய்து இறந்தவரின் உடல் எச்சங்களை கூகுள் மேப்ஸ் ஆப் கண்டறிய உதவியுள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதியன்று ஃபுளோரிடாவின் லான்டனாவில் வில்லியம் மோல்ட் என்ற இந்நபர் காணாமல் போனார்.

அந்த காலகட்டத்தில் 40 வயதான இவர், ஓர் இரவு விடுதிக்கு சென்றுவிட்டு இரவு வீட்டுக்கு திரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

வில்லியம் காணவில்லை என போலீசில் புகார் செய்யப்பட்டு விசாரணை தொடங்கியது. ஆனால், அதற்கு பிறகு இந்த விசாரணையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

22 ஆண்டுகளுக்கு பிறகு, இந்தாண்டு (2019) ஆகஸ்ட் 28ஆம் தேதியன்று வெலிங்டன் பகுதியில் ஓர் ஏரி அருகே நீரில் மூழ்கிய கார் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

நீரில் இருந்து அந்த காரை மீட்டெடுத்த பின்னர், அதன் உள்ளே மனித எலும்புகூடு இருந்தது கண்டறியப்பட்டது.

இந்த பகுதியில் முன்னர் வசித்த ஒருவர், கூகுள் மேப்ஸ் மூலம் வில்லியமின் நீரில் மூழ்கிய காரை கண்டறிந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

பிறகு இந்நபர் அப்பகுதியில் தற்போது வசிக்கும் தன் நண்பரை தொடர்பு கொண்டிருக்கிறார். அவர் தனது ட்ரோன் கேமரா மூலம் ஏரி நீரில் ஒரு கார் மூழ்கிய நிலையில் இருப்பதை கண்டறிந்துள்ளார். பிறகு இது தொடர்பாக போலீசாரை தொடர்பு கொண்டார்.

அதன்பின்னர், துரித நடவடிக்கையில் இறங்கிய போலீசார் காரை மீட்டு உடல் எச்சங்களையும் மீட்டுள்ளனர். வில்லியமின் குடும்பத்துக்கு இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன இரவு 9.30 மணிக்கு, தனது பெண் தோழியை போனில் அழைத்து விரைவாக வீடு திரும்புகிறேன் என்று கூறிய வில்லியம் 22 ஆண்டுகளுக்கு பிறகு கூகுள் மேப்ஸ் மூலம் உடல் எச்சங்களாக கண்டறியப்பட்டுள்ளது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அணுஆயுத ஒழிப்பு: அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வடகொரியா விருப்பம்



கொரிய பிராந்தியத்தை அணுஆயுதமற்ற பகுதியாக மாற்றுவது தொடர்பாக அமெரிக்காவுடன் இம்மாத இறுதியில் பேச்சுவார்த்தை நடத்த வட கொரியா விருப்பத்துடன் உள்ளதாக அந்நாட்டின் துணை வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வட கொரியாவின் துணை வெளியுறவு அமைச்சரான சோ சோன்-ஹுய் தெரிவிக்கையில், இருதரப்பும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒரு விரிவான பேச்சுவார்த்தையை தொடங்க தாங்கள் ஆர்வமாக இருப்பதாக குறிப்பிட்டார்.

அண்மையில் அமெரிக்கா மற்றும் வட கொரியா இடையே மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்குவது குறித்த நம்பிக்கையை அமெரிக்க வெளியுறவுத்துறை செயலரான மைக் பாம்பேயோ வெளிப்படுத்திய பிறகு வட கொரிய அமைச்சரின் கருத்து வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில், வட கொரிய அமைச்சர் சோவின் இந்த கருத்து வெளிவந்ததற்கு சில மணிநேரங்களில், குறுகிய தூரம் சென்று தாக்கும் இரண்டு ஏவுகணைகள் வட கொரியா தரப்பில் இருந்து ஏவப்பட்டது.

சமீப மாதங்களில் வட கொரியா நடத்திவரும் ஏவுகணை சோதனைகளில் இது மிகவும் அண்மைய சோதனையாகும்.

வட கொரிய தலைவர் கிம் ஜாங்-உன் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் இடையே கடந்த ஆண்டு சிங்கப்பூரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உச்சி மாநாட்டு நடைபெற்றது.

இந்த உச்சி மாநாட்டுக்கு பின்னர், அணு ஆயுத ஒழிப்பில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

பின்னர் இந்த இரு தலைவர்கள் இடையே இரண்டாவது கட்ட சந்திப்பு வியட்நாமின் ஹனோய் நகரில் நடந்தது.

மிக அண்மையில் கடந்த ஜூன் மாதத்தில், வட மற்றும் தென் கொரியாவின் எல்லையில் இருக்கும் ராணுவம் விலக்கப்பட்ட பகுதியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் வடகொரிய அதிபர் கிம்மை சந்தித்தார்.

ராணுவம் விலக்கப்பட்ட இந்த பகுதியில் நடைபெறும் சந்திப்புக்கு, ட்விட்டரில் திடீரென கிம்மை சந்திக்க டிரம்ப் அழைப்பு விடுத்தமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

# அலுவலக பயணத்தில் உடலுறவின்போது இறந்த ஊழியர் நிறுவனம் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

அலுவலக பயணத்தின் போது அறிமுகம் இல்லாத ஒருவருடன் உடலுறவு கொண்ட சமயத்தில் மாரடைப்பு ஏற்பட்டு அலுவலர் இறந்ததற்கு பிரெஞ்சு நிறுவனம் பொறுப்பேற்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அவருடைய மரணம் ஒரு தொழிற்சாலை விபத்து என்று கூறி, இறந்த ஊழியருடைய குடும்பத்தினருக்கு நஷ்டஈடு பெறும் உரிமை உள்ளது என்று பாரிஸ் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

இறந்த ஊழியருடன் உடலுறவு கொண்ட பெண் தங்கியிருந்த ஓட்டல் அறைக்கு தங்கள் அலுவலர் சென்ற போது, அவர் அலுவல் காரணத்துக்காக செல்லவில்லை என்று அந்த நிறுவனம் வாதிட்டது.

ஆனால், அலுவலக பயணம் மேற்கொண்டிருக்கும் காலத்தில் எந்த விபத்தில் சிக்கினாலும் அதற்கு அந்த நிறுவனம் பொறுப்பேற்க வேண்டும் என்பது பிரெஞ்சு சட்டம் என்று நீதிபதிகள் கூறினர்.

சேவியர் எக்ஸ் என்ற அந்த அலுவலர் டி.எஸ்.ஓ. என்ற பாரிஸைச் சேர்ந்த ரயில்வே சேவைகள் நிறுவனத்தில் பொறியாளராக பணியாற்றி வந்தார்.

2013ல் மத்திய பிரான்ஸ் பகுதிக்கு அலுவலக பயணம் சென்றிருந்தபோது, ஒரு விடுதியில் அவர் மரணம் அடைந்தார். முற்றிலும் அறிமுகம் இல்லாத ஒரு பெண்ணுடன் திருமண பந்தத்தை மீறிய உறவு வைத்துக் கொண்டதால் ஏற்பட்ட சம்பவம் என்று அவருடைய நிறுவனம் கூறியது.

பணியிட விபத்தாக கருதி அவருடைய குடும்பத்தினருக்கு நஷ்டஈடு தர வேண்டும் என்று அரசு சுகாதாரக் காப்பீட்டு நிறுவனம் அளித்த முடிவை எதிர்த்து அந்த நிறுவனம் மேல்முறையீடு செய்திருந்தது.

உடலுறவு செயல்பாடு என்பது இயல்பானது, குளிப்பது அல்லது உணவு சாப்பிடுவதைப் போன்றது என்று காப்பீட்டு நிறுவனம் கூறியது.

இந்தக் கருத்தை பாரிஸ் மேல்முறையீட்டு நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

அலுவல் காரணமாக பயணம் மேற்கொண்டிருக்கும் ஓர் அலுவலர், பயண காலம் முழுவதற்கும் சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், சமூகப் பாதுகாப்பு உத்தரவாதத்தை பெறுகிறார் என்று நீதிமன்றம் மேலும் கூறியது.

# கைதியை காதலித்து கரம்பிடித்த அமெரிக்க இளம்பெண்

கடல் நீரை தேக்கும் போது உப்பாய் தானே மாறிவிடும்... கண்ணீரை தேக்கும் காதல் முத்தாய் மாற்றிவிடும்... என்று ஒரு படத்தில் பாடல் வரிகள் வரும். இதற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரை சேர்ந்த இளம்பெண் ஒருவர் 16 வயதில் தான் சந்தித்த நபர் 23 வருடங்கள் தண்டனை பெற்று சிறை சென்றபோதும் கடிதம் மூலம் காதலை வளர்த்து அவரை திருமணம் செய்துள்ளார்.

2006-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நினா முதன் முறையாக தனது காதல் கணவரான மைக்கேலை ஒரு பார்க்கிங்கில் சந்தித்தார். அப்போது மைக்கேலுக்கு 17 வயது. நினாவுக்கு 16 வயது.

சில வாரங்களிலேயே ஆயுதம் ஏந்தி கொள்ளையடித்த வழக்கில் மைக்கேல் கைதாகி விட்டார். கொள்ளைக் கூட்டத்தில் 17 வயது



சிறுவன் என்ற அடைமொழியோடு அமெரிக்க பத்திரிகைகளில் புகைப்படத்துடன் மைக்கேல் தொடர்பான செய்திகள் வெளியாகின. வழக்கை விசாரித்த அமெரிக்க கோர்ட்டு மைக்கேலுக்கு 23 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது.

காதலன் 23 ஆண்டுகள் தண்டனை பெற்று சிறைக்கு சென்றால் 16 வயது இளம் பெண் என்ன செய்வாள்? மைக்கேலை காதலித்த நினா அவர் சிறை செல்வதற்கு முன்பே தொடர்ந்து கடிதம் எழுதுகிறேன் என உறுதி அளித்துவிட்டார். முதல் 6 ஆண்டுகள் இவர்களுக்கு இடையேயான காதல் கடிதம் மூலம் மட்டுமே வளர்ந்துள்ளது. மைக்கேல் மீது நினாவுக்கு இன்னும் காதல் அதிகமானது. 2012 -ம் ஆண்டு சிறையில் இருவரும் சந்தித்தனர். அதன்பின் சந்திப்புகள் அடிக்கடி நடந்துவந்தது. தனது காதலை ரகசியமாக வைத்திருந்தார். அவரது தாய் மற்றும் நெருங்கிய தோழி இருவருக்கு மட்டுமே இந்த விவகாரம் தெரியும்.

மைக்கேல் தனது திருமண விருப்பத்தை தெரிவித்துள்ளார். நினாவும் சம்மதித்தார். 6 வருட காத்திருப்புக்கு பின் சட்டப்படி இருவரும் திருமணம் செய்து கொண்டனர். தம்பதியர் மாதத்துக்கு 48 மணி நேரங்கள் வரை பார்த்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இவர்களுக்காக சிறை வளாகத்தில் அனைத்து வசதிகளும் கொண்ட தனி வீடு ஒதுக்கப்பட்டது.

மைக்கேலுடன் எடுக்கப்பட்ட புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பகிர்ந்து தனது காதல் கணவரை உலகுக்கு அறிமுகம் செய்தார். இது மைக்கேலுக்கு மிகுந்த உற்சாகத்தை தந்தது. அதன்பின்னரும் நினா சிறையில் நடக்கும் தங்கள் சந்திப்புகளை தொடர்ந்து அப்டேட் செய்து வருகிறார்.

கலிபோர்னியா மாகாணத்தில் 2014-ம் ஆண்டு சிறை சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அதன் படி 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை கழித்த இளம் கைதிகளுக்கு 90 நாட்கள் பரோல் வழங்கப்படும். மைக்கேல் 13 ஆண்டுகள் சிறைத் தண்டனையைக் கழித்துவிட்டார். இன்னும் இரண்டு ஆண்டுகள் பரோலுக்காக காத்திருக்க வேண்டும் என தனது வருத்தத்தை நினா தெரிவித்துள்ளார்.

கணவரின் வருகை குறித்து பேசியுள்ள நினா ஹோப்லெர், மைக்கேல் சிறையில் இருந்து விரைவில் வெளியே வருவார். விடுதலை பெற்று சுதந்திர மனிதனாக அவர் எடுத்து வைக்கும் முதல் அடியை ஆவலோடு எதிர்நோக்கி உள்ளேன். மைக்கேல் சிரித்தபடி எனது வீட்டு வாசலைத் திறக்கும் காட்சிகள் மனதில் நிழலாடுகிறது. அந்த விலைமதிப்பற்ற தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கிறேன்.

அந்தத் தருணத்தை என்னால் மறக்கவே முடியாது. அவர் எப்போது வெளியில் வருவார் எனத் தெரியவில்லை. நான் அவருக்காகப் போராடுவேன் எனக் கூறும் நினாவுக்குத் தற்போது 29 வயதாகிறது. சிறையில் இருக்கும் மைக்கேலுக்கு 30 வயதாகிறது.

# பிளாஸ்டிக் குப்பைக்கு அரிசி இலவசம்



உலகம் முழுவதும் கடலில் பிளாஸ்டிக் கழிவுகள் கலப்பதும், அதனால் கடல்வாழ் உயிரினங்கள் உயிர் இழப்பதும் அண்மை காலமாக அதிகரித்து வருகிறது.

குறிப்பாக அதிக பிளாஸ்டிக் கழிவுகளை வெளியேற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பிலிப்பைன்ஸ் முதலிடம் வகிப்பதாகவும், அந்நாட்டில் திடக்கழிவு குறித்த சட்டங்கள் மோசமாக இருப்பதாகவும் ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

எனவே பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பதற்கான முயற்சி மட்டுமல்லாது பிளாஸ்டிக்கை முறையாக மறுசுழற்சி செய்யும் பணியிலும் பிலிப்பைன்ஸ் நாட்டு அரசு ஈடுபட்டு வருகிறது.

அந்தவகையில் தலைநகர் மணிலா அருகே உள்ள பேயனான் கிராமத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை அழிக்கவும், வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்களின் பசியை போக்கவும் அரசு புதிய திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

அந்த திட்டத்தின் படி 2 கிலோ பிளாஸ்டிக் குப்பைகளை சேகரித்து அரசிடம் ஒப்படைக்கும் மக்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

பிலிப்பைன்சில் ஒரு கிலோ அரிசி இந்திய மதிப்பில் ரூ.50-க்கு விற்கப்படும் நிலையில், அதனை வாங்க சிரமப்படும் ஏழை மக்களுக்கு அரசின் இந்த திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

# ஐஃபோன் 11: அப்பிள் நிறுவனத்தின் திருப்புமுனை திறன்பேசியாக இருக்குமா?



அதிக கேமிராக்களை கொண்ட ஐஃபோன் 11 என்ற புதிய மாடல் திறன்பேசியை அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் ஆப்பிள் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

ஆண்டுதோறும், ஆப்பிள் நிறுவனம் தனது புதிய தயாரிப்புகளை கலிஃபோர்னியாவில் நடைபெறும் நிகழ்வில் ஆப்பிள் ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி ஆச்சரியப்படுத்தும். அது போல, இந்த ஆண்டும் ஆப்பிள் நிறுவனத்தின் ரசிகர்களுக்கு பல ஆச்சரியங்கள் தந்திருக்கிறது.

கலிஃபோர்னியாவில் நடைபெற்ற நிகழ்வில் ஐஃபோன் 11 மட்டுமின்றி ஆப்பிள் சீரிஸ் 5 என்ற கைகளில் அணியக்கூடிய நவீன கடிகாரமும், 10.2 இன்ச் அளவுகொண்ட ஐபேடும், நெட்ஃபிளிக்ஸ் மற்றும் ஆமேசானுக்கு போட்டியாக வெறும் மாதம் 4.99 டாலருக்கு ஆப்பிள் டிவி பிளஸ் திட்டத்தையும் ஆப்பிள் நிறுவன அதிகாரிகள் அறிமுகப்படுத்தினார்கள்.

ஐஃபோன் 11 சிறப்பம்சங்கள் என்ன?

முன்பு எப்போதும் இல்லாத வகையில் ஐஃபோன் 11 மாடல்களில் அதிக கேமிராக்கள் இருக்கின்றன. மேலும், அதன் செயல்திறன் அதிகரிக்கப்பட்டு குறைவான ஆற்றலை பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது

ஐஃபோன் 11, ஐஃபோன் 11 ப்ரோ மற்றும் ஐஃபோன் 11 ப்ரோ மேக்ஸ் என மூன்று ரகங்கள் இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சரி, ஐஃபோனின் முந்தைய மாடல் நீகீவிட, ஐஃபோன் 11 எவ்வளவு சிறப்பு வாய்ந்தது?

★ 6.1இன்ச் லிக்விட் ரெட்டினா திரையை கொண்டுள்ள ஆப்பிளின் புதிய ஐஃபோன் 11ல் ஏ13 பையோனிக் சிப் இடம்பெற்றுள்ளது. தற்போது சந்தையில் விற்கப்படும் ஸ்மார்ட் ஃபோன்களிலே அதிவேக மைய செயலகமும், அதிவேக கிராபிக்ஸ் செயலகமும் கொண்டது ஐஃபோன் 11 என ஆப்பிள் கூறுகிறது.

★ XR மாடல் ஐஃபோனுடன் ஒப்பிடும்போது, ஐஃபோன் 11னின் கேமிராவில் மிகப்பெரிய மாற்றங்களை ஆப்பிள் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அதாவது, ஐஃபோன் 11ல் இரண்டு கேமிராக்களும், ஐஃபோன் 11 ப்ரோ மற்றும் ஐஃபோன் 11 ப்ரோ மேக்ஸில் மூன்று 12MP கேமிராக்களை கொண்டுள்ளது. ஒன்றில், வைட் ஆங்கிள் லென்ஸும், மற்றொன்றில் 120 டிகிரியை முழுமையாக திரைக்குள் கொண்டுவரும் வகையில் மிக அதிக வைட் ஆங்கிள் லென்ஸையும் கொண்டுள்ளது. மூன்றாவது டெலிபோட்டோ லென்ஸையும் கொண்டுள்ளது.

★ ஐஃபோன் 11ல் இதன் நைட் மோட்தான் சிறப்பம்சமே. இரவு நேரங்களில் எடுக்கப்படும் புகைப்படங்களை மேலும் துல்லியமாக எடுக்க உதவும் ஸ்மார்ட் எச்டிஆர் தொழில்நுட்பம் ஐஃபோன் 11ல் மேம்படுத்தப்பட்டுள்ளது. கூடுதலாக, இந்த கேமிராக்கள் 4K தரத்தில் காணொளிகளை பதிவு செய்கின்றன.

★ முக்கியமாக, ஐஃபோன்11ல் இருக்கும் செல்ஃபி கேமிராவும் 12-MP திறன் படைத்தது. செல்ஃபி கேமிராவும் 4K தரத்தில் காணொளிகளை பதிவு செய்யும். மேலும், ஸ்லோ மோஷன் காணொளிகளை பதிவு செய்யவும் முடியும்.

★ ஐஃபோன் XR மாடலுடன் ஒப்பிடுகையில், ஒருமுறை சார்ஜ் ஏற்றினால் ஐஃபோன் எக்ஸ் ஆரைவிட ஐஃபோன் 11 ஒருமணி நேரம் கூடுதலாக இயங்கும் திறன் படைத்தது என்கிறது ஆப்பிள் நிறுவனம்.

THAMILTHANTHI தமிழ்த்தந்தி
உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..
ஞாயிற்றுக்கிழமை 15.09.2019

இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# எழுக தமிழும் தமிழர் ஒற்றுமையும்

நாளை எழுக தமிழ் நிகழ்வு நடைபெற இருப்பதனால் அதற்கான ஏற்பாட்டுகளை தமிழர் பேரவை செய்து வருகின்றது. பல்வேறு கட்சிகளும், பொது அமைப்புகளும் இதற்கு ஆதரவினை தெரிவித்து வருகின்றனர். அத்துடன் இந்நிகழ்வு சர்வதேசத்தில் வாழும் இலங்கைத் தமிழரை மட்டுமல்ல இந்தியத் தமிழர்களையும் தமிழர் என்ற அணியில் திரட்டக் கூடிய ஏற்பாட்டினை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது. ஆயுதப் போராட்டம் கடந்த 10 வருடங்களுக்கு முன் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர் ஒற்றுமை என்பது கேள்விக்குறியாக மாறி வருகின்றது. தமிழர்கள் அனைவரையும் ஓரணியில் ஒருங்கிணைக்கக்கூடிய தலைமைத்துவப் பற்றாக்குறை தொடர்ந்த வண்ணம் உள்ளது. இத்தகைய நிலை தமிழ் இனத்தின் இருப்பிற்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும். கடந்த முறை நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வில் பிரதான பங்காளியாக பங்குபற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி இம்முறை கலந்து கொள்ள மாட்டோம் எனத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது புலம்பெயர் தமிழர் மத்தியிலும் இலங்கைத் தமிழர் மத்தியிலும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் எழுக தமிழிற்கு தாங்கள் எதிரானவர்கள் அல்லர் என்றும் கலந்து கொள்வது பற்றிய தெளிவான அறிவிப்பையும் அவர் வெளியிடவில்லை. இங்கு எழுக தமிழ் நிகழ்வு என்பது என்ன அடிப்படையில் நடத்தப்பட்டாலும் அது தமிழர்களின் தமிழ் உணர்வினை தூண்டக்கூடியது என்ற கருத்தினை யாரும் மறந்துவிடக் கூடாது. எம் இனத்தின் மீது தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இனப்படுகொலைகள், பாலியல் வன்முறைகள், ஆட்களை காணாமல் செய்யப்பட்டமை என்பன மனித குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும். இந்தக் கொடுமைகளின் விளைவுதான் இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்களை புலம்பெயரச் செய்ததாகும். இன்று இலங்கையில் இருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களை விட உயர்வான பகுதியினர் வெளிநாடுகளில் வசிக்கின்றார்கள் என்பதனை மறந்துவிட முடியாது. அத்துடன் இந்நிகழ்விற்கு புலம்பெயர் தமிழர்களின் ஆதரவு மிகவும் முக்கியமானதாக காணப்படுவதுடன் அதற்கான உதவிகளையும் அவர்கள் செய்து வருகின்றார்கள். எனவே அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் இனத்தின் குரலாகத் தான் எழுகத் தமிழ் அமையப் போகின்றது. இங்கு இந்நிகழ்விற்கு எத்தனை ஆயிரம் மக்கள் கலந்து கொள்ளப் போகின்றார்கள் என்பது முக்கியமல்ல. அது எத்தனை இலட்சம் தமிழ் மக்களின் உணர்வுகளைத் தூண்டப் போகின்றது என்பதே பிரதானமானதாகும்.

தமிழ் அரசியல் கட்சிகள் பல்வேறு வகையில் கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் எமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அநீதிகளையும் சர்வதேசத்திற்கும் பேரினவாதத்திற்கும் இடித்துக் கூறுவதற்கு எழுக தமிழை அனைவரும் பயன்படுத்துவது இன விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமளிப்பதாக அமையும்.

# மறக்கப்பட்ட வாக்குறுதிகள்!

**நக்கீரர்**

இலங்கையில் கடந்த 3 தசாப்த கால யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் கடந்த 4 வருடங்களாக இலங்கையில் ஆச்சரியப்படத்தக்க சில அரசியல் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. ஜனவரி 2015ல், நீண்ட ஆண்டுகளாக நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வரும் எண்ணத்துடன் நடத்திய ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பாராத வகையில் தோல்வியுற்றார். இதன் பின்னர் கூட்டணிக் கட்சிகளுடன் புதிய அரசாங்கம் ஆட்சியை அமைத்துக் கொண்டதுடன் சிறுபான்மை மக்களிடத்தில் நம்பிக்கைகளையும் ஆரம்பத்தில் தோற்றுவித்தது.

அந்தவகையில் நல்லாட்சியின் பின்னர் நாட்டில் நிலவும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிலையான நீதி மற்றும் நிலையான அமைதித் தீர்வு எட்டப்படுவதற்கு கூட்டாட்சி மாத்திரமே ஒரேயொரு வழி என முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்; செவ்வி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 4 வருடங்கள் கடந்து விட்டது: நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்காக உருவானது: தேசிய நல்லிணக்கம் உருவாகியுள்ளது என பல சந்தர்ப்பங்களில் முழங்கிவருகின்ற போதும் இலவு காத்த கிளியின் நிலையில் தான் தமிழ் மக்களின் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

நல்லாட்சி ஆரம்பமானது முதல் தமிழர்கள் தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பல்வேறு இடங்களில் பல்வேறு கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட்டங்களை நடத்திவருகின்றனர். இத்தகைய போராட்டங்களும் மக்கள் அழுத்தம் இன்றி வெற்றி பெற்றதாக வரலாறு இல்லை. இந்த நிலையில் தமிழ் மக்களும் வீதியில் இறங்குவதன் மூலமே தமக்கான உரிமைகளை பெறமுடியும் என தீர்மானித்துள்ளனர்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்தும் ஐ.நா மனித உரிமைகள் தீர்மானத்தில் கூறிய விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்தாது கால இழுத்தடிப்புக்களையே செய்து வருகின்றது.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதை சந்தர்ப்பம் பார்த்து நழுவவிடுகின்றார் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எனினும் நல்லாட்சி மாற்றத்தின் பின்னர் ஆழமான சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டாலும் கூட இக் கூட்டணி அரசாங்கமானது சரியான திசையில் நாட்டை வழிநடத்திச் செல்வதற்கான சில நகர்வுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்தவகையில், நாட்டின் தற்போதைய விவகாரங்கள், தமிழ் அரசியல், மேலும் கருத்துள்ள மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான வழிமுறைகள், அனைத்துலக சமூகத்திடமிருந்து மேற்கொள்ளப்பட வேண்டிய நீடித்து நிலைத்து நிற்பதற்கான சில தேவைகள் போன்றன தொடர்பாக தமது செயற்பாடுகளைச் சரிவரச் செய்துவருவதாகக் கூறினாலும் சிறுபான்மை மக்களிடத்தில் திருப்தியடையாத நிலையே காணப்படுகின்றது.

எனினும் நல்லாட்சியின் தற்போதைய நிலவரத்தில் வடக்கில் மட்டுமல்லாது, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முன்னரை விடத் தற்போது ஜனநாயக ஆட்சி இடம்பெறுகிறது. எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது அரசாங்கத்தால் வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும், வடக்கு கிழக்கு மாகாண மக்களின் எதிர்பார்ப்புக்கள் இதுவரையிலும் முழு அளவில் நிறைவேற்றப்படவில்லை. சிறிலங்கா இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் மக்களிடம் மீளவும் கையளிக்கும் நிகழ்வு மிக மெதுவாக இடம்பெறுகின்றது. விடுவிக்கப்பட்ட நிலங்களில் கூட முழுமையான மீள்குடியேற்றம் இடம்பெறவில்லை. தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய மக்கள் மத்தியில் இராணுவத்தினரின் பிரசன்னம் தற்போதும் அதிகம் நிலவுகின்ற நிலையே காணப்படுகின்றன.

இவ்வாறான நடவடிக்கைகளை நோக்குகின்ற போது மத்திய அரசாங்கத்தின் மேலாதிக்க மனோநிலை தற்போதும் தொடர்கிறது என்றே தமிழ் மக்கள் அச்சம் கொள்கின்றனர். வட கிழக்கிற்காக திட்டங்கள் தயாரிக்கப்படும் போது அவை தொடர்பாக மாகாண நிர்வாகத்துடன் எந்தவொரு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்படுவதில்லை. எப்போதும் மத்திய அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குச் சாதகமாகவே திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்படும் போது அந்தந்த மாகாண சபைகளுடன் கலந்துரையாடப்பட்டே தயாரிக்கப்படுகின்றன என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இதற்கு விதிவிலக்காகவே உள்ளன.

தமிழர்கள் இனத்தால் வேறுபட்டவர்கள். எமது கட்சிகள் வேறுபட்டன. நாங்கள் வேற்று மொழியைப் பேசுகிறோம். எமது கலாசாரம் வேறுபட்டது. இவ்வாறான காரணங்களுக்காக மத்திய அரசாங்கமானது எம்மீது தனது மேலாதிக்கத்தைச் செலுத்தாது சம அளவில் இன நல்லுறவுக்கு வழிவகுப்பதே நாட்டின் ஆரோக்கிய அரசியலுக்கு அடித்;தளமாகும். இதற்காகவே 1987 இந்திய- இலங்கை உடன்படிக்கைக்கு அமைவாக தமிழர்களுக்கான அதிகாரங்களைப் பகிர்ந்து தருமாறு தமிழ்த் தலைமைகள் கோரிக்கை விடுத்திருநதனர்;. இத்தீவு முழுவதிலும் மாகாணசபை முறைமை நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக, எமது உரிமைகள், அபிலாஷைகள் மற்றும் எமது பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளப்படாது புறக்கணிக்கப்பட்டன. அவற்றின் புறக்கணிப்புக்கள் இன்றுவரை தொடர்வதே மக்கள் தங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளது.

**இனப்பிரச்சினை தொடர்பில் நிலையான நீதி மற்றும் அரசியற் தீர்வை எட்டுவது தொடர்பில் தமிழர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் அரசாங்கம் ஆட்சியை பக்கச்சார்பின்றி நடத்துவதினாலேயே எட்ட முடியும்**

அதன் நிமித்தமாக இன்று வட கிழக்கில் நிலவும் இராணுவமயமாக்கலின் விளைவுகள் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்திவருகின்றது. உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்தும் வடக்கில் இராணுவத்தினர் பிரசன்னமாகியுள்ளதால் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வானது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எமது மக்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலப்பரப்பில் இராணுவத்தினர் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதுடன் அதில் விளையும் பயிர்களை சந்தைகளில் விற்பனை செய்து வருமானம் ஈட்டுகின்றனர். இதுவரை நில உரிமையாளர்களுக்கு எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை. தமது காணிகளை இழந்த எமது மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தோர் முகாங்களில் வாழ்கின்றனர். இந்த முகாம்களில் வாழும் மக்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் போதியளவு வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த மக்களுக்கு வடக்கு மாகாண சபையானது சில உதவிகளை வழங்கியுள்ளது.

இதேபோன்று வியாபார நடவடிக்கைகளிலும் இப்பகுதியில் உள்ள இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர். அத்துடன் வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளையும் நடத்துகின்றனர். இதுமட்டுமல்லாது, தெற்கிலுள்ள மீனவர்கள் சட்ட ரீதியற்ற முறையில் வடக்கில் மீன்பிடிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் எமது மீனவர்கள் அவர்களின் பாரம்பரிய நீர்நிலைகளில் மீன்பிடிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வடக்கு மாகாண சபைக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமே வழங்கப்பட்டுள்ளது.

தற்போதும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் இலங்கை இராணுவத்தினரால் அவர்களது தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வடக்கிலுள்ள பெண்களின் குறிப்பாக கணவனை இழந்த பெண்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பாதுகாப்பானது ஆபத்திற்கு உள்ளாகியுள்ளது. உள்ளூர் அதிகாரிகளிடம் அனுமதி பெறாது புத்தர் சிலைகள் மற்றும் விகாரைகள் போன்றன வடக்கில் கட்டப்படுகின்றன. இவை அனைத்தும் எந்தவொரு பௌத்தர்களும் வாழாத இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினரின் உதவியுடன் அமைக்கப்படுகின்றன. இராணுவத்தினர் பொதுமக்களின் விவகாரங்களில் தலையீடு செய்கின்றனர். வடக்கிலுள்ள சில பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றன தொடர்ந்தும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பொதுமக்களிடம் கையளிப்பதற்கான எந்தவொரு நகர்வும் முன்னெடுக்கப்படவில்லை. இனப் பிரச்சினை தொடர்பில் நிலையான நீதி மற்றும் அரசியற் தீர்வை எட்டுவது தொடர்பில் தமிழர்கள் மத்தியி;ல் நம்பிக்கை ஏற்படுத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியை பக்கச்சார்பின்றி நடத்துவதினாலேயே எட்டமுடியும்.

அந்தவகையில் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கமானது தீவிர அக்கறை கொண்டிராத போது இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும்? ஜெனீவாவிலுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஆணையாளரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான எந்தவொரு நகர்வையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் வழங்கப்பட்ட உறுதிப்பாடானது முற்றிலும் நிறைவேற்றப்படவில்லை.

உண்மையில் அரசாங்கம் எமது பிரச்சினையைத் தீர்ப்பதில் தீவிர அக்கறை கொண்டிருக்குமானால், வடக்கு மாகாண சபையால் முன்வைக்கப்பட்ட தேசியப் பிரச்சினைக்கான தீர்வை நிறைவேற்ற வேண்டும். அதாவது அரசியல் யாப்பானது வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் அடையாளங்கள் மற்றும் உரிமைகளை அங்கீகரிக்கக் கூடிய கூட்டாட்சி முறைமையை ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே எமது தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும். அனைத்துலக சமூகத்தின் பங்களிப்புடன் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்க வேண்டும். பொறுப்புக்கூறல் பொறிமுறையை உறுதிப்படுத்துவதற்கும் அனைத்துலக சமூகத்திற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

எனவே வடக்கு கிழக்கில் 2000 ஆண்டுகளுக்கும் மேலாக வாழும் தமிழ் மக்களின் வரலாற்று சார் வாழ்விடங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் சிறிலங்கா அரசாங்கமானது ஏதாவது சந்தேகம் கொண்டிருந்தால் அனைத்துலக சமூகத்தைச் சேர்ந்த வரலாற்று வல்லுனர்களிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறானதொரு ஆலோசனை பெறப்படுமிடத்து சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் தமிழ் மக்கள் தொடர்பான பிழையான கருத்தியல்கள் நீக்கப்படும். தமிழர்களாகிய நாங்கள் எமது அடையாளங்கள், தனித்துவங்கள் மற்றும் எமக்கான சிறப்புக்களைப் பேணிப்பாதுகாக்கவே விரும்புகிறோம். அதற்காகவே காலம்காலமாகப் பாடுபட்டுவருகின்றோம். எனவே இதனை உணர்ந்து செயற்படவேண்டியது தேசிய அரசாங்கத்தினது கடமையாகும்.

# கிழக்கில் 16

## சிந்திய இரத்தங்கள்

**சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் தமிழ்ப்பத்திரிகை ஒன்றியத் தலைவருமான**

**இரா.துரைரத்தினம்**

# அரந்தலாவ படுகொலை இளம் பிக்குகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்!

போர் உக்கிரமானதை அடுத்து இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 யூலை 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டு யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

இதற்கு ஒரு மாதத்திற்கு முதல் தான் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரந்தலாவ என்ற இடத்தில் பிக்குகள் படுகொலை செய்யப்பட்டனர்.


கோப்புப்படம்

இப்படுகொலையை விடுதலைப்புலிகள் செய்ததாக இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாடுகளும் குற்றம் சாட்டியிருந்தன.

1987 யூன் 2ஆம் திகதி இச்சம்பவம் நடைபெற்றது. அம்பாறை மகாவாவியில் உள்ள விகாரையிலிருந்து களனியா ரஜமகா விகாரைக்கு தலைமை பிக்கு ஹெகொட இந்திரசார தலைமையில் பஸ் ஒன்றில் பயணம் செய்த வேளையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. இந்த பிக்குகள் வித்யானந்த பிரிவெனாவைச் சேர்ந்தவர்களாகும்.

இளம் பிக்குகளும் சில பொதுமக்களும் இந்த பஸ்ஸில் யாத்திரை சென்றனர்.

காலை 7.15 மணியளவில் காடுகள் நிறைந்த நுவரதன்னே கிராமத்தில் ஆயுதம் தரித்த சிலர் பஸ்ஸை வழிமறித்தனர். பஸ்ஸில் ஏறிய ஆயுதம் தரித்தவர்கள் பஸ்ஸை அரந்தலாவ காட்டுப்பகுதிக்கு ஓட்டிச் செல்லுமாறு சாரதிக்கு பணித்தனர்.

காட்டுப்பகுதியில் பஸ்ஸை நிறுத்துமாறு உத்தரவிட்ட சில விநாடிகளில் பஸ்ஸில் இருந்த இளம் பிக்குகள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் தலைமை பிக்கு வண. ஹெகோடா இந்திரசார தேரர் மற்றும் 4 பொதுமக்கள் என 31 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் 27 பேர் சிறுபராயம் உடைய இளம் பிக்குகளாகும்.

4 இளம் பிக்குகளும் மேலும் மூன்று பிக்குகளும் காயங்களுடன் தப்பினர்.

தாக்குதல் நடத்தியவர்கள் பின்னர் காட்டிற்குள் தப்பி ஓடிவிட்டனர் என காயமடைந்த பிக்குகள் தெரிவித்தனர்.

சற்றுநேரத்தில் தகவல் அறிந்து மகா ஓயா உட்பட இராணுவ முகாம்களிலிருந்து இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் சம்பவ இடத்திற்கு வந்து சடலங்களை மீட்டதுடன் காயமடைந்தவர்களை அம்பாறை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.


அம்பாறை மகாஓயா பிரதான வீதியில் அரந்தலாவ உள்ளது. இது காடுகள் நிறைந்த பகுதியாகும்.

ஹெலாபிமா அமைப்பு மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து படுகொலை நடந்த இடத்தில் நினைவு சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிக்குகள் பயணம் செய்து தாக்குதலுக்கு உள்ளான பஸ் அந்த இடத்தில் நிறுத்தப்பட்டு அங்கே பிக்குகள் கொல்லப்பட்டு கிடக்கும் காட்சிகள் சிலைகளாக வடிக்கப்பட்டிருக்கிறது.

காடுகள் நிறைந்த அந்த பகுதியில் இந்த படுகொலையின் சாட்சியாக இந்த பஸ் நிறுத்தப்பட்டு நினைவு சின்னம் அமைக்கப்பட்டிருக்கிறது.

2013 ஆம் ஆண்டில், உள்ளூர் கலைஞரால் இந்த பிக்குகள் பயணித்த அதே பேருந்தைப் பயன்படுத்தி இந்த இடத்தில் ஒரு நினைவு அருங்காட்சியகம் கட்டப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.


கோப்புப்படம்

ஒவ்வொரு வருடமும் யூன் 2ஆம் திகதி இந்த படுகொலையை நினைவு கூரும் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த கொலையை தாம் செய்ததாக விடுதலைப்புலிகள் உரிமை கோரவில்லை என்றாலும் விடுதலைப்புலிகளே இதனை செய்ததாக அரசாங்கம் சம்பவம் நடைபெற்ற காலத்திலிருந்து கூறிவருகிறது.

கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரன் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த பின் இந்த கொலையை விடுதலைப்புலிகள் தான் செய்தார்கள் என கூறியிருந்தார்.

தனது கட்டளையின்படி அரந்தலாவ பிக்குகள் கொலை செய்யப்படவில்லை எனவும் விடுதலைப்புலிகளின் புலனாய்வு பிரிவுக்கு பொறுப்பாக இருந்த பொட்டம்மானின் கட்டளையின்படியே இந்த பிக்குகள் கொலை செய்யப்பட்டதாக கருணா சிங்கள பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

பொட்டம்மான் உள்ளிட்டோரே அரந்தலாவ பிரதேசத்தில் பிக்குகளை கொலை செய்தனர். இநத தாக்குதலுக்கு 6 பேர் கொண்ட சிறிய குழு சென்றது என்றும் தான் அப்போது தொப்பிகல பிரதேசத்திற்கு பொறுப்பாக இருந்ததாகவும் கருணா தெரிவித்திருந்தார்.

கடற்புலிகளுக்கும், புலனாய்வு பிரிவினருக்கும் பொட்டம்மானே நேரடியாக கட்டளைகளை வழங்கினார். எனைய படைப்பிரிவை அவர் கட்டுப்படுத்த முடியாது. எது எப்படி இருந்த போதிலும், பிரபாகரன் மற்றும் தமிழ்ச்செல்வன் போன்றவர்களும், பொட்டம்மானின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.


கோப்புப்படம்

பின்னர் அவர் யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பட்டார். அதன் பின்னரே தான் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை தளபதியாக நியமிக்கப்பட்டதாகவும் அச்செவ்வியில் தெரிவித்திருந்தார்.

ஆனால் விடுதலைப்புலிகளின் அம்பாறை தளபதியாக செயற்பட்ட றீகன் தலைமையிலான அணியினரே பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக அப்போது கூறப்பட்டது. வெல்லாவெளியில் உள்ள றீகனின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் விசேட அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டிருந்தனர்.

அரந்தலாவலயில் இச்சம்பவம் நடைபெற்ற இடத்தில் சர்வதேச பௌத்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அங்குதான் இந்த நினைவு சின்னங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதேபோல அம்பாறை மாவட்டத்தில் சிங்கள குடியேற்ற கிராமமான கொனகல என்ற கிராமத்தில் 1999ஆம் ஆண்டு செப்டம்பர் 18ஆம் திகதி நள்ளிரவு வேளையில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக அரசாங்கம் குற்றம் சாட்டியிருந்தது. இச்சம்பவத்தில் சுமார் 50 கிராமவாசிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

தொடரும்

# யாழ்.கண்காட்சிக்கு செலவிட்ட பல கோடி ரூபா பாதிக்கப்பட்ட மக்களுக்கு செலவிட்டிருக்கலாம்!



கோப்புப்படம்

அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்

யாழ்.நகரில் 6 கோடி ரூபா (60 மில்லியன்) ரூபா செலவில் 'என்டர்பிறைஸ் சிறிலங்கா கண்காட்சி' நடைபெற்றுள்ளது.அத்துடன் 2350 மில்லியன் ரூபா செலவில் மாநகர சபை மண்டபத்துக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொள்ளும் 2200 பட்டதாரிகளின் உபசரணைக்கு 25 லட்சம் ரூபா மாநகர சபையின் பணம் செலவு.கோடிக்கணக்கான மக்களின் வரிப்பணம் **Enterprise Sri lanka Exibition 2019-Jaffna** என்ற பெயரில் யாழ்.முற்றவெளி மைதானத்தில், அடுத்துவரும் ஜனாதிபதி தேர்தலுக்கான ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல் தேவைகளுக்காக கொட்டப்பட்டு வீண் விரயமாக்கப்பட்டுள்ளதாக பொருளாதார,சமூக ஆரவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கண்காட்சி ஏற்பாடுகளில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாகவும்,இதற்கு முன்னர் இக்கண்காட்சி மொன்றாகல,அனுராதபுரம் பகுதிகளில் இடம்பெற்றபோதும் கேள்வி கோரலில் முறைகேடுகள் உள்ளதாகவும் ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானாந்தா பாராளுமன்றத்தில் கடந்த 5 ஆம் திகதி நிதியமைச்சர் மங்கள சமரவீரவிடம் கேள்வி எழுப்பியிருந்தார். அத்துடன் இத்திட்டத்தில் உதவிகளைப்பெற வங்கிகளை நாடும்வடக்கின் பெரும்பாலான மக்கள் வங்கிகளால் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், மொன்றாகல, அனுராதபுரம் மக்கள் இக்கண்காட்சியால் பெற்ற பயன் பாடுகள் எந்தளவில் உள்ளன எனவும் கேட்டிருந்தார்.அச்சமயம் நிதியமைச்சர் சபையில் இருக்கவில்லை.

கடுமையான பாதுகாப்பு கெடுபிடிகள்,ஒழுங்கான வாகனத்தரிப்பிடங்கள்,போக்குவரவு,மற்றும் உணவு வசதிகள் போன்ற பிரச்சினைகள் காணப்பட்டன. இளம் தலைமுறையினருக்கான கடன் திட்டம் என்ற பெயரில் தென் பகுதிக்கே அதிகளவு வழங்கப்பட்டன.சிங்களவர்களின் தொழில்துறைகள் அதிகளவுக்கு வளர்ச்சியடைந்த நிலையில்,அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் அதிகரிக்கும் நோக்கிலுமே இக்கண்காட்சி இங்கு இடம்பெற்றதும் தெளிவாகிறது. இங்கு தேசிய லொத்தர் சபையின் சுவீப் டிக்கற் அமோக விற்பனை.இதனால் யாழ்.மக்களிடம் மீண்டும் பழைய கால சூதாட்ட நினைவு ஏற்பட்டுள்ளது. இங்கு கடன்களுக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளதாகவும்,யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகளில் இருந்து அதனைப்பெற பல நிபந்தனைகளை விதிப்பதுடன்,தாமதப்படுத்தப்படுவதாவும்,தொழில் முயற்சியாண்மைக்கு அதிக வட்டியுடையை கடன்களை வழங்க வே வங்கிகள் முயல்வதாகவிம்,கடன்களுக்கு அமைச்சின் அனுமதியை பெற வேண்டும் எனவும் வங்கிகள் தெரிவித்துள்ளன என தொழில் முயற்சியாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நுண் கடன் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவுவதாக நிதி அமைச்சர் முன்னர் கூறியிருந்தார். இதனால் தற்கொலை செயவோர்,பெண்களும் அதிகம். யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட வன்னியில் மக்கள் பல்வேறு பிரச்சினைகள்,தேவைகளை எதிர்நோக்குகின்றனர்.வரட்சியால் குடிநீருக்கு அலைகின்றனர். குடிநீரை விநியோகிக்க பௌசர் வசதிகள் இல்லை என உள்ளூராட்சி மன்றங்கள் கூறுகின்றன.அதற்கான நிதியை யார் வழங்குவது. 2015 பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசு இதுவரை இவர்களுக்கு உருப்படியான வேலைத்திட்டங்களை செய்யவில்லை என சுதந்திரக்கட்சி,ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எப்,தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி,பொது ஜன பெரமுன என பல அரசியல் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. இந்த கண்காட்சியின் பணத்தை இந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்காக பயன்படுத்தியிருக்கலாமே எனவும் கூறுகின்றனர்.


1989 விடுதலைப்புலிகள் பிரேமதாசவுடன் நடாத்திய சமாதானப்பேச்சுக்களிலும் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கே முன்னுரிமை வழங்குமாறும், அதற்காக இடைக்கால நிர்வாக சபையையும் வலியுறுத்தினார்கள்.அதே போல 1994 சந்திரிகாவுடனான பேச்சுவார்த்தையிலும் அரசியல் தீர்வுக்கு முன் வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தலுக்கே முக்கியத்துவம் அளித்திருந்தனர்.2002 ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆரம்பமான பேச்சுவார்த்தையிலும் இதேபோலவே இந்த மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்க்க இடைக்கால நிர்வாக சபையை கேட்டனர். **(Interim Self Governing Authority- ISGA)** இடைக்கால சுயாட்சி அதிகார சபை என்ற பெயரில் முன்வைத்தனர்.இதேநேரம் ஜப்பான்,அமெரிக்காவிலும் இதற்கான ஒரு கூட்டமும் இடம்பெற்றன.இதேபோல ஒரு அமைப்பை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு,அரசுடன் இணைந்து செயற்படுத்தியிருந்தால் மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு நான்கு வருடத்தில் ஓரளவுக்கு தீர்வைக்கண்டிருக்கலாம்.

வடக்கில் மிகவும் மோசமான அழிவுகளையும்,பாதிப்புக்களையும் சந்தித்தது யாழ்ப்பாண நகரமே.இங்குள்ள ஒல்லாந்தர் கோட்டையில்தான் இராணுவ முகாம் 1985 - 1993 வரை இயங்கியதால்,கோட்டையில் இருந்து தினமும் எறிகணைகள் (ஷெல்) நகரப்பகுதிகளுக்கு ஏவப்பட்டன.அவை நகரின் பல இடங்களில் விழுந்து வெடிக்கும். இதேபோல இந்திய படையிரும் மேற்கோண்ட எறிகணைகளால் பல வீடுகள்,கட்டடங்கள் அழிந்தன.பலர் இறந்தனர். 1995 இல் நகரை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட'சூரியகதிர்' படைநடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்கள் இவற்றை விட அதிகம். இன்றும் பல இடங்ககளில் யுத்த அழிவுகளை காணலாம்.

யாழ்.நகர் புலிகளிடம் இருந்து படையினர் வசமானதும்,யாழ்.மாநகர சபை உட்பட குடாநாட்டின் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தலை சந்திரிகா அரசு நடாத்தியது. அதில் மாநகர சபையை தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றி,மேயராக மறைந்த யாழ். எம்.பி.யோகேஸ்வரனின் மனைவி சரோஜினி 1998 நியமனமானார்.அவர் மேயர் பதவியேற்றதும், யுத்தத்தால் பெரிதும் அழிவடைந்துள்ள யாழ் நகரை கட்டி எழுப்வேண்டியது அவசியம். கால்வாய்கள்,வடிகான்கள் சேதமாகி,கழிவுகள்,கழிவு நீர் தேங்கியுள்ளன.மழை காலம் வெள்ளம் வடிந்து ஓடமுடியாத நிலை. இதனால் நுளம்புகள், இலையான்கள் பெருகி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலவித நோய்களுக்கு உள்ளாகின்றனர். அவற்றை திருத்தவேண்டியது எனது முதல் பணியாகும். அதற்கு பெருமளவு நிதி தேவை.மக்களின் வரிப்பணத்தை வீணாக்கக்கூடாது என்றார். இதற்கு ஏனைய தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு அளித்தனர். அவரின் திடீர் மறைவுக்கு பின் வந்த மேயர் சிவபாலன்,அவரின் மறைவையடுத்து வந்த மேயர் ரவிராஜ் ஆகியோரும் இதனையே வலியுறுத்தி னார்கள்.மக்களின் சுகாதாரப்பிரச்சினையே முக்கியமானது என்றனர்.ஆனால்,யுத்தம் நடைபெற்றதால் அவற்றை ஒழுங்காக செய்யமுடியவில்லை.

இக்கண்காட்சியில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இதனை ஒப்புக்கொண்டுளார்.யுத்த காலத்தில் மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை போன்ற பிரதேசங்கள் வளர்ச்சியடைந்தன.ஆனால்,யாழ்ப்பாணம் அழிவடைந்துள்ளது. யுத்தத்தால் அழிவுக்குள்ளான யாழ்.மாநகரை கட்டியைழுப்பவேண்டியது அவசியம்.2015 ஆட்சிக்கு வந்து முதலாவது வருடத்தில் எதனையும் செய்யவில்லை என சிலர் கூறுகின்றனர்.நாம் ஆட்சிக்கு வந்த எல்லா சந்தர்பங்களிலும் முயற்சித்தோம்.என்றார்.அவர் அமைச்சராக இருந்த ஜே.ஆர்,பிரேமதாச ஆட்சியிலேயே யாழ்ப்பாணம் அழிவடைந்ததும் குறிப்பிடத்தக்கது. புலிகள் அவரிடம்

13 ஆம் பக்கம் பார்க்க....



# நலிவடைந்துள்ள நல்லிணக்கம்!

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

அரசாங்கம் பதவியேற்று நான்கு ஆண்டுகள் நிறைவுக்கு வந்துவிட்ட நிலையில் இனங்களுக்கிடையிலும், மதங்களுக்குமிடையிலும் புரிந்துணர்வையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்புவதற்குத் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சை உருவாக்கி அந்த அமைச்சின் ஊடாகத் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளை அமைச்சு செயற்படுத்தி வருகிறதாக கூறப்படுகின்றது.

இருந்தபோதிலும் வட கிழக்கில் தமிழ் மக்களது பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் குறிப்பாக தத்தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேறுவதற்கு சில அரசியல்வாதிகளே தடையாகவுள்ளனர் என மக்கள் குற்றஞ் சுமத்தி வருகின்றனர். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட மக்களை மீண்டும் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை குழப்பும் வகையில் சில மட்டக்களப்பு மாவட்ட அரசியல் தலைமைகள் செயற்பட்டுவருவதாக மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பில் ஆராயுமிடத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமை வடகிழக்கில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில், யுத்தம் மற்றும் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து இதுவரைக் காலமும் மீள்குடியேற்றப்படாத மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை மீண்டும் தங்களது பூர்வீக இடங்களில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கை துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், இத்திட்டத்தை குழப்பி - இடையூறுகளை விளைவித்து, இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கு சில அரசியல் தலைமைகள் முயற்சிக்கின்றமை மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

இந்நிலையில், இலங்கையில் நல்லிணக்கத்திற்கான செயற்பாடுகள் நகர்கின்றதா? என்ற கேள்வி தற்போது சகல மக்களுக்கும் இடையில் பாரிய கேள்வியை எழுப்பியுள்ளது. அதாவது ஒரு சில விடயங்கள் நல்லிணக்கத்திற்காக மேல் மட்டத்தில் நடந்தாலும் அரசாங்கம் சில விடயங்களில் உதாரணமாக சொல்லப் போனால் காணமல் போனோரை கண்டறியும் அந்த செயலகம் போன்றவை சிறப்பாக இருந்தாலும் நல்லிணக்கத்தை அடி மட்டத்தில் இருந்து ஏற்படுத்தும் நடவடிக்கைகள் இல்லை என்றே கருதக்கிடக்கின்றது.

தற்போதைய அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்கள் திருப்தி அடையாத நிலையிலே இருக்கின்றனர். இந்த நிலை மாற்றமடைந்து அனைவர் மத்தியிலும் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என்பதே இலங்கை மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வுகள் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டால் மாத்திரமே, அது தேசிய இன ஒற்றுமைக்கு வழிவகுக்கும் எனவும், எனினும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறது. பல இனங்கள், மதங்கள் கொண்ட எமது நாடு ஸ்திரமாகவிருந்தால் தான் நிலையான அபிவிருத்தியை நாட்டில் முன்னெடுக்கும் போது முன்னேற்றகரமான இலக்குகளை அடைய முடியும்



கோப்புப்படம்

குறிப்பாக யுத்தத்தின் பின் வட கிழக்கு மக்களின் மன நிலையயை வைத்து பார்க்கும் போது இந்த நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சாதகமான கீழ் மட்ட நடவடிக்கைகள் இன்று வரைக்கும் இல்லை என்பதே இன்றைய நிலையாக உள்ளது.

குறிப்பாக இவர்களது அடிப்படை உரிமைகள் இன்று வரையும் மறுக்கப் பட்டுள்ளதாகவே இருக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் இன்று வரையும் மீள் குடியேற்றப்படாமை, இது தொடர்பான திட்டமிடல் அரசாங்கத்திடம் இல்லை. அரசியல் கைதிகளின் விடுதலை இன்று வரைக்கும் ஒரு கேள்வி குறியாகவே இருக்கின்றது. உண்ணாவிரதங்கள் போராட்டங்கள் நடத்தியும் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஒரு பதிலும் இல்லை.

காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் சரியாக எதை செய்ய போகின்றது? காணாமல் போனோர் காரியாலயம் அமைத்தது ஒரு விடயம் மாத்திரமே. ஆனால் நடைபெற்றதாக எதுவுமே அறியப்படவில்லை.

ஆனால் அரசிடம் எதாவது ஒரு திட்டமிட்டல் இருக்கின்றதா? இது வரைக்கும் எத்தனை பேர் கடத்தப்பட்டுள்ளார்கள், அல்லது காணாமல் போய் உள்ளார்கள் என்ற இந்த தகவலையோ அல்லது அந்த பட்டியலையோ இன்று வரையும் வெளிவிடாமையில் ஒரு பாரிய சிக்கலில் இருக்கின்றது. வெளியிட்டால் மாற்று பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படும் என்ற அச்சத்தில் கூட வெளியிடாமல் இருக்கலாம் என புத்திஜீவிகள் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தின் பின் சிலரது மீள் குடியேற்றம் என்று பார்த்தாலும் சிலருக்கு வீடுகள் கட்டி கொடுத்தாலும் அவர்களுடைய அடிப்படை வசதிகள் ஒரு கேள்வி குறியாகவே இருக்கின்றது. சிலரது இடங்கள் கூட இன்னும் விடுபடவில்லை என்பதும் ஒரு பாரிய விடயமாக இருக்கின்றது. .

இன்னும் ஒரு பக்கம் பார்த்தால் தமிழர்கள் குறிப்பாக சிறுபான்மை மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் பௌத்தர்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் புத்த விகாரைகள் அமைப்பது போன்ற கீழ்த்தரமான விடயங்களினால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சிறுபான்மை மக்களிடத்தில் கேள்வியை எழுப்பியுள்ளது.

அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்த செயற்;பாடுகளை முன்னெடுக்கின்றதா, பாதிக்கப்பட்ட மக்கள் எதை எதிர் பார்க்கின்றார்கள் என்பது ஒரு கேள்வி குறியாக இருக்கின்றது. ஆனால் ,வேறு நாடோ வேறு ஒரு அலகோ எங்களுக்கு தேவை இல்லை உள் நாட்டுக்குள்ளே நாங்கள் சுதந்திரமாக வாழ குறிப்பாக, பெரும்பான்மை சமூகத்தினர் இன்று எப்படி வாழ்கின்றார்களோ அதே மாதிரி நாங்களும் வாழவேண்டும் என்பதில் சிறுபான்மை மக்கள் தெளிவாக இருக்கின்றார்கள். நல்லிணக்கம் தொடர்பாக இன்று மலையகத்தை எடுத்து பார்த்தால்; இது வரைக்கும் அரச நிருவாக கட்டமைப்புக்குள் கொண்டு வாராமல் இருப்பது அவர்களுக்கு இருக்கின்ற பாரிய பிரச்சினையாக அல்லது ஒரு பாரிய விடயமாக இருந்து வருகின்றது.

கடந்தகாலங்களிலிருந்து பார்த்தாலும் மலையக மக்களின் வாழ்வியலை எடுத்து பார்த்தால் 200 வருடங்களுக்கு மேலாக அவர்கள் வாழ்ந்த போதிலும் அவர்களுடைய வாழ்வியல், அது சமூக ரீதியாக இருக்கலாம், பொருளாதார ரீதியாக இருக்கலாம், அரசியல் ரீதியாக இருக்கலாம் அவை எல்லாமே பின் தள்ளப்பட்டதாகவே இருந்துவருகின்றது. இந்த அரசாங்கமும் ஒரு அமைச்சரை தெரிவுசெய்து பெருந்தோட்ட துறை அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி என அமைச்சு உருவாக்கினாலும் கூட அவை எல்லாம் மட்டுப்பட்டதாகவே இருக்கின்றது. லயன் அறைகளில் வாழ்கின்ற மக்கள் இன்று வரைக்கும் அதே நிலையில் தான் இருக்கின்றனர். இந்த மக்கள் இன்று இலங்கையின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பு என்ற ரீதியில் மிகவும் முக்கியமானவர்கள் என்பதை அறிந்து கொண்டும் இலங்கை அரசு அவர்களுக்கான எந்த விதமான மதிப்பினையும் கொடுப்பனவுகளையும் வழங்க முன்வருவதில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

இவற்றை எல்லாம் பார்த்தால் இவை எதை குறிக்கின்றது? இந்த நல்லிணக்கம் என்பது யாருக்கு இலங்கை அரசுக்கா? அல்லது தமிழர்களின் பிரதிநிதி என அழைக்கப்படு;பவர்களுக்கா? ஒட்டு மொத்தத்தில் இந்த இலங்கை தீவில் சிறுபான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு நல்லிணக்கம் என்பது இல்லை என்பதே நிதர்சனம் இனியும் உருவாகும் என எதிர்பார்ப்பதும் இலவு காத்த கிளியின் கதையே!

அவற்றில் ஒருபகுதியான சர்வதேச விசாரணை குறித்து பேசும்போது, இரண்டு வகையானதாக அத்தகைய விசாரணைகளை நடத்த முடியும். ஒன்று, இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன், இலங்கை அரசாங்கமே சர்வதேச நிபுணர்களையும், நீதிபதிகளையும் நியமித்து நடத்துகின்ற விசாரணை.

இரண்டு, இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதல் இன்றி, ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளால் நடத்தப்படுவது. இதுபோன்ற ஒரு விசாரணையே, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தினால் நடத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த விசாரணை, போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக- ஒவ்வொரு சம்பவத்தையும் ஆழமான விசாரணைகளை நடத்தும் ஒன்றாக இருக்கவில்லை.

ஆனால் தற்போது முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச விசாரணை என்பது, போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரித்து, அத்தகைய சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கானதே ஆகும்.

நல்லிணக்க முயற்சிகளில் பொறுப்புக்கூறல் முக்கியமானது. அதனால் தான் பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறை எத்தகையதாக இருக்க வேண்டும் என்று மக்களின் கருத்தை அறிவதற்கான ஒரு கலந்தாய்வு செயலணி கடந்த வருடம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்தச் செயலணியின் மூலம் திரட்டப்பட்ட மக்களின் கருத்துக்கள, குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்கள், சர்வதேச விசாரணைக்குச் சார்பாகவே இருந்துள்ளது. இதற்கு முக்கியமான காரணம், உள்நாட்டு விசாரணைகளின் மீதான நம்பிக்கையீனம். இலங்கையின் நீதித்துறை கடந்த ஆட்சிக்காலத்தில் மோசமாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது.

தற்போதைய அரசாங்கம் அந்த நிலையை மாற்றியமைப்பதற்கு, முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், இன்னமும் முழுமையான மாற்றங்கள் இடம்பெற்றிருக்கவில்லை என்றே கூறலாம்.

அதைவிட, போர்க் குற்றச்சாட்டுகள், அரசபடைகள் மற்றும் முன்னைய அரசுடன் தொடர்புடையவர்களை மையப்படுத்தியே முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், உள்நாட்டில் அவர்களுக்கு எதிராக நடத்தப்படும் விசாரணைகளில் பாதிக்கப்பட்டவர்களால் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதே உண்மை நிலவரமாகும்.



கோப்புப்படம்

முன்னைய அரசாங்கத்தில் இருந்தவர்கள், முன்னைய ஆட்சியாளர்களின் அனுதாபிகள் பலரும் இப்போதைய அரசாங்கத்திலும் உள்ளனர். முன்னைய அரசாங்கத்தினால் உள்வாங்கப்பட்டவர்கள்தான் நீதித்துறைக் கட்டமைப்புகளில் நல்லாட்சியிலும் உள்ளனர்.

இவ்வாறான நிலையில், உள்நாட்டு விசாரணைகளில் நீதியை எதிர்பார்க்க முடியாத நிலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனவேதனையாகவே உள்ளது.

எனவே இலங்கையில் பல தசாப்த காலமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் கடந்த 2009ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள், மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து புறக்கணித்து வருகின்றது.

இலங்கை நல்லாட்சி அரசின் இந்த புறக்கணிப்பின் காரணமாக யுத்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகள், காணாமல் ஆக்கப்பட்டோர், மற்றும் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு நீதி, நியாயம் என்பது எட்டாக்கனியாகவே இருக்கும்.

எனவே நீதி என்பது தமிழ்மக்களுக்கு கிடைக்காதவரை நாட்டில் நல்லிணக்கம் தேசிய ஒருமைப்பாடு குறித்து பேசுவோரின் கருத்துக்களும் வெறும் அர்த்தமற்ற பேச்சுக்களாகவே இருக்கும் என்பதே சமகால நடப்புக்களாக உள்ளதென லாம்.

# இலங்கையின் ஜனநாயகமற்ற அரசியலும் சர்வதேச நாடுகளும்

முனையூரான்

இலங்கை நாட்டில் அரசியல் ஜனநாயகம் மீள்கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் அரசியல் குழப்பநிலை நாட்டிலே தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இந்நிலையில் வெளிநாட்டு இராஜதந்திரிகளை எட்டிக்குப் போட்டியாக ஜனாதிபதி தரப்பினரும், ரணில்விக்ரமசிங்க தரப்பினரும் சந்தித்து வருகின்ற சூழலில், அரசியல் ஜனநாயகம் இலங்கை நாட்டிலே நிலைநாட்டப்படுவதுடன், சட்டரீதியான அரசினையே தாம் ஏற்றுக்கொள்ளப் போவதாகவும் இராஜதந்திரிகள் கூறிவருகின்றனர். குறிப்பாக இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் அலைனா டெப்பிலிட்ஸ் அண்மையில் கருத்துக்கூறுகின்ற போது, இலங்கையில் தற்போது காணப்படும் அரசியல் நெருக்கடியால் மிக மோசமான பொருளாதார சமூக விளைவுகள் ஏற்படலாம். சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையும் பாதிக்கப்படலாம். இதன் காரணமாக இலங்கையின் அரசியல் தலைவர்கள் தற்போதைய நெருக்கடிக்கு உடனடியாக தீர்வு காணவேண்டும். இந்த அரசியல் மோதலில் யார் வெற்றிபெறவேண்டும் என்பது குறித்து நாங்கள் அக்கறை கொண்டிருக்கவில்லை. அரசியல் மோதலில் யார் பக்கமும் நாங்கள் நிற்கவில்லை. அரசமைப்பு நடைமுறைகளை மதிக்கும், வெளிப்படையான, சட்டபூர்வமான அரசாங்கத்தை உருவாக்கும் முடிவையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாங்கள் இலங்கையின் அரசியல் தலைமைத்துவத்தையும் ஜனாதிபதி சிறிசேனவையும் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு பொறுப்புணர்வுடன் தீர்வை காணுமாறு கோரியுள்ளோம். இதன் மூலம் இலங்கையில் அரசமைப்பினால் ஆணைவழங்கப்பட்ட அரசாங்கம் ஆட்சி செய்கின்றது, ஜனநாயக ஸ்தாபனங்கள் மதிக்கப்படுகின்றன என்பது தெளிவாகும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை நாட்டில் நீடிக்கும் ஜனநாயகமற்ற அரசியல் சூழலினால், சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் நம்பிக்கையற்றுள்ளமையுடன், இலங்கை நாட்டிற்கு உதவிகளை வழங்குவதிலும் பின்னிற்கின்றனர். இதனால் இலங்கை நாடு பொருளாதார ரீதியான நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைக்கு உடனடியாக தீர்வு காணப்படாது இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்றமையே, இலங்கை குறித்து சர்வதேச நாடுகள் நம்பிக்கையீனம் கொள்வதற்கு காரணமாகியுள்ளதுடன், தொடர்ச்சியாக நல்லிணக்கமுயற்சி கைகூடுமா? என்ற சந்தேகத்தினையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

நாட்டினது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2015ல் ஜனாதிபதியாக அரியணையேறிதனைத் தொடர்ந்து நல்லிணக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய ஜனாதிபதி என்ற பெயரினை நாட்டிலும், நாட்டிற்கு வெளியேயும் பெற்றிருந்தார். இந்நன்மதிப்பின் விளைவினால்தான் இலங்கை குறித்து ஐநாவினால் கூறப்பட்ட விடயத்திற்கு இரண்டு வருடகால அவகாசத்தினை இலங்கை அரசு வேண்டியிருந்தபோது, அதற்கான கால அவகாசத்தினை ஐநாவும் வழங்கியிருந்தது. ஆனாலும் அவ்வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படாத நிலையில், அவை நிறைவேற்றப்படுமா? என்ற சந்தேகத்தினையும் தற்கால அரசியல் குழப்ப நிலை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்நிலையில்தான், அண்மையில் தமிழர்களுக்கான பிரித்தானிய அனைத்துக் கட்சி பாராளுமன்றக்குழு பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் மார்க் பீல்டிடம் கோரிக்கை விடுக்கின்ற போது, இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது குறித்து மேலும் அழுத்தம் பிரயோகிப்பட வேண்டும். தற்போது நிலவி வரும் அரசியல் சிக்கல் நிலை தொடர்பில் இலங்கை மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30⁄1 தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே இவ்விடயம் தொடர்பிலும் எதிர்வரும் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போது மேலும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளனர். இச்சந்திப்பு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மார்க் பீல்ட் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடுகையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் நிலை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் அரசியலமைப்பின்படி செயற்பட வேண்டும் என்பதையே மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம். அத்தோடு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பில் தொடர்ச்சியாக அழுத்தம் வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் சர்வதேச நாடுகள் இலங்கை தொடர்பில் ஒரே கொள்கையைப் பேணிவருகின்ற அதேவேளை உடனடியாக அரசியல் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதனை விரும்புகின்றனர் என்பது தெளிவாகின்றது.

சர்வதேச நாடுகளின் நன்மதிப்பு இலங்கை தொடர்பில் குறைவடைந்து வருகின்ற அதே வேளை, இலங்கை நாட்டு மக்களும் அரசு தொடர்பில் நம்பிக்கையிழந்து வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் 2019ம் ஆண்டிற்கான சீருடைக்கான கொடுப்பனவுகளோ? அல்லது சீருடைத்துணிகளோ மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் ஏமாற்றத்தினைச் சந்தித்துள்ளதுடன், எப்போது கிடைக்கப்பெறும் என்பது தொடர்பில் இதுவரை தீர்க்கமான முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை. நாட்டில் எவ்வாறான அரசியல் குழப்பநிலை உருவாகினாலும் நாட்டினது நிர்வாக நடவடிக்கைகள், அபிவிருத்திகள் குழப்பமுறக்கூடாது. அவ்வாறு நாட்டினது நிர்வாகத்தில் குழப்பங்கள் இடம்பெறுமாகவிருந்தால் முழுநாடே குழப்பநிலையைச் சந்திக்கும். வரவு, செலவுத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாட்டில், வரவு, செலவு திட்டங்கள் தொடர்பிலான பேச்சுக்கள் இல்லாத நிலையில் நாடு வேறுதிசையில் சென்று கொண்டிருக்கின்றது. ஆனாலும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு தேவையான அனைத்து நிதிகளும் ஒதுக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. இல்லையாயின் நிர்வாக நடவடிக்கைகள் முடங்கும் நிலை உருவாகலாம். இந்நிலையில்தான் ஜனாதிபதி அண்மையில் அனைத்து நிர்வாகத் தலைவர்களையும் சந்தித்து உரையாடியிருந்தார். இதன்போது,


கோப்புப்படம்

13 ஆம் பக்கம் பார்க்க....





# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு எழுத்து மூலமான உத்தரவாதம் தரும் ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும்

சத்தார் எம் ஜாவித்

இலங்கை வாழ் முஸ்லிம்கள் சிறுபான்மை இனம் என்ற வகையில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் தொடராகவே சிறுமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். இதற்குக் காரணம் இலங்கையில் சமாதானம் என்ற விடயம் மழுங்கடிக்கப்பட்டு இனவாதம் என்ற அரக்கன் ஒருசிலர் மீது குடிகொண்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, மனிதாபிமானம் அற்ற நிலைமைகள், பெரும்பான்மை என்ற அகங்காரங்கள், தேசிய ஒற்றுமை இன்மை போன்ற விடயங்கள் இன்று மறக்கப்பட்டு ஒரு இனம் வாழ வேண்டும், ஒரு இனம்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு வகையான கோலைத்தனச் செயற்பாடுகள் பன்மைச் சமுகத்தைக் கொண்ட இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் விரிசல்களையும், பிரச்சினைகளையும் உருவாக்கி வருகின்றன.

அரசியல், பொருளாதார சுயநல இலாபங்களுக்காக ஜனநாயக கட்டுக்கோப்புக்களுக்கு சாவு மணியடித்து இந்த நாட்டில் இரத்த ஆறு ஒடுவதற்கான கபடத்தனங்களை ஒருசில குழுக்களும், நபர்களும் மேற்கொண்டு வருவதால் இந்த நாட்டில் மனித நேயம் மறுக்கப்பட்டு இனவாத தீயை மூட்டி வருகின்றனர். இந்தச் செயற்பாடுகளே இலங்கையின் சாபக்கேட்டிற்கும், வீழ்ச்சிக்கும் வித்திட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு உரியவாறான பாதுகாப்பை எழுத்து மூலமாக தருபவர்களுக்கு சிந்தித்து வாக்களிப்பதன் மூலம் ஓரளவு முஸ்லிம் சமுகம் இனவாத சக்திகளின் அடாவடித்தனங்களில் இருந்தும் அவர்களின் தாக்குதல்களில் இருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் பழைய நிலையில் மீண்டும் பல இன்னல்களையும், துன்பங்களையும் அனுபவிக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படலாம்.

நாட்டின் கௌரவம், அமைதி, சமாதானம் என்பனவற்றை குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஏற்படுத்தப்படும் வன்முறைக் கலாசாரம் சர்வதேச அளவில் இலங்கைக்கு இருந்த நற்பெயரும், நன்மதிப்பும் இன்று இலங்கையை ஒரு குற்றவாளி நாடாக ஆக்குவதற்கு வழி வகுத்துள்ளது. குறிப்பாக இலங்கை சர்வதேச ரீதியில் யுத்தக் குற்ற நாடாகவே கணிக்கப்பட்டு அதற்கு பதில் கொடுக்க வேண்டும் என்ற சர்வதேசத்தின் அழுத்தங்கள் இருக்கின்ற நிலையில் இலங்கையின் இனவாதக் குழுக்கள் சர்வதேச குற்ற அழுத்தங்களை மறந்து இலங்கையில் உள்ள சிறுபான்மை மக்களான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அமைதியாக வாழ விடாது தொடராகவே சமய அடிப்படையில் பெரும்பான்மை இனவாதக் கும்பல்களும், ஒருசில இனவாத தேரர்களும் தமது சொந்த நலன்களுக்காக ஒருசில அரசியல் வாதிகளை தம்பக்கம் இழுத்துக் கொண்டு அரசாங்கத்தை அச்சுறுத்தி வருகின்ற நிலைமகளை அவதானிக்கும் போது இந்த நாட்டில் சர்வாதிகாரம் கொண்ட சண்டித்தனமான ஆட்சிக்கு இவர்கள் வித்திடுவது ஊர்ஜீதமாகின்றதை கண்டு கொள்ள முடிகின்றது.

சட்டமும், நீதியும் இருக்கின்ற ஒரு ஜனநாயக நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களில் ஒருசில இனவாதக் குழுக்கள் தமது அத்துமீறல்களை மேற்கொள்வதால் இந்த நாட்டில் வாழும் 99 சதவீதமான மக்கள் பாரதூரமான அசௌகரியங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் உள்ளாக்கப்படுவதுடன் அவர்கள் நாட்டின் இறையான்மைக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

பன்மைத்துவம் கொண்ட இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் சிறுபான்மை என்ற வகையில் ஏனைய சமுகங்களுடன் சமாதானமுமாகவும், சகோதரத்துவமாகவும் வாழவும், ஏனைய சமுகங்களுக்கும், அவர்களின் மதங்களுக்கும், மத நடவடிக்கைகளுக்கும் மதிப்பளித்து வரும் ஒரு சமுகமாகவே இலங்கையின் வரலாறு தொட்டு வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தற்கால யுகத்தில் இந்த நாட்டில் முஸ்லிம் சமுகம் ஒரு மூன்றாம்தர சமுகமாக கணிக்கப்பட்டு இந்தியா போன்ற நாடுகளில் கீழ்த்தர அல்லது ஏழை மக்களைப் அந்த அரசு அடக்கி ஒடுக்கி நடத்துவது போன்று இலங்கை முஸ்லிம்களையும் நடாத்த இனவாதக் குழுக்கள் முனைகின்றனர். இச்செயற்பாடுகளுக்கு அரசாங்கம் இனங்க வேண்டும் என்ற வகையில் இனவாத குழுக்கள் முஸ்லிம் மக்கள் மீதான எதிர்ப்புச் செயற்பாடுகளை பகிரங்கமாகவே மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஒரே இலங்கையர் என்ற கடப்பாட்டுடனேயே வாழ்ந்து வருகின்றனர். எந்தவொரு கட்டத்திலும் அரசாங்கத்திற்கோ அல்லது இலங்கையின் அரசியயலமைப்புச் சட்டங்களுக்கோ அல்லது சட்டத்துறைக்கோ மாற்றமான முறையில் செயற்பட்டதோ அல்லது இந்த நாட்டை துண்டாடி தமக்கும் ஒரு பகுதியைத் தருமாறு கோரியோ நடந்து கொண்டதில்லை. இந் நிலையில் இந்த மக்கள் எந்த விதமான காரணங்களுமின்றி எடுத்தற்கு எல்லாம் தாக்கப்படும் ஒரு சமுகமாக காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

ஜனநாயக நாடு என்ற வகையில் இந்த மக்களுக்கு அரசாங்கம் கொடுக்க வேண்டிய பாதுகாப்புக்களைக் கொடுக்க வேண்டும். ஆனால் பேரினவாதக் கும்பல் தேவையற்ற முறையில் முஸ்லிம் சமுகத்தை தாக்கும் போதெல்லாம் சட்ட ரீதியாகவும், ஜனநாயக நாடு என்ற வகையிலும் வழங்கப்பட வேண்டிய பாதுகாப்புக்களை சரியான முறையில் அரசாங்கம் வழங்கத் தவறிவிட்டமையை கடந்த காலங்களில் முஸ்லிம்கள் மீது சிங்கள காடையர்கள் மேற்கொண்ட அடாவடித்தனங்களை தாராளமாகவே இங்கு சுட்டிக்காட்டலாம்.

குறிப்பாக அளுத்கம, தர்ஹா நகர், கொழும்பு, அம்பாறை, கண்டி, கம்பஹா, குருநாகல், சிலாபம், புத்தளம் உள்ளிட்ட இடங்களில் பெரும்பான்மை இனவாத குழுக்களாலும், இனவாத பௌத்த தேரர்களாலும் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக் கலாசாரம் மிகவும் வெறுக்கத்தக்க சம்பவங்களாக இருக்கின்றதைக் குறிப்பிடலாம். பாதுகாப்பு வழங்க வேண்டிய பாதுகாப்புத் தரப்பினர் முன்னிலையில் பல அட்டூழியங்கள் தாராளமாகவே மேற்கொள்ளப்பட்டன. பொலிஸாரும், இராணுவத்தினரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கடியில் தமது கைவரிசைகளைக் காட்டி முஸ்லிம்களின் கோடிக்கணக்கான செராத்துக்களை சூறையாடியும், கொல்லயைடித்தும், தீயிட்டுக் கொழுத்தியும் செய்த அடாவடி வரலாறுகளை ஏனைய சமுகங்கள் மறந்தாலும் முஸ்லிம் சமுகத்தினால் கடுகளவவேனும் மறந்துவிடக் கூடிய சம்பவங்கள் அல்லவெனலாம்.

காலாகாலமாக முஸ்லிம்கள் இலங்கையர் என்ற நற்பெயருடனேயே வாழ்ந்து வருகின்றர். இலங்கையின் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும் அளவிற்கு நடந்த வரலாறுகள் இல்லாத ஒரு சமுகமாகவே இலங்கை வாழ் முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். ஒரு சில தமிழ் குழுக்கள் தமது உரிமைகளுக்காக அரசாங்கத்திற்கு எதிராக தனி நாடுகோரி போராடிய வரலாறுகளும், அந்த கோர யுத்தத்தினால் இலங்கை வாழ் மக்கள் குறிப்பாக வடகிழக்கு மக்கள் பட்ட துன்பங்களும், துயரங்களும் இன்றுவரை மாறாத வடுக்களாக இருக்கின்ற நிலையில் இதுவரை காலமும் முஸ்லிம்கள் இலங்கை அரசாங்கத்திற்கோ அல்லது நாட்டிற்கோ தமிழ் ஆயுதக் குழுக்கள் செய்தமாதிரியான பாரியளவிலான எந்தவொரு விடயங்களையும் செய்யவில்லை. ஆனால் கடந்த ஏப்பரல் மாதம் முஸ்லிம் சமுகத்தினை வம்புக்கு இழுத்து மாட்டி இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழிக்க வேண்டும் என்ற வெளிநாட்டுச் சக்திகளின் கபடத்தனங்களுக்கு இலங்கையில் உள்ள ஒருசில துரோகத்தனங் கொண்ட முஸ்லிம் இளைஞர்கள் மதம் என்ற கோதாவில் அந்த சர்வதேச தீவிரவாத சக்திகளின் பணத்திற்கு மயங்கியும், அவர்களின் மூளைச்சலவைக்கு உள்ளாக்கப்பட்டும் மிகவும் பாரதூரமான தீவிரவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டு விட்டமை முஸ்லிம்களை அதிர்ச்சிகுள் உள்ளாக்கியிருக்கின்றது. இந்த படுபாதகச் செயலால் முழு முஸ்லிம்களுமே ஒரு கனம் கதிகலங்கி விட்டனர்.

மேற்படிச் செயற்பாட்டினை ஒரு காரணமாக வைத்து எந்த விதத்திலும் சம்பந்தமோ அல்லது ஆதரவு வழங்கியிராத அப்பாவி முஸ்லிம்கள் மீது பேரினவாத தீவிரவாத சக்திகள் முஸ்லிம் சமுகத்தினை மதம், சமயம் என்ற அடிப்படையிலிருந்து ஓரங்கட்டுவதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் இன்று தமது அடாவடிகளை சட்டத்திற்கும், நீதிக்கும் மாற்றமான முறையில் தடியெடுத்தவன் எல்லாம் சண்டியன் என்ற மாதிரி செயற்படுகின்றனர்;. இதற்கு அரசின் பாதுகாப்புத் துறையினரும் ஒரு வகையில் துணை நிற்பதும் முஸ்லிம் சமுகத்திற்கு பாரியதொரு துன்பகரமான உணர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது எனலாம்.

நாட்டுச் சட்டங்கள் அந்த நாட்டில் வாழும் சகலருக்கும் சமமானதாக இருக்க வேண்டும். சம அந்தஸ்து வழங்க வேண்டும். அதுவே ஒரு சிறந்த ஜனநாயக நாட்டின் அடையாளங்களாக கணிக்கப்படும். ஆனால் இலங்கையில் ஜனநாயக வாசங்கள் தற்போது மங்கி மறைந்து ஒரு வகையான இனவாதக் கொள்கை கலந்த ஆட்சி முறைக்கு வித்திட்டு வருகின்ற நிலைகைளை காண முடிகின்றது. காரணம் சட்டத்தை மதிப்பவர்கள் இன்று நாட்டில் இருந்தாலும் அரசியல் மற்றும் பணச் செல்வாக்குகள் கொண்டவர்கள் தமது ஆதிக்கத்தினை ஒரு கருவியாக எடுத்து சிறுபான்மை சமுகங்களை நசுக்கும் நிலைமைகள் தொடராகவே இடம் பெற்று வருகின்றன.

அரசாங்கமும், நாட்டின் ஜனாதிபதி, பிரமதர் போன்றோர் நாட்டில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாக வீராப்பு பேசுகின்றனர். அவர்கள் ஒரு மனிதனை அல்லது ஒரு சமுகத்தினை உடல், உள ரீதியாக நிந்திக்கும் குழுக்கள், இனவாத தேரர்கள் விடயத்தில் அரசாங்கமும் ஜனாதிபதியும், பிரதமரும் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள் என்றால் அது பூச்சியமாகவே இருப்பதாக பாதிக்கப்படும் முஸ்லிம் தமிழ் மக்கள் தமது ஆதங்கங்களை கண்ணீருடன் வெளியிடுவதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஏன் இவ்வாறு இவர்கள் இருக்கின்றார்கள் என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றமையை காண முடிகின்றது. தமது வாக்குகள் மூலம் ஆட்சியில் அமர்ந்து விட்டு தமக்கு துரோகம் செய்கின்றனர் என்ற கவலை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

தேர்தல் காலங்கள் வரும்போதெல்லாம் சிறுபான்மை மக்களை மூளைச் சலவை செய்யும் கைங்கரியங்களே அதிகம் இடம் பெறுகின்றன. தமது தேவைகள், ஆதங்கங்களை நிறை வேற்றுவார்கள் என்ற ஆதங்கத்துடன் வாக்களிக்கின்றனர். ஆனால் அவர்கள் வெற்றி பெற்றவுடன் வாக்களித்த மக்களை மறந்து மாற்றான்தாய் மனப்பான்மையில் கண்டும் காணாததுபோல் செயற்படுவதும் இந்த நாட்டின் சிறுபான்மைச் சமுகங்களின் எதிர்காலம் இருளில் சென்று பல பின்னடைவுகளுக்கு செல்ல வேண்டியதொரு துன்பகரமான நிலைமைகளே ஏற்பட்டு வருகின்றன.

சிறுபான்மைச் சமுகங்கள் தொழில் ரீதியாகவும், அரச உதவிகள் ரீதியாகவும், கல்வி, கலாசாரம், சுகாதாரம் மற்றும் இருப்பிடம் தொடர்பாகவும் பலவாறு துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்த விடயங்களில் தொடராகவே அரசாங்கம் பிழைகளை விட்டுக் கொண்டு தமது சுயநல அரசியல் நடவடிக்கைளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றமை மக்களால் அவதானிக்கப்பட்டு வருகின்றன. மக்களின் என்னங்களில் குடிகொண்டுள்ள ஏக்கங்களுக்கு இன்று வரை எந்தவொரு அரசாங்கமும் சரியான முறையில் தீர்வுகளைக் பெற்றுக் கொடுக்காத நிலைமைகள் இருக்கின்றன. சிறுபான்மை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதங்கங்கள் எல்லாம் தமது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு நியாயமான தீர்வுகள் கிடைக்க வேண்டும் என்பதேயாகும்.

ஒருசில முஸ்லிம் அரசியல் வாதிகளும்கூட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை கண்டறிந்து தீர்ப்பதில் அக்கறை கொள்ளாது பேரினவாத கட்சிகளும், அரசியல் வாதிகளும் செயற்படுவது போல் தமது அரசியல் செயற்பாடுகளின் அடிப்படையில் இவர்களும் செயற்படுவது முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒரு வகையான குழப்ப நிலைமைகளை உருவாக்கியுள்ளதுடன் முஸ்லிம் அரசியல் வாதிகளை ஏசும் அளவிற்கு முஸ்லிம் சமுகமே திசைமாறிப் போகின்றன. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு முஸ்லிம்கள் மட்டும்தான் காரணமானவர்கள் என்ற ஒருவகையான மாயையை ஏற்படுத்தி பேரினவாத சக்திகள் அப்பாவி முஸ்லிம் மக்களை ஏனைய சமுகங்கள் மத்தியில் எதிரிகளாகவும், தீவிரவாதிகளாகவும் சித்தரித்துக் காட்டும் கைங்கரியங்கள் இடம் பெற்று வருகின்றமை இந்த நாட்டின் சமாதானத்திற்கும், ஒற்றுமைக்கும் விடுக்கப்படும் எச்சரிக்கையாகவே நோக்க வேண்டியுள்ளது.

1956ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம் ஒரு தலைப்பட்சமாக அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் இந்த நாட்டில் சமுகங்களுக்கிடையில் பிரிவினைகள் ஏற்பட வழி சமைத்துக் கொடுத்ததில் இருந்து இந்த நாட்டில் பேரினவாத சக்திகளின் மனங்களில் அடித்தளமிடப்பட்ட இனவாத கொள்கைகள் இன்று வரை கொழுந்து விட்டு எரிவதற்கு காணரமானதையும் இங்கு குறிப்பிடலாம். சிறுபான்மை மக்கள் மீது பல கசப்பான சம்பவங்கள் மதத்தை அடிப்படையாக வைத்து நடைபெற்று வருகின்றதை கவலையோடு எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளை கருத்திற் கொண்டு அரசாங்கம் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் ஒரே பார்வையில் சமமாக கண்டு கொள்ள வேண்டும். ஒரு இனத்திற்கோ அல்லது ஒரு சமயத்திற்கோ உரியமாதிரி செயற்படும் விடயங்களில் இருந்து விலகி ஒரே கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இந்த நாட்டில் நல்ல நிலைமைகளைக் காணலாம். மாறாக பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் இவற்றைத் தவற விடப்படும் பட்சத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் இந்த நாட்டில் தொடர்ந்தும் அரசியல், பொருளாதார மற்றும் சமய ரீதியாக நசுக்கப்படும் நிலைமைகள் தொடரும் என்பதில் சந்தேகம் இல்லை எனலாம்.

எனவே இந்த நாட்டின் சிறுபான்மையாக வாழ்கின்ற தமிழர்களாவோ அல்லது முஸ்லிம்களாகவோ இருக்கட்டும் இவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கும், ஆட்சியாளர்களுக்கும் உள்ள விடயங்களாக இருக்கின்றன. அரசாங்கம் இது விடயத்தில் இனியும் மாற்றான்தாய் மனப்பான்மையில் இருக்குமானால் அது பல்லின சமுகத்தில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என்பதனைக் கருத்திற் கொண்டு இனவாத, மதவாத சக்திகளின் உருவாக்கத்தை தடை செய்து சகல மக்களும் நிம்மதியாகவும், மகிழ்ச்சியுடனும் வாழும் ஒரு சகஜ நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# ஜனாதிபதி தேர்தலும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியும்

தந்திமகன்

நாட்டில் மீண்டும் ஒரு தேர்தல் களம் நடைபெறப்போகிறது. குத்துவெட்டுக்கள், முரண்பாடுகள், சண்டை சச்சரவுகள், வேட்டுக்கள், அடிதடிகள், எதிராளிகள்மீது சேறுபூசும் அளவுக்கு பேச்சாடல்கள், அரசியலில் எதுவும் நடைபெறலாம். அந்த நாள் வெகுவிரைவில் மக்கள் முன் வரவிருக்கிறது. அதற்கிடையில் மக்கள் இருக்கிறார்களா? என்று பார்க்க வாக்கெடுத்து பாராளுமன்றம் சென்றவர்கள் இன்னும் திரும்பியும் பார்க்காதவர்களும் உண்டு. இடைக்கிடை பார்த்துவிட்டு ஆள்விட்டு மாம் பழம் ஆய்ந்த கதைபோல அவர் இன்னும் எழும்பவில்லை, எம்பி வெளியே, எம்பி இப்பதான் வெளியே போறார் என்கிற கதைகள் அனைத்தும் மறைந்து, வாங்க வாங்க இனிவருவார் உள்ளே வந்தமருங்கள், சாப்பாடா எப்ப அவர் கட்டாயம் வருவார், கூட்டமா அழைப்பிதழ் தேவையில்லை நான் வாருவேன் என்றெல்லாம் சொல்லுகின்ற காலம்தான் தேர்தல் காலம்.

கடந்த காலத்திற்கு மக்களால் புள்ளியிடுகின்ற காலம். சரியிட்டு அனுப்பாது புள்ளடி அதாது பிழை என்றே வாக்களார் சீட்டில் பென்சிலால் இட்டு பாராளுமன்றம் அனுப்பிய மக்களுக்கு பிழையே செய்துவிட்டு மீண்டும் ஒருதடவை பிளையை போடுங்கள் என்று மக்கள் முன் வருவதற்கு எவ்வளவு தைரியம் வேண்டும். இப்போது ஜனாதிபதி தேர்தல் நடைபெறப்போவதாகக் கூறப்பட்டபோதிலும் அந்த மக்களிடம் தேர்தலில் நிற்பவர் வராவிட்டாலும் அவர்களுடைய ஏஜென்டுகளான எம்பிமார், எதிர்கட்சியாளர்கள், ஆளும் கட்சியாளர்கள் யாராவது வரத்தானே வேண்டும். அப்போது அந்த மக்களே, அதாவது முன்னர் வாக்களித்த மக்களே அவர்களுக்கு கல்லடி, வாயினால் கொடுப்பார்கள் அல்லது வரவேற்று உள்ளே அமர்செய்து வாழ்த்தி அனுப்புவார்கள். இதில் எந்தப்பக்கம் நீங்கள் என்பதை உங்களுடைய உள் மனது கூறிக் கொண்டேதான் இருக்கும்.

மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது ஒருபுறமிருக்க எவர் பக்கம் இலாபம் அதிகம் கிடைக்கும் என்பதற்கான ஒரு கூட்டம், ஏன் வீண்வம்பு என்றொரு கூட்டம், இடையில் ஒரு கூட்டம் இவ்வாறு அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு அதிகாரமிக்கவரின் கைகளில் அனைத்தையும் ஒப்படைப்பதற்கான தேர்தல் களமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறப்போகிறது என்பதுதான் உண்மையாகும். இந்தத்தேர்தலில் யார்? தலைவர் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். குறிப்பாக முன்னாள் ஆட்சியாளர்கள், பாராளுமன்றத்தை கண்டவர்கள், உள்ளே சென்று விவாதங்களில் ஈடுபட்டவர்கள் பலர் இத்தேர்தலில் களமிறங்கினாலும் மொட்டு சார்ந்த முன்னாள் ஜனாதிபதி சார்ந்திருக்கிற கட்சியிலிருந்து முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் களமிறங்கியிருக்கிறார். அவருக்காக சில கட்சிகள் தங்களுடைய ஆதரவினை தெரிவித்திருக்கின்றனர். அதேவேளை முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சி காப்பாற்றப்பட வேண்டும் என்று கூறுபவருமான சந்திரிக்காக குமாரதுங்க அவர்கள் இம்முறை சுதந்திரக் கட்சியிலிருந்து ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதுதான் சரியான முறையாகும். அப்போதுதான் அக்கட்சி காப்பாற்றப்படும் என்கிற கருத்தினையும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் நாட்டில் வாழும் சிறுபான்மையினக் கட்சிகள் மத்தியில் இன்னும் தீர்மானம் ஒன்றை முடிவுறாத நிலையில் எதிர்கட்சி சார்ந்த கட்சிகளோடு சில முக்கிய சிறுபான்மையினக் கட்சிகளும் பேசிய பேச்சுக்களும் இரகசிய ஏற்பாடுகளும் உள்ளுக்குள் இருக்கலாம் என்கிற ஊகங்களின் பிரகாரம் இன்றுவரையிலும் தன்னுடைய ஆதரவினை ஆளும் பிரதமர் பக்கமே தெரிவித்து வரும் நிலையில் ஒட்டுமொத்த தமிழர் அமைப்பு குறிப்பாக தமிழ் கூட்டமைப்பினர் பிரதமர் பக்கமே தமது ஆதரவு எப்போதும் உண்டு என்கிற கடுமையான அழுத்தமான ஆதரவினைத் தெரிவித்து வருகின்றனர். கடந்தவாரத்தில் வடபுலத்தில் பல மில்லியன் பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளப்பட்டு நாட்டின் ஒட்டு மொத்த அமைச்சரவையும் யாழ்மண்ணில் சங்கமித்திருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதே போன்றொரு இனம், நாட்டின் மூன்றாவது சக்தியாக இருக்கின்ற முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியைப் பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவி;ல்லை.

காரணம் அவர்களின் தலைவர்கள் இறுதியாக தம்மிடம் வருவார்கள். கொடுப்பதைக் கொடுத்தால் அனைவரும் காலடியில் என்கிற பழமொழிக் கொப்ப அவர்கள் வருவார்கள். அவர்களுடைய கதையை முழுமையான நம்பி ஓட்டுப்போடுகிற கூட்டமாக முஸ்லிம்கள் இருப்பதால் நாம் அவர்களது பக்கம் செல்லவேண்டிய அவசியமில்லை என்று நினைத்திருக்கிறார்கள் போலும் என்கிற அடிப்படையில் கிழக்கில் குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் ஆயிரமாயிரம் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையிருந்தும் எதுவுமே நடைபெறாத ஒரு மந்தநிலையில்தான் இன்று நடைபெறுகிறது. கல்முனையில் யாருக்கு எந்தளவு நிலம் வேண்டும் என்று கல்முனையில் இரண்டு சிறுபான்மையினச் சமூகம் சண்டைபிடித்துக் கொண்டு இருக்கின்றனர். இந்தச் சண்டை

II ஆம் பக்கம் பார்க்க....

# மாணவர் வாசிப்பு

## பாடசாலை மட்டத்தில் சிறப்பாக நடைபெறுகின்றதா?

இன்று வாசிப்புப் பற்றியும், வாசிப்புத் தொடர்பான போட்டி நிகழ்வுகள் பற்றியும், அப்போட்டிகளின் விளைவாக வாசிப்பில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டுவதும், அவர்களைப் பாராட்டிப் பரிசும் வழங்கப்படுவதும் வழமையான விடயமாகும். சிறந்தமுறையில் வாசிப்புக்கான போட்டிகளில் எமது பாடசாலையின் இரண்டு மாணவர்கள் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்றுள்ளனர், தேசியமட்டத்தில் வெற்றியீட்டியுள்ளனர் என்கிற பல்வேறு கருத்தாடல்கள் இன்றைய நாட்களில் மொழித்தினத்தோடு சம்பந்தப்பட்ட வகையில் வெற்றிவாகை சூடுவதாக மார்தட்டிக் கொண்டு விழாக்கள் எடுக்கப் படுகின்றன. ஆனால் அந்த மாணவர்களோடு ஒன்றாகப் படித்தவர்களில் எத்தனைபேர் சிறந்த முறையில் வாசிக்கின்றனர். ஏன் பல மாணவர்கள் வாசிப்பில் இடர்படுகின்றனர் என்கிற விடயத்தினைப் யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. மாணவர்களது வாசிப்பு மிகவும் அந்த மாணவப் பருவத்தில் அதுவும் ஆரம்பப்பிரிவுகளில் மிகவும் அவசியமான ஒன்றாகும் என்பதை அனைவரும் அறிந்துகொள்ளல் முக்கியமாகும்.

அட்டாளைச்சேனை
எஸ்.எல். மன்சூர்

பொதுவாக போட்டி என்று வருகின்றபோது சிறப்பாக வாசிப்பதன் பலனாக பல மட்டங்களில் வெற்றிபெற்று பாராட்டினைப் பெறுகின்ற, அதே வேளை அநேகமான மாணவர்கள் வாசிப்பிலிருந்து விடுபட்டு ஏனோதானோ என்கிற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனைக் கவனிக்க வேண்டிய வகுப்பறைகள் தவறை உணர்ந்து பரிகாரம் காண்பதை ஊக்குவிப்பதை விடுத்து அந்த மாணவர்கள் தொடர்ச்சியாக பின்தள்ளப்பட்டு இறுதியில் மொழியில் சோர்பிளந்தவர்களாக, வாசிக்க முடியாதவர்களாக, சமூகத்தில் திக்கித்திக்கி எழுத்துக் கூட்டப்பட்ட நிலையில் பாடசாலையிலிருந்து வெளியேறுகின்ற ஒரு கூட்டமாக நம்மத்தியிலிருந்து இருக்கவே கூடாது என்பதற்காக வாசிப்பின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் பாடசாலை மட்டத்தில் அனைத்து மாணவர்களையும் வாசிப்பில் ஈடுபடுத்தி, போட்டிநிகழ்வுகளை நடாத்தி வாசிப்பில் முனைப்பாக இருக்க வேண்டும் என்கிற செய்தியைக் கூறுவதாக இந்த வாசிப்பு திட்டம் தேசிய மட்டத்தில் மொழித்தினங்கள் ஊடாக செயலுருப்படுத்தப்பட்டு வருகின்றமை மிக சந்தோசமான விடயமாகும்.

பாடசாலை மட்டத்தில் ஆரம்ப மாணவப் பருவத்திலிருந்தே வாசிப்புப் பழகத்தை பழக்கமாகக் கொண்டிருப்பதன் மூலம் அவர்களது அறிவுக் கூர்மை, ஆற்றல் வெளிப்பாடு மேம்பாடுடையவர்களாக காணப்படுகின்றனர் என்பதை கண்கூடாகப் பார்க்கிறோம். ஆபிரகாம்லிங்கன், லெனின், அறிஞர் அண்ணாத்துரை, நேரு போன்ற தலைவர்கள் கூட வாசிப்பதில் மேம்பட்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இன்றைய காலத்தில் அவைகள் எடுபடாது. இவர்களுடைய காலங்களில் இன்றைய நவீன தொழில் நுட்பம் இல்லாத காலம் என்று சிலர் கூறுவதுண்டு. உண்மைதான் அன்றைய காலத்தைப் போலல்லாது இன்றைய காலத்தில் வாசிப்பினை இலகுபடுத்தி விரல்நுணியில் வாசிப்பதற்கான பல இலட்சோபலட்சம் வசதிகள் காணப்படுகின்றன. ஆனால் எத்தனைபேர் அதனை முன்னெடுத்து வாசிப்பதில் ஆர்வம் செலுத்துகின்றனர். ஐபோனை எடுத்து மற்றவருக்கு எப்படியெல்லாம் பேசமுடியுமோ அப்படி பின்னூட்டல் செய்வதும், தேவையற்ற விடயங்களைப் பார்ப்பதிலும்தான் அதிகமானவர்களின் செல்பேசிகள் பயன்படுத்தப்படுகின்றன. செல்லிகளைப் பயன்படுத்துகின்ற ஆசிரியர்களில் எத்தனை வீதமானவர்களுடைய செல்லிகள் வாசிப்பதற்கும், வகுப்பறைகளில் கற்றல் கற்பித்தலுக்குமாகப் பயன்படுத்தப்படுகிறது?

மேலே நாம் கூறியதுபோல புதிய புதிய தொழில் நுட்பங்கள் வளர்ந்தமையினால் வாசிப்பதற்கே நேரமில்லாத ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. அந்நிலை தொடருமாக இருந்தால் மொழி சிதைவடைந்து மொழியின் திசை மாறிவிடும் என்கிற கருத்துக்களை மொழியியலாளர்கள் கூறிவருகின்றனர். புதிய ஊடக வளர்ச்சியானது ஒருவனுடைய வாழ்க்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கிறது. இதனால்தான் என்னவோ, புத்தங்களை வாசிக்கின்ற பழக்கம் மிகவேகமாக குறைவடைந்து செல்கின்றது. குறிப்பாக பாடசாலையில் கற்கின்ற மாணவர்கள் கூட வாசிப்பினை இழந்து வருகின்றனர். இவ்வாறான மொழித்தினப் போட்டிகளில்கூட அனைத்து மாணவர்களையும் வாசிப்பதற்காகவும், அதனை எழுதுவதற்காகவும் போட்டிகள் வைத்து தெரிவு செய்ய வேண்டிய அவசியம் இருந்த போதிலும் பல மாணவர்கள் வாசிப்பதையோ, எழுதுவதையோ சரியான அடைவ காண்பிக்காதபோது குறித்த ஒரு சில மாணவர்கள் மாத்திரம் இதனை நிறைவேற்றுகின்றனர். அந்த மாணவர்களுடைய பின்புலத்திலிருந்து பெற்றோர்களும் ஊக்குவிப்பதால் வலயம், மாவட்டம், மாகாணம் என்று இறுதியில் தேசிய மட்டத்தில் இவ்வாறான வாசிப்பினை நேசித்தன் காரணமாக ஒரு பிள்ளை அந்த பிராந்தியத்தினதும், மாகாணத்தினதும் மரியாதையைக் காப்பாற்றி வெற்றிபெற்றதாக நினைக்கிறது.

நல்ல விடயமாக இருந்தபோதிலும் மொழியின் பற்றுருதி, ஆசிர்வாதிக்கும் தன்மை, என்னைப்போல அனைவரும் சிறப்பான முறையில் வாசிக்க வேண்டும் எண்ணம் கற்பிக்கும் ஆசிரியர்களிடம் காணப்பட்ட போதிலும் வகுப்பறையில் பல மாணவர்கள் இதனை ஒரு பொருட்டாகவே பார்ப்பதி;ல்லை. இது மொழியின் மீதான சிதைவின் அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கான ஒரு படியாகவும் காணப்படலாம் என்பது நமது எண்ணமாகும். இதற்கான காரணங்கள் என்னவென்று பார்த்தால் இன்றைய வீடுகளில் தொலைக்காட்சி பார்த்தல், கைகளில் உலாவும் செல்லிகள் ஊடாக முகநூல் பார்த்தல் போன்றவற்றைவிட அதிகவலுவுடைய செயற்றிறன் வாசிப்பில் காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. வழமையான விடயங்களை ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் ஒப்புவிப்பதைத் தவிர்த்து புதிய புதிய விடயங்களை காட்சிப்படுத்தி மாணவர்கள் முன்னே கொண்டு வந்து காண்பித்து வாசிக்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். ஆனால் இவ்வாறாக நடைபெறாததன் காரணமாக இன்று மொழியாளர்கள், சரியான எழுத்தாளர்கள், நேசிக்கின்ற மொழிப்பற்றார்கள், மொழியை மென் மேலும் வலுப்படுத்துவதற்கான சமூதாயத்தைக் கட்டியெழுப்புவதாக அமைய வேண்டும். இதனை ஊக்குவிக்கின்ற மையமாக பாடசாலைகள் காணப்படுகின்றன. இந்த முயற்சிகள் அனைத்தும் சிதைக்கப்படுமாக இருந்தால் வாசிப்பும் இல்லையென்றாகிவிடுகின்றது. ஆகவே, வாசிப்புப் பழகத்தை மாணவர்கள் மத்தியில் அதிகரித்துச் செல்வதற்கு புதிய முயற்சிகளில் ஆசிரியர் அல்லது பாடசாலைச் சமூகம் கால்;பதிக்க வேண்டியது அவசியமானதாகும்.

ஆரம்பக்கல்வி வகுப்பறைகளில் வாசிப்பினை மேம்படுத்துவதற்காக வாசிப்பு மூலைகள் அமைக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. அந்த மூலைகளில் மாணவர்களின் வயதுக்கேற்றவகையிலும், வாசிப்பினை சிறந்த முறையில் கொண்டுசெல்வதற்குமான பல்வேறு தரத்திலான கதையாடல்கள், அறிவார்ந்த விடயங்கள், தலைவர்களுடைய வாழ்வியல் சரிதம் போன்ற படிப்போடு சம்பந்தப்பட்ட பாடம்சார்ந்;த நூல்களும் அங்கு காணப்படுதல் சிறப்பானதாகும். தினசரிப் பத்திரிகைகள், அதில்வரும் முக்கியமான துணுக்குகளை மாணவர்களுக்கு விசேடமான முறையில் காண்பித்து அவர்கள் அதனை வாசித்து மகிழ்வதற்கும், அதிலிருந்து அவர்கள் வாசித்துக் கிரகித்து கற்றலிலும் சிறந்த அடைவினைப் பெறும்நோக்கில் இவையனைத்தும் தமது பாடத்திட்டத்தில் கூறப்பட்ட போதிலும் வலயக் கல்விப் பணிமனையிலிருந்து மேற்பார்வைக்காக வருகின்ற அன்றைய நாட்களில் மாத்திரம் வகுப்பறைகள் சோடிக்கப்பட்டு திடீரென முளைக்கும் வாசிப்பறைகளினால் அந்த மாணவர்களுக்கு எவ்விதமான பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை என்பதே நமது கருத்தாகும். தொடர்ச்சியான முறையில் உண்மைத் தன்மையுடன், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பாடசாலைகளில் நூலகங்கள் காணப்படுதல் வேண்டும். ஆரம்பக்கல்வி வகுப்பறைகள் மினி நூலகமாக இயங்க வேண்டும்.

சில பாடசாலைகளில் நூலகங்கள் இருக்கின்றன. அது இயங்குவதில்லை. அதன் செயற்பாடுகளுக்கான ஒருவர் நியமிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான எவ்வித பதிவுகளோ, மாணவர்களுக்கு வாசிப்பதற்கான வசதிகளோ செய்து கொடுக்கப்படாமல் ஒதுக்கப்பட்டு, அந்த ஆசிரியர் சிலவேளைகளில் வேறுபாடங்களைக் கற்பிப்பதற்குக்கூட பணிக்கப்பட்டுள்ள அவலநிலைகளும் காணப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவேதான், வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்குடன் பாடசாலைகள் மாணவர்கள் அனைவரினதும் வாசிப்பின் அடையாளத்தை போஷிக்கும் வகையில் பாடசாலை மட்டத்தில் வாசிப்புக்கான நாளை ஒதுக்கி அனைவரும் வாசிக்கச் செய்வதன் மூலம் அனைவரும் வெற்றியாளர்கள் என்பதை நிருபிக்க வேண்டும். அவர்களிலிருந்து மிகமிகத் திறமையாளர்களை போட்டிகளில் பங்குபற்றச் செய்து வெற்றிக்காக வாய்ப்பினைத் தேடலாம்.

ஆகவேதான், தமது குழந்தைகள் வாசிக்கும் ஆர்வத்தை அதிகரிப்பது தொடர்பாக பெற்றோர் மத்;தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் வலுவூட்டும் வகையில் பின்வரும் விடயங்களை முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக பெற்றோர்கள் சுயகட்டுபாட்டுடன் இருந்து, குழந்தைகள் கண் எதிரில் புத்தகங்களை வாசித்தால் அவர்களும் புத்தகத்தின் பக்கம் திரும்புவார்கள். படிப்பதே மிகவும் கஷ்டமான ஒரு காரியம் என நினைக்கும் குழந்தைகளுக்கு, மற்ற புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்குவது சவாலான விஷயம் தான். ஆனால், பெற்றோர் கொஞ்சம் மனதுவைத்தால், அந்த ஆர்வத்தைக் குழந்தைகளிடம் ஏற்படுத்த முடியும்.

★ சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்குப் பிடித்த விலங்குகள், பழங்கள், பொதுஅறிவு தகவல்கள் போன்ற எளிமையான படக்கதைகளை சொல்லிக்கொடுக்க வேண்டும். அவைகளே மனதில் நன்றாகப் பதியும். ஆரம்பக் கட்டத்திலேயே சிறிய கார்ட்டூன் படங்கள் ஊடாக வாசிப்புப் பழக்கத்தை ஆரம்பியுங்கள். பின்னர் ஆர்வத்துடன் அவர்களாகவே புத்தகங்களைப் வாசிக்கும்படியாக ஆகிவிடுவார்கள்.

★ நண்பர்கள் மற்றும் சகோதர்களுடன் இணைந்து தமக்குப் பிடித்த விஷயங்களைப் படித்து, படித்ததை மற்றவர்கள் முன்னில் ஒவ்வொருவரும் கூறச் செய்வதால் ஆர்வமாகப் படிப்பார்கள். இதனால், ஒருவர் கற்றுக்கொண்ட விஷயம், எளிதாக மற்றவர்களுக்கும் தெரியவரும்.

★ ஒவ்வொரு சிறார்களுக்கும் ஏதோர் துறையில் ஆர்வம் அதிகமாக இருக்கும். அத்துறையைக் கண்டறிந்து, அதுசார்ந்த, விளங்கும் நபர்கள் பற்றிய புத்தகங்கள், அவர்களது வரலாறு கூறும் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதன் காரணமாக அவர்களிடம் வாசிக்கும் ஆர்வம் ஏற்படும்.

★ வகுப்பறைகளில் அழகாகக் காட்சிப்படுத்துவதும் மாணவர்களுக்குப் பிடித்தமான விடயமாகும். ஆகவேதான் அவர்களுக்குப் பிடித்த புத்தகங்களைக் காட்சிப்படுத்தினால்கூட புத்தகம் வாசிக்கும் பழக்கம் இயல்பாகவே வரும். மேலும், குழந்தைகள் ஒரு புத்தகத்தைப் படித்த பின்னர், அவர்கள் படித்த விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கும்போது இன்னும் உற்சாகம் ஏற்பட்டு வாசிப்பில் ஆர்வமாடக இருப்பார்கள்.




★ தினமும் வாசிப்பதற்கென்றே ஒரு சில மணி நேரங்களை ஒதுக்கி வாசிக்கலாம். வாசிப்பதை அப்பா, அம்மா, பாடசாலையில் ஆசிரியர் போன்றோருடன் தாம் வாசித்துச்சுவைத்தவற்றை பகிர்ந்து கொள்ளலாம்.

★ தினமும் காலை நேரங்களில் செய்தித்தாள் கண்ணோட்டம் கேட்டபிறகு அதிலுள்ள முக்கியமான செய்திகளை பள்ளியில் மாணவர்களுக்கும், வீட்டில் தமது குழந்தைகளுக்கும் கூறலாம். வினாக்களையும் தொடுத்து ஆர்வத்தை ஏற்படுத்தலாம். அத்துடன், பத்திரிகைகளில் வெளிவரும் தமக்குப் பிடித்த படங்களுடன் கூடிய விடயங்களைக் கத்தரித்து, ஒட்டி அதனை நூல்போலாக்கி அடிக்கடி வாசிக்கச் செய்யலாம்.

★ ஓய்வு நேரங்களில் அல்லது மாதம் ஒருமுறையாவது பொது நூலகம் சென்று அங்குள்ள பிடித்தமான நூல்களை வாசிக்கச் செய்யலாம். அதேபோன்று பாடசாலைகளிலுள்ள நூலகங்களுக்கு ஓய்வுநேரம், ஆசிரியர் வருகைதராத நேரங்களில் படிப்போடு சம்பந்ததப்பட்ட நூல்களை வாசிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கி அவதானிக்கலாம்.

எனவே, மாணவர்களிடையே அருகிவரும் வாசிப்பினை மேம்படுத்தவும், பாடசாலைக் கல்வியை முடிவுறுத்திய பின்னர் வாசிப்பாளர்களை உருவாக்க முனையும் அனைவரும் இதுபோன்ற பல்வேறு முறைகளைப் பின்பற்றி வாசிக்கும் பக்குவத்தை வழங்குமாறு இக்கட்டுரையூடாக தங்களை வேண்டிக்கொள்கின்றேன்.

---

### ஜனாதிபதி...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

இறுதியா யாரோ அனுபவிக்கின்ற மக்களுக்குப் போய்ச்சேரும் என்பதை ஏன் அந்த முஸ்;லிம் மக்கள உணர்கிறார்களில்லை.

அண்மையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் என்பது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியை மாற்றுகின்ற ஒரு தேர்தலாக இருக்கும் என்பதில் நீங்கள் அதிகம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்திருந்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், கடந்த காலத்தில் இராணுவ வல்லமையோடு இருந்தவர்கள் இராணுவ வல்லமையை கொண்டு பயமுறுத்தி, அச்சுறுத்தி, வடக்கு மற்றும் கிழக்கிற்கு அப்பால் இருக்கின்ற சிறிய கிராமங்களில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களை அச்சுறுத்தி விடுவார்களோ என்ற அச்சம் எங்களுக்கு இருக்கின்றது. வடக்கு மற்றும் கிழக்கிலே இருக்கின்ற முஸ்லிம்களுக்கு தேசத்திலே என்ன நடக்கின்றது என்பது பற்றி பூரண அறிவு இல்லாமல் நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கவலையோடு நான் இருக்கின்றேன்.

வடக்கு மற்றும் கிழக்கிற்கு அப்பால் மூன்றில் இரண்டு இஸ்லாமிய சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இவர்கள் எப்போது தாக்கப்படுவார்கள், எப்போது விரட்டப்படுவார்கள், எப்போது அச்சுறுத்தல் விடுக்கப்படுவார்கள் என்ற அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் தான் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை நாங்கள் முகங்கொடுக்க இருக்கின்றோம். வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் என்பது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் தலைவிதியை மாற்றுகின்ற ஒரு தேர்தலாக இருக்கும் என்பதில் நீங்கள் அதிகம் நம்பிக்கை கொள்ள வேண்டும். எனவே, தேசத்தில் இருக்கும் முஸ்லிம் கட்சிகள், சிறுபான்மை கட்சிகள், சிறிய கட்சிகள் ஒன்றிணைந்து எமது சமூகத்தை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வேலைத் திட்டத்தை யாருக்கு வழங்குவதன் மூலம் யாரை ஜனாதிபதியாக்க முடியும் என்றும், யாருக்கு அந்த அதிகாரத்தை கொடுப்பதன் மூலம் இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை சமூகத்தை, முஸ்லிம் சமூகத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்கின்ற வேலைத் திட்டத்தில் விரைவில் அந்த பெயர்களை உங்களுக்கு நாங்கள் அறிவிப்போம் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவருடைய பேச்சின் பிரகாரம் பார்க்கிறபோது முன்னைய அரசின் காலத்தில்தான் அனைத்துமே நடந்தது என்று சொல்வதற்கில்லை. இப்போதும் நடைபெற்றிருக்கிறதுதானே. அப்படியானால் இரண்டு பேரினது ஆட்சியிலும் பேரினவாதிகளின் கெடுபிடிகள் விளையாட்டாகவா இந்த நாட்டின் சிறுபான்மையினரின் மீது காண்பித்திருந்தார்கள். மகிந்த அரசு செய்ததைவிட இப்போது அதிகமாக முஸ்லிம்கள் மீது இடம்பெற்றிருக்கிற வன்மத்தை சொல்லில் மாழாது. என்றால் மீண்டும் பிரதியமைச்சர் அமீர் அலி அவர்களும், அவருடைய கட்சியும் மீண்டும் பிழையான வழிக்குத்தான் செல்லப்போகிறார்களா? அல்லது மீண்டும் கடந்த தேர்தலிலுக்கு முன்னரான சில நாட்களுக்குள் அவருடைய கட்சித் தலைவர் அமைச்சுப் பதவியைத் தூர எறிந்துவிட்டு பதவியை துச்சமாக மதித்து மக்கள் மத்தியில் ஓடி வந்தார். அதனைத் தொடர்ந்து முகவின் மக்களுக்கு நன்றிதெரிவிக்க அக்கட்சியின் தலைவரும் சொல்லாமக் கொள்ளாம ஓடி வந்தார்கள். மீண்டும்; யுத்தமற்ற செந்நிறப் பூமியிலிருந்து வெளியே வந்து மக்களை ஒருகை பார்க்க இப்போதிருந்தே தயாராகிவிட்டார்கள். மக்களால் இவர்கள் இருவரும் கடுமையான தி;ட்டப்பார்வையோடுதான் மக்களும் பார்க்கப்போகிறார்களாம்.

உண்மையில் இப்போதிருக்கிற நல்லாட்சி என்கிற பேரில் உருவான இரண்டு கட்சிகளின் தலைவர்களும் ஆரம்பத்திலிருந்த வேகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தன. கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம், பழைய கடனின் வட்டியைக் கட்டுகிறோம் என்று கூறிக்கொண்டு மக்களின் பணத்தை எவ்வாறெல்லாம் கறக்க முடியுமோ அவ்வளவையும் விலையேற்றத்தின் பெயரால் ஏற்றிவிட்டு மக்கள் பிரதிநிதிகளும், அவர்களுடைய ஆள்களும் எத்தனையோ விலையுயர்ந்த அரசிற்குச் சொந்தமான வாகனங்கள், சம்பளங்கள் என்று ஏறாளமான பொதுச் செலவுகள் சம்பளமாகவும், உதிரிப் பாகங்களுக்கும் வழங்கப்படுகின்றமை யாவரும் அறிந்தவைதான். ஆனால் இந்த அத்தைனையையும் எடுத்து எத்தனையோ வருடத்திற்கு விலை அதிகரிக்காமல் எத்தனையோ நபர்களுக்கு சம்பளமாகவும், இனாமாகவும் வழங்கலாம். அத்தனையும் இருந்துவிட்டால் மயக்கம் ஏற்படுகிறது.

இன்றைய தேர்தலில் யார் எந்தப்பக்கம் செல்வது ஒன்றும் இவர்களுக்கு புதியதல்ல. எதிர்வரும் காலங்கள் சிறுபான்மையிராகிய முஸ்லிம்கள் மீது சேறுபூசுவதற்கான செயற்பாடுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லையென்றாலும் மக்கள் இம்முறை சாத்தியமற்றவர்களை விட்டொதுக்கத் தீர்மானித்துள்ளார்கள். சஜீதா, பிரதமர் ரணிலா என்கிற படம் ஒருபுறம் ஓடிமுடிவதற்குள் யுஎன்பிக்குள்ளும் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாத ஒன்றாவிடும். எது எப்படியாக இருந்தபோதிலும் முஸ்லிம்களின் வாக்குகள் சிதறக்கூடியதாகவே இருக்கும். அடித்தாலும் வெளியேறமாட்டேன், மொத்தமாக அரசியலைவிட்டே ஒதுங்கிவிடுவேன் என்று நகைப்புக்கிடமாகக் கூறும் இன்றைய பிரதமர் உலக வரலாற்றில் அதிகமான தடவைகள் தேர்தலில் தோற்றவர்களுடைய பட்டியலில்முதன்மைநிலையை பெறுவார் என்கிற நிலைமையிலும் தாண்டி யார் வென்றாலும், யார்தோற்றாலும் தான் எதிர்க் கட்சித் தலைவராக இருந்துவிட்டுப் போவேமே என்கிற ஆசைதான் அசைய முடியாமல் திண்டாடுகிற நிலையில் அங்கொன்னும் இங்கொன்றுமான கருத்துக்களுக்கு மத்தியில் முஸ்லிம்களின் வாக்கு யாருக்கு என்பது இன்னும் முடிவாகாத நிலையில் யுஎன்பியினர் தமக்கே முஸ்லிம்கள் வாக்கு என்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் யாரிடம் அந்த வாக்கு அதிகம் பிழையாகப் புள்ளடி இடப்படப்போகிறது என்று!

# வாழ்வென்பது பெருங்கனவு!

## உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினம் செப்டெம்பர் 10

**என்.ஹரன்**

ஒவ்வொரு 40 நொடிகளிலும் உலகின் ஏதோ ஒரு மூலையில் ஒரு மனிதன் தற்கொலைக்கு முயல்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு வருடமும் கிட்டதட்ட 80 லட்சம் பேர் தற்கொலையால் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

மேலும் பலர் மருத்துவமனைகளில் சேர்த்து காப்பாற்றப்படுகின்றனர்.

உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினமாக (World Suicide Prevention Day) உலகளாவிய ரீதியில் ஆண்டு தோறும் செப்டம்பர் 10ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

உலகளவில் கிட்டதட்ட 15 முதல் 29 வயதிலான இளைஞர்களில் இறப்பில் இரண்டாவது காரணியாக தற்கொலை விளங்குகின்றது. !

இத் தினத்தினை தற்கொலை தடுப்பிற்கான சர்வதேச அமைப்பு (IASP), உலக சுகாதார அமைப்பு (WHO) ஆகியன இணைந்து 2003 ஆம் ஆண்டில் இருந்து பிரகடனப்படுத்தி நினைவு கூர்ந்து வருகிறது.

மேலும், தென் கிழக்கு ஆசியாவில்தான் 39 சதவீத தற்கொலை வழக்குகள் பதிவாகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்கொலை என்பது ஒருவர் தன்னைத்தானே கொலை செய்து கொள்வதாகும். முட்டாள்தனமாக, கோழைத்தனமாக, பரிதாபமாக மனிதன் எடுக்கும் முடிவுகளில் ஒன்றாகவே இது இருக்கின்றது. தற்கொலை என்பது இறப்புக்களுக்கான காரணத்தில் 13 ஆவது இடத்தை வகிக்கிறது.

அதிக தற்கொலைகள் இடம்பெறும் பகுதியாக சீனா மற்றும் கிழக்கு ஐரோப்பா பகுதிகள் இனங்காணப்படுகின்றன. அதேவேளை, பதிவு செய்யப்பட்ட தற்கொலைகள் குறைந்த பகுதிகளாக லத்தீன் அமெரிக்காவும் ஆசியாவின் சில சில பகுதிகளும் அறியப்பட்டுள்ளன.

தற்கொலை செய்ய முடிவெடுப்பவர், தன்னை மட்டும் மாய்த்துக் கொள்வதில்லை. தன்னை சார்ந்திருக்கும் குடும்பத்தையும் சேர்த்தே படுகுழியில் தள்ளி விடுகிறார். தற்கொலை என்னும் தவறான முடிவு, பல்வேறு சமூகப்பிரச்னைகளை ஏற்படுத்துகிறது என மன நல நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகளாவிய ரீதியில் 40 விநாடிகளுக்கு ஒரு முறை என்ற ரீதியில் 3 000 நபர்கள் தினமும் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது. பெண்களை விட இரண்டு மடங்கு ஆண்கள்தான் தற்கொலை செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக 15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்டவர்களே அதிகம் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என அறியப்பட்டுள்ளது.

மன அழுத்தம், குற்றவுணர்வு, இயலாமை, வெட்கம், கடுமையான உடல்வலி, நிதிச் சிக்கல்கள் உள்ளிட்ட பல காரணங்கள் ஒருவரைத் தற்கொலைக்குத் தூண்டலாம். பொதுவாக, தற்கொலை கடவுளுக்கு எதிரான செயலாக கருதப்படுகிறது.

எனினும் நமது இலங்கை திருநாட்டில் நுண்கடன் ஊடாக தற்கொலை செய்தவர்களே தற்காலத்தில் அதிகமாக காணப்படுகின்றனர் இவர்களுள் அதிகம் பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது

எமது இன்றைய விழிப்புணர்வின் நோக்கம் விலை மதிப்பற்ற உயிர்களை பாதுகாப்பதே ஆகும் எனவே பிறரது உணர்வுகளை மதித்து அவர்களுக்கு உண்மையான திருப்திகர பின்னுடடலினை வழங்குவோம் பிறரையும் வாழவைப்பேம் .

பெரும்பாலும் பெண்களுக்கு திருமண வாழ்வு மற்றும் அதில் ஏற்படும் பிரச்சனைகள்தான் தற்கொலைக்கு காரணமாக அமைகிறது. அவர்களை தடுப்பதும் அதுதான்.

### காரணங்கள்..!

- ★ காதல் தோல்வி மற்றும் திருமண முறிவு
- ★ மிகவும் சோர்வான நிலை
- ★ தீராத பிரச்னைகள் - நோய்கள் (புற்றுநோய், பக்கவாதம்)
- ★ பாலியல் பலாத்காரம்
- ★ தேர்வில் தோல்வி
- ★ தாம்பத்திய உறவில் சந்தேகம்
- ★ குழந்தை இல்லாமை
- ★ போதை - மது பழக்கம் அடிமை
- ★ திருமணத்துக்கு முந்தைய கர்ப்பம்
- ★ கற்பழிப்பு, பாலியல் வன்முறைகள்
- ★ கடன் - சொத்து பிரச்னை
- ★ வேலையின்மை அல்லது வேலை இழப்பு
- ★ வியாபாரம்/தொழிலில் பிரச்னை

### எப்போது நடக்கிறது?

பொதுவாக தனிமையில் இருக்கும் போது இரவு 12 மணிக்கு மேல் காலை 6 மணிக்குள் அல்லது பகல் நேரத்தில் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் (காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை) தான் தற்கொலைகள் நடக்கின்றன.

உலகிலேயே இளம் வயதில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை தென் இந்தியாவில்தான் அதிகம்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு லட்சம் பேருக்கு 11 பேர் என்ற விகிதத்தில் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

நாட்டின் மொத்த எண்ணிக்கையில் மூன்றாம் இடத்தில் இருக்கும் சென்னையில் தற்கொலை செய்து கொள்வோர் மற்றும் முயற்சி செய்பவர்களின் எண்ணிக்கை 11 சதவிகிதம் என மனநல மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள். இது காவல் நிலையங்களில் பதிவான வழங்குகளின் அடிப்படையிலான விவரம். பதிவு செய்யப்படாதவை இவற்றை விட 50 சதவிகிதம் அதிகமாக இருக்கும் என்கிறார்கள் விவரம் தெரிந்தவர்கள்.

### மருத்துவத் தீர்வு..!

உரிய மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது மூலம் தற்கொலை எண்ணங்களை தவிர்க்க முடியும். மனச்சிதைவு நோயால் ஒருவருக்கு ஏற்படும் தற்கொலை எண்ணத்தை போக்க குடும்பத்தினரின் அன்பும் அரவணைப்பும் முக்கியமாக தேவை.

உலக தற்கொலை முயற்சி தடுப்பு தினத்தை முன்னிட்டு அரசு பொது மருத்துவமனையில் மீண்டு(ம்) வாழ்கிறோம் என்ற தலைப்பில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர்பிழைத்தவர்கள் மனம் திறந்து தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சி ஆண்டு தோறும் இந்தத் தினத்தில் நடக்கிறது.

தற்கொலை என்பது ஒருவரின் தனிப்பட்ட பிரச்னை அல்ல. தற்கொலை எண்ணத்தில் இருப்பவர்கள், இரட்டை மனநிலையில் இருக்கிறார்கள். அதவாது, ஒரு புறம் வாழத் துடிக்கிறார்கள். அது முடியாத போதுதான் தற்கொலைக்கு வருகிறார்கள். அது ஒரு சமூதாயத்தின் பிரச்னை என்பதை அனைவரும் புரிந்து செயல்பட்டால் நாட்டில் தற்கொலைகளை தடுக்க முடியும் என்பதே நிதர்சன உண்மை.

### சமூக நோக்கத்துக்காக..!

பெரும்பாலான தற்கொலை தனக்காக நடக்கும் நிலையில் உலகில் அத்திப்பூத்தாற் சில தற்கொலைகள் சமூக நோக்கிற்காக நடக்கவும் செய்கிறது.

முத்துக்குமார், செங்கொடி முதல் துனீசியாவின் முகமது புவாஸிஸி வரை பலரை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டி தன்னையை தீக்கு இரையாகினார், முத்துக்குமார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையில் பேரறிவாளன், முருகன், சாந்தன் மூவரை தூக்கிலிடக் கூடாது என்பதற்காக தன்னுயிரை மாய்த்துக் கொண்டார், செங்கொடி.

துனிசீயாவைச் சேர்ந்த முகமது புவாஸிஸி என்ற 26 வயது இளைஞனின் தற்கொலை, அந்த நாட்டில் அரசியல் புரட்சிக்கு வித்திட்டது. முகமது வேலைக்காக ராணுவத்தில் சேர முயற்சி எடுத்தார். லஞ்ச ஊழல நிறைந்திருந்த அந்த நாட்டில் அவருக்கு அந்த வேலை கிடைக்கவில்லை. பல வேலைகளுக்கு முயற்சி செய்து முடியாமல் போகவே, தெருக்களில் காய்கறி விற்று பிழைப்பு நடத்தினர். அதற்கும் மாமூல் கேட்டு அதிகாரிகள் அராஜகம் செய்தனர். ஒரு கட்டத்தில் பெண் போலீஸ் ஒருவர் முகமதுவை அடித்துவிட, மனம் வெறுத்த அவர், இது போன்ற பிரச்னை வேறு யாருக்கும் வரக் கூடாது என்று தனக்கு தானே நெருப்பு வைத்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் கடந்த 2010, டிசம்பர் 17-ம் தேதி நடந்தது. உயிருக்கு போராடிய முகமது 2011, ஜனவரி 4-ம் தேதி மரணம் அடைந்தார். அவரின் மரணம் துனீசியா நாட்டு மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தியது. போராட்டத்தை தூண்டியது. விளைவு.. 23 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த அதிபர் பென் அலி பதவி இழந்தார். இந்தப் புரட்சி, இதர அரபு நாடுகளுக்கும் பரவியது.

மக்கள் பிரச்னைகளில் நல்வழி காட்டும் நம்பத்தகுந்த அரசியல் தலைமைகள், சமூகப் போராளிகளின் முயற்சிகளுடன், பிறர் நலம் பேணும் மனோபாவத்துடன் மக்களும் நியாயத்துக்காக போராட முன்வருவது மட்டுமே சமூக நோக்கத்துக்காக தன்னுயிரை மாய்த்துக்கொள்வதைத் தடுப்பதற்கான வழி.

இந்த உடல் நமக்கு சொந்தமில்லை....உயிரை விடுவதால் எல்லா பிரச்சினைகளும் முடிந்து விடாது... உங்களை சுற்றி உள்ளவர்களை நேசிக்கத் தொடங்குங்கள்....உங்கள் வாழ்க்கையை நலமுடன் வாழுங்கள் இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

# இந்து மதத்தின் தொன்மையை ஆலயங்களே பாதுகாக்கின்றன

**சுஜீவன்**

கோவில் இல்லாத ஊரில் குடி கொள்ள வேண்டாம் என்பது பழமொழி . அந்தவகையில் உலகமெங்கும் வழிபாட்டுத்தலங்கள் இல்லாத இடங்கள் இருப்பதாக தெரியவில்லை. உலகில் வாழும் சகல மதத்தவர்களும் அவரவர் இஷ்ட தெய்வங்களை வழிபட்டு வருவதோடு அதற்காக வழிபாட்டுத் தளங்களையும் நிர்மாணித்து வருகின்றனர் . ஏழை மக்களுக்கு உதவி செய்வதிலும் பார்க்க வழிபாட்டுத் தலங்களுக்கு கோடிகணக்கில் செலவு செய்வதை புண்ணியம் மற்றும் கடவுள் தமக்கு அருள் புரிவார் என்ற நம்பிக்கையில் பல கோடி மக்கள் வழிபாட்டுத் தலங்களுக்கு முக்கியத்துவத்தினை இன்றைய காலகட்டத்தில் வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில் ஒவ்வொரு மதத்தவரும் தனது கடவுள் தனக்கு மன நிம்மதியையும் சந்தோஷத்



தையும் அள்ளி வழங்குவார் என்ற நோக்கில் வழிபாட்டிற்காக ஆலயங்களை நோக்கி பக்தர்கள் அலை அலையாக சென்று வருகின்றனர். அதற்கமைய அவர்களுக்கு நிம்மதியும் சந்தோஷமும் மட்டுமன்றி சகல விதமான சௌபாக்கியங்களும் கிடைத்துவிடும் என்ற நோக்கிலேயே வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது அன்று தொட்டு இன்றுவரை உலகளாவியரீதியில் இருந்து வருகின்றது

இருந்தபோதிலும் இன்றைய காலகட்டத்தில் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இந்து மதத்தில் இருக்கும் மக்கள் பல்வேறு மதங்களுக்கு தாவி வருகின்றமையும் நடக்காமல் இல்லை . இதற்கு என்ன காரணம்?யார் காரணம் ? என்று தேடிப் பார்க்கும் போது இந்து மதத்தில் உள்ள மதத் தலைவர்கள் மற்றும் ஆலயங்களில் பரிபாலனம் செய்து வரும் நிர்வாகிகளுமே காரணமாக இருக்கின்றனர் என்பதே உண்மை என தெரிய வருகிறது ஏனெனில் நுவரெலியா மாவட்டத்தை பொருத்தவரையில் பிரதான நகரங்களில் மற்றும் பெருந்தோட்ட பகுதிகளில் காணப்படும் ஒரு சில இந்து ஆலயங்களில் பல்வேறு வேறுபாடுகளுக்கு மத்தியில் வழிபாடுகள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகிறது இதன் காரணமாகவே பலரும் தமது தாய் மதத்தை விட்டு வேறு மதங்களை தழுவும் அவல நிலைக்கு சென்று கொண்டிருக்கின்றனர் . குறிப்பாக மத வழிபாட்டு தளங்களிலும் பாடசாலைகளிலும் இருக்கக்கூடாத இன ரீதியான குலரீதியான சாதி ரீதியான வேறுபாடுகள் இப் பொது ஸ்தாபனங்களில் இருந்து வருகின்றமை இதற்கு முக்கிய காரணியாக காணப்படுகின்றது அதுமாத்திரமன்றி ஏழை பணக்காரன் வசதி உள்ளவன் வசதி அற்றவன் சமூகத்தில் அந்தஸ்தில் இருப்பவர் என பல்வேறு வேறுபாடுகளுக்கு மத்தியிலேயே ஆலயங்களில் பூஜைகள் அர்ச்சனைகள் மற்றும் இதர செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை பலராலும் பல்வேறு . விமரசனங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு இலங்கையில் உள்ள இந்து ஆலயங்கள் அனைத்தும் இந்து கலாச்சார திணைக்களம் மற்றும் இந்து கலாச்சார அமைச்சின் தீழ் பதிவு செய்யப்பட்டு அனுமதியுடனேயே இயங்க வேண்டும். . இதன்போது அனைத்து இந்து ஆலயங்களும் ஒரு குடையின் கீழ் ஒரே நிர்வாகத்தின் கீழ் சிறப்பான வகையில் இயங்கக்கூடிய வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் இல்லையேல் அவரவர் தேவைக்கேற்ப அவரவர் அபிலாசைகளுக்கு அமைய ஆலயங்கள் பரிபாலனம் செய்யப்பட்டு வருவதன் காரணமாக அங்கு வழிபாடுகளுக்காக வரும் பக்தர்கள் பல்வேறுவகையான சிரமங்களும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக குற்றம் சுமத்துகின்றனர். அதேசமயம் அர்ச்சனைகள் செய்யும் போது அதற்காக வழங்கப்படும் பற்றுச் சீட்டின் பெறுமதி ஆலயங்களுக்கு இடையில் வேறுபட்ட விலைகளில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம்.

தற்போது ஒரு சில ஆலயங்கள் பிரதேச ரீதியாக மாவட்ட செயலகங்களில் பதிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் ஆலயங்கள் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றன . இருந்தபோதிலும் ஆலயங்களில் நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் மாவட்ட செயலகங்கள் தேடி பார்ப்பதில்லை குறித்த ஆலயங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளாக நிர்மாணப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அது தொடர்பான ஆய்வுகளையும் தேடுவதற்காக அறிக்கை படுத்துவதற்காக அரச அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனரே தவிர இந்து ஆலயங்களின் நிர்வாகம் மற்றும் ஏனைய வசதி வாய்ப்புகள் தொடர்பில் குறித்த அரசு நிறுவனங்கள் ஏன் விடுவதில்லை என பொதுமக்கள் கேள்வி கேட்கின்றனர்?

எனவே தற்போது இந்த கலாச்சாரம் அமைச்சராக இருக்கும் கௌரவ மனோ கணேசன் அவர்கள் இவ்விடயம் தொடர்பில் துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குறிப்பாக மலையகத்தில் உள்ள சகல இந்து ஆலயங்களையும் இந்து கலாச்சார திணைக்களத்தின் ஊடாக பதிவு செய்து நிர்வாகம் மற்றும் ஏனைய விடயங்களை கண்காணிக்கும் வகையிலான ஒரு விசேட செயற்றிட்டத்தினை முன்னெடுக்க வேண்டுமென மலையக மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். ஏனெனில் ஒரு சில இந்து ஆலயங்களில் இடம் பெறும் பாராபட்சம் காரணமாக இந்துக்கள் ஆலயங்களுக்கு வழிபட செல்வதில் பின்வாங்கும் அதே சந்தர்ப்பத்தில் ஒரு சிலர் வேற்று மதங்களை தழுவும் நிலையும் தற்போது மலையகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது . இவ்வாறான விடயங்களை தவிர்க்கும் முகமாகவே இந்து கலாச்சார அமைச்சு மற்றும் இந்து கலாசார திணைக்களத்தின் பொறுப்பு வாய்ந்தவர்கள் இவ்விடயம் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு உரிய நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டுமென பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது

மேலும் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அனைவரையும் ஒருமுகமாக பார்த்து அவர்களால் வழங்கப்படும் அர்ச்சனைகளை சிறப்பான வகையில் செய்வதற்கான சூழ்நிலைகளும் ஆலயங்களில் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். ஏனெனில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ஒருசில ஆலயங்களில் பரிபாலன சபை மற்றும் பூசகர்களால் இவ்வாறான பாரபட்சம் காட்டப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது. குறிப்பாக ஆலயங்களில் உள்ள குல வேறுபாடு ஏழை பணக்காரன் வேறுபாடு போன்ற பல்வேறு வேறுபாடுகளை காட்டி பக்தர்களை சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. அதேபோல் மலையகத்தில் அதிகமாக வாழ்வது பெருந்தோட்ட மக்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே. அந்தவகையில் பிரதான நகரங்களில் உள்ள ஒரிரு ஆலயங்களின் ஒரு சில நபர்கள் நகர்புற மக்கள் - பெருந்தோட்ட மக்கள் என் வேறுபாடுகளை காட்டி பேசுவதாகவும் இதன் காரணமாகவே பெருந்தோட்ட மக்கள் பலரும் நகர்ப்புற ஆலயங்களுக்கு செல்வதை தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர். அத்தோடு இந்து ஆலயங்களுக்கு வரவேண்டாம் என்றும் ஒருசில இந்துக்களை ஆலய பரிபாலன சபைகள் தீர்மானம் நிறைவேற்றி அதன் அடிப்படையில் செயற்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தப்படுகிறது. ஆலயத்திற்கு வரவேண்டுமென கூறுவதற்கு யாருக்கு அதிகாரம் உண்டு? அவ் அதிகாரத்தை வழங்கியது யார் ? என இவர்கள் கேள்வி கேட்கின்றனர்.

மதம் என்பது யாவருக்கும் ஒன்றே. அந்த வகையில் எவ்விதமான பக்க சார்பும் வேறுபாடுகளுமின்றி செயற்படுவதன் மூலமே இந்து மதத்தின் மகிமையையும் அதன் மகத்துவத்தையும் மென்மேலும் உலகிற்கு கொண்டு செல்லலாம் என்பதே உண்மை. அந்த வகையில் உயரிய ஸ்தானத்தில் இருக்கும் இந்து கலாச்சார அமைச்சு இந்து ஆலயங்களில் பரிபாலனத்தை தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவேண்டும் . அதேபோல் அங்கு நிலவும் சகல விதமான நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்காக அரச அதிகாரிகளை நியமிக்க வேண்டும் . அதேபோல் குறித்த ஆலயங்களில் இடம் பெறும் மோசடிகள் கலாச்சார சீர்கேடுகள் போன்ற அவதூறான சம்பவங்கள் தொடர்பில் தகவல்களை பெற்று அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென

13 ஆம் பக்கம் பார்க்க....

# எழுக தமிழ் காலத்தின் தேவை!

எழுக தமிழ் பேரணி வாயிலாக தமிழர்களின் இனமான எழுச்சியை மீண்டும் இவ்வுலகத்திற்கு இந்த நூற்றாண்டின் பெரும் மனிதப்பேரவலம் நடந்தேறியதை அவ்வளவு எளிதில் உலகம் மறந்திட இயலாது. சிங்களப் பேரின அரக்கர்களால் நடத்தப்பட்ட 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை திட்டமிட்ட இனப்படுகொலை. பத்து ஆண்டுகள் கடந்து காயங்கள் ஆறிவிட்டன. ஆனால் இன்னும் எமக்கு மனக்காயம் ஆறவில்லை. அன்று ஒலித்த உயிரின் அலறல் இன்றுவரை எங்கள் செவிப்பாறை யில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது.

பாஸ்பரஸ் குண்டுகளால் குதறப்பட்ட குழந்தைகளும், கிபிரால் கிழித்து எறியப்பட்ட இலட்சக்கணக்கான எமது மக்களும், மண்ணுக்காக உயிர் நீத்து மண்ணோடு மண்ணாக கலந்துவிட்டனர்! பல நாடுகள் கைகோத்து அரங்கேற்றிய இனப்படுகொலையில் எமது தேசம் இழந்த உயிர்ச்சேதம் கணக்கற்றவை!

இலங்கை இராணுவ போர்க்குற்றம் மீதான எவ்வளவு ஆதாரங்கள் அடுக்கி அடுக்கி உலக நாடுகளின் கவனத்திற்கு எடுத்துச் சென்றாலும், எமக்கான நீதியை தள்ளி வைத்துக் கொண்டே போகிறது பன்னாட்டு நீதி மையங்கள்.

ஆனாலும், வாழும் சொந்தங்களும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் தொடர்ந்து வீதிகளில் எமது நீதிக்கான கோரிக்கையை முன்னிறுத்தி அறவழியில் ஆர்ப்பரிக்கின்றனர். இந்த அறவழி போர் பன்னாட்டுச் சமூகத்தை அசைக்காமல் ஓயாது என்பது மட்டும் இன உணர்வாளர்களுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையின் உறுதிக்கு எனது குரல் மட்டுமல்ல காயங்களோடும் அறம் மிகுந்த கோபங்களோடும் போராட்டக் கலங்களில் நின்று அதி லிருந்து அரசியல் களத்திற்கு வந்து உறுதியோடு உரிமைக்காக போராடிக் கொண்டிருக்கும் தமிழ்ப் பேரரசு கட்சியின் இளைய தலைமுறையும் எப்போதும் வலு சேர்க்கும்.

செப்டம்பர் - 16 அன்று எழுக தமிழ் பேரணி நடக்கவிருக்கிறது. அது எழுக தமிழ் பேரணி மட்டுமல்ல! வீழ்ந்த இனத்தை எழுப்பும் சனநாயக போரணி! தமிழ்மக்கள் பேரவையின் ஒருங்கிணைக்கிற இந்த மாபெரும் பேரணி. இதற்கு முன் ஒவ்வொரு ஆண்டும் பல கோரிக்கைகளோடு நடந்தேறியிருக்கிறது. இம்முறையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பெர நடக்கிறது.

எழுக தமிழ் பேரணி உலகெங்கு வாழும் தமிழின உணர்வாளர்களை மீண்டும் தட்டியெழுப்பும் என்ற நம்பிக்கையை இந்த பேரணி வாயிலக உருவாகும்

திட்டமிட்டு நடத்தப்படும் சிங்கள குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இராணுவத்தின் பிடியில் உள்ள தமிழர்களின் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மீள் குடியமர்வுக்கான முட்டுக்கட்டைகளை தகர்த்தெறிய வேண்டும்.

**சி.திவியா**

அரசியல் கைதிகளாக சிறைக்கொட்டடியிலே சித்திரவதைக்கு உட்பட்டு கிடக்கிற தமிழர்கள் உடனே விடுவிக்கப்பட வேண்டும்.

கிட்டத்தட்ட 25 ஆயிரம் தமிழர்களுக்கு மேல் காணாமல் செய்யப்பட்டோர்கள் பட்டியலில் உள்ளனர். அவர்கள் என்ன ஆனார்கள்? உயிரோடு உள்ளார்களா? இல்லை என்றால் என்ன செய்தார்கள்? என்கிற உண்மைகளை வெளிக்கொண்டுவர வேண்டும்.

இனபிரச்சினைக்கான 'தீர்வு' காணாமல் காலம் தாழ்த்துகிற கபடத்தனம் அம்பலப் படுத்தி, உடனடித்தீர்வுக்கு சிங்கள பேரினவாத அரசை காலம் தாழ்த்தாது நிர்பந்திக்க வேண்டும். போர் குற்றங்களுக்கும்,இனப்படுகொலைக்குமான ஒரு அனைத்துலக விசாரணையை வலியுறுத்த வேண்டும் . மேற்கண்ட கோரிக்கைகள் மட்டுமல்லாது பன்னாட்டு நீதிமன்றத்தில் நாம் முன் வைக்கும் நிரந்தர தீர்வான,

1. இலங்கைக்கு மீண்டும் கால நீட்டிப்பு வழங்கப்படக் கூடாது.

2. இலங்கை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு, அல்லது போர்க்குற்றப் புலன் விசாரணைக்கென்று இலங்கைக்காக அமைக்கப்படும் சிறப்புப் பன்னாட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

3. போரினால் பாதிக்கப்பட்டோரின் துயரம் குறித்தும், ஏனைய சர்வதேச மனிதஉரிமை, மனித நேயச் சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக்கொரு முறை அறிக்கையளிக்கும் பொறுப்பில் இலங்கைக்காக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஒருவர் அமர்த்தப்பட வேண்டும்.

4. இன அழிப்புச் சான்றுகளை அழியவிடாமல் காக்க ஒரு நடுநிலை யான பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும்!

மேற்கண்ட முதன்மைக் கோரிக்கைகளை எழுக தமிழ் பேரணியில் மட்டுமல்ல, அனைத்து போராட்ட, ஆர்ப்பாட்ட பேரணிகளிலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்!

இலங்கையில் நடைபெற்றது வெறும்போர் குற்றமோ மனித உரிமை மீறலோ மட்டு மல்லாது அதுதிட்டமிடப்பட்ட இனப்படுகொலை என்பதை ஐ.நா. பொது சபை அறிவிக்க வேண்டும். சர்வதேச விசாரணையும் பொது வாக்கெடுப்புமே தமிழ் மக்களுக்கான ஒரேதீர்வு என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்கவேண்டும்!

உலகெங்கும் தமிழர் எழுச்சிப் பேரணிகள் நடத்தப்பட வேண்டும் என்கிற பெரும் ஆர்வம் தொடர்ந்தும் என் போன்றோருக்கு இருக்கிறது. அந்த வகையில், எழுக தமிழ் பேரணி அதைத் தாண்டிய பெரும் பேரெழுச்சியை கொண்டுவரும் என்பதை மனதில்கொண்டு தமிழ்மக்கள் பேரவை மேற்கொள்கின்றது

இனவிடுதலை அரசியல் தொடர்பான விழிப்புணர்வும், அது தொடர்பான உரையாடலுமே நம்பிக்கையான மாற்றுத்திட்டங்களை ஏற்படுத்தும். அந்த இடத்தினை புதிய செயற்திட்டங்கள் அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைக்கும் போராட்டங்களாக மாற்றம் பெறும். அவ்வாறே இப்பொழுது 'எழுக தமிழ்' கவனம் பெறுகின்றது.

இலங்கை இனவெறி அரசின் இனப்படுகொலையின் மனக் காயம் ஆறாது. தமிழர்கள் ம்எழுச்சிப் போராட்டங்கள் வாயிலகாவே நமக்கான விடியற் கதவை திறக்க வேண்டியுள்ளது. இது தொடர்ந்து நடந்தேறும். அந்த நம்பிக்கைத் திறவுகோலாய் எழுக தமிழ் எழுச்சி அமையும்

பெருந்திராளன மக்கள் இப்பேரணியில் ம்உணர்வாளர்களின் மன எழுச்சியை இவ்வுலகம் கவனம் கொள்ளவும் இப்பேரணி நமக்கு ஓர் வாய்ப்பாகும். தமிழக தமிழர்களின் ஆதரவு எப்போது இது போன்ற போராட்டத்தை ஆதரித்தும் ஆர்ப்பரித்தும் எழுச்சிக் கொள்ளும் .

'எழுக தமிழ்'என்ற தமிழ் மக்கள் எழுச்சி தமிழ் மக்களின் காலத்தின் தேவை! மறுப்பதற்கில்லை. மகிழ்ச்சி! ஏற்பாட்டாளர்களுக்கு வாழ்த்துக்கள்!

ஆனால் அதை வைத்து தமிழ் மக்களை எவரும் தவறாக வழி நடத்தக் கூடாது. குறிப்பாக இனப்படுகொலையை எவர் பேச்சையும் கேட்டு மூடி மறைக்க எவரும் கனவிலும் நினைக்க கூடாது.

'தமிழ் மக்களுக்கு நடந்தது இனப்படுகொலையே என்ற முதன்மை குரல் கொடுப்பும் அதற்கு சர்வதேச விசாரணை வேண்டும்!'என்ற முழக்கமும் தவிர்க்கப்படவோ மறக்கவோ மறுக்கவோ முடியாத முதன்மை கோரிக்கையாக இருக்க வேண்டும்!

நாம் மக்கள் எழுச்சியை நம்புவோம்..!!!

ஆனால் மக்கள் எழுச்சியை வைத்து எவரும் மக்களுக்கு இரண்டகம் செய்ய அனுமதிக்காமல் விழிப்பாக இருப்போம்!!!

உலக தமிழினம் ஒரே நேர்கோட்டில் எழுச்சி கொள்ள கட்சி பேதமில்லா எழுச்சி என்பது காலத்தின் தேவை!

எழுக தமிழ் காலத்தின் தேவை!

எழுக தமிழ் எழுச்சியை மட்டுமல்ல விழிப்பையும் எமக்கு கொடுக்கட்டும்!

இது தமிழர்கள் விழித்து கொண்டே உறங்கும் காலம்!

தாயகத்தின் எழுக தமிழ் நிகழ்ச்சி மக்கள் எழுச்சிக்கு வலுவூட்டி போராடும் மக்களுக்கு முதன்மை வெற்றியை கொடுக்க வாழ்த்துகள்!

---

## இந்து...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

பக்தர்கள் பரவலாக தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். மேலும் வழிபாடுகள் இடம் பெறும் சந்தர்ப்பத்தில் ஆலயங்களினுள் கையடக்கத் தொலைபேசி ஊடாக முகநூல் பாவனை மற்றும் சமூக வலைத்தளங்கள் பாவனை தற்போது அதிகரித்து வருவதாகவும் இதில் ஒரு சில ஆலயங்களில் முக்கிய பொறுப்பில் இருப்பவர்களும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் விமர்சிக்கப்படுகிறது. எனவே இதற்கு எதிராக கடுமையான தீர்மானம் ஒன்றை இந்து கலாசார திணைக்களம் மாத்திரமன்று ஆலயங்களின் பரிபாலனசபை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகிறது. அத்தோடு ஆலயங்களின் பூஜைகளை நடத்துவதற்காக முறையாக வேத சாஸ்திரம் கற்றவர்களையும் இந்து கலாச்சார அமைச்சின் அல்லது திணைக்களத்தில் பதிவு செய்து கொண்ட குருக்கள் மாரையுமே நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

திட்டமிட்ட மத மாற்றம் இடம்பெறுகின்றது என பலரும் பல கருத்துக்களை தெரிவித்து வரும் நிலையில் இவ்வாறான சில விடயங்கள் காரணமாகவும் இந்துமதத்தை வெறுத்து பலரும் வேறு மதங்களுக்கு செல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் ஒரு சில ஆலய பரிபாலன சபை மற்றும் பூசகர்களே என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

---

## இலங்கை...

09 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாட்டின் தற்போதைய அரசியல் அமைதியின்மையை ஒரு பிரச்சினையாகக் கருதாது பொதுமக்களுக்கான சேவைகளையும் அபிவிருத்தி செயற்திட்டங்களையும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். மக்களின் நலன்கருதி தனது வழிகாட்டலில் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சகல விசேட கருத்திட்டங்களும் 2019ஆம் ஆண்டில் புதிய உத்வேகத்துடனும் வலுவுடனும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான திட்டங்களை தயாரிக்க வேண்டும். வறுமையை இல்லாதொழிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முதன்மை செயற்திட்டமான கிராமசக்தி மக்கள் இயக்கத்தின் செயற்பாடுகளையும் எதிர்வரும் வருடம் வலுவுடன் நடைமுறைப்படுத்த பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, மாவட்ட மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள கிராமசக்தி ஒருங்கிணைப்பாளர்கள் தமது கடமைகளை உரியவாறு நிறைவேற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார். மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களின் முன்னேற்றம் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டதுடன், வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணி தனது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதுடன், குறுகிய காலத்திற்குள் அடைந்துள்ள அதன் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதி இதன்போது மகிழ்ச்சி தெரிவித்தார். இதன்பொருட்டு நாட்டின் நிர்வாக நடவடிக்கைகளை முறையாக கொண்டுசெல்ல வேண்டுமென ஜனாதிபதி விரும்பிநிற்கின்ற தன்மை புலப்படுவதுடன், தற்போதைய நிலையில் ஜனாதிபதியின் பணிப்புரையை மாத்திரமே ஏற்று வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாக அதிகாரிகள் உள்ளனர். இவ்வாறான சூழலில் புதிய ஆட்சி அரங்கேறுகின்ற போது, அதிகாரிகள் பழிவாங்கப்படுவதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் இல்லை. அதேவேளை நாடு குழப்படையமால் இருப்பதற்கு அரச அதிகாரிகளுக்கான தேவைகளைப்பெற்றுக்கொடுத்து முறையாக திட்டங்களை நடைமுறைப்படுத்துதற்கு வழிகாட்டுவதே ஜனாதிபதியின் முக்கிய செயலாகவும் அமைய வேண்டியுள்ளது.

**சர்வதேச நாடுகளின் நன்மதிப்பு இலங்கை தொடர்பில் குறைவடைந்து வருகின்ற அதே வேளை, இலங்கை நாட்டு மக்களும் அரசு தொடர்பில் நம்பிக்கையிழந்து வருகின்றனர். குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் 2019ம் ஆண்டிற்கான சீருடைக்கான கொடுப்பனவுகளோ அல்லது சீருடைத்துணிகளோ மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் ஏமாற்றத்தினைச் சந்தித்துள்ளதுடன், எப்போது கிடைக்கப்பெறும் என்பது தொடர்பில் இதுவரை தீர்க்கமான முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை**

நாட்டில் குழப்பங்கள், அனர்த்தங்கள் நடைபெறுகின்ற போது, நடுநிலையாக நின்று உண்மையைத் தன்மையை கொடுக்க வேண்டியது ஊடகங்களின் கடமையுமாகும். அவ்வாறில்லாது, உண்மைக்குப் புறப்பான தகவல்களை மக்களுக்கு வழங்குகின்ற போது, மக்களும் பிழையான முடிவுகளே எடுப்பதற்கு வாய்ப்புள்ளது. இன்றைய அரசியல் குழப்ப நிலையில் அரச ஊடகங்கள் நாட்டில் ஒருபக்கச்சார்பாகவே இயங்கின்றன என்றதான குற்றச்சாட்டும் இல்லாமல் இல்லை. குறிப்பாக அரசுக்கு ஆதரவாக அரச ஊடகங்கள் இயங்குகின்றன. என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளதுடன், அரச ஊடகங்களை நசுக்குகின்ற, தாக்குகின்ற செயற்பாடுகளும் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில்தான் பாராளுமன்றத்தின் நடப்பு விவகாரங்களை நாட்டு மக்கள் அறியவேண்டும். அதற்காக அனைத்து மக்களும் பாராளுமன்றத்திற்கு செல்ல முடியாது. வீட்டில் இருந்தே பாராளுமன்ற செயற்பாடுகளை அவதானிப்பதற்கு சபை அமர்வின்போது நேரடி ஒளிபரப்புக்கள் கடந்த காலங்களில் செய்யப்பட்டன. ஆனால் அண்மைக்காலங்களாக அரச ஊடகங்களில் நேரடியாக ஒளிபரப்பபடுவதில்லை. இந்நிலையில்தான் அண்மையில், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவரிடமும் ஊடக அமைச்சின் செயலாளரிடமும் அரச ஊடகங்கள் பக்கச்சார்பான விதத்தில் செயற்படுவது குறித்த தனது கவலையை சபாநாயகர் கருஜெயசூரிய வெளியிட்டிருந்தார். அரச ஊடகங்கள் பக்கச்சார்பான முறையில் செயற்படுகின்றன என பாராளுமன்றத்தில் கரிசனை வெளியிடப்பட்டதை தொடர்ந்தே சபாநாயகர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுதாபனத்தின் தலைவர் சோமாரட்ண திசநாயக்க ஊடக அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி ஆகியோரை அழைத்து பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளார். பாராளுமன்ற அமர்வுகளை நேரடி ஒலிபரப்பு செய்வது ஏன் இடைநிறுத்தப்பட்டது என்பதை அறிவதற்காகவே சபாநாயகர் இரு அதிகாரிகளையும் அழைத்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார் என சபாநாயகர் அலுவலகம் தெரிவி;த்துள்ளது. நாடு நெருக்கடியான சூழலில் உள்ள நிலையில் ஊடக நிறுவனங்கள் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டியதன் அவசியத்தை சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை ஷருபாவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புகூட்டுத்தாபனம், ஐடின் மற்றும் ஏஎன்சில் பத்திரிகைகள் போன்றவற்றின் நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். இதேவேளை சபாநாயகருடனான இன்றைய சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள ஊடக அமைச்சி;ன் செயலாளர் இந்த விடயங்கள் குறித்து உடனடி கவனம் செலுத்துவதாகவும் அரச ஊடகங்களிற்கு அறிவுறுத்தலொன்றை விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார். இதேவேளை பாராளுமன்ற அமர்வுகளை நேரடி ஒலிபரப்பு செய்யும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் கவலை வெளியிட்டுள்ளதுடன் நிலைமை கூடிய விரைவில் சரிசெய்யப்படும் என தெரிவித்திருந்தார்.

இலங்கை நாட்டின் அரசியல் குழப்ப நிலைகள் காரணமாக, சர்வதேசத்தின் நிலைப்பாடு மோசமடைந்து செல்கின்ற அதேவேளை, நாட்டின் நிர்வாகச் செயற்பாடுகளையும் பங்கமின்றி கொண்டு செல்ல வேண்டியதும், நாட்டின் அரச ஊடகங்களை பக்கச்சார்பின்றி வழிநடத்தி கொண்டு செல்லவேண்டியதும் நாட்டின் தலைவரின் கடமையாகும். இவை சரிசெய்யபடாத நிலையில் நாட்டில் குழப்பநிலை அதிகரிக்கலாம். நாட்டின் நல்லிணக்கத்தினையும், அமைதியினையும் நிலைநாட்ட வேண்டியது. நாட்டின் தலைவரின் தலையாய கடமையுமாகும். இதுவே மக்களின் பெருவிருப்புமாகும்.

---

## யாழ்.கண்காட்சி..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

முன்வைத்த மக்களின் அன்றாட பிரச்சினை கோரிக்கையை அவர் மறந்துவிடமுடியாது.

இறுதியாக மேயராக பதவி வகித்த யோகேஸ்வரி பற்குணராஜாவும் இப்பணிகளை செய்ய யுத்த சூழல் தடையானது.பல இடங்களில் படையினரின் காவல் அரண்கள்,முகாம்கள் அமைந்திருந்ததும் ஒரு காரணமாகும்.ஏ-9 வீதி தடையால் புனரமைப்பதற்கான சீமெந்து,கட்ட உபகரணங்களை எடுத்துவர முடியாத நிலைமையும் முக்கிய காரணம். தற்போது யுத்த சூழல் இல்லை.தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நல்லாட்சி அரசுக்கு ஆதரவு.தற்போதைய மேயர்ஆனோல்ட் இக்கட்சியை சேரந்தவர். இங்கு அடிக்கடி வரும் வெளிநாட்டு பிரதிநிதிகள்,தூதுவர்களை சந்திக்கிறார்.'மேயர் மாநகரசபையின் பணத்தை வீணாக செலவிடுவதாக ஏனைய கட்சிகளின் மாநகர சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

வடக்கின் 65 ஆயிரம் வீட்டுத்திட்டம் கம்பனிகளுக்கு ஒப்படைத்து அதில் பாரிய ஊழல்கள் என மக்கள் விடுதலை முன்னணி எம்.பி.பிமல் ரத்னாயக்கா கடந்த பட்ஜட் விவாதத்தில் பாராளுமன்றத்தில் கூறியுள்ளார்.இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்து நாடு திரும்பிய குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை என டக்ளஸ் தேவானந்தா புள்ளி விபரங்களுடன் இதன்போது குறிப்பிட்டிருந்தார்.வவுனியா - கணேசபுரம்,சமயபுரம் பகுதியில் வாழும் இருபது குடும்பங்கள் தமக்கு உரிய வீட்டுத்திட்ட உதவி கிடைக்காத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.வன்னி எம்.பி.மஸ்தானிடம் முறையிட்டிருந்தனர்.

இதேபோலமன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேசங்களின் வீட்டுத்திட்டம் தமக்கு உரியமுறையில் கிடைக்கவில்லை என தேசிய வீடமைப்பு அதிகாரசபை மீது புகார்.முல்லைத்தீவு பகுதியில் வீதிகள்,பாலங்கள் திருத்தப்படவில்லை.மன்னாரில் 35 வருடங்களாக 41 குளங்கள் புனரமைக்கப்படாத நிலை. இவ்வாறான பல முறைப்பாடுகள் மக்களிடம் இருந்து வருவதை தினமும் ஊடகங்களில் காணமுடிகிறது.இவை மக்களின் அன்றாட பிரச்சினைகளே.

கடந்த ஆண்டு வடக்கு,கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை,வாழைச்சேனை கடதாசி ஆலை,ஆனையிறவு,குறிஞ்சாந்தீவு உப்பளங்கள்,அச்சுவேலி கைத்தொழில் பேட்டை என்பனவற்றின் அபிவிருத்தி பணிகள்,வீடமைப்பு, நீர் வழங்கல்,சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் போன்ற பலவற்றை பெ றுக்கொடுப்பேன் என இங்கு ஜனாதிபதி கூறியிருந்தார்.இந்த கூட்டத்தில் முப்படைத்தளபதிகள்,வடக்கு,கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள்,வடக்கு கிழக்கு எம்.பிக்கள்,அன்றைய எதிரக் கட்சித்தலைவர் இரா.சம்மந்தன்,சில அமைச்சர்கள்,ஜனாதிபதி செயலணியின் செயலாளர் பீ.சிவஞானசோதி, நிதி அமைச்சின் செயலர் கலாநிதி சமரதுங்க, அரசாங்க அதிபர்கள்,உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

எதுவித இனபேதம் இன்றி வடக்கு கிழக்கு மக்களுக்கு அபிவருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டு, அந்த மக்களுக்கும் அபிவிருத்தியின் அனுகூலங்களை பெற்றுக்கொடுப்பேன் என இங்கு ஜனாதிபதி குறிப்பிட்டிருந்ததுடன்,முன்னைடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் முறையாகவும்,துரிதமாகவும் செயற்படுத்துவதற்கான பணிப்பு ரைகளையும் விடுத்திருந்தார். ஆனால்.கடந்த ஆண்டு ஒக்டோபர் 26 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதால் ஐ.தே.க. அரசுடன் முரண்பட்டிருப்பதால் இந்த செயலணி செயற்பாடுகள் கைவிடப்பட்டதாகவே கூறப்படுகிறது.

எனவே,அவரது பதவிக்காலமும் ,ஐக்கிய தேசிய கட்சி அரசின் பதவிக்காலமும் முடியும் நிலையில் வடக்கின் அபிவிருத்தி குறித்து இனிமேல் எவருமே பேசி பயனில்லை.இரு தரப்பினரையும் பதவிக்கு கொண்டுவந்தவர்களில் வடக்கு மக்களுக்கும் முக்கிய பங்குண்டு.இரு தரப்பினராலும் இந்த மக்கள் தொடர்ந்தும் கடந்த நான்கு ஆண்டுகளாக ஏமாற்றப்பட்டே வந்துள்ளனர். இப்படியான வீணான செலவுகளை நிறுத்தி பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு குறுகிய காலத்திலாவது ஏதாவது பணிகளைச் செய்ய முன்வரவேண்டும்.முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சீ.வீ.விக்னேஸ்வரன் கடந்த 15 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் 2015 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறச்செய்ய தமிழ் மக்கள் எவ்வளவு கூட்டுணர்வோடு,ஒன்றுபட்டு செயற் பட்டனர் என்பதையும், ஆனால்,இந்த மக்களுக்கு பிரதியுபகாரமாக செய்யவேண்டிவை எதனையுமே செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியதுடன் யுத்தத்தினால் இந்த மக்கள் சந்தித்த பேரழிவுகளையும்,அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் விலாவாரியாக அவர் விவரித்துள்ளார். பதவியை விட்டு செல்வதற்குள் சில பணிகளையாவது உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு செய்துவிட்டு செல்லுங்கள் எனவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.இனி அடுத்து வரும் ஜனாதிபதி,புதிய அரசு இப்பணிகளை செய்வார்களா? பொறுத்திருந்து தான் காணவேண்டும்.



# பின்லாந்து கல்வி முறை; மாணவர்களின் திறன் எப்படி மதிப்பிடப்படுகின்றது?

எப்படி தம் மாணவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும், கல்வி அளிக்க வேண்டும் என்பதுதான் ஒரு நாட்டின் நோக்கமாக இருக்க வேண்டும். எப்படி மாணவர்களை வடிகட்ட வேண்டும் என்பதாக இருக்கக் கூடாது என்கிறார் சுவீடனில் நானோ தொழில்நுட்பம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வரும் விஜய் அசோகன்.

மாணவர்களின் திறனை மேம்படுத்துவது போலத்தான் பின்லாந்து கல்வி முறை உள்ளதே அன்றி மாணவர்களையே மதிப்பிடுவது போல இல்லை என்கிறார் பின்லாந்தில் பணியாற்றி வரும் செந்தில்கண்ணன்.

பின்லாந்து கல்வி முறை குறித்து பல நேர்மறையான கருத்துக்களை நாம் பெரிதும் கேட்டிருப்போம். சமீபத்தில் தமிழக கல்வியமைச்சர் செங்கோட்டையன் பின்லாந்து கல்வி முறை குறித்து ஆராய அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

செந்தில் கண்ணன் பின்லாந்தில் மாற்றுக் கல்விக்கான தளத்தில் செயலாற்றி வருகிறார். விஜய் அசோகன் தாய்மொழி கல்வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக செயல்பட்டு வருகிறார்.

இவர்கள் இருவரும் கல்விக்காக கொண்டாடப்படும் பின்லாந்து கல்விமுறை குறித்தும், பள்ளி நுழைவுத் தேர்வுகள் குறித்தும் தங்கள் கருத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

**தேர்வு நடக்கும், ஆனால்...**

பின்லாந்து கல்வி முறை குறித்து பல கட்டுக்கதைகள் இந்தியாவில் உலவுகின்றன. குறிப்பாக இங்குத் தேர்வு இல்லை, ரேங்க் கார்ட் இல்லை என பலர் பல்வேறு விதமாக தங்களுக்கு பிடித்தபடி பேசி வருகிறார்கள். ஆனால், இவை அனைத்துமே பாதி உண்மைதான் என்கிறார் செந்தில்கண்ணன்.

“பின்லாந்து பள்ளிகளில் தேர்வு நடக்கும். ஆனால், அது மாணவர்களை மதிப்பிடுவது போல இருக்காது. ஒரு மாணவரை இன்னொரு மாணவரோடு ஒப்பிடுவதற்காக இருக்காது. ஒரு மாணவருக்கு என்ன சிறப்பாக வருகிறது, எதில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆசிரியர் அறிந்து கொள்வதற்காகவே தேர்வுகள் நடத்தப் படும்.

அதே நேரம், ஒரு மாணவர் எடுத்த மதிப்பெண் அந்த மாணவருக்கு மட்டுமே சொல்லப்படும். எக்காரணத்தைக் கொண்டும் மற்ற மாணவர்களுக்குச் சொல்ல மாட்டார்கள். யாரையும் யாரோடும் ஒப்பிட்டுக் கொள்ளக் கூடாது என்பதில் மிக தெளிவாக இருப்பார்கள் என்று பிபிசி தமிழிடம் தெரிவிக்கிறார் செந்தில்கண்ணன்.

செந்தில்கண்ணன் பின்லாந்து கல்வி முறை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்.

“பின்லாந்து கல்வி குறித்துப் பேசுபவர்கள் அது ஏதோ அதன் பாடத்திட்டத்தால் அந்நாடு சிறந்து விளங்குகிறது என்று எண்ணுகிறார்கள். இது தவறு. உண்மையில் பின்லாந்து கல்வியில் சிறந்து விளங்குவதற்கு காரணம் அந்நாட்டிற்கு உள்ள சமூக பிரக்ஞைதான். அவர்களுக்கு கல்வியின் நோக்கம் என்ன என்பது குறித்து தெளிவான புரிதல் இருக்கிறது” என்கிறார்.

பின்லாந்து கல்விமுறை”

பின்லாந்து கல்வி முறை குறித்து விவரிக்கும் செந்தில் கண்ணன், பின்லாந்தில் குழந்தைகளுக்கான டேகேர் பள்ளி ஒரு வயதிலேயே தொடங்கிவிடும். இதில் கட்டாயம் சேர்க்க வேண்டிய அவசியம் எல்லாம் இல்லை. விருப்பம் இருந்தால் சேர்க்கலாம். அதுபோல இது இலவசமும் இல்லை. குறைந்தபட்ச கட்டணம் வசூலிக்கப்படும். அரசு மானியமும் தருகிறது என்கிறார்.

மேலும் அவர், டே கேர் என்றவுடன் ஏதோவென்று நினைத்துக் கொள்ளாதீர்கள். இது நம் ஊர் பால்வாடி போலத்தான். ஆனால், அதே நேரம் அங்குக் கற்பிக்கும் முறை மற்றும் கற்பிக்கப்படும் விஷயம் நம்மூர் பால்வாடி போல அல்லாமல், வாழ்க்கைக்குத் தேவையானதாகவும், சமூகத்திற்குத் தேவையானதாகவும் இருக்கும். அதாவது நடைப்பயிற்சி, நீச்சல், சாலை விதிகளை மதிப்பது, தனித்துவத்தை இழக்காமல் சமூகத்துடன் கலந்திருப்பது ஆகியவை போதனையாக அல்லாமல் நடைமுறை பயிற்சியாக கற்பிக்கப்படும் என்று கூறுகிறார்.

முறையான பள்ளியானது ஆறு வயதில்தான் அங்கு ஒரு குழந்தைக்கு தொடங்குகிறது. அந்தக் கல்வியும் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை விஷயங்கள், தயக்கமற்று இருப்பது குறிப்பாக தற்சார்பு வாழ்க்கையை கற்பிப்பதாக உள்ளது. குறிப்பாக மாணவர்கள், தனக்கு என்ன தேவை? தனக்கு எதில் ஆர்வம் இருக்கிறது? என்பதை புரிந்துகொள்ள பின்லாந்து கல்வி முறை வழிவகை செய்கிறது.

நுழைவுத் தேர்வு பின்லாந்து பள்ளிகளில் இருக்கிறது. ஆனால், மத்தியிலிருந்து ஒருவர் சொல்லி நடக்கும் பொதுவான நுழைவுத் தேர்வு இல்லை. ஐந்தாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கும் அங்கு நுழைவுத் தேர்வுகள் இல்லை. சில பள்ளிகளே தங்களுக்குத் தேவையான போது, ஏற்றவாறு பாகுபாடு இல்லாமல் நுழைவுத் தேர்வுகளை நடத்துவார்கள்” என்று தெரிவிக்கிறார்.

**வாழ்க்கைக்கானது**

சுவீடன் கல்வி முறையும் இப்படியானதாகவே உள்ளதாகக் கூறுகிறார் அங்கு பணிபுரியும் தமிழகத்தைச் சேர்ந்த யாசர்.

நம் அன்றாட வாழ்வுக்கு என்ன தேவையோ அதைக் கற்பிக்கிறார்கள். அரசுக்கு மனு எழுதுவது எப்படி?, கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குவது, பருவ நிலை மாற்றம் என்றால் என்ன? அது எப்படி நம் சாப்பாட்டுத் தட்டிலேயே தொடங்குகிறது. இவை அனைத்தையும் நடைமுறை பயிற்சியில் தொடக்கப்பள்ளியிலேயே கற்பிக்கிறார்கள். குறிப்பாக வாழ்க்கை குறித்து அவநம்பிக்கையை விதைக்காமல், வாழ்தல் குறித்த நம்பிக்கையையும், சக மனிதர்கள் மீது பாசத்தையும் ஏற்படுத்துவதாக இங்கு கல்வி உள்ளது என்கிறார்.

**சீனா முதல் அமெரிக்கா வரை**

சீனா முதல் அமெரிக்கா வரை பல நாடுகளில் பணிநிமித்தமாக தங்கி இருக்கிறேன். எந்த நாடும் மாணவர்களை பள்ளி நோக்கி ஈர்க்க என்னவெல்லாம் செய்யலாமென யோசிக்கிறதே அன்றி அவர்களை பள்ளிக்கு வராமல் தடுப்பதற்காக செயலாற்றவில்லை என்கிறார்.

ஐரோப்பா கல்வியில் சிறந்து விளங்க காரணம். அவர்கள் தாய்மொழி கல்விக்கு முக்கியத்துவம் தருவதுதான் என்கிறார் விஜய் அசோகன்

மேலும் அவர், “தாய்மொழியில் கல்வி கிடைக்காததால்தான் பலர் பள்ளியைவிட்டு இடைநிற்கிறார்கள் என்கிறது யுனெஸ்கோ. உலகெங்கும் 40 சதவீத மாணவர்களுக்கு குறிப்பாக ஆப்ரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் தாய் மொழியில் கல்வி கிடைப்பது இல்லை. இதன் காரணமாக அவர்கள் புரிந்து கொள்ள சிரமப்படுகிறார்கள்” என்று அவர் மேலும் கூறுகிறார்.

நன்றி: பிபிசி

# நிலவில் மனிதர்கள் செலுத்தப் போகும் நாசா ரோவர்



நிலவில் மனிதர்கள் பயணம் செய்யப் பயன்படுத்திய முதல் லூனார் ரோவர் வாகனம், அப்பல்லோ 15 நிலவு திட்டத்தில் பயன்படுத்தப் பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டு முறை அப்பல்லோ 16 மற்றும் 17 ஆகின நிலவு திட்டத்திலும், இந்த ரோவர் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது. இந்த வாகனம் மூன் பஃக்கி (Moon Buggy) அல்லது மூன் லூனார் ரோவர் என்று அழைக்கப்பட்டது.

நாசா விண்வெளி மையம், விண்வெளி ஆராய்ச்சியில் பெரிய நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. நிலவு மற்றும் செவ்வாய்க் கிரகத்தை மட்டும் ஆராயாமல், மொத்த பால் கண்டத்தையும் ஆராய்ச்சி செய்து, அதில் மனிதர்கள் வாழ்வதற்கான மாற்றுக் கிரகத்தைத் தேடி வருகிறது. அண்மையில் புதிதாக பல எக்ஸோ பிளானட்களையும் கண்டுபிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


நாசாவின் இந்த நோக்கத்தை வெற்றிகரமாக செயல்படுத்த, நாசா பல புதிய சாதனங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை உருவாக்கி வருகிறது. முக்கியமாக நிலவு மற்றும் செவ்வாய்க் கிரகத்தில் உள்ள நிலையை முழுமையாக ஆய்வு செய்து ஆராய்ச்சி செய்வதற்கும் அதிநவீன ரோவர் வாகனங்களை உருவாக்கி வருகிறது.

மைக் ஜெர்ன்ஹார்ட் என்ற நாசாவின் ரோவர் கட்டுப்பாட்டு மேலாளர், லூனார் எலக்ட்ரிக் ரோவரை கடந்த 2010 ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்த லூனார் எலக்ட்ரிக் ரோவரில் நான்கு விண்வெளி வீரர்கள் இரண்டு வாரத்திற்கு அதில் தங்கி அவர்களுடைய ஆராய்ச்சியை மேற்கொள்ளும் விதத்தில் வடிவமைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் ஆறு பிரஷ் ரைஸ்ட் சக்கரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் முன்பக்கம் முற்றிலுமாக கடினமான கண்ணாடியில் உருவாக்கப்பட்டுள்ளது. மேல் தளம், வானத்தில் நிகழும் மாற்றங்களைக் கண்காணிக்கவும் மற்றும் கீழ் தளம், பாறை மற்றும் கிரகத்தின் தரை பரப்பைக் கண்காணிக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்துடன் இதன் கீழ் தளத்தில் ஹெல்மெட் பப்பில் (Helmet Bubble) ஷீல்டும் கொடுக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் வாகனத்தின் உள் இருந்தே, தரை பரப்பில் உள்ள மாதிரிகளை ஆய்வு செய்யலாம். இந்த லூனார் எலெக்ரிக் ரோவர் 90 டிகிரிக்கு குறைவான எந்த ஆங்கிளிலும் திரும்பக்கூடிய வல்லமை கொண்டது.

முன்பு நாசாவால் உருவாக்கப்பட்ட ஆய்வு ரோவர்கள், ஒரு நாளுக்கு 40 மீட்டர் மட்டுமே நகர்ந்து ஆய்வுகளைச் செய்து முடிக்கும். ஆனால் தற்பொழுது உருவாக்கப்பட்டுள்ள இந்த லூனார் எலக்ட்ரிக் ரோவர்கள் மணிக்கு 15 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியானால் ஒரு நாளுக்கு எத்தனைக் கிலோ மீட்டர் தூரத்தை இதில் பயணிக்கலாம் என்று கணித்துக்கொள்ளுங்கள்.





அதிநவீன ரோவர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த லூனார் எலக்ட்ரிக் ரோவர் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பின்பக்கத்தில் இரண்டு விண்வெளி வீரர்களுக்கான விண்வெளி உடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. ரோவேரின் உள்பக்கத்திலிருந்து உடைகளை மாட்டிக் கொண்டு வீரர்கள் நிலவின் மேற்பரப்பில் தாராளமாக ஆராய்ச்சிகளைச் பாதுகாப்பாக செய்து முடிக்கலாம்.

குறைந்த நேரத்தில் அதிகப்படியான பகுதிகளை ஆய்வு செய்ய இந்த ரோவர்கள் பெரிதும் உதவும் என்று தெளிவாகத் தெரிகிறது. அதேபோல் விண்வெளியில் உள்ள ஆபத்துகளிலிருந்து விண்வெளி வீரர்களைப் பாதுகாக்க தான் இந்த ரோவ்ர்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

நாசாவின் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தின் போது இந்த ரோவரும் அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற இதன் சோதனை ஓட்டமும் வெற்றி பெற்றுள்ளது.

இஸ்ரோ, நிலவிற்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டம் 2022ம் ஆண்டில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாசா இப்பொழுதே நிலவிற்கு மனிதர்களைப் பாதுகாப்பாக அனுப்பி ஆராய்ச்சியைத் துவங்கத் திட்டவட்டமாகச் செயல்பட்டு வருகிறது.

இதேபோல் புதிய ரோவரை இஸ்ரோவும் உருவாக்கினால் அட்டகாசமாக இருக்கும் தானே. இஸ்ரோவின் ககன்யான் திட்டத்தில் இப்படி ஒரு எலக்ட்ரிக் ரோவர் இருக்கிறதா என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

# இரண்டாம் உலகப் போர் வெடிப்புக்கு பின்னர் எண்பது ஆண்டுகள்

எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், செப்டம்பர் 1, 1939 இல், ஜேர்மனியின் நாஜி அரசாங்கம் போலந்து மீது அதன் படையெடுப்பைத் தொடங்கியது. இரண்டு நாட்களுக்குப் பின்னர், பிரிட்டனும் பிரான்ஸும் ஜேர்மனி மீது போர் பிரகடனம் செய்தன. உலகெங்கிலும் விரிவடைந்து, 1945 இல் முடிவுறுவதற்கு முன்னர் ஆறு ஆண்டுகள் நீடித்த இரண்டாம் உலக போர், கூறவியலாத கொடூரத்துடன் நடத்தப்பட்டது, அது வரலாற்றிலேயே மிகவும் காட்டுமிராண்டித்தனமான சம்பவமாக மனிதகுலத்தின் ஒட்டுமொத்த நினைவில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த போரின் போது மனிதகுலத்திற்கு எதிராக மிருகத்தனமான குற்றங்கள் நடத்தப்பட்டன. 70 மில்லியனுக்கும் அதிகமான மனித உயிர்களைப் பலி கொண்ட அந்த போர், சண்டையிட்டோருக்கும் அப்பாவி மக்களுக்கும் இடையிலான எல்லா எல்லைக்கோடுகளையும் அழித்திருந்தது, போர்க்களத்தில் சிப்பாய்களின் எண்ணிக்கையை விட நிராயுதபாணியான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் அண்மித்து இரண்டு மடங்கு அதிகமாக உயிரிழந்தார்கள்.

ஒட்டுமொத்த மக்களையும் பூண்டோடொழி அழிக்கும் திட்டமிட்ட முயற்சிகளோடு, நகரங்கள் மீது இடைவிடாது வீசப்பட்ட குண்டுவீச்சுகளும், அத்துடன் பொருளாதார இடையூறுகளால் உண்டான ஒட்டுமொத்த பசி பஞ்சங்களும், சேர்ந்திருந்தன.

செப்டம்பர் 1, 1939 இல், ஜேர்மனி, 2,000 இக்கும் அதிகமான போர்விமானங்கள் மற்றும் 2,500 டாங்கிகளுடன் சேர்ந்து 1.5 மில்லியன் துருப்புகளைப் போலந்து எல்லைக்குள் அனுப்புவதற்கு முன்னரே, போர் முனைவு ஏற்கனவே பாரியளவில் உயிர்களைப் பறித்திருந்தது. இத்தாலி 1935 இல் எத்தியோப்பியா மீது படையெடுத்த போது அது தேசங்களின் கழகத்தினது (League of Nations) திராணியின்மையை அம்பலப்படுத்தியது மற்றும் ஆறு ஆண்டுகளில் அண்மித்து 400,000 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். ஜப்பான் சீனா மீது படையெடுத்து ஆக்கிரமித்ததுடன், 1937-38 இல் ஈனத்தனமாக நான்ஜிங் கற்பழிப்பு சம்பவங்களை நடத்தியது. அதில் ஒரு நகரில் 300,000 வரையிலான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். அந்த போர் முடிவதற்கு முன்னர், 15 மில்லியன் சீனர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள்.

இரண்டாம் உலக போர் உலகின் அரசியல் மற்றும் இராணுவ பேரகராதியில், மனிதப்படுகொலை (genocide), blitzkrieg என்ற அதிரடி யுத்தம், முற்றுமுழுமையான போர், யூத இன ஒழிப்பு (Holocaust), படுகொலை முகாம், இறுதி தீர்வு, சைக்லோன் பி (Zyclon B), அணுகுண்டு (அ-ஞுணிட்ஞு), காளான் கூட்டம் (mushroom cloud), துணைவிளைவுகள் (fallout), அவுஸ்விட்ச் (Auschwitz) மற்றும் ஹிரோஷிமா என்று ஈவிரக்கமற்ற புதிய வார்த்தைகளின் ஒரு தொகுப்பை அறிமுகம் செய்தது.

இரண்டாம் உலக போர் கொடூரங்களினூடாக பயணித்து வந்த பலர் இன்னமும் உயிர் வாழ்கிறார்கள். உயிர்பிழைத்தவர்களில், சிப்பாய்கள் மற்றும் அப்பாவி மக்கள் இரண்டு தரப்பினருமே, அவர்களின் எஞ்சிய வாழ்வில் உடல்ரீதியிலும், மனோரீதியிலும், உணர்வுரீதியிலும் வடுக்களைத் தாங்கியுள்ளனர். அவர்களின் குழந்தைகளது வாழ்வை வடிவமைப்பதிலும், போரை நோக்கிய பரந்த மக்களின் வெறுப்புணர்ச்சியை அவர்களுக்குள் உட்புகுத்துவதிலும் அவர்களின் அந்த கசப்பான அனுபவங்கள் அளப்பரிய பாத்திரம் வகித்தன.

அதுபோன்றவொரு உலக-வரலாற்று பிரளயத்தின் நினைவுதினம், 80 ஆண்டுகளுக்கு முந்தைய சம்பவங்களின் படிப்பினைகளை ஆராய்வதாகவும் மற்றும் மனித நாகரீகத்திற்கே முடிவு கட்டிவிடக்கூடிய மற்றொரு உலக போர் வெடிப்பதைத் தடுப்பது பற்றிய ஒரு தெளிவாக ஆய்விற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்வதாக இருக்க வேண்டும்.

உலகின் முதலாளித்துவ தலைவர்கள் இந்த நினைவாண்டின் அதிகாரபூர்வ நினைவுதின நிகழ்ச்சிகளுக்காக ஞாயிற்றுக்கிழமை வார்சோவில் ஒன்றுகூடுகின்ற நிலையில், அவர்களின் மனதில் இது கடைசி சிந்தனையாகவே இருக்கும் என்பதைக் கூற வேண்டியதே இல்லை. அதற்கு பதிலாக அவர்கள் போரின் தொடக்கத்தில் முதலிடத்தில் இருந்த மாதிரியான இராணுவவாதம் மற்றும் வலதுசாரி தேசியவாதத்தின் கொண்டாட்டத்தை நடத்தி கொண்டிருக்கிறார்கள்.

1939 இல் முதல் குண்டுகள் முழங்கிய எஞீச்ணண்டு நகரில் போலந்தின் எதிர்த்தரப்பினரின் தலைமையில் பாரம்பரியமாக நடத்தப்படும் நினைவுதின நிகழ்வுகளை, வலதுசாரி போலந்து தேசியவாதத்தின் நினைவு ஸ்தலமான வார்சோவின் Pilsudski சதுக்கத்திற்கு இடம் மாற்றுவதற்கு போலந்து ஜனாதிபதி ஆண்ட்ர்செஜ் துதா உத்தரவிட்டுள்ளார். அவரின் சட்டம் மற்றும் நீதிக் கட்சி (PiS) அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீது ஒரு பாரியளவிலான தாக்குதலை நடத்தி உள்ளது மற்றும் யூத இன ஒழிப்பின் போது யூதர்களுக்கு எதிரான குற்றங்களில் போலாந்து உடந்தையாய் இருந்ததாக குறிப்பிட்டாலே கூட அது குற்றமாக ஆக்கும் அளவுக்குச் சென்று, வெளிநாட்டவர் விரோத வெறி மற்றும் யூத-எதிர்ப்புவாத பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது. அது நினைவுதின நிகழ்வுகளை போலாந்து இராணுவ 'கதாநாயகர்களுக்கு' துதிபாடும் நிகழ்வுகளாக மாற்ற உத்தேசத்துள்ளது.

ட்ரம்பின் பாசிசவாத தேசியவாதம், புலம்பெயர்ந்தோர் விரோத பேரினவாதம் மற்றும் சர்வாதிகார அதிகாரங்களை ஏற்பதற்கான முயற்சிகளும் துதா மற்றும் கடிகு இன் அரசியலைப் பிரதிபலிக்கிறது, இவர் அமெரிக்காவை தாக்கவுள்ள டொரைன் சூறாவளி அணுகி வருவதைக் காரணங்காட்டி அந்நிகழ்வுகளுக்காக அவரின் வார்சோ பயணத்தை இரத்து செய்தார். அவருக்குப் பதிலாக துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் அங்கே தோன்றுவார், போலந்தில் அவரை வரவேற்பவர்கள், அந்நாட்டில் நிலை நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கையை 4,500 ஆக மேற்கொண்டு அதிகரிப்பதை அவர் அறிவிப்பார் என்று எதிர்



கோப்புப்படம்

பார்க்கின்றனர். போலந்து அரசு அமெரிக்க சிப்பாய்களைத் தங்க வைப்பதற்கான ஓர் இராணுவத் தளத்திற்கு 2 பில்லியன் டாலர் செலவிட உடன்பட்டுள்ளது, அவர்கள் ஆரம்பத்தில் இந்த இடத்திற்கு 'ட்ரம்ப் கோட்டை'என்று பெயரிட இருப்பதாக முன்மொழிந்திருந்தார்கள்.

அமெரிக்காவைப் பிரதிநிதித்துவம் செய்ய பென்ஸ் அங்கே இருப்பார், மற்றும் ஜேர்மனியைப் பிரதிநிதித்துவம் செய்ய சான்சிலர் அங்கேலா மேர்க்கெல் வார்சோவுக்கு செல்கிறார், அதேவேளை ரஷ்ய அரசு மற்றும் அதன் ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுக்கு எந்த அழைப்பிதழும் அனுப்பப்படவில்லை. நாஜி ஜேர்மனியை தோற்கடித்ததிலும் மற்றும் போலந்திலிருந்து ஹிட்லர் இராணுவத்தை வெளியே விரட்டியதிலும் சோவியத் ஒன்றியம் அளப்பரிய விலை கொடுத்துள்ள நிலையில், அந்த நினைவுதின நிகழ்வுகளில் இருந்து அதனை தவிர்த்தை ரஷ்யா கடுமையாக எதிர்த்தது.

ஆகஸ்ட் 23, 1939 இல் கையெழுத்தான ஸ்ராலின்-ஹிட்லரின் இழிவான தாக்குதல் தவிர்ப்பு உடன்படிக்கை போலந்து மீது நாஜி ஜேர்மனியின் படையெடுப்புக்கு அனுகூலமாக இருந்தது என்பது ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும். அனைத்திற்கும் மேலாக, செப்டம்பர் 17, 1939 இல் சோவியத் ஆட்சி கிழக்கிலிருந்து போலந்து மீது படையெடுத்தது. இவை ஸ்ராலினிச ஆட்சியின் பிற்போக்குத்தனமான அரசியல் துரோக குணாம்சத்தின் நடவடிக்கைகளாக இருந்தன, அது போர் தொடங்குவதற்கு முன்னரே சோசலிசம் மற்றும் புரட்சிகர தொழிலாள வர்க்க சர்வதேசவாதத்தின் ஒவ்வொரு அடிப்படை கோட்பாட்டையும் காட்டிக் கொடுத்திருந்தது.

ஆனால் ஜூன் 22, 1941 இல் சோவியத் ஒன்றியம் மீது நாஜி படையெடுப்பு நடத்தப்பட்டு அதற்குப் பிந்தைய நான்காண்டுகளின் போது சுமார் 27 மில்லியன் சோவியத் மக்கள் அவர்களின் வாழ்வை இழந்தனர் என்பதும் உண்மையே. நிர்மூலமாக்கும் போராக நாஜி ஜேர்மனி நனவுப்பூர்வமாக எதை திட்டமிட்டதோ அந்த கொடுமைகளால் சோவியத் ஒன்றியம் துளைத்தெடுக்கப்பட்டது. இராணுவ உயிரிழப்புகளைப் பொறுத்த வரையில் மட்டுமே கூட, ஒவ்வொரு அமெரிக்க மரணங்களுக்கும் 80 சோவியத் சிப்பாய்கள் உயிரிழந்தனர். அனைத்திற்கும் மேலாக, சோவியத் ஒன்றியத்தின் தேசியமயப்படுத்தப்பட்ட தொழில்துறைகளின் போர் உற்பத்தியால் ஆதரவளிக்கப்பட்டிருந்த சோவியத் செம்படை, ஸ்ராலின்கிராட் மற்றும் குர்ஸ்க் போர்களில் ஹிட்லர் இராணுவத்தின் முதுகெலும்பை உடைத்து, ஹிட்லர் ஆயுதப்படைகளில் முக்கால் வாசி பேருக்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்குப் பொறுப்பாக இருந்தது.

எந்தவொரு நிகழ்வாக இருக்கட்டும், ரஷ்யாவை அழைப்பதில்லை என்ற முடிவு ஸ்ராலினிச குற்றங்களுக்கு விடையிறுப்பாக செய்யப்படவில்லை. ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் கௌரவிக்கப்பட்ட விருந்தினர்களாக வார்சோவில் இருப்பார்கள். போலந்து ஜனாதிபதி துதாவின் செய்தி தொடர்பாளர் குறிப்பிட்டார்: அழைப்புகள் வரலாற்று உள்ளடக்கத்தில் அல்ல, சமகால சூழலுக்கேற்ப அனுப்பப்பட்டன, என்றார்.

இந்த 'சமகால சூழல்' என்ற இதில் ஒவ்வொரு பிரதான சக்தியும் போருக்குத் தயாரிப்பு செய்து வருகின்றன, ரஷ்யா மீதான ஆக்ரோஷமான அமெரிக்க-நேட்டோ சுற்றிவளைப்பில் போலந்து தன்னை முன்னிலையில் முன்னிறுத்தி உள்ளது.

வாஷிங்டன் 700 பில்லியன் டாலர் இராணுவ வரவு-செலவு திட்டக்கணக்கை நிறைவேற்றி உள்ள நிலையில், ரஷ்யா மற்றும் சீனா போன்ற 'வல்லரசுகளுக்கு' எதிரான போருக்குத் தயாரிப்பு செய்து வரும் அதன் மூலோபாய கொள்கையை அது அதிகாரபூர்வமாகவே பிரகடனப்படுத்தி உள்ளது. விண்வெளியை மற்றொரு புதிய போர்க்களமாக மாற்றுவதற்காக அர்பணிக்கப்பட்ட விண்வெளி கட்டளையகம் ஒன்றை ட்ரம்ப் சமீபத்தில் தொடங்கி வைத்துள்ளார், அவர் சமீபத்திய மாதங்களில் மூன்றாவது முறையாக, '10 மில்லியன் மக்களை கொல்வதன்' மூலமாக எவ்வாறு ஆப்கானிஸ்தான் போரை அவரால் முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்பதை வெளிப்படுத்தி உள்ளார், இது வெளிப்படையாகவே ஹிட்லர் குற்றங்களுடன் போட்டியிடக்கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்கக்கூடும்.

இரண்டாம் உலகப் போரை, முதலாவது போரை விட எந்தவொரு விதத்திலும், தனியொரு நாட்டின் நடவடிக்கைகளை கொண்டோ அல்லது அதை விட தனியொரு நபரின் கொடிய நடவடிக்கைகளைக் கொண்டோ விவரித்து விட முடியாது. இரண்டு தசாப்தங்களுக்கு சற்று அதிக கால இடைவெளியில் நடந்திருந்த அவ்விரு மோதல்களுக்கான வேர்கள் உலகளாவிய முதலாளித்துவ ஒழுங்கமைப்பின் தீர்க்கவியலாத முரண்பாடுகளில் தங்கியுள்ளன: அதாவது ஒரு புறம் உலக பொருளாதாரத்திற்கும் காலங்கடந்த தேசிய-அரசு அமைப்புமுறைக்கும் இடையிலான முரண்பாடுகள், மறுபுறம் சமூகமயப்பட்ட உற்பத்திக்கும் உற்பத்திக் கருவிகளின் தனிச்சொத்துடைமைக்கும் இடையிலான முரண்பாடுகளில் தங்கியுள்ளன.

எது எவ்வாறு இருப்பினும், இரண்டாம் உலக போர் வெடித்த சூழல்களும் மற்றும் அது எடுத்த வடிவமும் கேள்விக்கிடமின்றி முதல் எடுத்துக்காட்டில் நாஜி ஜேர்மனியின் போர் நோக்கங்களால் தீர்மானிக்கப்பட்டிருந்தன, அது தான் மனித வரலாற்றில் முன்னொருபோதும் நடந்திராத குற்றங்களுக்குப் பொறுப்பாக இருந்தது.

முற்றுமுழுமையான போர் கொள்கைகளில், அதாவது நிர்மூலமாக்கும் போர், மற்றும் 'யூத பிரச்சினை' மீது ஹிட்லரின் 'இறுதி தீர்வு'ஆகியவற்றில், உச்சத்தை எட்ட இருந்த அணுகுமுறைகள் ஏற்கனவே செப்டம்பர் 1939 இல் போலந்து மீதான படையெடுப்பில் வெளிப்பட்டிருந்தன.



கோப்புப்படம்

போலந்து வரலாற்றாளர் ஒருவரின் கருத்துப்படி, செப்டம்பர் நடவடிக்கையின் போது அந்த படையெடுப்பு போலந்து நகரங்கள் மீது பரவலான குண்டுவீச்சு தாக்குதல்களைக் கண்டது, அங்கே ஏறக்குறைய நாளொன்று 15 பேர் கொல்லப்பட்டனர், இது சுமார் 6 மில்லியன் ஐரோப்பிய யூதர்களின் பாரிய நிர்மூலமாக்கலுக்கு முன்னறிகுறியாக இருந்தது. போலந்துக்கு உள்ளேயே கூட, சுமார் 3 மில்லியன் போலந்து யூதர்களும், அவர்களுடன் சேர்ந்து ஏறக்குறைய மற்றொரு 3 மில்லியன் யூதர்கள் அல்லாத போலந்தினர்களும், மரணத்திற்கு உள்ளாக்கப்பட்டனர்.

நாஜிக்கள் நடத்திய குற்றங்களின் ஆழங்காணவியலாத அளவு ஒருபுறம் இருக்க, உண்மை என்னவென்றால் இன்று இத்தகைய குற்றங்களை நியாயப்படுத்தவும் சட்டபூர்வமாக ஆக்கவும் முயலும் கணிசமான அரசியல் சக்திகள் ஜேர்மனியில் உள்ளன என்பது சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு மரணகதியிலான எச்சரிக்கையை நிலைநிறுத்துகிறது.

இனவாத Alternative für Deutschland (AfD) இன் பிரதான தலைவர் சமீபத்தில் நாஜி அட்டூழியங்களைக் கொண்டு ஆயிரக் கணக்கான ஆண்டுகள் 'பெருமைமிகு' ஜேர்மன் வரலாற்றிலிருந்து கவனத்தைத் திசை திருப்பக் கூடாது அது முக்கியத்துவமற்ற 'பறவை எச்சம்' என்று ஒதுக்கித் தள்ளியதுடன், அக்கட்சி ஜேர்மனி நாடாளுமன்றத்தின் கீழ் அவையில் (Bundestag) பிரதான எதிர்கட்சியாக மேலெழுந்துள்ளது. வலதுசாரி பயங்கரவாதிகள் ஜேர்மனியில் விதிவிலக்கீட்டுரிமையுடன் செயல்படுகின்றனர் என்பதோடு, அந்நாட்டின் உளவுத்துறை முகமைகளின் பாதுகாப்பையும் அனுபவித்து வருகின்றனர்.

ஹிட்லருக்கே புத்துயிரூட்டும் ஒரு நிகழ்முறை நடந்து வருகிறது. அந்நாட்டின் மிகவும் பிரபல மற்றும் அரசியல்ரீதியில் செல்வாக்கு மிக்க கல்வியாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஜோர்ஜ் பார்பெரோவ்ஸ்கி நாஜி மிருகத்தனத்தைச் சாதாரணமாக ஆக்குவதற்காக வெளிப்படையாக பேசுகிறார். பெப்ரவரி 2014 இல் அவர் Der Spiegel இல் வெளியான ஒரு நேர்காணலில் குறிப்பிடுகையில், ஹிட்லர் ஒரு மனநோயாளி கிடையாது. அவர் வக்கிரமானவரும் இல்லை. அவர் மேசையில் யூதர்களை நிர்மூலமாக்குவது குறித்து செவிமடுக்கவும் கூட விரும்பவில்லை, என்றார்.

இரண்டாம் உலக போர் போக்கின் போது ஹிட்லரிய பாசிசவாதத்திற்கு அமெரிக்கா மற்றும் சர்வதேச அளவில் உழைக்கும் மக்களிடையே ஆழ்ந்த குரோதம் நிலவியதால், அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் சொந்த ஏகாதிபத்திய நோக்கங்களை ஒரு ஜனநாயக முறையீட்டுக்குப் பின்னால் மூடிமறைக்க முடிந்தது. இன்றோ, அண்மித்து மூன்று தசாப்த கால இடைவிடாத ஆக்கிரமிப்பு போர்களுக்குப் பின்னர், அது அதுபோன்ற எந்தவொரு முறையீட்டையும் நம்பத்தகுந்த முறையில் செய்ய முடியவில்லை மற்றும் வெளிநாட்டு இராணுவ தலையீடுகளுக்கு உள்நாட்டிலேயே அதிகரித்தளவில் மக்களின் எதிர்ப்பை எதிர் கொண்டுள்ளது.

ஒரு புதிய உலக போரைத் தடுப்பது மீதான தீர்க்கமான கேள்வி, சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமை பற்றிய கேள்வியாகும்.

இரண்டாம் உலக போர் எவ்வாறு தொடங்கியது என்பதை, சர்வதேச அளவில், குறிப்பாக ஜேர்மனியில், தொழிலாள வர்க்கத்தினுள் செல்வாக்கு செலுத்திய கட்சிகள் வகித்த பாத்திரங்களை ஒதுக்கிவிட்டு புரிந்து கொள்வது சாத்தியமே இல்லை. ஹிட்லர் மற்றும் நாஜிக்களின் வளர்ச்சி என்பது, இறுதி பகுப்பாய்வில், ஜேர்மன் சமூக ஜனநாயகம் (SPD) மற்றும் ஸ்ராலினிச கம்யூனிஸ்ட் கட்சி இரண்டும் நடத்திய காட்டிக்கொடுப்புகளின் விளைவாகும், இவை மீண்டும் மீண்டும் ஜேர்மன் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர வேட்கைகளை முடக்குவதற்காக செயல்பட்டன.

ஒரு துப்பாக்கி குண்டு கூட சுடாமல் ஜேர்மனியில் ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்தது மற்றும் ஸ்ராலின் தலைமையிலான மூன்றாம் அகிலம் அந்த வரலாற்று தோல்வி குறித்து விவாதிக்கவும் கூட மறுத்தமையும் தான், ஸ்ராலினிசத்திற்கு எதிராக தசாப்தங்களாக சமரசமின்றி போராடி வந்த லியோன் ட்ரொட்ஸ்கியை, சோசலிச புரட்சியின் நோக்கங்களை விட்டு மூன்றாம் அகிலம் மரணித்து விட்டது, ஒரு புதிய நான்காம் அகிலம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் மற்றும் சோசலிச புரட்சியின் உலக கட்சியாக அது கட்டமைக்கப்பட வேண்டும் என்று அறிவிக்க இட்டுச் சென்றது.

தீர்க்கவியலா பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடி நிலைமைகள், தீவிரமடைந்து வரும் வர்த்தகப் போர் மற்றும் உலகளாவிய இராணுவவாதம் ஆகியவை, மீண்டுமொருமுறை, அனைவரும் ஒருவருக்கு எதிராக ஒருவர் கட்டுப்பாடின்றி வெறியுடன் சண்டையாக வெடிக்க அச்சுறுத்துகிறது. அதே நேரத்தில், முதலாளித்துவ நெருக்கடி உலகந்தழுவிய வர்க்க போராட்டத்திற்குப் புத்துயிரைத் தூண்டிவிட்டு வருகிறது, முடிவில்லாத சமூக சமத்துவமின்மையின் வளர்ச்சியோடு சேர்ந்து வாழ்க்கை தரங்கள் மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள் ஒரு நாடு மாற்றி ஒரு நாட்டில் திருப்பி தாக்கி வருகின்றனர்.

1914 மற்றும் 1939 ஐ போலவே, ஓர் உலகளாவிய ஏகாதிபத்திய மோதலின் அச்சுறுத்தல், மனிதகுலத்தின் முன் சோசலிசமா அல்லது காட்டுமிராண்டித்தனமா என்ற கேள்வியை முன்வைத்துள்ளது. ஒரு மூன்றாம் உலக போர் வெடிப்பதற்கான சாத்தியக்கூறு 1945 இக்குப் பின்னர் எந்தவொரு காலத்தையும் விட இன்று மிகப் பெரியளவில் நிலவுகிறது. பெருந்திரளான மக்களிடையே ஏகாதிபத்திய சக்திகளைப் போருக்குள் உந்துகின்ற புவிசார் அரசியல் மோதல்களின் அளவு மற்றும் ஆழத்தைப் பற்றிய விழிப்புணர்வின்மையே தற்போதைய சூழ்நிலையின் மிகப்பெரிய ஆபத்துக்களில் ஒன்றாக உள்ளது. இரண்டாம் உலகப் போர் வெடிப்பதற்கு முந்தைய ஆண்டுகளைப் போலவே, அவை - ட்ரொட்ஸ்கியின் வார்த்தைகளைப் பயன்படுத்தினால் கண்களை மூடிக்கொண்டு ஒரு பேரழிவை நோக்கி பாய்ந்தோடி கொண்டிருக்கின்றன. சர்வதேச மோதல்கள் ஒவ்வொரு நாடுகளுக்குள்ளேயே அதிகரித்து வரும் சமூக கொந்தளிப்புடன் குறுக்கிட்டு வருகையில், நெருக்கடியில் சிக்கிய முதலாளித்துவ ஆட்சியோ அதிகரித்தளவில் போரை, தற்போதைய அரசியல், பொருளாதார மற்றும் சமூக முட்டுச்சந்திலிருந்து வெளி வருவதற்கான ஒரு வழியாக பார்க்கிறது.

1930 களில் போலவே, ஏகாதிபத்தியத்தின் தலைவர்களுக்குத் தார்மீக மற்றும் சமாதான முறையீடுகள் செய்வதன் மூலமாக போருக்கான பாதையைத் தடுக்க முடியாது. போருக்கான எதிர்ப்புக்கு, முதலாளித்துவ அமைப்புமுறைக்கு எதிராக ஒரு சர்வதேச சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தை அரசியல்ரீதியில் அணிதிரட்டுவது அவசியமாகிறது. இது தான் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு முன்னெடுக்கும் முன்னோக்காகும்.

நன்றி: உலக சோசலிச இணையத்தளம்




# 7ம் கிராமம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம்



**அன்புவெளி நிருபர்**

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 7ம் கிராமம் அன்புவெளி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன ஜீர்னோர்த்தாரண பஞ்சகுண்டபட்ஷ அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் கடந்த செப்டம்பர் 11ம் திகதி புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 25ம் திகதி சங்காபிஷேகத்துடன் நிறைவுறவுள்ளது.

இக்கும்பாபிஷேக கிரியைகள் யாவும் கானவினோதர் கிரியாகாலமணி தற்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ திருச்சிற்றம்பலம் குருக்கள் தேவகுமார் குருக்கள் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்றது. விஷேடமாக 12ம் திகதி வியாழக்கிழமை பக்த அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் 13ம் திகதி வெள்ளிக்கிழமை மஹா கும்பாபிஷேகமும் நடைபெற்று தொடர்ந்து மண்டலாபிஷேக பூசைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 25ம் திகதி புதன்கிழமை காலை வேளையில் கம்பிக்காலை ஸ்ரீ நாக லிங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து பக்தர்களின் பாற்குட பவனி ஆரம்பமாகி ஆலயத்திற்கு வருகை தந்து சங்காபிஷேகத்துடன் நிகழ்வுகள் நிறைவுறவுள்ளன.

அதி கஷ்டப் பிரதேசமான இக்கிராமத்திலுள்ள ஒரேயொரு ஆலயம் இதுவென்பதுடன் மிகவும் பழமை வாய்ந்த வேப்பம் மரநிழலில் வணங்கப்பட்ட விநாயகர் படிப்படியாக மடாலயமாகவும் ஆலயமாகவும் மாற்றம் பெற்று கடந்த 1996 ம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன் 2009 ம் ஆண்டு 12 வருடங்கள் கடந்த நிலையில் புனர்நிர்மாணத்துக்காக உடைக்கப்பட்ட போதிலும் பொருளாதார வளமின்மையால் 10 ஆண்டுகள் கடக்கின்ற நிலையிலேயே ஆலய நிர்வாக சபையினர் இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் கடும் பிரயத்தனத்திற்கு மத்தியிலேயே இவ்வருடம் 23 ஆண்டுகளுக்கு பின்னர் கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்ட தனியார் பஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டது

மட்டு நகரில் அமைக்கப்பட்ட தனியார்பஸ் நிலையம் 65மில்லியன் ரூபாயில் நிர்மாணிக்கப்பட்டு மாநகரமற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவினால் திறந்துவைக்கப்பட்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பெயரில் இந்த தனியார் பஸ்தரிப்புநிலையம் சகல வசதிகளுடன் கூடியதாக இரண்டு மாடிகளைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



இது நகரங்களை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழஇவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் பாட்டாலிசம்பிக்கரணவக்க தன்துறையில் குறிப்பிடும் போது மட்டக்களப்பு விமான நிலையத்தை ஒரு கேந்திர நிலையமாக மாற்று வர்தகங்கரமாக மாற்றினால் வேறு நாடுகளுக்கு நாம் சென்று உழைக்க வேண்டியதில்லை. அதுபோல் மட்டக்களப்பிற்கும் - திருகோணமலைக்கும் இடையில் பாரிய வீதிகளை அமைத்து மக்களின் போக்குவரத்தினை இலகுபடுத்தவும் அத்தோடு அம்பாறை - மட்டக்களப்புக்கு வர்த்தக கேந்திர நிலையங்களை நிறுவி வர்தகத்தில் மேன்மை அடையசெய்யவேண்டும். அத்தோடு



இனரூபவ்மத பேதங்களுக்கு அப்பால்

செய்யப்படுகின்றது. எனது அமைச்சு யாழ்பாணத்தில் மாநகரசபைக்கு கட்டடம் வழங்கியது போன்று மட்டகளப்புக்கும் அவசியம். உள்ளது நிதிகிடைக்கும் போது அதனையும் செய்து தருவதாக கூறினார்.

பிரதமமந்திரி ரணில்விக்கிரமசிங்கவினால் திறந்துவைக்கப்படும் என எதிர்பாக்கப்பட்ட நிலையில் அவரின் தவிர்க்க முடியாத காரணத்தினால் அமைச்சரும் அதிகாரிகளும்தான் திறந்துவைத்தமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் தனியார் பேரூந்து நிலையம் மாவட்ட பாவனைக்கு கையலிக்கும் நிகழ்வினை மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் ஆரமபிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிமீசைன் மாநகர முதல்வர் தி.சரவணபவான் மாநகரசபை உறுப்பினர்கள் நகர அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் திணைக்கள தலைவர்கள் பிரதேச செயலாளர்கள் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மண்டூரில் வைக்கோல் எரிப்பதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்வு





**அன்புவெளி நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மண்டூர் கமநல சேவைகள் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை வைக்கோல் எரிப்பதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்வு நடைபெற்றது.

மண்டூர் விவசாய போதனாசிரியர் பி.பிறமேந்ரா தலைமையில் தொழிநுட்ப உதவியாளர் கே.கிலசனின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வி.பேரின்பராஜா தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் ரீ.மேகராசா மண்டூர் கமநல சேவைகள் நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயகாந்தன் கணேசபுரம் பிரிவுக்கான கிராம சேவகர் திருமதி. சராந்தினி ஆகியோர் அதிதிகளாகவும் பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள் விவசாய போதனாசிரியர்கள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் விவசாய அமைப்புக்களின் தலைவர் உட்பட உறுப்பினர்கள் மற்றும் பெருமளவிலான விவசாயிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அறுவடையின் பின்னர் வைக்கோல்கள் முற்றுமுழுதாக எரிக்கப்பட்டு வருவதை தடுக்கும் நோக்கில் வைக்கோல் எரிப்பதனால் ஏற்படக்கூ டிய பாதிப்புக்கள் பற்றிய தொழிநுட்ப விளக்கங்கள் விவசாய போதனாசிரியர் பி.பிறமேந்ரா அவர்களால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. வைக்கோல் எரியூட்டப்படுவதால் வளிமண்டல வளி மாசளைதல் மண்வாழ் நன்மை பயக்கும் நுண்ணங்கிகள் விவசாயிகளின் தோழன் என சொல்லப்படுகின்ற மண்புழு போன்ற உயிரிகள் இயற்கை எதிரிகளான பூச்சியினங்கள் முற்றாக அழிவடைதல் மண்ணிலுள்ள இயற்கையான போசணை மூலகங்கள் இழக்கப்படுதலால் போசணைக் குறைபாடு மற்றும் பூச்சித் தாக்கங்கள் அதிகரித்தல் அத்தோடு ஆடு மாடு போன்ற கால்நடைகளுக்கான மேய்ச்சல் புற்கள் அழிவடைதல் போன்ற பல மோசமான விளைவுகள் ஏற்படுவதாக தெளிவுபடுத்தப்பட்டது.

கமநல சேவைகள் உதவி ஆணையாளர் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் மண்டூர் கமநல சேவைகள் நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரும் தங்களது உரைகளில் இயற்கையை எதிர்க்கும் மிக மோசமான நடவடிக்கையை செய்து நம்மை நாமே அழித்துக் கொண்டிருக்கின்றோம் இனிவரும் காலங்களில் வைக்கோல்களை எரிக்காது வினைத்திறனாக பயன்படுத்த வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் உரமானியம் உட்பட திணைக்களத்தின் சகல சேவைகளையும் பெறமுடியாதவாறு சட்ட நடவடிக்கை கூட எடுக்கப்படலாமெனவும் தெரிவித்ததோடு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் இனி எந்த வயல்நிலங்களிலும் வைக்கோல் எரியூட்டப்படக்கூடாதெனவும் வலியுறுத்தினர்.

# தொழிநுட்ப ஆய்வுகூடம் திறந்து வைப்பு



**அன்புவெளி நிருபர்**

நாவிதன்வெளியிலுள்ள 1ஏ.பீ பாடசாலையான கமு/சது நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தின் ஆய்வுகூட கட்டிடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ந.பிரபாகர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் அவர்களும் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை வலயக் கல்வி பணிப்பாளர் சஹர்துல் நஜீம் நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் த.கலையரசன் உறுப்பினர் திரு.யோகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவு மற்றும் கணிதப்பிரிவில் மாணவர்கள் கல்வி பயில்கின்ற போதிலும் இதுவரை காலமும் முறையான ஆய்வுகூட வசதிகளில்லாமலேயே தங்களது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து வந்தனர். இவ் ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டமையானது விஞ்ஞான மற்றும் கணிதப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் தமது செயற்பாட்டு அறிவினை மேம்படுத்தி திறமையான பெறுபேறுகளைப் பெற உதவியாக இருக்குமென்பது சுட்டிக்காட்டத்தக்கது.

# கல்லூரி தின நிகழ்வு

**துறைநீலாவணை நிருபர்**



கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் 136 ஆம் ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு நூல் வெளியீடு, கௌரவிப்பு என்பன அண்மையில் (11) இடம்பெற்றது.

கல்லூரி முதல்வர் வி. பிரபாகரன் தலைமையிலான இந்நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் எஸ். நவனீதன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபர் வி.ஜெகதீஸன், வடக்கு கிழக்கு மாகாண மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் வண எஸ்.எஸ். றெறன்ஸ், கல்முனை மெதடிஸ் தேவாலய எஸ்.டி,வினோத் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கல்லூரி தின விழாவில் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்கள், மாகாணமட்ட போட்டிகளில் சாதித்த மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டதுடன், நூல் வெளியீடும் விசேட தேவையுடைய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இதன்போது இடம்பெற்றது.

# கிழக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான மரக்கன்றுகளை நாட்ட திட்டம்

**வாழையூர் ந.குகதர்சன்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் பியூச்சர் மைண்ட் அமைப்பின் ஏற்பாட்டில் துளிர் மர நடுகை செயற்றிட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



கடந்த மூன்று வருடமாக தொடர்ச்சியாக மர நடுகையை நடாத்தி சுற்றுச் சூழலில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்தி இயற்கையின் சமநிலையைப் பேணுவதில் அக்கறையுடன் செயற்படும் பியூச்சர் மைண்ட் அமைப்பினரால் துளிர் எனும் மர நடுகை செயற்றிட்டம் பல இடங்களில் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் 2019 ஆண்டிற்கான மர நடுகை செயற்றிட்டம் பல இடங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டும், 2016ஆம் ஆண்டளவில் வைக்கப்பட்ட மரக்கன்றை பராமரித்தவர்களுக்கான கௌரவம் எனும் சான்றிதழும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

பியூச்சர் மைண்ட் அமைப்பின் இயக்குனர் ம.ரஞ்ஜன் தமது அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்-

இச்செயற்றிட்டமானது கடந்த வருடங்களை விட சற்று சிறப்பாக செய்ய வேண்டும் எனும் நோக்கிலும் இச் செயற்றிட்டம் எதிர்கால சந்ததியினருக்கு ஓர் நன்மையைத் தரக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகவும் பல அனுசரனைகளான ஒட்டாறா பவுண்டேசன் மற்றும், துரு அமைப்புடனும் இணைந்து பல்லாயிரக் கணக்கான மர நடுகை செயற்றிட்டத்தினை முன்னெடுக்கின்றோம்.

இம்மாத இறுதியில் இச் செயற்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வாழைச்சேனையில் இரு இடங்களில் இயற்கையை நேசிக்கும் ஆர்வளர்களான துரு (வுடரசர) அமைப்புடன் இணைந்தும் மற்றும் கோறளைப்பற்று பிரதேச சபையுடன் இணைந்தும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை ஆகிய பிரதேசங்களில் ஒரே நாளில் பல்லாயிரக்கணக்கான மரக்கன்றுகளை நாட்ட திட்டமிட்டுள்ளோம் என்றும், இச் செயற்றிட்டமானது இவ்வாண்டின் இறுதிக்குள் நடைபெறும்.

அந்த வகையில் இம் மரக்கன்றுகளை தொடர்ச்சியாக பராமரித்து வளர்ப்பவர்களுக்கு கௌரவம் எனும் சான்றிதழ் ஒன்றையும் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் காடழிப்பு இடம்பெற்று வருவதனால் நாட்டில் பல்வேறு காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டு வருவதால் வறட்சியின் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றது.

எனவே எமது கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகள், திணைக்களங்கள், பொது இடங்கள், ஆலயங்களில் என்பவற்றில் மக்கள் சுவாசத்திற்கு ஏற்ற மரங்களை நடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன், இப்பணி தொடர்ந்து இடம்பெறும் என்றார்.






**தென்னை பயிர் செய்கைச் சபையின் தலைவர் பாலித்தபெல்பொல தலைமையில்சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு கொத்மலை மஹாவெலி மஹாசேய ஒன்றிணைவு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பெருந்தோட்ட அமைச்சர் நவீன் திசநாயக்கா புதிய தென்னை அபிவிருத்தி அலுவலர் நியமனக் கடிதங்களை 27 பேருக்கு கையளிப்பதையும் (10பேர் வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் மற்றும் முஸ்லிங்கள் நியமனம் பெற வருகை தந்தவர்களையம்களையும் படங்களில் காணலாம்.**

**படம்: பெரியகல்லாறு நிருபர்**

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# இரண்டாம் மொழி ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்திட்டத்தில் 1200 பேருக்கான நியமனம் வழங்கி வைப்பு

**மண்டூர் நிருபர்**

நாடளாவியரீதியில் 1,200 இளைஞர்,யுவதிகளுக்கு இரண்டாம் மொழி ஆசிரியர் பயிற்றுனர் நியமனம் (09) வழங்கி வைக்கப்பட்டன .

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர்கள் வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான திலகராஜ், அரவிந்த குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவ் இரண்டாம் மொழி பயிற்றுனர்கள் மூன்று மாத பயிற்சியின் பின் பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோருக்கு இரண்டாம் மொழிக்கல்வியை பயிற்றுவிப்பார்கள்.

இதற்கான வேலைதிட்டத்தை முன்னெடுக்கும்படியும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும்படிம் தனது அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துவிட்டு, அமைச்சரவையின் இறுதி அனுமதியை பெற்றதாக தேசிய சகவாழ்வு மற்றும் அரகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெருவித்தார்.



இது தொடர்பான தனது அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி வரும் வரை தான் காத்திருக்கவில்லை. தன் மீது நம்பிக்கை கொண்டு அனுமதியை பெற்றே தீருவேன் என்று தான் செயற்பட்டேன் இன்று வெற்றி பெற்றேன் என்றார்.

மேலும் தனது உரையில் நான், இரண்டாம் மொழியை போதிப்பதன் மூலம் எதிர்கால இலங்கை இருமொழி சமுதாயமாக மாறும். அதன் மூலம் இந் நாட்டில் இனங்கள் மத்தியில் புரிந்துணர்வு ஏற்படும். அதன்மூலம் தேசிய ஐக்கியம் ஏற்படும். அதிகார பகிர்வு முயற்சிகள் ஒருபுறம் நடக்க, தன் வழியில் சென்று மொழி மூலம் தேசிய புரிந்துணர்வு ஐக்கியத்தை உருவாக்குவேன் என்றார்.

பிரதமர் தனது உரையில் , அமைச்சர் மனோ கணேசன்தான், தேசிய ஒருமைப்பாட்டு துறைக்கு பொருத்தமானவர் என்று நான் முடிவு செய்து, 2015ம் ஆண்டு ஜனாதிபதிக்கு அறிவித்து அவரை இந்த துறைக்கான அமைச்சராக்கினேன். அன்று நான் எண்ணியது மிகச்சரி என் இன்று உணர்கிறேன். அந்த உண்மை இன்று என் கண் முன் நிஜமாக இந்த மண்டபத்தில் எழுந்து நிற்கிறது. அவரது பாணியில் அவர் சரியென நம்பும் கொள்கையை முன்னெடுக்க அவர் பாடுபடுகிறார். அதை செய்ய பலவேளைகளில் என்னுடனும் கூட சண்டை மனோ இட்டுள்ளார் என்பது அவரது சிறப்பு. அதையும் இங்கே நான் சொல்லி வைக்க விரும்புகிறேன், என்றார்.

தன் உரையில் அமைச்சர் வஜிர அபேவர்தன, என் சகோதர அமைச்சர் மனோ, அமைச்சரவையில் சண்டை இட்டு தன் வேலைகளை செய்து கொள்ளும் ஒரு அமைச்சர் என்றார்.




# பக்திமயமாய் தொடர்ந்த மண்டூர் முருகன் ஆலய உற்சவம்

**அன்புவெளி நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்டூர் கிராமத்தில் அமைந்துள்ள தில்லை மண்டூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இம்முறை வழமையை விட பக்த அடியார்களின் பாதயாத்திரைகள் அதிகளவில் காணப்பட்டது. ஆரம்பமான தினத்திலிருந்தே தினமும் ஆயிரக் கணக்கான பக்தர்கள் மட்டு அம்பாறை மாவட்டத்தினுடைய பல கிராமங்களிலிருந்தும் பாதயாத்திரையாக முருகனை தரிசிக்க வந்தனர்.

பல ஆலயங்களிலிருந்தும் பறவைக் காவடி முட்காவடி பாற்காவடி என நடைபவனியாக பக்திப்பரவசத்தோடு அடியார்கள் அணிதிரண்டமை குறிப்பிடத்தக்கது. தினமும் அதிகாலை 4 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இரவு 8 மணிக்கும் பூசை ஆராதனைகள் இடப்பெற்றதோடு இரவூ நேர பூசையில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக ஒரு சப்பரத்திலும் விநாயகர் இன்னொரு சப்பபரத்திலும் எழுந்தருளி உள்வீதி வெளிவீதி வலம் வந்து அடியார்க்கு அருள்பாலித்ததோடு இரவு நேரப் பூசைகளில் பல்லாயிரக் கணக்கான முருக பக்தர்கள் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்வாலயத்திலிருந்து செப்டம்பர் 11ம் திகதி அடியார்கள் பாதயாத்திரையாக வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலத்திற்கு நடைபவனியாக சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு தற்கொலை குண்டு தாரியின் உடற்பாகங்கள் 26 ம் திகதிக்கு முன்னர் புதைக்குமாறு நீதவான் கட்டளை

**மாமாங்கம் நிருபர்**

**ஞானச் செல்வன்**

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ் தற்கொலை குண்டுதாரியான முகமட் ஆசாத்தின் தலை மற்றும் உடற்பாகங்களை உடனடியாக பிரச்சனைகள் எதுவும் இன்றி எதிர்வரும் 26ம் திகதிக்கு முன்னர் புதைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்க அதிபர் ஊடக மேற்கொள்ளுமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வான் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு வியாழக்கிழமை (12) கட்டளையிட்டுள்ளார்.

கடந்த ஏப்பிரல் 21 உயிர்த ஞாயிறு தினத்தன்று மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் தற்கொலை குண்டு தாக்குதலை மேற் கொண்ட காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய முகமட் ஆசாத் என்பவரின் தலை மற்றும் உடற்பாகங்களை அரச செலவில் புதைக்குமாறு அரசாங்க அதிபருக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் இதனை மட்டு புதூர் ஆலையடி மயானத்தில் புதைக்க முற்பட்ட போது அதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் அவ்வாறே கள்ளிங்காடு மற்றும் காத்தான் குடி போன்ற பிரதேசங்களில் புதைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் ஊள்ளுராட்சி மன்றங்களில் இததை புதைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

இவ்வாறான நிலை கடந்த மாதம் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் இரவேடு இரவாக இந்த உடற்பாகங்கள் புதைக்கப்பட்ட நிலையில் இதற்கு பொதுமக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் உட்பட பல அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து கல்லடி பாலத்தில் வீதியை மறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதி மறியல் போராட்டத்தால் வீதிபோக்குவரத்து செயலிழந் ததையடுத்து பொலிசார் ஆர்பாட்டகாரர் மீது கண்ணீர் புகைக்கண்டு தடியடி பிரயோகம் செய்து ஆர்பாட்ட காரர்களை கலைத்ததுடன் அமைதிக்கு பங்கம் விளைவித்;த குற்றச்;சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் உட்பட 5 பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் பொலிசார் வழக்கு தொடர்ந்தனர்

பொலிசார் இந்த உடற்பாகங்கள் இந்து மயானத்தில் புதைக்கப்பட்டதால் மாவட்டத்தில் அசாதாரண நிலை தோன்றியுள்ளதாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுர்த்தனர் இதனையடுத்து கடந்த மாதம் இந்து மயானத்தில் புதைக்கப்பட்டிருந்த குறித்த உடற்பாகங்களை நீதவான் முன்னிலையில் தோண்டி எடுத்து மீண்டும் மட்டு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவரின் வழக்கு விசாரணை வியாழக்கிழமை மட்டு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் எடுக்கப்பட்ட போது நீதவான் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கம் உடற்பாகங்களை அரசாங்க அதிபர் ஊடாக பிரச்சனைகள் இன்றி எதிர்வரும் 26 ம் திகதிக்கு முன்னர் புதைக்குமாறும் அதன் அறிக்கையை 26 த் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்பு பிரிவினருக்கு கட்டளையிட்டுள்ளார்.

# நூல் வெளியீடு

**துறைநீலாவணை நிருபர்**

தமிழா ஊடக வலயமைப்பின் ஏற்பாட்டில் நூலாசிரியர் எம். ஐ. அகமட் லெவ்வையினால் எழுதப்பட்ட தமிழ் மொழியும் இலக்கியமும் செயல்நூல் வெளியீடு, சம்மாந்துறை அல்மர்ஜான் தேசிய பாடசாலையின் எம்.எஸ்.காரியப்பர் மண்டபத்தில் அண்மையில் (07) இடம்பெற்றது.

தமிழா ஊடக வலயமைப்பின் பணிப்பாளர் எஸ்.முகம்மது ஜெலீஸ் தலைமையிலான இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் பிரதம அதிதியாகவும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம், பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, நீர்ப்பாசனப் பொறியியலாளர் எம்.எஸ்.எம் நவாஸ், கோட்டக் கல்வியதிகாரி எம்.ஏ.சபூர்த்தம்பி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

நூலின் முதற்பிரதியினை நூலாசிரியரிடமிருந்து பிரதம அதிதி பெற்றுக்கொண்டதுடன் சம்மாந்துறை கல்வி வலயத்தின் ஆதரவு செயற்திட்டமான இந்நூல் வெளியீட்டில் கல்வி வலயத்திற்குட்பட்ட 1500 க்கு மேற்பட்ட க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் இவ் இலவச பயற்சி நூல்களை, வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகாவித்தியாலய அதிபர்

ஏ.சீ.ஏ. மொஹமட் இஸ்மாயில் ஆகியோர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

# தமிழ் பேசும் ஊடகர்களுக்கான சிங்கள பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம்

**துறைநீலாவணை நிருபர்**

ஸ்மாட் ஒப் ஸ்ரீலங்கா சமூக சேவைகள் அமைப்பின் ஏற்பாட்டில் தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்துசமய விவகார அமைச்சர் மனோ கணேசனின் வழிகாட்டலில், அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் ஊடகவியலாளருக்கு 12 நாட்கள் இடம் பெறவுள்ள இலவச சிங்கள பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம், நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் (08) இடம்பெற்றது.



அமைச்சின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கே.ஆர்.றிஸ்கான் முகம்மட் தலைமையிலான இவ் ஆரம்ப நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீஸன் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட கட்டிடங்கள் திணைக்களத்தின் சிரேஸ்ட பொறியியலாளர் ஷகீர், தமிழா ஊடக வலயமைப்பின் ஸ்தாபகர் த.தர்மேந்திரா ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிரதேச மட்டத்தில் வைத்தியச் சான்றிதழ் பெற உதவுமாறு கோரிக்கை

**துறைநீலாவணை நிருபர்**

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்குட்பட்ட தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகங்கள் மாவட்டம் தழுவிய நிலையிலுள்ளதனால், வாகன சாரதிக்காக வைத்தியச் சான்றிதழ் பெற வருவோர் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டு அம்பாறை நகரங்களில் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் நிறுவப்பட்டுள்ளதனால் பின்தங்கிய எல்லைக்கிராமங்களிலிருந்து அதிக செலவு செய்து,

நகரத்திற்கு வருகை தருவதாகவும் பல்வேறு சிரம அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரத்திற்குரிய வைத்திய சான்றிதழினை பெறுவதற்காக அதிகாலை வேளைகளில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை நகரங்களுக்குச் சென்று பாதையோரங்களில் நிற்கும் நிலையில் உள்ளனர்.

தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவக கிளைகளில் எந்தவித அறிவுறுத்தல் பலகைகளும் இல்லாததனால் போதிய ஆவணங்கள் இன்றி ஒருநாள் பொழுதை விரயமாக்கி, ஏமாற்றமடைந்து வீடு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கைக்குழந்தையுடனான தாய்மார்கள் மற்றும் அரச சேவையில் ஈடுபடுவோர் விடுமுறை பெற்று ஒருநாள் பொழுதை இதற்காக செலவளிப்பதாகவும், பெரும் சிரமங்களுடனான உளத்தாக்கத்திற்குட்படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது

எனவே வாகன சாரதிகளுக்குரிய வைத்திய சான்றிதழ்களின் தேவை கருதி குறித்த நிறுவகப் பணிகளை பிரதேச செயலக மட்டங்களில் நிறுவுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# சமுதாயத்தை உருவாக்க வேண்டுமாயின் அனைவரும் பங்காளிகளாக மாறுவோம்

**சீலாமுனை நிருபர் துஷாரா -**

எழுத்தறிவும் நீண்டு நிலைக்கக் கூடிய சமூகமும் எனும் தொனிப்பொருளில் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக முறைசாரக் கல்விப் பிரிவு பல்வேறு நிகழ்வுகளை நடாத்தியது.

செப்டம்பர் 8 எழுத்தறிவு தினத்தையொட்டி பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு ஊர்வலத்தில் முறைசாராக் கல்விப் பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.நடராசதுரை மற்றும் திட்ட உதவியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்தனர்.

நாளைய உலகின் ராஜாக்கள் இன்றைய மாணவர்களே ஏழை என்பவர் எழுத்தறியாதவர் உடைமை என்பது கல்வியுடைமை பிள்ளைகளை முறையாகப் பாடசாலைக்கு அனுப்புவோம் எனும் வாக்கியங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு இந்த வீதி ஊர்வலமும் விழிப்புணர்வும் முன்னெடுக்கப்பட்டன.

கல்வி அறிவினால் ஒருவரது உடல், உள நலன் மட்டுமன்றி நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் போன்ற ஜனநாயகப் பண்புகள் நிறைந்த கண்ணியமான வாழ்க்கை முறையினை உருவாக்க முடியும். அவ்வாறான ஒரு சமுதாயமே தேசத்திற்கு மகுடமாகும்.

கற்றலுக்கான தடைகளை நீக்கி, அவ்வாறான ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமாயின் 'அனைவருக்கும் கல்வி' என்ற கல்விக் கோட்பாட்டை சிறப்பாக நடைமுறைப்படுத்த அனைவரும் சிறந்த பங்களிப்பினை வழங்கவேண்டும். எனும் விடயங்கள் அடங்கிய எழுத்தறிவு தினக் கையேடுகளும் அன்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# ரண் மாவத் நிகழ்ச்சித் திட்டத்தில் பாதை புனர்நிர்மாணம்

**துறைநீலாவணை நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மத்தியமுகாம் 05 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பாதையின் நிர்மாணப் பணிகள், மனங்களை இணைக்கின்ற ரண் மாவத் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர் ந.நவநீதராஜா தலைமையில் அண்மையில் (09) இடம்பெற்றது.



ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி பிரதம அமைப்பாளர் ஹஸன் அலி பிரதம அதிதியாக கலந்துகொண்டு பணிகளை இதன்போது ஆரம்பித்து வைத்தார்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர், மத்திய நீர்ப்பாசன பொறியியலாளர், பிரதேச சபை மற்றும் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







காரைதீவு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலய வருடாந்த ஆவணி ஓண உற்சவத்தினை முன்னிட்டு ஆவணி ஓண தினமான புதன்கிழமை இடம்பெற்ற தீர்த்தோற்சவ நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

படங்கள் - கரடித்தோட்ட நிருபர்




## பொது நலசிந்தனையோடு மக்களுக்கு சேவையாற்ற அனைத்து பெண்கள் அமைப்புகளும் முன்வரவேண்டும்

**சீலாமுனை நிருபர் துஷாரா –**

எதிர்காலத்தில் சுய விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் பொது நலசிந்தனையோடு மக்களுக்கு சேவையாற்றக் கூடிய பெண்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு அரசியலில் பொருத்தமான பொறுப்புகளை வழங்கும் பாரிய பொறுப்பினை ஏற்று அவர்களை வழிநடாத்த அனைத்து பெண்கள் அமைப்புகளும் முன்வர வேண்டும் என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜான் சரவணபவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்கள் அமைப்பினருக்கும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜான் சரவணபவன் ஆகியோர்களுக்கிடையிலான கலந்தரையாடல் (11) மட்டக்ளப்பு மாநகர சபையில் இடம்பெற்றது.

இணையம் தன்னார்வ அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பெண் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்குபற்றிய இக்கலந்துரையாடலில் சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகளில் பெண்களின் பங்களிப்புகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

குறிப்பாக மாநகர சபையின் வரவு செலவுத்திட்டங்களை தயாரித்தல் மற்றும் சபைத் தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்களில் பெண் உறுப்பினர்களின் பங்களிப்புகள் போன்ற விடயங்களும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது.

பெண்களுக்கு பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான நகரமாக மட்டக்களப்பு மாநகரினை மாற்றியமைக்கும் நோக்கோடு பெண்கள், சிறுவர் நேய மாநகரமாக மாற்றியமைக்கும் செயற்பாடுகளின் முன்னேற்ற நிலை தொடர்பிலும் மாநகர முதல்வர் அக்கரை செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

## பெண் பயணிகளுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையே காணப்பட்டது

**சீலாமுனை நிருபர் துஷாரா**

மட்டக்களப்பு மாநகர முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க புகையிரத நிலைய ஒழுங்கையானது துரித அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றமையால் அப்பாதையில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வாசஸ்தலம் ஒன்று முற்றாக உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் சுட்டிக்காட்டி மேற்படி கட்டிடத்தினை வேறு ஒரு இடத்தில் புதிதாக அமைப்பதற்கான நிதியைப் பெற்றுத்தருமாறு மாநகர முதல்வர் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசனிடம் விடுத்த வேண்டுகோளிற்கிணங்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் துரித கிராம அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக 3 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

செய்யப்பட்டு அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் (11) இடம்பெற்றது.



மட்டு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

புகையிரத ஒழுங்கை வீதியானது மிகவும் ஒடுக்கமான வீதியாக காணப்பட்டது. இதனால் பல வருடகாலமாக மக்கள் போக்குவரத்து செய்வதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். அதுமாத்திரமல்லாமல் இவ்வீதியால் செல்லும் பயணிகளில் குறிப்பாக பெண் பயணிகளுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையே காணப்பட்டதுடன் அதில் பெரிதும் அவர்கள் பாதிக்கப்பட்டனர்.

வீதியின் நிலையினை ஆராய்து பல வழிகளின் ஊடாக முயற்சித்து அபிவிருத்தி செய் முற்பட்டபோதும் அது சாத்தியக் குறைபாடாவே காணப்பட்டது. காரணம் வீதியின் மருங்கில் காணப்படும் மாகாண அதிகாரத்திற்கு உட்பட்ட பாடசாலை வளாகம், மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாசஸ்தலம் மற்றும் புகையிரத நிலைய வளாகம் போன்றனவாகும்.

இருப்பினும் புகையிரத திணைக்களத்திடம் பல வேண்டுகோள்களை விடுத்து குறித்த அமைச்சுடன் பேசியதன் பலனாகவும், வீதி அதிகார சபைக்கு மாற்றீடான கட்டிடம் அமைத்து தரும் முயற்சி கைகூடியதன் பலனாகவும். இவ்வீதியினை அபிவிருத்தி செய்யும் பணி சாத்தியமாகியுள்ளதுடன் இவ்வீதியானது அகலமாக்கப் படுவதனால் நகரத்தினுடைய பிரதான வீதிகளில் நிலவும்

போக்குவரத்து நெரிசலினை கணிசமான அளவு குறைக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியிலாளர் திருமதி.கலைவாணி வண்ணியசிங்கம், பொறியியலாளர் பத்மராஜா, மாநகர பொறியியலாளர் சித்திராதேவி லிங்கேஸ்வரன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களுக்கான வே.தவராஜா, ம.ரூபாகரன், இவேட்டின் சந்திரகுமார்,

சீ.ஜெயந்திரகுமார், திருமதி குஜாஜினி பாலகிருஸ்ணன் ஆகியோருடன் மாநகர சபையின் உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

## மணல் மற்றும் குப்பை கூழன்களினால் வழிந்து காணப்படும் சுனாமி வீட்டுத்திட்ட பிரதேசம்

**பைஷல் இஸ்மாயில்**
**நூருள் ஹுதா உமர்**

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் (சுனாமி வீட்டுத்திட்டம்) உள்ள வடிகான்கள் மணல் மற்றும் குப்பைகளால் நிரம்பி வழிந்து காணப்படுகிறதாக அப்பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டு நிதி மூலம் வடிவைமைக்கப்பட்ட பொலிவேரியன் கிராமமானது பல்வேறு குறைபாடுகளுடன் காணப்படுவதாகவும் அவற்றை அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் இன்னும் கண்டும் காணாமல் இருப்பதாகவும் அம்மக்கள் மேலும் கவலை தெரிவிக்கின்றனர்.

வடிகான்கள் இதுவரை துப்பரவு செய்யப்படாமல் மண், கல், குப்பைகளால் நிரம்பியிருப்பதால் நீர் வடிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாகவும் இதனால் நுளம்புத் தொல்லை அதிகரித்து காணப்படுவதுடன் துர்நாற்றமும் வீசிகின்றது.



இதனை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் அலட்சிப்போக்கில் இருந்துகொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க முன்வரவில்லை எனவும் பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அதுமாத்திரமல்லாமல், வீதியின் நடுவே உடைந்து காணப்படும் வடிகான்களின் மூடியைக் கூட இன்னும் சரியாக திருத்தியமைக்கப்படவில்லை. இந்த நிலை பல வருடங்களாக் காணப்படுகின்றது. இதனால் பல வாகன விபத்து ஏற்பட்டுள்ளதுடன், இப்பிரதேசத்தில் வசிக்கும் சிறுவர்களும் அடிக்கடி உபாதைக்குள்ளாகின்றனர் என்று மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே, கல்முனை மாநகர சபை முதல்வர், உறுப்பினர்கள், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், சுகாதாரத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட அவை தொடர்பான அதிகரிகள் குறித்த விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து அம்மக்களின் நீண்ட கால பிரச்சினைகளை தீர்த்துவைக்க முன்வர வேண்டும் என அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்/ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் வித்தியாலய மாணவர்கள் சாதனை

**முரளி**

வீடமைப்பு , நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சின் அனுசரணையில் நடத்தப்பட்ட போட்டியில் தமிழ் மொழிமூலம் மாகாணமட்டத்தில் 16 பாடசாலைகளும் தேசிய மட்டத்தில் 7பாடசாலைகளும் போட்டியிட்டு இருந்தன.

இதில் இலங்கையின் அதியுயர் அரங்க விருதுகளில் ஒன்றான டவர் திரையரங்கு விருதுகளில் 5விருதுகளைப் பெற்று மட்/ஸ்ரீ மாமாங்கேஸ்வர வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இந்த ஆணடுக்கான சிறந்த நடிகை , சிறந்த நாடகப்பிரதி, சிறந்த நாடக உடையமைப்பாளர், சிறந்த நாடக துணை உடையமைப்பாளர் , சிறந்த தயாரிப்பு என்பவற்றிக்காக பெற்றுள்ளனர்.சிறிய பாடசாலை மாணவர்களாயினும் தங்களது திறமையை வெளிக்கொணர முடியுமென நிருபித்துள்ளனர்.

இவர்களது முயற்சிகள் மேலும் வளர வாழ்த்துக்கள்.

## விசேட தேவையுடைய மாணவர்களுக்கான தனியான கல்வி அலகுகை ஆரம்பிக்க கோரிக்கை

**சேனையூர் நிருபர்**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான தனியான கல்வி அலகு ஒன்றை ஆரம்பிக்குமாறு தம்பலகாமம் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள சுமார் 6 கிராமங்களைச் சேர்ந்த 16 மாணவர்கள் இப்பகுதியில் கல்வி கற்கக் கூடிய வயதெல்லையில் உள்ள போதும் தாம் வாழுகின்ற பிரதேசத்தில் ஒரு விசேட தேவையுடைய பிரிவு இல்லாத காரணத்தால் 25 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள திருகோணமலை நகர பாடசாலைகளில் கல்வி கற்பதற்காக இணைத்திருந்தனர். இருப்பினும் காலப்போக்கில் அவ்வளவு தூரம் மாணவர்களை தொடர்ச்சியாக கொண்டு செல்வற்கு போக்குவரத்துப் பிரச்சினை செலவீனம் தொடர்பான சுமையை தாங்க முடியாத நிலையில் இம் மாணவர்களில் அதிகமானவர்கள் இடைவிலகலாக காணப்படுகின்றனர்.

கல்வி கற்க வேண்டிய வயதில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி உரிமையை வழங்க வேணடியது சம்மந்தபட்ட திணைக்களத்தின் கடமையல்லவா? எனவே தாம் வாழும் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் விசேட தேவையுடைய மாணவர்களின் அலகு ஒன்றினை ஆரம்பித்து இம் மாணவர்களின் கல்வி உரிமையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிக்கு பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## என் நினைவில் நிந்தவூர் நூல் வெளியீட்டு வைப்பு

**சீலாமுனை, இறக்காமம் மேலதிக நிருபர்கள்**

ஓய்வு பெற்ற நில அளவையாளர் நிந்தவூரைச்சேர்ந்த எம்.எஸ். இக்பால் ஹசன் எழுதிய ‘என் நினைவில் நிந்தவூர்’ எனும் நூல் நிந்தவூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது.

ஓய்வு பெற்ற மாகாணக் கல்விப்பணிப்பாளரும், நிந்தவூர் நலன்புரிச் சங்கத்தின் தவிசாளருமான எம்.எஸ். யாக்கூப் ஹசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ.எஸ். எம். திலீப் நவாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்நூலினை வெளியீட்டு வைத்தார்.



கலைத்துறை மற்றும் எழுத்து துறைகளில் எந்த வித அனுபவமுமற்ற இந்நூலாசிரியரான எம்.எஸ். இக்பால் ஹசன் அவர்கள் நிந்தவூரின் நினைவுகள் பற்றி அண்மைக் காலமாக தனது முகநூலில் எழுதி வந்திருந்த நிலையிலேயே தனது 81 வயதிலும் புத்தக வடிவில் இவ்வரலாற்றை எழுதியுள்ளார்.

இதில் நிந்தவூரின் வரலாறு, அரசியல் வகிபாகம், ஜும்மா பள்ளி, நீர்ப்பாசனம், சமூக கலாச்சாரம், ஊடகம் மற்றும் பத்திரிகை துறை உள்ளிட்ட இன்னும் பல அம்சங்கள் புத்தக வடிவமாக 400 பக்கங்களில் வெளியீட்டு வைக்கப்பட்டுள்ளது.வயது முதிர்ந்த காலப்பகுதியிலும், தனது நினைவில் உள்ள நிந்தவூரைப் பற்றிய இப்புத்தகத்தின் மூலம் ஊரின் வரலாறினை இளம் சந்ததியினர் அறிந்து கொள்ள சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த புத்தக வெளியீட்டில் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர், பிரதி தவிசாளர் வை.எல். சுலைமாலெவ்வை, நிந்தவூர் பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சார், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் செய்திப்பிரிவின் பணிப்பாளர் யு.எல் யாக்கூப், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.ரி. நிஸாம், நிந்தவூர் உலமா சபையின் தலைவர் மௌலவி என். இஸ்மத் உள்ளிட்ட ஊரின் முக்கிய இலக்கியவாதிகள், ஊரின் முக்கிய அரசியல்வாதிகள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டதுடன், இந்நூலின் முதற்பிரதியானது ஹைரு இன்ஜினியரிங் நிறுவன பணிப்பாளர் இசட் எம். ஹைருவிற்கு மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஏ.எஸ்.எம். திலீப் நவாஸ் அவர்களினால் வழங்கி வைக்கப்படும் குறிப்பிடத்தக்கதாகும்.

## அம்பாறை மாவட்டத்தில் திடிரென வீசிய பலத்த காற்று வீதியோர கடைகள் சில சேதம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளில் திடிரென வீசிய பலத்த காற்று காரணமாக வீதியோர கடைகள் சேதமடைந்ததுடன் போக்குவரத்தும் சிறிது தடைப்பட்டது.

வியாழக்கிழமை (12) மதியம் முதல் மாவட்டத்தில் மணித்தியாலத்திற்கு ஏறத்தாழ 60 கிலோமீட்டர் வேகத்தில் காற்று வீசியதுடன் மழையும் தொடர்ந்து பெய்தது.

மேலும் பொத்துவில் முதல் பெரிய நீலாவணை வரையான கடற்பிராந்தியங்களில் கடல் அலை 2 அல்லது 3 மீட்டர் வரை உயர்வடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அச்சம் காரணமாக மீனவர்கள் எவரும் மீன்பிடிக்க செல்லவில்லை.

குறிப்பாக கல்முனை பாண்டிருப்பு மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பகுதிகளில் வீசிய காற்றினால் வீடுகளுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் மரங்கள் சில முறிந்து வீழ்ந்துள்ளன.

அத்துடன் குறித்த காற்று சுமார் 10 நிமிடங்கள் வீசியுள்ளதுடன் சிறிது நேரம் மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளது.



## குருமண்வெளியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல்

**செ.துஜியந்தன்**

மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட குருமண்வெளி சிவசக்தி மகாவித்தியாலயத்தில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் அதிபர செ.புஸ்பராஜா தலைமையில் நடைபெற்றது.

மாணவர்களுக்கு அரசியல் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பில் உணர்த்தவதற்கான ஆரம்பகளமாக இம் மாணவர் பாராளுமன்றம் அமைகின்றது. இங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்களினால் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதில் கனிஸ்ட பிரிவில் 45 பிரதிநிதிகளும், சிரேஸ்ட பிரிவில் 60 பிரதிநிதிகளும் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இவர்களுக்குள் இன்று நடைபெற்ற தேர்தலில் கனிஸ்ட பிரிவில் இருந்து 30 பிரதிநிதிகளும், சிரேஸ்ட பிரிவில் இருந்து 40 பிரதிநிதிகளும் மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் கூடுதலான வாக்குகளைப் பெற்ற மாணவர்களில் இருந்து பிரதமர், சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 அமைச்சர்களும், 10 பிரதி அமைச்சர்களும் தெரிவாகியுள்ளனர். குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலயத்தின் முதலாவது மாணவர் பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வறட்சியின் காரணமாக முதலை அட்டகாசம்-கிட்டங்கி வாவி மீனவர்கள் சிரமம்-மீன் வகைகளுக்கு பெரும் தட்டுப்பாடு

**பாறுக் ஷிஹான்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக கடும் வெப்பநிலையை அடுத்து கிட்டங்கி ஆறு பகுதியில் மீன்களின் பிடிபாடு குறைவடைந்து காணப்படுவதால் மீன் வகைகளின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ளதுடன் மீன் வகைகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் முதலைகளின் நடமாட்டத்தினால் மீன்களின் பிடிபாடு பெருமளவில் குறைவடைந்துள்ளதாக மீன் விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கு காரணம் சடுதியாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் காற்றழுத்தம் என்பன மீன்களின் பிடிபாடு வெகுவாகக் குறைவடைந்தமைக்கான காரணமென அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வாறு காற்றுக் காரணமாகக் கடல் கொந்தளிப்பு அடிக்கடி அதிகரித்துக் காணப்படுகின்றமை கடும் வரட்சியுடனான காலநிலை நிலவுகின்றமை ஆகிய காரணங்களே மீன்களின் விலை அதிகரிப்பிற்குக் காரணமெனவும் வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் மாரி கால பருவ மழை இன்மையினால் அங்குள்ள ஆறு,குளம் ஆகியவற்றில் அதிகளவான மீன் இனங்கள் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவது குறைவடைந்துள்ளது.

இதில் கோல்டன் செப்பலி கிலோ 500 ரூபாவாகவும் கணையான் கிலோ 1000 ருபாவாகவும் கொய் ஒரு கிலோ 400 ஆகவும் கொடுவா ஒரு கிலோ 1000 ஆகவும் கெண்டை கிலோ ரூபா 400 ஆகவும் விரால் கிலோ 800 ஆகவும் இம் மீன் வகைகள் அதிகளவான விலையில் விற்பனை செய்யப்படுவதுடன் இதர மீன்களான கெண்டை(கெளுறு) பனையான் மீசைக்காரன் ஆகியவை ஓரளவு குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

# வாகரையில் கட்டாக்காலி மாடுகளால் போக்குவரத்து பாதிப்பு

**வாழையூர். ந.குகதர்சன்**

வாகரை பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் வீதியின் குறுக்காக செல்வதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வாகரைப் பிரதேசத்தின் பிரதான வீதியின் ஊடக யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, அக்கறைப்பற்று போன்ற இடங்களுக்கு செல்லும் பயணிகள் வாகனங்களின் பயணம் செய்கின்றனர்.

இதன்போது குறித்த பகுதியில் காணப்படும் கட்டாக்காலி மாடுகள் திடீரென வீதியின் குறுக்காக செல்வதால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு கட்டாக்காலி மாடுகள் பண்ணையில் இருந்து கூட்டமாக வருகை தந்து வீதியை ஊடறுக்கும் போது சில மணி நேரங்கள் வீதியில் நின்று கொண்டு பின்னர் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.



எனவே வாகரை பிரதேச சபை தவிசாளர் இதற்கு ஒரு நிரந்தர தீர்வினை மேற்கொண்டு கட்டாக்காலி மாடுகள் வீதியை ஊடறுத்து பயணிகளுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வாகரைப் பிரதேசத்தில் ஒழுங்கான மேய்ச்சல் தரை இன்மை காரணமாக மாடுகள் தங்களுடைய மேய்ச்சலுக்கு புல் தரைகள் தேடி செல்வதால் வீதியை ஊடறுத்துச் செல்லும் நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





## மின்னொளியிலான கிரிக்கட் சுற்றுப் போட்டியில் சம்மாந்துறை எஸ்.எஸ்.சி விளையாட்டு கழகம் சம்பியன்

**பைஷல் இஸ்மாயில், எம்எம்.றுக்சான்**

அம்பாறை அக்கரைப்பற்று பள்ளிக் குடியிருப்பு றஹீமிய்யா விளையாட்டுக்கழகம் தனது பதிமூன்றாவது வருட நிறைவினை முன்னிட்டு **Smartcity Departmental Stores** நிறுவன பிரதான அனுசரணையில் பள்ளிக்குடியிருப்பு அதாஉல்லா விளையாட்டு மைதானத்தில் நடாத்திய மின்னொளியிலான கிரிக்கட் சுற்றுப் போட்டியின் சம்பியனாக சம்மாந்துறை எஸ்.எஸ்.சி விளையாட்டு கழகம் தெரிவு செய்யப்பட்டது.





அணிக்கு 8 பேர் கொண்ட 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மின்னொளியிலான கிரிக்கட் சுற்றுப் போட்டியில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 68 விளையாட்டு கழகங்கள் பங்கு கொண்ட இரவுநேர மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த (10) அதாஉல்லா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை தைக்கா நகர் எவர்டொப் விளையாட்டு கழகமும், சம்மாந்துறை எஸ்.எஸ்.சீ விளையாட்டு கழகமும் மோதிக் கொண்டனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற எவர்டொப் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி, வழங்கப்பட்ட 05 ஓவர்களில் 03 விக்கெட்டுகளை இழந்து 45 ஓட்டங்களை பெற்றனர்.

வெற்றி இலக்கை நோக்கி 46 ஓட்டங்களை பெற களத்தில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய எஸ்.எஸ்.சீ அணியினர் 4.3 பந்து வீச்சு ஓவர்களில் 46 ஓட்டங்களை பெற்று சம்பினாக தெரிவு செய்யப்பட்டது.

சம்பியனாக தெரிவாகிய சம்மாந்துறை எஸ்.எஸ்.சீ விளையாட்டுக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணமும், 30,000 ரூபா பணப்பரிசும், இரண்டாம் இடத்தைப் பெற்ற அட்டாளைச்சேனை எவர்டொப் விளையாட்டு கழகத்திற்கு கிண்ணமும், 20,000 ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாவும், தொடரின் சிறப்பாட்டக்காரராகவும் எஸ்.எஸ்.சி அணியின் துடுப்பாட்ட வீரர் எம்.சிப்றாக் தெரிவு செய்யப்பட்டார்.

# இளைஞர் முகாம்



**தோப்பூர் நிருபர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இளைஞர் கழக அங்கத்தவர்களுக்கான மூன்று நாள் வதிவிட இளைஞர் முகாம் இளைஞர் சேவை அதிகாரி எம்.ரீ.முபாரீஸ் தலைமையில் மூதூர் சேப் விடுதியில் 2019.09.08 ஆந் திகதி வரை மூன்று தினங்கள் நடைபெற்றது.

இதில் இளைஞர் கழக அங்கத்தவர்களுக்கு நேர் சிந்தனைகள் , தலைமைத்துவம், சமூக வலைத்தளங்களின் பாவனையும் அதன் விபரீதங்களும் நன்மைகளும், இளைஞர் கழக செயற்பாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் இவ் இளைஞர் முகாமில் விளக்கமளிக்கப்பட்டது.

இதில் வளவாளர்களாக மூதூர் பிரதேச செயலாளர் எம்.முபாரக், சீ.கவியரசன், டீ.புறஸ்லித் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப் பட்டது.

# ஏழைக்குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவி வழங்கி வைப்பு

**தோப்பூர் நிருபர்**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அல்லை நகர் கிழக்கு மற்றும் கங்குவேலி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 13 குடும்பங்களுக்கு சிறுகடைகள் வைத்து நடாத்துவதற்கான கடைச்சாமான்கள் 2019.09.12 மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.



சிறுவர்களை கொண்ட கஸ்டப் பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் வேள் விசன் நிறுவனத்தினால் 50 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய. சிலலறைக் கடை சாமான்கள் வழங்கிவைக்கப்பட்டது.

அல்லை நகர் கிழக்கில் 12 குடும்பத்தினருக்கும், புளியடிச்சோலையில் 1 குடும்பத்திற்குமாக. மொத்தம் 13 குடூம்பத்தினருக்கு இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் மூதூர் பிரதேச செயலக. உதவி பிரதேச செயலாளர் எம்.முபாரக், உதவி திட்டமிடல் பணிப்பாளர் பி.அரபாத் ,நிருவாக உத்தியோகத்தர் அலாவுதீன் வேள் விசன் நிறுவனத்தினர் பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்குவதன் மூலமே நாளைய தலைவர்களை எதிர்பார்க்கலாம்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

நாட்டில் இருக்கின்ற கல்வித் திட்டங்களில் பல கொள்கைகள் காணப்பட்டாலும் கல்விக்கான அதிமான நிதியை ஒதுக்கீடு செய்து சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்குவதன் மூலமே நாளைய தலைவர்களை எதிர்பார்க்கலாம் என துறை முகங்கள் மற்றும் கப்பற் துறை பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

குச்சவெளியில் (09) திங்கட்கிழமை அந்நூரியா மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் ஆசிரியர் விடுதிக்கான நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் உரையாற்றிய அவர்

அதிகமான பல்வேறு நிதிகள் மூலம் கல்விக்காகவே அதிக நிதியை தான் ஒதுக்கியுள்ளேன் இம் முறை பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது பாடசாலையில் வளப்பற்றாக்குறைகள் தீர்க்கப்பட வேண்டும் இதற்காக பாரிய நிதியினை பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஒதுக்கீடு செய்து இவ்வாறான கல்வித் திட்டங்கள் ஊடாக பல வேலைகளை நடைமுறைப்படுத்தி வருகிறார் விஞ்ஞான ஆய்வு கூடங்கள்,தகவல் தொழில்நுட்ப கூடங்கள்,மண்டபங்கள் என பல தேவைபாடுகள் பாடசாலைகளில் காணப்படுகிறது இவ்வாறான குறைகளை நிவர்த்திக்கப்பட வேண்டும் இதற்காக எனது நிதியில் இருந்து அதிகமானவற்றை கல்வி அபிவிருத்திக்காக ஒதுக்கியுள்ளேன் விசேட நிதிகள் மூலம் அதாவது அமைச்சர் றிசாத் பதியுதீன் அவர்களின் அமைச்சின் கீழ் உள்ள நீண்ட நாள் இடம் பெயர்ந்தோரை மீளக் குடியேற்றல் திட்ட அலகு ஊடாகவும் திருகோணமலையில் பல அபிவிருத்திகளை செய்துள்ளோம் .சிறந்த கல்விமான்களை உருவாக்கி இந்த நாட்டில் எமது நாளைய தலைமுறையினர்களாக வளர இவ்வாறான கல்வி திட்டங்கள் பெரும் பங்காற்றுகிறது என்றார்.

இக் கட்டிட திறப்பு விழா நிகழ்வில் பாடசாலை அதிபர் சாஜிபு மற்றும் திருகோணமலை வலயக் கல்வி உதவிக் கல்வி பணிப்பாளர்களான ஹாபிஸ் மரைக்கார் ,மகாதேவா ,குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்களான ரொசானா,பர்சானா,கிண்ணியா நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## தேசிய மட்ட தமிழ் மொழி தின விவாத போட்டி : நிந்தவூர் அல் அஷ்றக் பாடசாலைக்கு மூன்றாவது இடம்

**பைஷல் இஸ்மாயில், எம்.எம்.றுக்சான்**

அகில இலங்கை ரீதியான தேசிய மட்ட தமிழ் மொழி தின விவாத போட்டியில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலை மூன்றாவது இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்துள்ளது.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற தேசிய மட்ட போட்டிகளின்போதே இப்பாடசாலை மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது. இதில் மாணவர்களான ஏ.எல்.முஷ்பிர் அகமட், எம்.ஏ.ஆகாஷ் அகமட் மற்றும் எம்.என். ஹஸ்ஸான் அக்தர் ஆகியோர்கள் இப்பாடசாலை சார்பாக பங்கு பற்றியிருந்தனர். இது அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் வரலாற்றில் தேசிய மட்ட விவாதப்போட்டியில் பெற்றுக்கொண்ட முதல் வெற்றிப்பதக்கமாகும்.

இதற்கு முன்னர் மாகாண மட்டத்தில் கடந்த 1994/95ம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பாடசாலை ஒன்றிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தங்கப்பதக்கம் வென்று தேசிய மட்டப்போட்டிகளில் கலந்துகொண்டது. ஆனால் அங்கு பதக்கம் வெல்லும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இருந்தபோதும் சுமார் 25 வருடங்களின் பின்னர் இந்தப் பாடசாலை அணி தேசிய மட்டத்தற்கு தெரிவாகி வெற்றியீட்டியுள்ளதுடன் கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

இப்பாடசாலையின் புதிய அதிபர் ஏ. அப்துல் கபூர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஆசிரியர் வை. எம். அஷ்ரப் அவர்களின் வழிநடாத்தலுடன், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் எஸ்.எம்.எம். ஜாபிர், பழைய மாணவர்களான தற்போது நீதிபதியாக கடமையாற்றும் ஏ.எம்.எம். றியால், வைத்தியர் எம்.வை.எம். மாஹிர், ஓய்வு பெற்ற ஆசிரியர் கே.எல். நூர் முஹம்மட், ஆசிரியர் ஏ.எம். றியாஸ் மற்றும் எம்.எம்.



பாரிஸ் ஆகியோர்களால் இம்மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை 09 மாகாணங்களுக்கிடையில் நடைபெற்ற திறந்த விவாதப் போட்டியில் வட மாகாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி முதலாவது இடத்தினைப் பெற்று தங்கப்பதக்கத்தினையும், மத்திய மாகாணம் ஹட்டன் பொஸ்க்கோ கல்லூரி இரண்டாவது இடத்தினைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தினை சுவீகரித்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.





**தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்ட கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சிறாஜ் பொது விளையாட்டு மைதானம் இரவு நேர அரங்காக மாற்றுவதற்கான நிர்மான வேலை (10) நிர்மான பணிகளை மூதூர் தொகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இணை அமைப்பாளர் தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எம் சுபியான் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.**

**படம்: முள்ளிப்பொத்தானை நிருபர்**





**வெருகல் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு திருகோணமலை சோலையடி வைரவர் ஆலய பாத யாத்திரைக்குமு இன்று வியாழக்கிழமை (12) திருக்கோணேஸ்வரப் பெருமான் கோவிலிருந்து வெருகலம் பதி நோக்கி வேல்தாங்கிய பாத யாத்திரையை மேற்கொள்வதனை படத்தில் காணலாம்.**

**படம்: சேனையூர் நிருபர்**

# வடக்கு தந்தி

## வவுனியாவில் பாடசாலைக்கு தண்ணீர் தாங்கி வழங்கி வைப்பு

**வவுனியா நிருபர்**



வவுனியா கரும்பனிச்சாங்குளம் அ.த.க. பாடசாலைக்கு குடிதண்ணீர் தாங்கி ஒன்று வவுனியா வர்த்தக நலன்புரிச் சங்கத்தினரால் (12) வழங்கி வைக்கப்பட்டது.

தண்ணீர் தாங்கி வழங்கும் நிகழ்வானது பாடசாலையின் அதிபர் எஸ்.ராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியாவில் ஏற்பட்ட கடும் வரட்சியின் காரணமாக குறித்த பாடசாலையின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் கிணறு வற்றிவிட்ட நிலையில் பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த தண்ணீர் தாங்கி வவுனியா வர்த்தக நலன்புரிச் சங்கத்தினரால் வழங்கி வைக்கப்பட்டதுடன் பாடசாலை கிணற்றையும் பார்வையிட்டிருந்தனர்.

குறித்த பாடசாலைக்கு பிரதேச சபையினர் இலவசமாக தண்ணீர் வினியோகம் செய்வதாக தெரிவித்துள்ள நிலையிலேயே அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக தண்ணீர் தாங்கி வழங்கி வைக்கப்பட்டது.

## வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப்பாடசாலையில் கற்றல் வள நிலைய திறப்பு விழா

**வவுனியா நிருபர்**



வவுனியா சைவப்பிரகாச ஆரம்ப பாடசாலையில் ‘அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’ எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 17 மில்லியன் ரூபாய் நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கற்றல் வள நிலைய திறப்பு விழா (09.09.2019) காலை 8.00 மணியளவில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் தியாகசேரதி யுவராஜா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்ததுடன் கட்டிடத்தினையும் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் வீ.இராதகிருஷ்ணன் மற்றும் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் , உத்தியோகத்தர்கள் , ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## கொட்டும் மழைக்கும் மத்தியில் சிறப்பாக இடம்பெற்ற வவுனியா, ஈச்சங்குளம் விநாயகர் ஆலய இரதோற்சவம்

**வவுனியா நிருபர்**





வவுனியா, ஈச்சங்குளத்தில் அருள்மிகு சிறி விநாயகர் ஆலய இரதோற்சவம் கொட்டும் மழைக்கு மத்தியிலும் சிறப்பாக இடம்பெற்றது.

வந்தோரை வாழவைக்கும் வவுனியா மண்ணில் ஈச்சங்குளம் - சாஸ்திரிகூழாங்குளம் மக்களின் வழிபாட்டுக்குரிய சிறி விநாயகர் ஆலயத்தில் கந்த கணேசதாஸக் குருக்கள் தலைமையில் முதன் முறையாக இரதோற்சவம் கொட்டும் மழைக்கு மத்தியிலும் இடம்பெற்றது.

அந்தணச் சிவாச்சாரியார்கள் மந்திரம் ஓதி விசேட அபிடேக தீபராதனைகளை நிகழ்த்த, விநாயகப் பெருமான் உள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார். தொடர்ந்து வெளிவீதியில் தேரில் எழுந்தருளிய விநாயகப் பெருமானை பக்த அடியார்கள் அரோகரா கோசத்துடன் ஆண்களும், பெண்களுமாக வடம் பிடித்து தேரில் இழுத்துச் சென்றனர்.

குறித்த ஆலயத்தில் முதன்முறையாக இடம்பெற்ற இரத்தோற்சவத்தின் போது மழை பெய்தமையால் மகிழ்ச்சியடைந்த பக்த அடியார்கள் தேவார திருவாசங்களை ஓதியும், கற்பூரச் சட்டிகளை ஏந்தியும் விநாயகப் பெருமானை வழிபட்டனர். விநாயகப் பெருமானும் அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

இதேவேளை, நீண்ட வரட்சிக்கு பின்னர் இதன்போது வவுனியாவில் மழை பெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் ஓர் நேர உணவிற்கு வழியின்றி தவிக்கும் நான்கு குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கி வைப்பு

**வவுனியா நிருபர்**





வவுனியா இராசேந்திரகுளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம்,இராசேந்திரகுளம் பகுதிகளை சேர்ந்த நான்கு குடும்பங்களுக்கு (09.09.2019) உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன

பிள்ளைகளினால் கைவிடப்பட்ட நிலையில் ஓர் நேர உணவிற்கு வழியின்றி அரசாங்கத்தினால் வழங்கப்படும் மாதாந்த 5000 ரூபா ஒய்வூதிய உதவிப்பணத்தில் தங்களது வாழ்க்கையினை நாடாத்தி வரும் இரு குடும்பத்தினர் உட்பட நான்கு குடும்பத்தினருக்கு இவ் உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

உதவி வழங்கி வைக்கப்பட்ட சமயத்தில் பிள்ளைகளின்றி தனிமையில் வாழும் குறித்த தாய்,தந்தைகள் கண்ணீர் மல்கி கிராம சேவையாளர் உட்பட ஜேர்மன் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த நடராஜா சிவகுமார் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தமை அங்கிருந்த அனைவரது மனங்களையும் சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

ஊடகவியலாளர் பா.கதீஷன் அவர்களின் வேண்டுகோளிக்கினங்க ஜேர்மன் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த நடராஜா சிவகுமார் அவர்களின் நிதியில் ஓர் குடும்பத்தினருக்கு 5000.00 ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதியோன்றும் சிறு பணமும் வீதம் (மொத்தமாக ரூபா.20000.00 மற்றும் சிறு தொகை பணம்) நான்கு குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்தில் ஊடகவியலாளர் பா.கதீஷன் , இராசேந்திரகுளம் கிராம சேவையாளர் ப.பிரதீப் , ஜேர்மன் நாட்டிலிருந்து இலங்கை வந்த நடாராஜா சிவகுமார் மற்றும் அவரது உறவினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஜேர்மன் நாட்டில் வசிக்கும் நடராஜா சிவகுமார் அவர்கள் மாதாந்தம் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு இவ்வாறான பல உதவித்திட்டங்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் பூட்டு

**வவுனியா நிருபர்**



வவுனியா ஏ9 வீதியில் புதிய பேரூந்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் 15ம் திகதி வரை மூடப்பட்டுள்ளது

அம்மாச்சி உணவகத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வையின் அடிப்படையில் அம்மாச்சி உணவகத்தில் சில சுகாதார சீர்கேடுகள் நிலவுவதாகவும் அதனை நிவர்த்தி செய்யுமாறும் அம்மாச்சி உணவக நிர்வாகத்தினருக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையிலும் அம்மாச்சி உணவகத்தில் சில திருத்தங்களை மேற்கொள்ளும் பொருட்டும் அம்மாச்சி உணவகம் (09.09.2019) முதல் எதிர்வரும் (15.09.2019)ம் திகதி வரை மூடப்பட்டுள்ளது.

## லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினால் இலவச கணினி பயிற்சி நிலையம் திறந்து வைப்பு





**வவுனியா நிருபர்**

லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தினால் மதவாச்சி - மன்னார் வீதியில் அமைந்துள்ள முள்ளிப்பள்ளத்தில் இலவச கணனி பயிற்சி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நல்லை திருஞான சம்பந்த ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த சுவாமிகள் வட மாகாண முன்னாள் முதலைமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலய நிறுவனர் எஸ். ஸ்ரீ ரங்கன் லண்டன் கனக துர்க்கை ஆலய பரிபாலன சபைத் தலைவர் சொ. கருணைலிங்கம் இந்து மகாசபைத் தலைவர் ண்.ண் இராமகிருஷ்ணன் மன்னார் இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் மஹா.தர்மகுமாரக் குருக்கள் மன்னார் பிரதேச செயலாளர் திருமதி க.சிவசம்பு வைத்தியர் மு.கதிர்காமநாதன் வைத்தியர் ஆ.அரசர்க்கோன் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிவ.கஜேந்திரகுமார் பிரதேச உறுப்பினர் எஸ்.விஜயன் ஆலய பரிபாலன சபையினர் அறநெறி ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் சமய சமூக ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## ஆலயங்கள் சமய வழிபாட்டுடன் மாத்திரம் நின்று விடாது சமூக சிந்தனையுடன் செயல்பட வேண்டும்

**வவுனியா நிருபர்**

ஆலயங்கள் சமய வழிபாட்டுடன் நின்று விடாது சமூக சிந்தனையுடன் செயல்பட வேண்டும் என இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் தலைவர் எஸ்.கருணைலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் (10) கிராமப்புற பாடசாலை மாணவர்களுக்கு பால் வழங்கும் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தபின் வவுனியா ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவது தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு மன்னார், மட்டக்களப்பு போன்ற பகுதிகளை சேர்ந்த மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.




எமது பதியில் இருக்கும் ஆலயங்கள் சமய வழிபாட்டுடன் நின்று விடாது சமூக சிந்தனையுடன் செயற்பட முன்வரவேண்டும் அத்துடன் இச்செயற்பாட்டுக்கு ஊடகங்கள் துணைபுரிய வேண்டும் என குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் அறங்காவற் சபை உறுப்பினர் கெ.ஸ்ரீரங்கன், போரின் காரணமாக ஏற்பட்ட வறுமை ஒழிக்கப்பட வெண்டும். முக்கியமாக வன்னி பகுதியில் ஏற்பட்டிருக்கும் வறுமை ஒழிக்கப்பட வேண்டும் ஜாதி மதம் கடந்து நாம் சேவையாற்ற வேண்டும் அதே போன்று தமிளோடு சிங்கள மொழியையும் கற்று நாம் முன்னெற வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆலயத்தின் தொண்டர் எ.கேசவன், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றோம். போரால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு பண்ணைத் திட்டங்களை உருவாக்கியுள்ளோம். இத்திட்டங்கள் வடக்கு கிழக்கில் மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எதிர்காலத்தில் தன்னம்பிக்கையுடன் செயலாற்றக்கூடிய மக்கள் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என தெரிவித்தார்.







யாழ்ப்பாணம் வரலாற்று சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த திருவிழாவின் தேரோடட நிகழ்வுகள் (13) இடம் பெற்றபோது சுவாமி தேரேறுவதற்கு எடுத்துவரப்படுவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படத்தில் காணலாம்.

படம்: என்.ஹரன்

## வவுனியாவில் தொடர் குடியிருப்புக்குள் இருந்த தென்னை மரத்தில் தீ

**வவுனியா நிருபர்**

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் உள்ள தொடர் குடியிருப்புக்குள் இருந்த தென்னை மரமொன்றில் திடீரென தீப்பிடித்தது. நகரசபை தீயணைப்படையினர் விரைந்து செயற்பட்டமையால் பாரிய அனர்த்தம் தடுக்கப்பட்டுள்ளது.

(10.09.2019) மாலை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் அமைந்துள்ள தொடர் குடியிருப்பு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் குப்பைகளுக்கு நெருப்பு வைத்துள்ளனர். இதன்போது குறித்த நெருப்பு பற்றி எரிந்த போது அருகில் இருந்த தென்னை மரம் தீப்பிடித்து எரிந்துள்ளது.

அதனை அணைக்க வீட்டுக்காரர் முயற்சித்த போதும் அது பயனளிக்காமையால் உடனடியாக நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தினர். விரைந்து செயற்பட்ட நகரசபை தீயணைப்பு பிரிவினர் உடனடியாக தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் அப்பகுதி



யில் ஏற்பட இருந்த பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

## வவுனியா தாண்டிகுளத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதப் பாதையில் அச்சத்தில் மக்கள்




**வவுனியா நிருபர்**

வவுனியா தாண்டிக்குளத்தில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இருந்து புதுக்குளம் மற்றும் திருநாவற்குளம் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் முச்சந்தியில் புகையிரதக் கடவை ஒன்று காணப்படுகின்றது.

குறித்த கடவையில் புகையிரத பாதுகாப்பு கேற் பொருத்தப்படவில்லை. அப்பகுதியில் ஒலி, ஒளிச் சமிஞ்சை பொருத்தப்பட்டுள்ளபோதும், குறித்த ஒலி, ஒளி சமிஞ்சை சீராக இயங்காமையாலும், அவை பழுதடைந்து காணப்படுவதாலும் செயலிழந்துள்ளன.

இதனால் அவ்வீதியால் பயணிப்போரும், வாகனங்களும் புகையிரதம் வரும் சத்தம் கேட்டே தமது பயத்தை நிறுத்த வேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வடக்கிற்கான புகையிரத சேவைகள் அதிகரித்துள்ள நிலையில் இவ்வாறு பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை ஒரு சந்தியில் காணப்படுகின்றமை மக்களை அச்சம் கொள்ள வைமத்துள்ளது.

எனவே, இது தொடர்பில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அவ்வீதி வழியாக தினமும் பயணிக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் கோரிக்கையாகும்.

இதேவேளை, குறித்த பகுதியில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் கடந்த வருடம் ஒருவர் மரணமடைந்தமையும், கால்நடைகள் அடிக்கடி விபத்துக்குளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## வலி கிழக்கிலிருந்து சந்நிதி செல்லும் பலம் திறந்து வைப்பு மேலதிக ஏற்பாடுகளும் பூர்த்தி



வலி கிழக்கில் இருந்து சந்நிதி ஆலய வளாகத்தினை அடையும் தொண்டமானாறு உவர்நீர்த் தடுப்பணை பலத்தினூடான போக்குவரத்து கதவுகள் நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் திறந்து விடப்பட்டுள்ளதுடன் உற்சவத்தினை முன்னிட்டு இப்பகுதியூடாக ஆலயத்தினை அடையும் பக்தர்களுக்கான ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சந்நிதி முருகன் ஆலயத்தின் உற்சவத்தின் போது வருடா வருடம் தொண்டமனாறு உவர் நீர்த்தடுப்பணை பாதை ஊடாக போக்குவரத்திற்கு அனுமதிக்கப்படுவது வழமையாகவுள்ளது. இவ் வருட உற்சவத்தில் ஆறு நாட்கள் முழுமையாக இப்பகுதி ஊடான போக்குவரத்திற்கு நீர்ப்பாசனத்திணைக்களம் உடன்பட்டிருந்தது. இந்நிலையிலேயே பாலத்தின் ஊடாக பக்கதர்களின் போக்குவரத்திற்கு திறந்துவிடும் நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றது.

நீர்ப்பாசனப் பொறியியலாளர் சர்வநந்தன் சர்வராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்தராஜா உள்ளிட்ட ஆலய முக்கியஸ்தர்கள், பிரமுகர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், கிராமசேவையாளர்கள், நலன்பேண் சேவைகளைச்சேர்ந்தோர் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் பக்தர்களின் போக்குவரத்திற்கான பாதைகளும் திறந்து விடப்பட்டன.

இப்பாலம் யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் குறிப்பாக சந்நிதி உற்சவ காலத்தில் பிரதேச சபைகளின் பங்களிப்போடு மண் அணைகள் அமைக்கப்பட்டு பக்கதர்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்கபட்டது. எனினும்; யாழ் குடாநாட்டின் நிலத்தடி நீரைப்பாதுகாக்கும் நோக்குடன் உலக வங்கியின் 400 மில்லியன் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட மிக நீண்ட அழகான புறத்தோற்றமுடைய இப்பாலத்தின் பணிகள் கடந்த வருடம் பூர்த்திசெய்யப்பட்டன. இதனைத்தொடர்ந்து வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் இருந்து சந்நிதி ஆலயத்தினை அடையும் இலகுவழி மார்க்கமாக இப்பாதை உள்ளது. கடந்த வருடம் உற்சவ காலத்தில் மூன்று நாட்களே இப்பாதை திறந்து விடப்பட்டபோதும் இம் முறை ஆறுநாட்களுக்கு திறந்துவிடப்படவுள்ளது.

இதேவேளை, சந்நிதி உற்சவ ஏற்பாட்டுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு இணங்க தனியார் வாகனத்தரிப்பிடவசதிகள் ஏற்பாடு செய்துள்ளதுடன் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் அரச தனியார் வாகனங்கள் தரித்து நின்று பக்தர்களை ஏற்றிச் செல்வதற்கான உரிய உரிய ஒழுங்கு வசதிகளும் செய்யப்பட்டுள்ளதுடன் வாகன நெரிசலைக்கட்டுப்படுத்தும் வலி கிழக்கு பிரதேச சபை எல்லையூடாக ஆலயத்தினை அடையும் வாகனங்களுக்கு நோக்கில் ஒருவழி போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்தும் பொலிசாருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.




## வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தொழிநுட்ப ஆய்வுகூடம் திறந்து வைப்பு

**வவுனியா நிருபர்**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் தொழிநுட்ப ஆய்வுகூடம் (09.09.2019) காலை 10.30 மணியளவில் பாடசாலையின் முதல்வர் தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

தொழிநுட்ப ஆய்வுகூடத்தினை அதிபருடன் இணைந்து பிரதம விருந்தினரும் சிறப்பு விருந்தினரும் திறந்து வைத்ததுடன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மற்றும் சிறப்பு விருந்தி



னராக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் முத்து இராதகிருஷ்ணன் மற்றும் வலயக்கல்வி பணிமணை அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## எழுக தமிழ் தொடர்பில் வடமராட்சி அமைப்புகளுடன் தமிழ் மக்கள் பேரவையினர் சந்திப்பு!

தமிழ் மக்களின் கூட்டு எழுகையாக எழுகதமிழ் எழுச்சிப் பேரணியை முன்னெடுப்பது குறித்து தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்டுவரும் கலந்துரையாடலின் தொடர்ச்சியாக இன்று வடமராட்சி பகுதியில் சந்திப்புகள் நடாத்தப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் கடற்றொழில் சங்கங்கள் விளையாட்டுக் கழகங்கள் உள்ளிட்ட சமூகமட்ட அமைப்புகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

- ★ பருத்தித்துறை சுப்பர்மடம் க.தொ.கூ.சங்கம்
- ★ இன்பர்சிட்டி க.தொ.கூ.சங்கம்
- ★ இன்பர்சிட்டி காண்டீபன் விளையாட்டுக் கழகம்
- ★ சக்கோட்டை க.தொ.கூ.சங்கம்
- ★ பொலிகண்டி க.தொ.கூ.சங்கம்
- ★ நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம்
- ★ ஆதிகோவிலடி க.தொ.கூ.சங்கம்
- ★ வல்வெட்டித்துறை மேற்கு க.தொ.கூ.சங்கம்
- ★ வல்வெட்டித்துறை கொத்தியால் க.தொ.கூ.சங்கம்
- ★ வல்வெட்டித்துறை வர்த்தகர் சமூகம்
- ★ முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் வல்வெட்டித்துறை
- ★ வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் என்பவற்றின் நிர்வாகிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பூரண ஆதரவை வழகியுள்ள நிலையில் எழுக தமிழ் முன்னாயத்த ஏற்பாடுகள் குறித்து

வடமராட்சி பருத்தித்துறை முதல் வல்வெட்டித்துறை வரையான கடற்றொழில் சங்க நிர்வாகிகளுடன் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டு எழுக தமிழுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து ஆரயப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## எழுக தமிழுக்கு ஆதரவு கோரி இணுவில் பொது அமைப்புகளுடன் சந்திப்பு!

தேசமாக தமிழர்கள் திரட்சிபெற்று எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி அணிதிரட்டும் முகமாக தமிழ் மக்கள் பேரவை தொடர் சந்திப்புகளை மேற்கொண்டுவருகின்றது. அந்தவகையில் இணுவில் பகுதியிலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சந்தித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடமாகாண சுற்றுலாத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் அவரது இல்லத்தில் 08/09/2019 இரவு 7.30 மணிக்கு நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தர்களும் இணுவில் பகுதியில் செயற்பட்டுவரும் பொது அமைப்புகளின்



பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய அரசியலின் போக்கு குறித்தும் எழுக தமிழின் அவசியம் குறித்தும் ஆரோக்கியமான கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







**யாழில் இடம் பெற்ற எண்ட பிரைசஸ் ஸ்ரீ லங்காவின் ஒரு அங்கமான ஆரம்ப நிகழ்வு ஒன்று டில்கோ விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற போது கலந்து கொண்டிருந்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பாடசாலை மாணவர்களது நடன குழுவினரையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.**

**படம்: என்.ஹரன்**







**யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் அமெரிக்க மாயா மருத்துவ நிலையத்துடன் இணைந்து புற்றுநோய் தொடர்பில் பணிநிலை வைத்தியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த 03 தினங்கள் இடம் பெற்றது இதன் இறுதிநாள் நிகழ்வு (06) தெல்லிப்பளை ஆதர வைத்தியசாலையின் புற்றுநோய் வளாக கேட்ப்போர் கூடத்தில் இடம் பெற்றபோது அமெரிக்க வைத்தியர் மரிக்க எட்வின் விளக்கமளிப்பதையும் கலந்து கொண்ட வைத்தியர்கள் வைத்திய அத்தியதசகர்கள் , அதிகாரிகள் ,வைத்திய ஆலோசகர்கள் ,உடன் வைத்திய தாதிய உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.**

**படம்: என்.ஹரன்**




# காவத்தை எந்தான வைத்தியசாலைக்கு இரண்டு மாடி கட்டிடத்தொகுதி!



**இரத்தினபுரி நிருபர்**

காவத்தை எந்தான வைத்தியசாலையில் புதிதாக இரண்டு மாடி கட்டிடத்தொகுதியை அமைப்பதற்கு சப்ரகமுவ மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென சப்ரகமுவ மாகாண சபை 187 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் அபிவிருத்தப்பணிகள் நேற்று(11) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மேற்படி வைத்தியசாலைக்கு வரும் பெரும்பாலான தோட்ட தொழிலாளர்களின் நலன் கருதி சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பரிவு என்பன அமைக்கப்பட உள்ளதுடன், இவ்வைத்தியசாலைக்கு தேவையான வைத்தியர்கள், சேவையாளர்கள் மற்றும் உபகரண பொருட்களும் பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க, மாகாண பிரதான செயலாளர் டி.எம்.மாலணி, மாகாண சுகாதார அமைச்சின் திட்டமிடல் பிரிவு பணிப்பாளர் லலித் பம்பரபோட்டுவ, மாகாண சுகாதார பணிப்பாளர் கபில கண்ணங்கர உட்பட மாகாண சுகாதார அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாண கட்டடங்களை திறந்து வைக்கும் நிகழ்வு!

**இரத்தினபுரி நிருபர்**

அரசாங்கத்தின் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டுவரும் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் 500 புதிய பாடசாலை கட்டடங்களை ஒரே நாளில் மாணவர்களிடம் கையளிக்கும் தேசிய நிகழ்வின் சப்ரகமுவ மாகாண நிகழ்வு கடந்த திங்கட்க்கிழமை(9) சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி வேலைத் திட்டத்தின் மூலம் சப்ரகமுவ மாகாணத்தில் 5167 மில்லியன் ரூபா செலவில் 953 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாண மாகாணத்தில் நேற்றையதினம் 37 பாடசாலை கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க, மாகாண பிரதான செயலாளர் டி.எம்.மாலணி, மாகாண கல்வி



அமைச்சின் செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உள்ளிட்ட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# அழகிய சப்ரகமுவ திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு 3600 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

**இரத்தினபுரி நிருபர்**

அழகிய சப்ரகமுவ திட்டத்தின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சு 3600 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள கஷ்டப் பிரதேச பாடசாலைகளின் கட்டடங்கள், மலசலகூடங்கள், தண்ணீர், மின்சாரம், பாதுகாப்பு வேலி, கட்டடங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட



வுள்ளது. மேற்படி மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு நிதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம்(10) சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் தம்ம திசாநாயக்க, சப்ரகமுவ மாகாண முன்னால் அமைச்சர் அதுலகுமார ராகுபந்த, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாண கல்விப் பணிப்பாளர் சேபால குறுப்பு ஆராச்சி உட்பட அரச அதிகாரி பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் அகியோர் கலந்து கொண்டனர்.

# தேசிய இலங்கை தமிழ் மொழித்தினப்போட்டியில் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரிக்கு மூன்று தங்கப்பதக்கங்கள்

**ஹட்டன் கே.சுந்தரலிங்கம்**

தேசிய தமிழ் மொழித்தினப்போட்டிகள் கடந்த 07 திகதி ஆரம்பித்து கொழும்பு இசுறுபாய கல்வி அமைச்சில் நடைபெற்று வருகிறது.கடந்த எட்டாம் திகதி நடைபெற்ற இறுதிப்போட்டிகளில் ஹட்டன் கல்வி வலயத்தினை சேர்ந்த ஹட்டன் ஹைலன்ஸ் மத்திய கல்லூரிக்கு மூன்று தங்கப்பதக்கங்களும் ஒரு வெங்கல பதக்கமும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த போட்டிகளில் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் ரமேஸ்; சசிரேகா ஆகியவர்களின் செல்வ புதல்வி செல்வி ஆர். கிமிந்த்ரா முதலாம் பிரிவில் பேச்சுப் போட்டியில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தினை தனதாக்கிக்கொண்டுள்ளார்.

இப்போட்டியில் போட்டியிட்ட மேல் மாகாணத்தினை சேர்ந்த ரோயல் கல்லூரியில் கல்வி பயிலும் அஹமட் அப்துல்லா இரண்டாம் இடத்தினை பெற்று வெள்ளி பதக்கத்தினையும் கிழக்கு மாகாணத்தினை சேர்ந்த சித்தாண்டி ஸ்ரீ கிருஸ்ண வித்தியாலயத்திலிருந்து போட்டியில் பங்குபற்றிய செல்வி மு.அர்ச்ஸயா மூன்றாம் இடத்தனை பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.

இதே வேளை குறித்த கல்லூரியிலிருந்து பிரிவு நாலில் பாவோதல் போட்டியில் போட்டியிட்ட எஸ்.தருணிகா முதலாம் இடத்தினை பெற்று தங்கப்பதக்கத்தினை வென்றுள்ளதுடன் அதே போட்டியில் போட்டியிட்ட வடக்கு மாகாணத்தினை சேர்ந்த சாவகச்சேரி மகளிர் கல்லூரியினை சேர்ந்த மாணவி செல்வி ஆத்மிகா சனாதனன் இரண்டாம் இடத்தினை பெற்று வெள்ளிப்பதக்கத்தனையும் ஊவா மாகாணத்தினை சேர்ந்த தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தினை சேர்ந்த செல்வி கே.நிலக்ஸா மூன்றாம் இடத்தினை பெற்று வெங்கல பதக்கதினையும் வென்றுள்ளனர்.

இதே வேளை இப்பாடசாலையில் திறந்த போட்டியான வினா விடை போட்டியில் போட்டியிட்ட மாணவர்கள் முதலாம் இடத்தினை பெற்று மேலும் ஒரு தங்கப்பதக்கத்தினையும்.,பிரிவு ஐந்தில் பேச்சுப்போட்டியில் மாணவி விஜேகுமாரி வெங்கல பதக்கத்தினையும் வென்றுள்ளதுடன் மேலும் பல மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் இப்பாடசாலையிலிருந்து போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மவுஸ்ஸாக்கலை நீர்தேகத்தில் பிளாஸ்டிக் போத்தல்களை சேகரிக்கும் வேலைத்திட்டம்





**க.கிஷாந்தன்**

மஸ்கெலியா மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கத்தில் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் உக்காத பொருட்கள் அதிகரிக்கப்பட்டு சூழல் மாசடைவு ஏற்பட்டதனாலும் களனி கங்கைக்கு செல்லும் இந்த நீரில் மாசு தன்மை ஏற்பட்டுள்ளதாலும், இந்த மவுஸ்ஸாக்கலை நீர்தேகத்தில் கரையோர பகுதிகள் மற்றும் நீரேந்தும் பகுதிகளில் நிரம்பி இருக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் உக்காத பொருட்களை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்று 10.09.2019 அன்று முன்னெடுக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டத்தினை நல்லதண்ணி, சீத்தகங்குல கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியோர் ஒன்றினைந்து மேற்கொண்டனர்.

இதன்போது நீர்தேகத்தில் உள்ள பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் உக்காத நிலையில் காணப்பட்ட பொருட்களை அகற்றும் பணி விறுவிறுப்பாக முன்னெடுக்கப்பட்டது.

நல்லதண்ணி, மோகினி நீர்வீழ்ச்சி, மறே நீர்வீழ்ச்சி மற்றும் காட்மோர் நீர்வீழ்ச்சி மற்றும் சீத்த கங்குல ஓயா போன்ற பகுதிகளில் சுற்றியுள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் மஸ்கெலியா மற்றும் நல்லதண்ணி பகுதிகளுக்கு வருகை தரும் சுற்றுலா பிரயாணிகள் வீசி செல்லும் பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் உக்காத பொருட்களையே இவ்வாறு 10.09.2019 அன்று அகற்றப்பட்டது.

நல்லதண்ணி, சீத்தகங்குல கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் இலங்கை மின்சார சபை, மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கத்தின் பாதுகாப்பு படையினர், கடற்படை அதிகாரிகள், நல்லதண்ணி பொலிஸார், ஆகியோர் இந்த சிரமதான பணியில் கலந்து கொண்டிருந்தனர்.

# எதிர்காலம் இளைஞர்களின் கைகளிலேயே!

## கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாத் தெரிவிப்பு



**க.கிஷாந்தன்**

இளைய சமுதாயம் தான் நாட்டின் முதுகெலும்பு என்பதற்கேற்ப இன்றைய இளைஞர்கள் தங்களது சக்தியை நல் வழியில் பயன்படுத்தி, நாட்டின் வளர்ச்சியில் பங்குபெற வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கட்டுபாட்டுடன் வளர்த்தால் நல்ல ஒரு இளைஞர் சமுதாயம் உருவாகும். இளைஞர் சமுதாயத்தை நல்ல முறையில் கொண்டு செல்வதற்கு குழந்தை பருவத்திலே அவர்களை நல்வழிப்படுத்தி வருதலில் பெற்றோர்களின் பங்கு அதிகம் உள்ளது என கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாத் தெரிவித்தார்.

தலைவர் ராஜமணி பிரசாத் கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக போதைப்பொருளை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுப்பட்டு வருகின்றார். அண்மையில் கூட போதைப் பொருள் தொடர்பிலான விளம்பரங்களை காட்சிப்படுவதற்கு தடை விதித்திருந்தார். இந்த நிலையில் இளைஞர் சமுதாயம் போதைப்பொருளுக்கு அடிமையாகுவதிலிருந்து விடுப்பட என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும தெரிவித்ததாவது,

நமது சமுதாய இளைஞர்கள் போதைப்பொருள்களுக்கு அடிமையானால் அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்படுவதோடு சமுதாயமும் சீர்கெடாகின்றது. போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் வாழ்க்கையை தொலைத்து விட்டு குடும்பத்தினராலும், சமுதாயத்தினராலும் கைவிடப்பட்ட நிலையும் உள்ளது. இந்த மாதிரியான நிலைமை யாருக்கும் வர கூடாது.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற நிலையில் சமுதாய இளைஞர்கள் போதைப்பொருட்களினால் விளையும் இன்னல்கள் சார்ந்த விழிப்புணர்வு கொள்ள வேண்டும்.

சமுதாய மேம்பாட்டினையும், வளர்ச்சியினையும் கருத்தில் கொண்டு தேவையில்லாதவைகளில் நாட்டம் கொள்ளாது இருத்தல் நல்லது. கல்வி, விளையாட்டு, பொருளாதாரம் என அனைத்து நிலைகளிலும் நாம் முன்னேற்றம் கண்ட சமுதாயமாக உருமாற உங்களின் உருமாற்றங்கள் அவசியம். அத்தகைய சூழலில் மலையக சமுதாய மாணவர்கள் விழிப்புணர்வோடு செயல்பட்டு நம்மை சுற்றி இருப்பவர்களுக்கும் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய இளைஞர்களிடம் சமூக அக்கறை காணப்பட்டாலும் கூட, அதில் சில இளைஞர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது. அவர்களது வாழ்க்கையே வாட்ஸ் ஆப், முகப்புத்தகம் என்றாகி விட்டது. ஒருவர் தப்பு செய்யும் போது ஒட்டு மொத்த இளைஞர் சமுதாயத்தை இது பாதிக்கிறது. இளைமையிலே குடி பழக்கத்திற்கு அடிமையாகிவிடுவதால் அவர்களால் சமுதாயம் சார்ந்த அக்கறைகளில் ஈடுபட முடியாமல் போகிறது. இதை ஒவ்வொரு இளைஞர்களும் ஒரு நிமிடம் சிந்தித்து பார்த்தாலே போதும், அவர்களின் வாழ்க்கை அவர்கள் கையில் என்பது புரியும் என்றார்.

# ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்றால் பொது மக்கள் மனதில் நல்ல மாற்றங்கள் ஏற்பட வேண்டும்

**ஹட்டன் கே.சகந்தரலிங்கம்**

எமது நாடு நிலையான அபிவிருத்தியினை அடைய வேண்டும் என்றால் பொது மக்கள் மனதில் நல்ல மாற்றங்கள் ஏற்பட வேண்டும். மக்கள் இன்று நாட்டில் நடைபெறுகின்ற அபிவிருத்தி விடயகளை தொடர்பாக தெளிவான நிலையில் இல்லாதே இருக்கின்றனர். இதற்கு அரசியல் தலைவர்களும் காரணம்.எமது நாட்டில் பல்வேறு பௌதீக வளங்கள் காப்படுகின்ற போதிலும் அவற்றில் முழுமையான பயனை பெற முடியாத நிலையிலேயே நாம் இருக்கின்றோம். நல்ல அபிவிருத்தி திட்டங்களை நாட்டிற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாது என ஆய்வு செய்து அபிவிருத்திகளை முன்னெடுக்கும் போது மக்கள் அவற்றை முழுமையாக ஆராயாது எதிர்ப்பினை வெளியிடுவதனால் பல அபிவிருத்தி திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன என மொரட்டு பல்கலைகழகத்தின் பேராசியர் ஏ.ஜி.துசித சுகதபால தெரிவித்தார். நாட்டில் நீர் வலு மற்றும் எரிசக்தி அமைச்சினால் முன்னெடுனக்கப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள் குறித்த நுவரெலியா மாவட்ட ஊடாக விலாயலாளர்களை தெளிவு படுத்தும் செயலர்மர்வு ஒன்று (07) திகதி நுவரெலியா சுற்றுலா விடுதி ஒன்றில் நடைபெற்றது. அதில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் இன்று எமது மக்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்காக ஒரு மின்சார அலகுக்கு கூடுதலான நிதி அறவிடப்படுகின்றன. இதனை குறைத்து கொள்ள வேண்டும் என்றால் மின்சார உற்பத்தி செலவினை குறைக்க வேண்டும்.அத்தோடு தனியாருக்கு சிறிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு வழிவகைகளை செய்து கொடுக்க வேண்டும் ஆனால் நாம் அவ்வாறு முன்னெடுக்கும் போது மக்கள் அதனை தவறாக புரிந்து கொண்டு அவர்களுக்கு லாபம் ஈட்டுவதற்காக முன்னெடுக்கப்படுவதாகவும் அதனால் சூழல் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்து எதிர்க்கின்றனர் இதனால் பல திட்டங்கள் தாமதமாகியும் கைவிடப்பட்டும் இருக்கின்றன. வருடாந்தம் மின் பயன்படுத்தும் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு தான் இருக்கின்றன.அதனை ஈடு செய்வதற்கு மாற்று வழிகளுக்கு தள்ளப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளன.அதற்காக நாம் எரிபொருளின் மூலம் மின்சாரத்தினை பெற்றுக்கொண்டால் அதற்கு அதிக செலவாவதுடன் அதன் மூலம் வெளியிடப்படும் காபம் உட்பட நச்சுத்தன்மை வாய்ந்த வாய்வினால் சூழலுக்கு பல பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.அது மற்றும் அல்லாது அதிகமான காபன் வாயு வெளியிடப்படுவதனால் புவியின் வெப்பநிலையும் அதிகரிக்கும் எனவே நீர் மின்வலுவின் மூலமே பாதிப்புக்கள் ஏற்படுவதனை தடுக்க முடியும் ஆனால் எமது நாட்டின் பொது மக்கள் தெளிவடையாததனால் அதனை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.







கம்பளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம் (11) நடைபெற்றது இவ் தெய்வீக நிகழ்வில் பெரும் திறலான பக்தர்கள் உட்பட விஷேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி வே.இராதாகிருஸ்ணன் அவர்களும் கலந்துக் கொண்டார்.

# சந்தைப்படுத்தல் பிரச்சினை

**கந்தசாமி சோபிதா**
வர்த்தக முகாமைத்துவபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்து திருப்தியடையச் செய்வதன் மூலம் வணிக இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்பாடு சந்தைப்படுத்தல் ஆகும். இச் சந்தைப்படுத்தல் செயற்பாடு நுகர்வோர் தேவை விருப்பம் திருப்தி ஆகியவற்றுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது.

இச் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை தற்காலத்தில் மேற்க்கொள்ளும் ஒவ்வொரு நபர்களும் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

அவையாவன

★ நவீன தகவல் தொழினுட்பம் தொடர்பான பிரச்சினை

★ நவீன முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினை

★ இலக்கு வாடிக்கையாளரை கண்டறிதல் தொடர்பான பிரச்சினை

★ தொடர்பாடல்

★ நுகர்வோர் பாதுகாப்பு

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை நாம் கருத்தில் கொள்ளவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இவற்றினுள் நவீன தொழினுட்பம் தொடர்பான பிரச்சினைகளை எடுத்து நோக்குவோமாயின் இன்றைய அறிவியல் தொழினுட்ப வளர்ச்சிக்கேற்ப தகவல் தொழினுட்பமும் வளர்ச்சியடைந்து கொண்டே வருகின்றது. தற்காலத்தில் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்க்கொள்ள வேண்டுமாயின் நவீன தொழினுட்பங்கள் பற்றியும் அதனை செயற்படுத்தும் முறைகள் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். மாறாக இவைகள் பற்றி அறிந்திராவிடின் சந்தைப்படுத்தலை எம்மால் பூரணமாக வழங்க முடியாது போகும்.

ஒரு வியாபாரத்தின் முன்னேற்றம் ஒரு நாட்டில் கிடைக்கக் கூடிய தொழினுட்பத்தின் முன்னேற்றத்தில் தங்கிக் காணப்படுவதுடன் அது பொருளாதாரவிருத்திக்கு ஒரு பெரிய ஊக்கப்படுத்தலாகவும் காணப்படுகின்றது. தொழினுட்பம் மூலதனத்தினை அதிகளவில் கொண்டுள்ள போதிலும் ஊழியத்தினை கொண்டுள்ள முறைகளை விட ஒரு செலவு குறைந்த மாற்று முறையாகவே இது காணப்படுகின்றது.




இலங்கையில் ஆரம்ப காலத்தில் வாடிக்கையாளர் உற்பத்தியாளரை நோக்கிய பயணமே காணப்பட்டது. ஆனால் தற்பொழுது உற்பத்தியாளர் வாடிக்கையாளரை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான பொருட்கள் சேவைகளை அவர்கள் இடத்திற்கே கொண்டு சென்று சந்தைப்படுத்தக் கூடிய அளவிற்கு தொழினுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. ஆகவேதான் சந்தைப்படுத்தல் செயற்பாட்டை மேற்க்கொள்ள தொழினுட்பம் பற்றிய அறிவு முக்கியமானதாக காணப்படுகின்றது.

இன்றைய நிலையில் இலத்திரனியல் வணிகச் சந்தையானது தன்னகத்தே எவ்விதமான தடைகளையும் கொண்டிராத முற்றிலும் திறந்த சந்தையாகவே (open market) காணப்படுகின்றது. இந்த சந்தையில் வாடிக்கையாளர்களை தம்வசப்படுத்திக் கொள்ளும் சந்தைப்படுத்தல் திறன் கொண்ட எவருமே ராஜாதான்.

இவ்வாறு தொழிற்படும் மின் வணிகத்தில் ஒரு தனிநபராக அல்லது நிறுவனமாக வெற்றி கொள்ள அடிப்படையாக உள்ள விதிகள் தொடர்பிலும் வளர்ச்சி உள்ளது. வாடிக்கையாளர்களின் நேரமின்மை என்கின்ற ஒரு கருவை மூலதனமாக கொண்டு இயங்கும் இவ்வகை வணிகங்கள் தனித்து மனிதர்களுக்கான பொருட்களை மாத்திரம் வழங்குவதில்லை. அவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் உருவாக்கக் கூடிய பொருட்கள் சேவைகளை வழங்குவதிலும் மின் வணிகம் வெற்றி காண்கின்றது என்று தான் சொல்ல வேண்டும்.

மின் வணிகத்தினை பொறுத்தவரையில் கொள்வனவாளர்கள் சந்தையை உருவாக்க வேண்டிய அவசியமில்லை. சந்தை வாய்ப்பை கொண்டிராத பொருட்களை அல்லது சந்தை வாய்ப்பை கொண்ட பொருட்களை கூட எளிமையாக கொள்வனவாளர்களிடம் கொண்டு சேர்க்கும் வேலையையே மின் வணிகச் சந்தை செய்கின்றது.

பாரம்பரிய வணிக முறையில் கொள்வனவாளர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினையாக விநியோக சங்கிலி காணப்பட்டது. அதாவது உற்பத்தியாளர்களிடமிருந்து பொருட்களை வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்க்கும் வரையில் உத்பத்திப் பொருட்கள் மீது சேர்க்கப்படும் மேலதிக செலவுகள் உத்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகப்படுத்தும்.

ஆனால் இணைய சந்தையில் உற்பத்தியாளர் கூட விற்பனையாளராக இருக்கலாம் அல்லது வாடிக்கையாளரை நேரடியாக சந்தித்துக் கொள்ளக் கூடிய மின் சந்தையில் உற்பத்தியாளரே விற்பனையாளராக இருக்கலாம். இதன் விளைவாக செலவீனங்கள் குறைக்கப்பட்டு சந்தை வாய்ப்பு உருவாக்கப்படுகின்றது.

இன்றைய போட்டி சூழலில் நிறுவனமொன்று வெற்றியடைய தொழினுட்பம் முக்கியமானதொன்றாக காணப்படுகின்றது.

ஆகவே தான் சந்தைப்படுத்தல் செயற்பாட்டை வழங்குகின்ற ஒவ்வொரு நபரும் நவீன தொழினுட்பம் தொடர்பான பூரண அறிவுடையவராக இருத்தல் வேண்டும். இவ்வாறு இருக்கும் பட்சத்தில் தான் தங்களுடைய தொழிலினை சிறப்பாக முன்னெடுத்துச் செல்ல முடியும்..

# பணக்கார அப்பா!

பரபரப்பில் இருந்தாள், சுகந்தி.

வாழ்க்கையில் இப்படி ஓர் இக்கட்டு ஏற்பட்டு, குழப்பத்தில் ஆழ்த்தி, நிலை குலைய வைக்கும் என்று, அவள் கனவில் கூட நினைக்கவில்லை.

பல்வேறு சலுகைகளையும், கல்வியறிவையும் அவள் கேட்காமலேயே அப்பா சாந்தலிங்கம் அளித்த போதிலும், ‘அந்த விஷயத்தில்’ தன் விருப்பத்துக்கு, ஒருபோதும் செவி சாய்க்க மாட்டார் என்பது தெரியும்.

அப்பாவிடம், சுருக்கெழுத்தாளனாய் பணிபுரியும், பிரபுவை, காதலிக்கிறாள், சுகந்தி. இந்த விஷயம் தெரிந்தால், கட்டையை எடுத்து அடிக்க முற்படாவிட்டாலும், அவளின் எண்ணத்தை அப்பா ஏற்க மாட்டார் என்பதில், எள்ளளவும் ஐயம் இல்லை.

அப்போது, சுகந்திக்கு, 10 வயது. 45 வயதில், மனைவியை இழந்தார், சாந்தலிங்கம். வேறு குழந்தைகள் இல்லை. உறவினர்களும், அவரின் நிலையை பயன்படுத்திக் கொள்ள நினைத்த சில நண்பர்களும், மறுமணத்துக்கு வற்புறுத்தினர்.

‘என் ஒரே குறிக்கோள், மகள் சுகந்தி, கண் கலங்காமல் வாழ வேண்டும்... மறுமணம், அதற்கு தடையாக இருக்கக் கூடும். எனவே, அந்த பேச்சே இனி வேண்டாம்...’ என்று, துளியும் வளைந்து கொடுக்காமல், திட்டவட்டமாக அறிவித்தார்.

‘அப்பா... அப்பா...’ என்று, அவளும், உயிராகத்தான் இருந்தாள். எனினும், பணக்கார இளைஞன் ஒருவன் தான், மாப்பிள்ளையாக வர வேண்டும் என்று, அப்பா ஆசைப்படுவார் என்பதற்காக, காதலைத் துறக்க, அவள் தயாரில்லை.

‘இருவரும் வாழ்வோம். ஒரு நகை கூட, எடுத்து வரக்கூடாது...’ என்பது, காதலன் பிரபுவின் கண்டிப்பான நிபந்தனை.

‘அப்பா... என்னை மன்னித்து விடுங்கள். இது, என் வாழ்க்கை பிரச்னை...’ என, நினைத்து கொண்டாள்.

வீட்டிலிருந்து புறப்படுகையில், இந்த புலம்பல்களை எல்லாம், ஒரு கடிதமாய் எழுதி, அப்பாவுக்கு வைக்கலாம் என்ற எண்ணம் மனதில் எழ, உடனே, அதை கைவிட்டாள். பின், மெதுவாக எழுதி அனுப்புவது தான் சரியாக இருக்கும் என்று தோன்றியது.

அன்று மாலை, அதிசயமாய், சீக்கிரம் வீடு திரும்பினார், சாந்தலிங்கம்.

சுகந்தி, வீட்டில் இல்லை.

படிப்பை முடித்து, வீட்டில் இருந்ததால், ஒருவேளை, தோழி யாரையாவது சந்திக்க போயிருப்பாள் என நினைத்து கொண்டார். வேலையாளை அழைத்து, ’சுகந்தி, வெளியே போயிருக்காளா?’என்று விசாரித்தார்.

’ஆமாங்கய்யா... அம்மா, வர்றதுக்கு,’லேட்’ ஆகும்ன்னு சொல்லிட்டு போச்சு.’

’எங்க போயிருக்கான்னு தெரியுமா?’

‘பிரெண்டு வீட்டுக்குன்னு சொன்னாங்க... ‘எந்த பிரெண்டு...‘ன்னு கேட்டேன், என்னைய மொறச்சுப் பாத்தாங்க... கையில ஒரு பெரிய பை வெச்சிருந்தாங்க... அது பத்தி வெசாரிச்சதுக்கு, ‘யாத்திரை போறேன்...‘ன்னு, சொல்லிச் சிரிச்சாங்க... அப்பால, ஏதோ, ’டிராமா’வில நடிக்கப் போற பிரெண்டுக்காக, தன்னோட, ‘டிரெஸ்’சுங்களை குடுக்க போறதாச் சொன்னாங்க.’

’எப்ப திரும்புவேன்னு சொன்னாளா?’

‘இல்லீங்கய்யா... காரை எடுத்துக்கிட்டு போகலை... ‘ஆட்டோ ஸ்டாண்டு’க்கு போறதா சொன்னாங்க.’

‘ஏன்னு கேட்டியா?’

‘கேட்டேனுங்க... ‘காரை எடுத்துக்கிட்டு போனா, டிரைவர் ரொம்ப நேரம் காத்துட்டு இருக்கும்படி இருக்கும்... அந்தாளு, காலா காலத்துல வீட்டுக்கு போக வேணாமா... அவரு, நமக்கென்ன கொத்தடிமையா...’ன்னு, கேட்டாங்க.’ சிரித்தார், சாந்தலிங்கம்.

‘சரி... நீ போ!’

‘அய்யா... உங்களாண்ட, ஒரு வெசயஞ் சொல்லணும்ங்க,’ என்றான்.

‘சொல்லு... தயங்கித் தயங்கி பேசுறதை பாத்தா, விஷயம் பெரிசா இருக்கும் போல தோணுதே,’ என்றார்.

‘அய்யாவோட, இஸ்டெனோ, பிரபு தம்பியும், சுகந்தி அம்மாவும், பழகிட்டு இருக்காங்க... அவங்க ரெண்டு பேத்தையும், ‘பீச்’சுல வச்சு, நாலைஞ்சு தபா பாத்தேங்கய்யா.’

‘எத்தினி நாளா, இது உனக்கு தெரியும்?’


‘ஒரு ரெண்டு மாசமாத்தாங்கய்யா.’

‘இதை ஏன், ஏங்கிட்ட அப்பவே சொல்லலே?’

தலையைத் தாழ்த்திக் கொண்டான், வேலையாள். குற்ற உணர்வில் அவன் முகம் வெளிறியது.

அன்றிலிருந்து ஒரு வாரத்துக்கு விடுப்பு எடுத்திருந்தான், பிரபு. அவன் விடுப்பு எடுத்திருந்ததையும், பெரிய பையுடன், சுகந்தி வெளியே புறப்பட்டு போயிருப்பதையும் முடிச்சுப் போட்டு பார்த்து, நிலைகுலைந்து போனார், சாந்தலிங்கம்.

உடனே, ‘இண்டியன் டிடெக்டிவ் ஏஜென்சி’ எனும், துப்பறியும் நிறுவன உரிமையாளரை தொடர்பு கொண்டார்.



பங்களாவை வந்தடைந்தார், துப்பறியும் வல்லுனர், துளசிங்கம்.

‘சார்... உங்க ஆபீசுக்கு போய், பிரபுவோட, மேஜை இழுப்பறையை குடையணும்... அவனையும் அறியாம, ஏதாச்சும் தகவலை விட்டிருப்பான்... உங்க பொண்ணோட புகைப்படம் ஒண்ணு வேணும்.’

சுகந்தியின் புகைப்படம் ஒன்றை, துளசிங்கத்திடம் கொடுத்தார். பின், இருவரும், அலுவலகத்துக்கு காரில் பறந்தனர்.

பெட்டியிலிருந்து எடுத்த, நுனி வளைந்த ஓர் இரும்புக்கம்பியால், இரண்டே நொடிகளுள், பிரபுவின் மேஜை இழுப்பறையை திறந்தார், துளசிங்கம். அவனுடைய சுருக்கெழுத்து நோட்டு புத்தகத்தை புரட்டினார். அதன் அட்டையில், அவன் கிறுக்கியிருந்த ஒரு தொலைபேசி எண், அவர் கவனத்தை ஈர்த்தது.

சில நிமிடங்களிலேயே, அது, தனியார், ‘டிராவல் ஏஜென்சி’யின் எண் என, தெரிந்தது. உடனே, தொடர்பு கொண்டார்.

‘நாங்க, போலீஸ் டிபார்ட்மென்ட்லேர்ந்து பேசுறோம்... இன்னைக்கு, உங்க டிராவல் ஏஜென்சியில, பிரபுன்னு யாராச்சும், கார், ‘புக்’ பண்ணினாங்களா... அப்படியா... எந்த ஊருக்கு, திருச்சிக்கா... டாக்சி டிரைவர்கிட்ட மொபைல் போன் இருக்குல்ல...

‘அவர்கிட்ட, எதுவுமே சொல்லாம, இப்ப, எந்த இடத்துல வண்டி ஓடிக்கிட்டு இருக்குன்னு, ‘லேண்ட் மார்க்’ கேட்டு, உடனே, தகவல் சொல்லுங்க... என்னோட மொபைல் நம்பரை குறிச்சுக்குங்க,’ என்றார், துளசிங்கம்.

மூன்றே நிமிடங்களில், கார் ஓடிக்கொண்டிருந்த இடம் தெரிந்து விட்டது.

தலையில் முண்டாசு கட்டி, கருப்பு கண்ணாடியை மாட்டியபடி, பின் இருக்கையில் அமர்ந்தார், சாந்தலிங்கம். கண்ணாடி ஜன்னல்களை ஏற்றிக் கொண்டனர். அவர்கள் சென்று கொண்டிருந்த காரை எளிதில் கண்டுபிடித்து, மடக்கி விட்டார், துளசிங்கம்.

ஏற்கனவே பேசி வைத்தபடி, துளசிங்கத்தின் காரிலிருந்து இறங்கி, வேறு கார் பிடித்து, வீடு நோக்கி பயணமானார், சாந்தலிங்கம்.

‘இத பாரும்மா... துப்பறியும் நிறுவனத்தை சேர்ந்த நான், உங்கப்பா குடுத்த புகாரின் படி, உங்களை கண்டுபிடிச்சிருக்கேன்... உங்கப்பா, மனசு ஒடிஞ்சு போயிருக்காரு... நீங்க மேஜராய் இருக்கலாம்... இருந்தாலும், எந்த தகராறும் பண்ணாம, ரெண்டு பேரும், என் வண்டியில -ஏறுங்க... இல்லாட்டி, அசிங்கமா போயிடும்,’ என்றார், துளசிங்கம்.

சுகந்தியை காட்டிலும், நா உலர்ந்து, அதிக அச்சத்தில் இருந்தான், பிரபு. வேர்த்துக் கொட்டி, சட்டை நனைந்து, மார்போடு ஒட்டிக் கொண்டது. இருவரும் மறுப்பு சொல்லாமல், துளசிங்கத்தின் காரில் ஏறிக்கொண்டனர்.

சாந்தலிங்கத்தின் பங்களா வாயிலில் நின்றது, கார்.

‘போங்க உள்ளே... உங்க ரெண்டு பேரோடவும் பேசுறதுக்கு, காத்துக்கிட்டு இருக்காரு, உங்க அப்பா,’ என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போது, வெளியே வந்து விட்டார், சாந்தலிங்கம்.

‘ரொம்ப நன்றி, துளசிங்கம். நாளை சந்திக்கிறேன்,’ என்று, அவருக்கு விடை கொடுத்த பின், பிரபுவை, ஒரு பார்வை பார்த்தார்.

அவன் முகம், துவண்டது; சுகந்தியின் கண்களில், கண்ணீர் ததும்பியது.

‘ரெண்டு பேரும், என் அறைக்கு போங்க!’

கதவை சாத்தினார், சாந்தலிங்கம்.

‘உக்காருங்க!’

இருவரும், தலை கவிழ்ந்து நின்றனர்.

‘அட... உக்காருங்கன்னு சொல்றேனில்லே!’

இருவரும் உட்கார்ந்த பின், முகத்தை பொத்தி, அழத் துவங்கினார், சாந்தலிங்கம். இப்படி ஒன்றை, சற்றும் எதிர்பார்த்திராத இருவரும், திகைத்து, ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சுகந்தி எழுந்து, சாந்தலிங்கத்தின் அருகே சென்று, ‘எங்களை மன்னிச்சிடுங்கப்பா... முழுக்க, தப்பு என் மேலதாம்ப்பா... பிரபு, இதுக்கு லேசிலே ஒத்துக்கலே... நான் தான் அவரை கட்டாயப் படுத்தினேன்,’ என்றாள்.

கண்களை துடைத்துக் கொண்ட சாந்தலிங்கம், ‘நான் என்ன தப்பும்மா செஞ்சேன்... பிரபுவை கல்யாணம் பண்ணிக்க, உனக்கு விருப்பம்னா, மனசு விட்டு அதை ஏங்கிட்ட சொல்லி இருந்திருக்கலாமேம்மா... அஞ்சி, நடுங்கும்படியாம்மா உன்னை வளர்த்தேன்...

‘இவ்வளவு பெரிய விஷயத்துல, உன்னை கண் கலங்க விடுவேன்னு, உன் அப்பாவை பத்தி தப்பா எடை போடலாமா... எதுக்கு இப்படி செஞ்சே... எதனால உன்னோட எண்ணத்தை எங்கிட்ட சொல்லாம, ஓடிப்போக முடிவு பண்ணினே... சொல்லும்மா,’- என, மீண்டும் கண்ணீர் விட்டார்.

‘பிரபு... ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்ன்றதால, எப்பவுமே லட்சம், கோடின்னு தொழில் பண்ற நீங்க, இதுக்கு ஒத்துக்க மாட்டீங்கன்னு தோணினது. அதனால தாம்ப்பா, இப்படி ஒரு முடிவை எடுத்தோம்,’ என்றாள், சுகந்தி.

‘எல்லா பணக்கார அப்பனுங்களும், ஒரே குட்டையில் ஊறின மட்டைகள் இல்லம்மா... இதயம் உள்ளவங்களும், பணத்தை விடவும், தான் பெத்த குழந்தைகளோட மகிழ்ச்சி தான் பெரிசுன்னு நினைக்கிறவங்களும் இருக்காங்கம்மா... அந்த சிலர்ல, உன் அப்பாவும் ஒருத்தரா இருக்கக் கூடும்கிற நம்பிக்கை, உனக்கு ஏம்மா வரலே?’

‘இவ்வளவு நாள், உங்க மகளாய் இருந்தும், உங்க மனசை புரிஞ்சுக்கலே... என்னை மன்னிச்சிடுங்கப்பா,’ என்றாள், சுகந்தி.

‘தப்பெல்லாம் என் மேலதாம்மா... எப்ப பாரு, தொழில்ன்னு... நீ சொன்ன மாதிரி லட்சம், கோடின்னு பணத்தை பத்தியே பினாத்தல்ல இருக்கிற என்னை பத்தி, நீ வேற எப்படிம்மா கணிக்க முடியும்... பெத்த தாயும் சரி, தகப்பனும் சரி, குழந்தைங்களோட நிறையவே பேசணும்மா...

‘தங்களோட கருத்துகளை எல்லாம் குழந்தைகளுக்கு சொல்லணும்மா... குழந்தைகளும் சரி, பெத்தவங்களும் சரி, ஒருத்தருக்கொருத்தர் மனசு விட்டு பேசிக்கிட்டா, இது மாதிரி தவறான கணிப்புக்கு இடமே இருக்காது. தப்பான முடிவுக்கு வரவும் மாட்டாங்க!’

‘ஆமாம்ப்பா... நீங்க சொல்றது, நூத்துக்கு நூறு சரி... உங்களை தப்பா புரிஞ்சுக்கிட்டதால தான், இப்படி ஒரு முடிவுக்கு வந்துட்டேன்... மன்னிச்சுக்குங்கப்பா.’-

‘சரி... உன் விருப்பப்படியே, ஒரு நல்ல நாள்லே நாலு பேர் அறிய, பத்திரிகை அடிச்சு, பெரிய கல்யாண மண்டபத்துல, பிரபுவை கல்யாணம் பண்ணிக்க... என் ஆசியோட, உங்க கல்யாணம், ‘ஜாம் ஜாம்’ன்னு நடக்கும்... பிரபு, கண்ணைத் துடைச்சுக்க,’ என்றார்.

இருவரும் திகைத்தனர்.

கதவைத் திறந்து, வேலையாளிடம் மூன்று கோப்பைகளில் எலுமிச்சை சாறு எடுத்து வர பணித்தார், சாந்தலிங்கம்.

நடந்ததை ஓரளவுக்கு ஊகித்து, துள்ளலுடன் சமையல்கட்டுக்கு ஓடினான், வேலையாள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், தான் விரும்பிய பெண்ணின் தந்தை, ஏழை என்பதற்காக, தன்னை நிராகரித்ததோடு, அடித்துப் போடவும் சதி செய்தார். ஆனால், அது பற்றி, தன் தோழியிடம் சொல்லி அனுப்பினாள், காதலி.

இதனால், தான் ஊரை விட்டே ஓட நேர்ந்ததையும், ஒரு வீம்போடு பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு, பொருளீட்டி, பணக்காரன் ஆனதையும் அசை போட்டார், சாந்தலிங்கம்.

‘நான் ஆட்பட்ட காதல் தோல்விக்கு, என் மகள் ஆளாகப் போவதில்லை...’ என்று, மகிழ்ச்சி அடைந்தார்.

**ஜோதிர்லதா கிரிஜா**



# அனிகாதான் வேண்டும் அடம் பிடிக்கும் அஜித்

நடிகை அனிகாவை நடிகர் அஜித் தனது படங்களில் எல்லாம் தொடர்ந்து நடிக்க வைப்பதற்கு நிறைய காரணம் இருப்பதாக கூறப்படுகிறது. மலையாளத்திலும் தமிழிலும் நிறைய படங்களில் நடித்து பிரபலம் அடைந்தவர் அனிகா. முக்கியமாக மலையாளத்தில் இவர் நடித்த பாஸ்கர் திராஸ்கல் மற்றும் 5 சுந்தரிகள் ஆகிய படங்கள் பெரிய வரவேற்பை பெற்றது. தமிழில் இவர் எல்லோருக்கும் தெரிந்தது என்னை அறிந்தால் படத்தில் இருந்துதான். அந்த படத்தில் இவர் அஜித்திற்கு மகளாக நடித்து இருந்தார்.

கெளதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்திருந்த என்னை அறிந்தால் படத்தில் அஜித்துக்கு மகளாக நடித்திருந்தவர் அனிகா. இந்த படம் பெரிய அளவில் அஜித்திற்கு ஹிட் கொடுத்தது. அதேபோல் அனிகாவிற்கு பெரிய ரசிகர் பட்டாளத்தை ஏற்படுத்தி கொடுத்தது.

அதுமட்டுமில்லாமல் இவரின் நடிப்பு எல்லோரையும் கவர்ந்து இருந்தது. அம்மாவை இழந்துவிட்டு, அஜித்துடன் இவர் கொடுத்த குட்டி குட்டி ரியாக்சன்கள் எல்லாம் பக்கா மாஸ். அதிலும் உனக்கென்ன வேணும் சொல்லு அஜித் - அனிகா இடையே பெரிய அப்பா - மகள் கெமிஸ்ட்ரி பாடலாக அமைந்தது.

அதன்பின் சிவா இயக்கத்தில் அப்பா மகள் பாசத்தை மையப்படுத்தி விசுவாசம் படம் வெளியானது. இந்த படத்திலும் அஜித்திற்கு மகளாக அனிகா நடித்து இருந்தார். அதிலும் அஜித் அனிகாவை பார்த்து என் ஜாமி என்று சொல்லும் வசனம் எல்லாம் தியேட்டரில் பெரிய அப்ளாஸ் அள்ளியது.

இந்த நிலையில் தற்போது அஜித் மீண்டும் அனிகாவுடன் நடிக்க உள்ளார். அஜித் நடிப்பில் எச். வினோத் இயக்கும் அடுத்த படத்தில் அனிகா நடிக்க உள்ளார். இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதிலும் அவர் அஜித்திற்கு மகளாக நடிக்க உள்ளார்.

அஜித் தொடர்ந்து அனிகாவை தனது படங்களில் நடிக்க வைப்பதற்கு நிறைய காரணம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அனிகாவை அஜித் தனது குடும்பமாக பார்க்கிறார் என்று கூறப்படுகிறது. அனிகா மற்றும் அஜித் மகள் அனோஷ்கா இருவரும் நெருங்கிய நண்பர்களாம்.

அதேபோல் அனிகா அடிக்கடி அஜித் வீட்டிற்கு செல்வார். ஷாலினிக்கு அனிகா செல்லப்பிள்ளையாம். இதனால் படத்திலும் அஜித் அனிகா, அப்பா மகளாக நடித்தால் நன்றாக வொர்க் அவுட் ஆகிறது என்று கூறுகிறார்கள். அதேபோல் தனது படங்களின் வெற்றிக்கும் அனிகா சென்டிமெண்டாக ஒரு காரணம் என்று அஜித் கருதுகிறார்.

ஆம், என்னை அறிந்தால் படம் அஜித்திற்கு பெரிய அளவில் சிட்டி ரசிகர்களை அளித்தது. அதிலும் தான் இழந்த பெண் ரசிகர்களை அவர் என்னை அறிந்தால் படத்தின் உனக்கென்ன வேணும் சொல்லு பாடல் மூலம் மீண்டும் மீட்டெடுத்தார். விசுவாசம் படமும் அவருக்கு குடும்ப ரசிகர்களை நிறைய திருப்பிக்கொடுத்தது.

இதற்கு எல்லாம் அனிகாவும் ஒரு காரணம். அவரின் ராசி மிகவும் நன்றாக இருக்கிறது. அதனால் அவரே நடிக்கட்டும் என்று அஜித் தனது படங்களில் எல்லாம் அனிகாவை ஒப்பந்தம் செய்து வருகிறார் என்கிறார்கள்.

# தமிழுக்கு வரும் அனு சித்தாரா



மலையாள நடிகை அனு சித்தாரா, அமீரா படத்தின் மூலம் தமிழில் அறிமுகம் ஆகிறார். ஆர்.கே.சுரேஷ், சீமான், எம்.எஸ்.பாஸ்கர், இளவரசு, ஜெயக்குமார், வினோதினி நடிக்கின்றனர். டூலெட் படத்தின் இயக்குனரும், ஒளிப்பதிவாளருமான செழியன் ஒளிப்பதிவு செய்கிறார். விஷால் சந்திரசேகர் இசை அமைக்கிறார். சீமான் உதவியாளர் சுப்பிரமணியன்

இயக்குகிறார். அவர் கூறுகையில், அமீரா என்றால், இளவரசி என்று அர்த்தம். இஸ்லாமிய பெண்ணை சுற்றி நடக்கும் பிரச்னைகள் பற்றிய கதை என்பதால், அமீரா என பெயர்சூட்டியுள்ளோம். கேரளாவில் சிங்கிள் டேக் நடிகை என சொல்லப்படுகின்ற அனு சித்தாரா, பெரும்பாலான காட்சியில் தன்னுடைய கண்களாலேயே பேசி நடித்து அசத்தினார் என்று சொன்னார்.

# சமர்



# கத்திக்குள் புகுந்த ஆவி



திருச்சி டெல் கணேசன் தயாரித்துள்ள ஹாலிவுட் படம், டெவில்ஸ் நைட். ஹாலிவுட் கலைஞர்கள் நடித்துள்ள இப்படம், ஹாலிவுட்டை தொடர்ந்து இந்தியாவிலும் ரிலீசாகிறது. படம் குறித்து டெல் கணேசன் கூறுகையில், பலநூறு வருடங்களுக்கு முன்னால், செவ்விந்தியர்கள் கட்டுப்பாட்டில் அமெரிக்கா இருந்தது. பிறகு செவ்விந்தியர்களை வெள்ளையர்கள் துரத்திவிட்டு நிலங்களை அபகரித்தனர். அப்போது அகால மரணம் அடைந்த ஒரு செவ்விந்தியரின் ஆவி, மியூசியத்தில் இருக்கும் ஒரு கத்திக்குள் குடியேறுகிறது.

திடீரென்று அதிலிருந்து வெளியேறுகின்ற ஆவி, ஒவ்வொருவராக பழிவாங்குகிறது. இது குறித்து போலீஸ் விசாரிக்கும்போது, அதிர்ச்சிகரமான சில சம்பவங்கள் நடக்கிறது. இதையடுத்து, அந்த மியூசியத்தின் ஒரே காப்பாளர் நெப்போலியன் உதவியுடன் ஆவி எவ்வாறு சரண்டர் ஆகிறது என்பதுதான் கதை. ஹாலிவுட் நடிகை சலீனா கஸ்மனோ, நர்ஸ் வேடத்தில் நடிக்கிறார். அஸ்வின் கணேசன் இசை அமைத்து இருக்கிறார் என்றார்.



# அருண் விஜய் ஜோடியாக பல்லக் லல்வானி


தமிழில் மாஃபியா, பாக்ஸர், அக்னிச் சிறகுகள் ஆகி படங்களில் நடிக்கும் அருண் விஜய், ஜி.என்.ஆர்.குமரவே லன் இயக்கும் கிரைம் திரில்லர் படத்தில் போலீஸ் அதிக யாக நடிக்கிறார். அவரது ஜோடியாக பல்லக் லல்வானி ந கிறார். குப்பத்து ராஜா, சிக்சர் ஆகிய படங்களில் நடித் தவர் இவர். கோபி நாத் ஒளிப்பதிவு செய்ய, சபீர் இசை அமைக்கிறார். மூவி ஸ்லைட்ஸ் பட நிறுவனம் தயாரிக்கி றது. இது அருண் விஜய் நடிக்கும் 30வது படமாகும்.



# ஒருநாள் முழுக்க படமான முத்தக்காட்சி

ஆண்மை தவறேல் ஹீரோ துரு வா, இந்துஜா நடித்துள்ள படம், சூப்பர் டூப்பர். ஏ.கே இயக்கியுள்ள இப்படம், வரும் 20ம் தேதி வெளியாகிறது. படம் குறித்து துருவா கூறியதாவது: திலகர் படத்தில் நடித்த துருவா, ஆதித்ய வர்மா படத்தில் நடிக்கும் துருவ் விக்ரம் ஆகியோர் இருந்தாலும் கூட, என் பெயர் துருவா என்பதையே தொடர முடிவு செய்துள்ளேன். சூப்பர் டூப்பர் படத்தில், கதைப்ப நான் காதலிக்கும் இந்துஜா நிறைய பிரச்னைகளில் சிக்கி தவிக்கிறார். இதையறிந்த நான், அந்த பிரச்னைகளை தீர்த் வைக்கிறேனா அல்லது காதலிக்கு குட் பை சொல்லி விடுகிறேனா என்ப கிளைமாக்ஸ்.

திருவான்மியூர் ஷூட்டிங் ஸ்பாட்டில் எனக்கும், இந்துஜாவுக்கும் முத்தக்காட்சி படமாக்கப்பட்டது. இயல்பாகவே நான் கூச்ச சுபாவம் உள்ளவன் என்பதால், டைரக்டர் ஏ.கே எதிர்பார்த்த அளவு நடிக் முடியாமல் திணறினேன். இதனால் ஒரு நாள் முழுக்க இந்த காட்சியை படமாக்கி பிறகே டைரக்டர் திருப்தி அடைந்தார். படத்துக்கு யு/ஏ சான்றிதழ் கிடைத்துள்ள




# ரசிகர்களை மிரள வைத்த முதற் பார்வை!

ஜி.வி.பிரகாஷ் நடித்து வெளியாகவிருக்கும் பேச்சிலர் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட்டார் இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங்.

இசையமைப்பாளராக தமிழ் சினிமாவில் அறிமுகமாகி நடிகரானவர் ஜி.வி.பிரகாஷ். இவர் நடித்து தற்போது வெளியாகியுள்ள சிவப்பு, மஞ்சள், பச்சை நன்றாக போய் கொண்டிருக்கிறது. அடுத்ததாக ஐங்கரன் என்ற படமும் ரிலீஸுக்கு தயாராக உள்ளது. இந்நிலையில் தனது அடுத்தப்படமான பேச்சிலர் என்கிற படத்தை நடித்து முடித்திருக்கிறார் ஜி.வி.பிரகாஷ்.


சதீஷ் செல்வகுமார் இயக்கியிருக்கும் இந்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் தனது ட்விட்டரில் வெளியிட்டார். அந்த பதிவில் அவர் கல்யாணம் ஆனா கம்முனு இருக்கனும்..கமிட் ஆனா உம்முனு இருக்கனும்... **Bachelor**னா ஜம்முனு இருக்கலாம்.. **Bachelor First Look** வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன் வாழ்த்துக்கள்! என்று கூறியுள்ளார்.

ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரை பார்த்த ரசிகர்கள் மிரண்டு போயுள்ளனர். வழக்கமாக அடல்ட் படங்களாக நடித்து வந்ததாலேயே ஜி.வி.பிரகாஷ் மீது பலருக்கு அதிருப்தி நிலவி வந்தது. ஜி.வி.பிரகாஷ் படங்களை குடும்பத்தோடு சென்று பார்க்க முடியாது என்று பொதுமக்களிடையே நிலவி வந்த கருத்தை சமீபத்தில் வந்த படங்கள் கொஞ்சம் மாற்றியுள்ளன. ஆனால் இந்த பேச்சிலர் படத்தின் ஃபர்ஸ்ட்லுக் ஜி.வி.பிரகாஷ் பழைய மாதிரியே நடிக்க கிளம்பி விட்டாரோ என ரசிகர்களை எண்ண வைத்திருக்கிறது. ஆயினும் இளைஞர்கள் மத்தியில் இந்த ஃபர்ஸ்ட் லுக் நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளது.

இயக்குநராகணும்னு சினிமாவுக்கு வர்றவங்க எல்லோருக்கும் அவங்க பெயரை திரையில பார்க்கும்போது ரொம்ப சந்தோஷமா இருக்கும். அப்படிதான் எனக்கும் இருந்தது. எத்தனையோ ஜாம்பவான்களுடைய பெயர்கள் வந்த எங்க ஊர் தியேட்டர்ல என் பெயரை முதல்முறையா பார்த்தவுடன் ரொம்ப எமோஷனலாகிட்டேன் - தன்னுடைய முதல் படம் ஈரம் வெளியாகி பத்து வருடம் நிறைவடைந்ததையொட்டி அதன் நினைவுகளை நம்மிடம் பகிர்ந்துகொள்கிறார், இயக்குநர் அறிவழகன்.

**ஈரம் கதையைத் தயாரிப்பாளர் ஷங்கர்கிட்ட சொல்லும்போது எப்படி இருந்தது... கதை கேட்டுட்டு என்ன சொன்னார்?**

ஒருநாள் ஷங்கர் சார்கிட்ட ரெண்டு கதையுடைய ஒன்லைன் சொன்னேன். அதுல அவருக்கு ஈரம் கதை பிடிச்சிருந்தது. அதை முழுமையா எழுதிட்டு வானு சொன்னார். ஒரு மாசம் கழிச்சு அவர்கிட்ட கதை சொல்லப் போனேன். அவர் தயாரிப்பாளர் மட்டும் இல்லை. பெரிய இயக்குநர், என்னுடைய குருநாதர். அதனால எங்க நான் சொதப்பினாலும் அவர் கண்டுபிடிச்சிடுவார்னு தெரியும். அதனால ரொம்ப கவனமா தயார் பண்ணிட்டு போய் நாலு மணி நேரம் கதை சொன்னேன். அதைக் கேட்டுட்டு, 'இதை பவுன்டட் ஸ்கிரிப்டா பண்ணிட்டு வானு சொன்னார். நானும் கதையா இருந்ததை படத்துக்கான ஸ்கிரிப்டா மாத்திட்டு கொண்டுபோய் கொடுத்துட்டு வந்துட்டேன். அதை அவர் முழுமையா படிச்சு, எக்ஸாம் பேப்பரை திருத்துற மாதிரி பேனாவுல திருத்தியிருந்தார். அதுல சில இடங்கள்ல **Good**', சில இடங்கள்ல **Very Good**னு போட்டிருந்தார். கதை நல்லாயிருக்கு. நிறைய பேர் தோத்துப்போற இடம் அந்தக் கதையைக் காட்சியாக்கும்போதுதான். அதனால, இந்தக் கதையில இருக்கிற ஏதாவது ரெண்டு சீனை



எடுத்துக்காட்டு
றேன்னு சொன்

**ஆதி, சிந்து**
**டைய முதல் சா**
இது டூயல்



# சிவப்பு! மஞ்சள்! பச்சை!

கடமை, கண்ணியம், காவல்துறை காவல் அதிகாரியாக சித்தார்த். மிடுக்கான உடல் மொழியும் துடுக்கான பேச்சுமாக ஆச்சர்யப்படுத்துகிறார். அக்காவின் அன்புத் தம்பியாக, அக்காவுக்கு அன்புத்தகப்பனாக, ஸ்ட்ரீட் ரேஸ் ஓட்டும் ரேஸராக ஜி.வி.பிரகாஷ். முதிர்ச்சியில்லாத பதின்பருவத்துக் கதாபாத்திரத்தில் சிறப்பாய் நடித்திருக்கிறார்.


கதையின் அச்சாணியான ராஜி பாத்திரத்தில் கொஞ்சமும் பிசிறில்லாமல், பிரமாதமாய் நடித்துக்கொடுத்திருக்கிறார் அறிமுக நடிகை லிஜோமோல் ஜோஸ். நல்வரவு! ஜி.வி-யின் காதலியாக வரும் காஷ்மீராவுக்கு நடிப்பதற்கான இடங்கள் குறைவு என்றாலும் குறையில்லாத நடிப்பு. ஜி.வி.பிரகாஷ் அத்தையாக நடித்திருக்கும் நக்கலைட்ஸ் தனத்தை இனி நிறைய படங்களில் பார்க்கலாம். பைக் ரேஸர் பாய்ஸும் செம நெருப்பு!

சித்துகுமார் இசையில் மயிலாஞ்சியே பாடல், மயிலிறகின் வருடல். பின்னணி இசையிலும் கவனம் ஈர்க்கிறார். ஒளிப்பதிவாளர் பிரசன்னகுமாரின் கேமரா, ரேஸ் காட்சிகளிலெல்லாம் வெறித்தனம் காட்டியிருக்கிறது. ஷான் லோகேஷின் படத்தொகுப்பு, படத்தின் வேகத்தை ஜிவ்வெனக் கூட்டியிருக்கிறது.

சசியின் படங்களில் சமூக அக்கறையுடன் சென்டிமென்ட் கலவை இருக்கும். இந்தப் படத்திலும் அதே. முதிரா இளைஞனின் முரட்டுத்தனத்தையும் உறவுகளின் முரண்பாடுகளையும் அழகாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் சசி. ஆனால் சென்டிமென்ட் கொஞ்சம் தூக்கலாகிப் போனதில் சீரியல் வாடை அடிக்கிறது.

'சாந்துப்பொட்டு ஒரு சந்தனப்பொட்டு... எடுத்து வெச்சுக்க வெச்சுக்க மாமோய்' என்று 'ஆண்மை என்றால் வீரம்','பெண்மை என்றால் கோழைத்தனம்' என்று நூற்றாண்டாகச் சித்திரிக்கும் தமிழ் சினிமாவில் அதற்கு எதிரான குரலை முன்வைத்ததற்காக சசிக்கு அழுத்தமான கைகுலுக்கல்.

நாடகத்தனம் ஆங்காங்கே சிவப்பு விளக்கு போட்டாலும், பாசத்துக்கும் சமூக அக்கறைக்கும்



பார்

# ந்தாவைவிட தீபிகாதான் பொருத்தம்



சமீபத்தில் சுவிட்சர்லாந்தில் நடந்த சர்வதேச பேட்மிண்டன் விளையாட்டுபோட்டியில் ஜப்பான் வீராங்கனையை வீழ்த்தி சாம்பியன் பட்டத்துடன் தங்கப்பதக்கம் வென்றார் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து. அவரது வாழ்க்கை வரலாறு திரைப்படமாக உருவாகிறது. சிந்து கதாபாத்திரத்தில் நடிக்க சமந்தாவிடம் பட தயாரிப்பாளர்கள் பேசினர். அவரும் நடிக்க கிரீன் சிக்னல் காட்டியிருக்கிறார்.

தனது வாழ்க்கை வரலாறு படத்தில் சமந்தா நடிப்பதற்கு பி.வி.சிந்து வாழ்த்தும், நன்றியும் தெரிவிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த நிலையில் மாறுபட்ட கருத்து கூறி அதிர்ச்சி தந்திருக்கிறார். உங்கள் வாழ்க்கை கதையில் யார் நடித்தால் பொருத்தமாக இருக்கும் என்று பி.வி.சிந்துவிடம் கேட்டபோது,எனது வாழ்க்கை கதையில் சமந்தாவைவிட தீபிகா படுகோன் நடித்தால் பொருத்தமாக இருப்பார்.

ஏனென்றால் அவரும் ஒரு பேட்மிண்டன் வீராங்கனை. ஆனாலும் எனது கதாபாத்திரத்தில் யார் நடிக்க வேண்டும் என்பதை படம் தயாரிப்பாளர்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என தெரிவித்தார். வம்பிழுக்கும் வகையில் பி.வி.சிந்து அளித்த இந்த பதிலை சமந்தா எப்படி ஜீரணித்துக்கொள்வாரோ என்று பட தரப்பினர் எண்ணி கலக்கத்தில் உள்ளனர்.

## மீண்டும் தமிழில் ஸ்ரீதிவ்யா



எஸ்.டி.விஜய் மில்டன் ஒளிப்பதிவு செய்து இயக்கும் பெயரிடப்படாத படத்தில் விஜய் ஆண்டனி, அல்லு சிரிஷ் நடிக்கின்றனர். நீண்ட இடைவெளிக்கு பிறகு ஸ்ரீதிவ்யா நடிக்கிறார். தமிழில் அவர் கடைசியாக நடித்த படம், சங்கிலி புங்கிலி கதவ திற. கடந்த இரண்டு வருடங்களாக புதுப்படங்களில் நடிக்காமல் இருந்த அவர், தற்போது மீண்டும் தமிழில் நடிக்க வந்துள்ளார். நிவாஸ் கே.பிரசன்னா இசை அமைக்கிறார். வரும் டிசம்பர் மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது. அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் படம் ரிலீசாகிறது. கமல் போரா, லலிதா தனஞ்செயன், பிரதீப், பங்கஜ் இணைந்து தயாரிக்கின்றனர்.



## அருண் விஜயின் த்ரில்லர் படம்!

நடிகர் அருண் விஜய் நடிக்கும் புதிய திரைப்படம் அவரது குற்றம் 23 போலீஸ் கதாப்பாத்திரத்தில் இருந்து வேறுபட்ட பாத்திரம். இரண்டு கதைகளின் களங்களும் முற்றிலும் வேறானது. அவரது பாத்திரம் மிகவும் புத்திக்கூர்மை வாய்ந்த, வலுவான ஒரு பாத்திரமாக இருக்கும். அத்துடன் மிகவும் உணரச்சி மிக்கதாகவும் இப்பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. ஹரிதாஸ் திரைப்படம் மூலம் அனைத்து உள்ளங்களையும் கவர்ந்த இயக்குநர் குமரவேலன். தனது திறமையை வெளிக்கொணரும் அடுத்த படைப்பில், தமிழ் சினிமாவின் வெற்றி நாயகரான அருண் விஜய்யுடன் க்ரைம் திரில்லர் படத்தில் களமிறங்குகிறார்.

அருண் விஜய் இப்படத்தில் தன் வெற்றியின் உற்சாக அடையாளமான குற்றம் 23 படத்தின் காக்கி உடையை மீண்டும் இப்படத்தில் அணிய உள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு சிறிய அளவிலான பூஜையுடன் துவங்கியது. படக்குழுவினர் அனைவரும் கலந்துகொள்ள இயக்குநர் நரேன் மற்றும் இயக்குநர் அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டு படக்குழுவினரை வாழ்த்தினர். படம் பற்றி இயக்குநர் குமரவேலன் கூறியதாவது, இப்படம் ஒரு வித்தியாசமான க்ரைம் திரில்லர். இந்த வகை படங்கள் தமிழுக்கு புதிதல்ல ஆனால் இதுவரை வந்தவற்றில் இருந்து முற்றிலும் மாறுபட்ட வகையில் இதுவரை யாரும் பார்த்திராத பாணியில் இப்படம் புதிதாக இருக்கும். நடப்பு சூழலில் உள்ள சமூக அவலத்தை மையமாக கொண்டு தீவிரமாக அலசும் ஒரு திரில்லர் படமாக இருக்கும் என்றார். இப்படத்தில் அருண் விஜய் இணைந்தது பற்றி கூறும்பொழுது, சினிமாவை உயிராய் நேசிக்கும் ஒருவர், அவர் ஏன் இப்படத்தில் இருக்கக் கூடாது என நினைத்தேன். மேலும் அவர் ஏற்கனவே குற்றம் 23 படத்தில் காக்கி சட்டையில் தன்னை கச்சிதமாக பொருத்தி நிரூபித்தவர்.

இப்படம் அவரது குற்றம் 23 போலீஸ் கதாப்பாத்திரத்தில் இருந்து வேறுபட்ட பாத்திரம். இரண்டு கதைகளின் களங்களும் முற்றிலும் வேறானது. அவரது பாத்திரம் மிகவும் புத்திக்கூர்மை வாய்ந்த, வலுவான ஒரு பாத்திரமாக இருக்கும். அத்துடன் மிகவும் உணரச்சி மிக்கதாகவும் இப்பாத்திரம் படைக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கதையை முழுதாக முடித்த போதே அருண் விஜய் மனதில் வந்துவிட்டார். ரசிகர்கள் படத்தினைப்பார்க்கும் போது அவர் இப்பாத்திரத்திற்கு ஏற்றவர் என்பதை நிச்சயம் உணர்வார்கள் என்று குறிப்பிட்டார். இப்படத்தில் நடிக்க மேலும் சில முக்கிய நடிகர்களுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இன்னும் பெயரிடப்படாத இப்படத்தினை மூவி ஸ்லைட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் தயாரிக்கிறார்கள். நடப்பு செப்டம்பர் மாத மத்தியில் இப்படத்தின் ஷூட்டிங் துவங்க உள்ளது.








ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை வெப் சீரிஸாக எடுத்து வரும் கௌதம் மேனனுக்கு ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக் மூலம் புதிய சிக்கல் உருவாகியுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை இயக்குனர் ஏ எல் விஜய் தலைவி என்ற பெயரிலும் பிரியதர்ஷினி தெ அயர்ன் லேடி என்ற பெயரிலும் படமாக எடுக்க முயன்று கொண்டிருக்கின்றனர். இரண்டு படங்களிலும் முறையே கங்கனா ரனாவத் மற்றும் நித்யா மேனன் ஜெயலலிதாவாக நடிக்க இருக்கின்றனர்.

இந்நிலையில் ஜெயலலிதாவின் வாழ்வை மையமாக வைத்து கௌதம் மேனன் பிரசாத் முருகேசன் என்பவருடன் வெப் சீரிஸ் ஒன்றை இயக்கும் முனைப்பில் உள்ளார். அதில் ரம்யா கிருஷ்ணன் ஜெயலலிதாவாக நடிக்கிறார் என சொல்லப்பட்டது. இந்நிலையில் இந்த வெப் சீரிஸ் ஜெயலலிதாவின் நேரடி பயோபிக்காக இல்லாமல் அவரது வாழ்வை மையப்படுத்திய புனைவாக உருவாக இருக்கிறதாம். இதில் ரம்யா கிருஷ்ணன் சக்தி என்ற பெயரில் நடிக்க இருக்கிறார். இந்த வெப் சீரிஸூக்கு குயின் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்போது இந்த வெப் சீரிஸ் பற்றி ஜெயலலிதாவின் அண்ணன் மகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். ஒரு அரசியல் தலைவரை மையமாக வைத்து குயின் என்ற வெப் சீரிஸை கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கி வருவதாகவும், அதில் ரம்யா கிருஷ்ணன் நாயகியாக நடிப்பதாகவும் ஊடகங்கள் மூலம் தெரிந்து கொண்டேன். என் அத்தை ஜெயலலிதாவின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து தலைவி என்ற பெயரில் தான் எடுத்து வரும் படத்தின் கதையை என்னிடம் கூறிய இயக்குநர் விஜய் படத்தைத் தொடங்குவதற்கு தடையில்லாச் சான்றிதழும் பெற்றுச் சென்றார்.

இந்த சூழலில், இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் ஒரு அரசியல் தலைவரைப் பற்றிய தன்னுடைய புதிய வெப் சீரிஸ் பற்றி அறிவித்துள்ளார். அந்த அரசியல் தலைவர் யார் என்பது குறித்து எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. நான் ஊடகங்களிடம் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். என் குடும்பத்தின் அனுமதியின்றி ஏதேனும் ஒரு படமோ அல்லது ஒரு வெப் சீரிஸோ என்னுடைய அத்தை ஜெயலலிதாவை மையமாக வைத்து எடுக்கப்பட்டால் அதை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொண்டு கையாள்வோம். யார் குயின் என்பதை கௌதம் மேனன் தெளிவுபடுத்துவார் என்று நம்புகிறேன்.



## ‘ஈரம்’ எப்பவுமே மனசுக்கு திருப்தி

. நானே அதுக்கான செலவை ஏத்துக்கு
னார்.

**மேனன், நந்தா, சரண்யா மோகன்தான் உங்களு
ஸா இருந்ததா?**

ஹீரோ சப்ஜெக்ட் மாதிரிதான். எந்த கேரக்டருக்கு பெரிய ஹீரோ நடிச்சாலும் மக்களுடைய கவனம் அந்த நடிகர் மேலதான் இருக்கும்னு புது ஹீரோ வெச்சு போயிடலாம்னு தோணுச்சு. ஷங்கர் சாரும் அதேதான் சொன்னார். அப்படிதான் நடிகர்களை தேர்ந்தெடுத்தோம். மிருகம் படம் முடிச்சுட்டு, ஆதி ஏதோ ஒரு விழாவுல உட்கார்ந்திருந்த மாதிரி ஒரு போட்டோ பார்த்தேன். போலீஸ் கேரக்டருக்கு அவர் சரியா இருக்கும்னு தோணுச்சு. அப்போ இருந்த நிறைய ஹீரோயின்கள்கிட்ட பேசினோம். ஆனா அவங்க கூட யார் நடிக்கிறாங்க? சம்பளம் எவ்வளவு?னு இதுக்கு முக்கியத்துவம் கொடுத்ததுனால அவங்களை படத்துக்குள்ள கொண்டு வரலை. அதுக்குப் பிறகுதான், சிந்து மேனன் படத்துக்குள்ள வந்தாங்க. நான் டைரக்ஷன் படிச்சுட்டு இருந்த சமயத்துல நந்தா ஆக்டிங் படிச்சுட்டு இருந்தார். அப்படித்தான் பழக்கம். தவிர, எந்த இமேஜும் இல்லாத ஒரு நடிகர் தேவைப்பட்டது. அதனால நந்தாவை நடிக்க வெச்சேன். தங்கச்சி கேரக்டருக்கு சரண்யா மோகன்தான் என் முதல் சாய்ஸ்!



வயாளர்கள் பச்சைவிளக்கு காட்டலாம்.

**உங்களுடைய குருநாதர் தயாரிப்பாளராகவும் இருக்கிறதுனால முதல் படம் எளிதா அமைஞ்சுடுச்சா?**

அவருக்கு பிடிச்ச வித்தியாசமான கதைகளைதான் அவர் தயாரிக்கிறார். அப்படி பார்த்தால், வெளியே இருந்து வந்த சிம்புதேவன் படத்தையும் ஷங்கர் சார்தான் தயாரிச்சார். அவருடைய உதவி இயக்குநர்களுக்கு முன்னுரிமை அப்படியெல்லாம் இல்லை. அவருடைய உதவி இயக்குநரா இருந்ததுனால அவரைச் சந்திச்சு கதை சொல்றது சீக்கிரமா நடந்திடும். ஆனா, அவருக்கு கதை பிடிச்சு, அதை நம்பி, அவர் ஓகே சொல்றது ஈஸியா நடந்திடாது. ஈரம் கதையை ஒன்லைன் சொல்லி, கதையா கொடுத்து, முழு ஸ்கிரிப்டா கொடுத்து, டிரெய்லர் எடுத்து, படத்துல இருக்கிற ரெண்டு சீன் எடுத்து, இதை எல்லாம் தாண்டிதான் அந்தக் கதையை ஷங்கர் சார் தயாரிச்சார்!

**வாழ்க்கையில் எல்லாமே செகண்ட் ஹேண்ட்தான்டாங்கிற ஒரு வசனம்தான் படத்துக்குள்ள கூட்டிட்டு போகும். இந்த ஐடியா எப்படி வந்தது?**

எல்லோரும் காதலை கடந்துதான் வந்திருப்போம். திருமண வாழ்க்கைக்குள்ள வந்த பிறகு, சந்தேகம்ங்கிற ஒரு விஷயம் வந்திடுது. அதை குறிப்பிடத்தான், என்னதான் இருந்தாலும் என் ரம்யானு ஆதி சொல்ற மாதிரி டயலாக் எழுதினேன். ஆனா, எல்லாத்துக்கும் சந்தேகப்பட்டு வார்த்தைகளால் நோகடிப்பவர் நந்தா. அப்போ அவருடைய நண்பர் சொல்ற இந்த வசனம்தான் படத்துக்குள்ள மக்களை கூட்டிட்டுப் போகும். இந்தக் கதை எழுதும்போது எனக்கு கல்யாணமாகலை. வாழ்க்கையில் எல்லாமே செகண்ட் ஹேண்ட்தான்டா... மனைவி உட்படனு எழுதியிருந்தேன். அதை ஷங்கர் சார் படிச்சுட்டு, இப்படி சொல்றது ரொம்ப தப்பா இருக்கும். அதனால, வாழ்க்கையில் எல்லாமே செகண்ட் ஹேண்ட்தான்டா. அது மனைவியாகூட இருக்கலாம்னு மாத்தினார்.

**ஹாரர் படத்திற்குத் தண்ணீரைப் பயன்படுத்தியது ஏன்?**

கேமரா, இசை, ஒளிப்பதிவுனு எல்லாத்துக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து டெக்னிக்கலா ஒரு படம் பண்ணணும்னு நினைச்சேன். அதுக்கு ஹாரர்தான் சரி. வழக்கமா ஹாரர் படங்கள்ல காட்டப்படுற எந்த விஷயங்களும் இதுல இருக்கக் கூடாதுனு நினைச்சு கதை எழுதினேன். அதேபோல ஹாரர் படத்தை எமோஷனலா சொல்லணும்னு நினைச்சேன். உதவி இயக்குநரா இருக்கும்போது நான் தங்கியிருந்த ரூமுக்குப் பக்கத்துல இருக்கிறவங்க பைப்பைத் திறந்துவிட்டுட்டு ஆபீஸ் போயிடுவங்க. அப்போ, அதுல தண்ணீர் நிறைஞ்சு வந்து வாசல் படியில சொட்டிக்கிட்டு இருக்கும். இதே மாதிரி பலமுறை நடந்திருக்கு. இதைப் பார்த்துட்டுத்தான் தண்ணீரை வெச்சு படம் பண்ணணும்னு நினைச்சேன்.

**ஈரம் படத்துக்குக் கிடைச்ச மறக்க முடியாத பாராட்டு என்ன?**

படத்துடைய எடிட்டிங் போய்க்கிட்டு இருந்தப்போ சில காட்சிகள் பார்த்துட்டு, பின்னிட்டனு ஷங்கர் சார் நைட் 11 மணிக்கு போன் பண்ணி பாராட்டினார். அப்புறம், ரஜினி சார் படம் பார்த்துட்டு என்கிட்ட பேசினார். இந்த ரெண்டு பாராட்டும் என் வாழ்நாள்ல மறக்க முடியாதது



**நயன்தாராவுக்கு கதை சொல்லியிருக்கிறதா கேள்விப்பட்டோம். அந்தப் படம் என்னாச்சு?**

இந்தக் கதையே அவங்களுக்காக எழுதினதுதான். சைக்காலாஜிக்கல் த்ரில்லர் படம். அவங்களுக்கும் ரொம்பப் பிடிச்சிருந்தது. பெரிய பட்ஜெட்னால பெரிய தயாரிப்பாளர் இருந்தா சரியா இருக்கும்னு நினைச்சேன். அவங்களும் அதைதான் நினைச்சாங்க. ஆனா, அப்படி அமைய தாமதமாகிடுச்சு. இதற்கிடையில அவங்களுக்கு வேற படங்கள் வந்துடுச்சு. நிச்சயமா அந்தக் கதையை அவங்களை வெச்சு எடுப்பேன். என்னால வேற ஹீரோயினை இந்தக் கதைக்கு நினைச்சுப்பார்க்க முடியலை. அதனாலதான் அவங்களுக்காகவும் தயாரிப்பாளருக்காகவும் அந்த ஸ்கிரிப்ட் வெயிட்டிங்!

த்ரில்லர் ஜானர்லயே படம் பண்றோமேனு நினைச்சதில்லையா?

குற்றம் 23 படத்துக்குப் பிறகு. ஒரு லவ் சப்ஜெக்ட் பண்ணலாம்னு நினைச்சேன். ஆனா இப்போ எந்த ஹீரோவும் காதல் கதையில நடிக்க விரும்புவதில்லை. எல்லோரும் ஆக்ஷன் த்ரில்லர்தான் கேட்குறாங்க. பிசினஸ், மார்க்கெட், சம்பளம்னு எல்லாமே ஆக்ஷன் படங்களுக்குத்தான் இருக்கு. ஆனா, மக்கள் மனசுல இடம் பிடிக்க காதல் கதையில நடிக்கிறதுதான் அடித்தளம். விஜய் சார் ஆரம்பத்துல பல படங்கள் காதல் கதையில நடிச்சுதான் மக்கள் மனசுல இடம்பிடிச்சார். அப்புறம்தான் திருமலை படம் மூலமா ஆக்ஷன் ஹீரோவா வந்தார். ஆனா, இப்போ ஹீரோ, தயாரிப்பாளர் எல்லோரும் எடுத்தவுடனே ஆக்ஷன் சப்ஜெக்ட் இருக்கானுதான் கேட்குறாங்க!

**சோஷியல் மீடியா அப்போ இருந்திருந்தால் நல்லாயிருந்திருக்குமேனு நினைக்கிறீங்களா?**

மக்கள் நல்ல படத்தை கொண்டாட தவறினதில்லை. ஈரம் வெளியானபோது நான் எதிர்ப்பார்க்காத வரவேற்பு கிடைச்சது. ஆனா, இப்போ இருக்கிற மாதிரி அப்போ சோஷியல் மீடியா இருந்திருந்தால் இன்னும் அதுக்கான வரவேற்பு அதிகமா இருந்திருக்கும்னு நினைக்கிறேன்.

# மன அழுத்தம்; விடுபட வழிகள்

ஆண்களை விட பெண்கள் மன அழுத்த பாதிப்புக்கு அதிகம் ஆளாகிறார்கள். குடும்பத்தை நிர்வகிப்பதில் ஆண்களைவிட பெண்களுக்கு பொறுப்புக்கள் அதிகம். வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு, வரவு செலவு, குடும்ப எதிர்காலம் என குடும்ப சுமைகள் அவர்கள் மனதை பாரமாக்கிவிடுகிறது. நாளுக்கு நாள் பொறுப்புகள் அதிகமாவதை உணரும்போது உடல் நலத்தை கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிடுகிறார்கள்.



அது நோய் பாதிப்புகளுக்கு வழிவகுத்துவிடும். பெண்கள் உடல் நலனில் சிறிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் அது ஒட்டுமொத்த குடும்ப உறுப்பினர்களையும் பாதிப்புக்குள்ளாக செய்துவிடும். அன்றாட வீட்டு வேலைகளில் தொடங்கி பல விஷயங்களில் பெண்களின் பங்களிப்பு அவசியமானதாக இருக்கிறது. குடும்ப நிர்வாகம் முடங்கி போய்விடும் சூழல் ஏற்படும்போது அது பெண்கள் மனநலத்தையும் பாதிக்கிறது. எளிதில் உணர்ச்சிவசப்படுவதும் மன அழுத்த பிரச்சினை தலைதூக்குவதற்கு காரணமாகிவிடுகிறது. மன அழுத்தத்தில் இருந்து விடுபட வழிகள்:

★ மன அழுத்தத்திற்கும், உடலுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மனக்கவலை அடையும்போது உடலில் உள்ள தசைகள் இறுக தொடங்கும். சிறிது நேரத்திலேயே உடல் சோர்வு அடைந்து விடும். அதற்கு இடம் கொடுக்காமல் மனதையும், உடலையும் ஒருங்கிணைக்க வேண்டும்.

★ மன அழுத்தத்திற்கு ஆளாகும்போது உடலில் ஒருவித பதற்றம் தோன்றக்கூடும். அந்த சமயத்தில் ஐந்து முறை ஆழமாக மூச்சை இழுத்துவிட வேண்டும். அப்படி மூச்சை சீராக இழுத்துக்கொண்டே மனதுக்கு பிடித்தமான வார்த்தைகளை உச்சரித்து வரலாம். அல்லது மனதை சந்தோஷப்படுத்தும் பழைய நினைவுகளை அசைபோடலாம். அது உடலையும், மனதையும் இயல்பு நிலைக்கு கொண்டு வர வழிவகுக்கும்.

★ மன அழுத்தம் அதிகமாகும்போது ஆத்திரத்தில் தவறான முடிவுகள் எடுக்கத் தோன்றும். ஆதலால் மனம் நிம்மதி இழந்து தவிக்கும்போது முடிவெடுப்பதை தள்ளிப் போடுங்கள்.

★ மனம் இயல்பு நிலைக்கு திரும்பும் வரை நிதானத்தையும், பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

★ மன அழுத்தம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக வெளிப்படும். சிலருக்கு மனம் படபடக்கும், ஒருசிலருக்கு சீரற்ற தன்மையில் சுவாசம் வெளிப்படும். ஒருசிலருக்கு தலைவலி, தோள்பட்டை வலி ஏற்படக் கூடும். அத்தகைய அறிகுறிகள் தென்படும் போதே மன அழுத்த பாதிப்புக்கு இடம்கொடுக்காமல் அதிலிருந்து மீண்டு வர முயற்சிக்க வேண்டும்.

★ எத்தகைய மன பதற்றத்தையும் போக்கி மனதை சாந்தப்படுத்தும் சக்தி இசைக்கு உண்டு. பிடித்தமான பாடல்களை கேட்கலாம். இனிமையான இசை எகிறும் இதய துடிப்பை இயல்பு நிலைக்கு கொண்டு வர வழிவகுக்கும்.

★ தியானத்திற்கு மன அழுத்தத்தை விரட்டி அடிக்கும் ஆற்றல் உண்டு. மனதை ஒருமுகப்படுத்தும் வண்ணம் இறை வழிபாட்டிலும் கவனம் பதிக்கலாம்.

★ வஜ்ராசனம் போன்ற யோகாசனங்களையும் செய்யலாம். அது மனதையும், உடலையும் ஒரு நிலைப்படுத்தும்.

★ யோகாசனங்களில் கவனம் பதிக்க முடியவில்லை என்றால் நேராக நிமிர்ந்து பின்னர் குனிந்து அமரலாம். அவ்வாறு சிலதடவை செய்யும்போது ரத்த ஓட்டம் சீரடையும். அது மனதையும் இலகுவாக்கும்.

★ மன பாரத்தை இறக்கி வைக்க நடைப் பயிற்சியும் மேற்கொள்ளலாம். கொஞ்ச தூரம் நடைப் பயிற்சி மேற்கொள்ளும்போது கண்கள் கவனத்தை திசைதிருப்பும். பார்க்கும் விஷயங்களில் கவனத்தை பதிய செய்யும் போது மன பாரம் குறையும்.

★ உணவு விஷயத்திலும் கவனம் செலுத்த வேண்டும். மன அழுத்தம் நீடிக்கும் சமயத்தில் காபி பருகுவதை தவிர்க்க வேண்டும். பழச்சாறுகள், தண்ணீர் பருகலாம். நொறுக்கு தீனிகளை தவிர்ப்பதும் நல்லது.

★ போதிய தூக்கம் இல்லாமல் அவதிப்படுவதும் மன அழுத்தம் தோன்ற காரணமாகிவிடும். ஆழ்ந்த தூக்கத்திற்கு மனதை ஆட்படுத்த பழகிக்கொள்ள வேண்டும்.

# இதயத்திற்கு ஆரோக்கியம் தரும் சிவப்பு நிற பழங்கள்



சிவப்பு நிற காய்கறிகள் மற்றும் அதே நிற பழங்களை சாப்பிடுவது இதயத்திற்கு நல்லது. அதில் லைகோபீன், ஆந்தோசையானைன், பிளவனாய்டுகள் போன்ற ஆன்டி ஆக்சிடெண்டுகள் நிறைந்திருக்கின்றன. அவை இதய நோய், புற்றுநோய், ரத்த அழுத்த குறைபாடு, கண் பார்வை குறைபாடு போன்ற பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றல் கொண்டவை.

குறிப்பாக அதிலிருக்கும் லைகோபீன், நுரையீரல் புற்றுநோய், மார்பக புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், உணவுக்குழாய் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கிறது. ஆனால் 95 சதவீதம்பேர் சிவப்பு, ஆரஞ்சு நிற காய்கறிகளை போதுமான அளவு உணவில் சேர்த்துக்கொள்வதில்லை என்பது தேசிய புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

மாதுளை, சிவப்பு ஆரஞ்சு, ராஸ்பெர்ரி, ஸ்ட்ராபெர்ரி, தர்பூசணி, ஆப்பிள், சிவப்பு திராட்சை, சிவப்பு பேரிக்காய், சிவப்பு கொய்யா, சிவப்பு குடை மிளகாய், தக்காளி, சிவப்பு பீன்ஸ், பீட்ரூட், சிவப்பு மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, சிவப்பு முள்ளங்கி போன்ற சிவப்பு நிற காய்கறிகள், பழங்களை அடிக்கடி சாப்பிட வேண்டும். இந்த சிவப்பு நிற உணவுகளில் குறைந்த அளவே கொழுப்பு, சோடியம் போன்றவை உள்ளன. தக்காளிப்பழங்களில் அதிக அளவில் லைகோபீன் இருப்பதால் உணவுக்குழாய் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோயில் இருந்து தற்காத்துக்கொள்ள உதவும்.

தக்காளி பழங்களை சூப்புகளாகவோ, சாஸ்களாகவோ தயாரித்து பயன்படுத்தலாம். ஸ்ட்ராபெர்ரி பழங்களில் இருக்கும் வைட்டமின் சி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் தன்மை கொண்டது. கெட்ட கொழுப்பையும் நீக்கிவிடும்.

சிகப்பு நிற செர்ரி பழங்களில் கலந்திருக்கும் ஆந்தோசையானை இறந்த செல்களை நீக்கி சருமத்திற்கு பொலிவு சேர்க்கும் ஆற்றல் கொண்டது. சிவப்பு குடமிளகாய் சாப்பிடுவதும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். தர்ப்பூசணி பழங்களிலும் லைகோபீன் அதிகம் உள்ளது. அவை இதய நோய், பக்கவாதம் போன்ற அபாயங்களில் இருந்து காக்கும். காலை உணவுடன் ஸ்ட்ராபெர்ரி அல்லது செர்ரி பழங்களை சேர்த்துக்கொள்வது நல்லது. மதிய உணவுடன் தக்காளி சூப் பருகலாம். சிவப்பு குடமிளகாய், சிவப்பு முள்ளங்கி, சிவப்பு வெங்காயம் ஆகியவற்றை சாலட்டுகளாக தயார் செய்து சாப்பிடலாம்.




# உணவுப் பொருட்களை எத்தனை நாட்கள் பிரிட்ஜில் வைக்கலாம்?

பெரும்பாலான வீடுகளில் கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்பவர்களாகவே உள்ளனர். இதனால் அன்றாடம் வீட்டிற்கு தேவையான காய்கறிகள் பழங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றை தினசரி கடைக்கு சென்று வாங்க முடியாத நிலை நிலவுகிறது. அவ்வாறானவர்களுக்கு வரப்பிரசாதாமாக கைகொடுக்கும் ஒரு சாதனம் குளிர்சாதனப் பெட்டியான பிரிட்ஜ் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

பிரிட்ஜில் 34 டிகிரி பாரன்ஹீட் முதல் 40 டிகிரி பாரன்ஹீட்டுக்கு இடைப்பட்ட அளவில் வெப்பநிலை இருக்குமாறு பராமரிக்க வேண்டியது அவசியம். இதனால் உணவுப் பொருட்கள் நீண்ட காலம் பிரஷ்ஷாக பயன்படுத்தப்படும் வகையில் இருக்கும். ஒவ்வொரு உணவுப் பொருளும் பிரிட்ஜில் எவ்வளவு நாட்கள் பிரஷ்ஷாக இருக்கும் என்பது குறித்த தகவலை பார்க்கலாம்.

பழங்கள் :

ஆப்பிள் இதை குளிர்சாதன பெட்டியில் 2 வாரங்கள் வரை வைத்திருக்கலாம்.

வாழைப்பழம் வெளியில் வைத்திருக்கலாம். பச்சை நிறம் நீங்கி 3 நாட்களுக்குள் பயன்படுத்துவது நல்லது.

திராட்சை இதனை பிரிட்ஜில் கழுவாமல் வைத்திருந்து 6 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்.

ஆரஞ்சு, கமலா, கிரேப் இதனை 2 வாரங்கள் பிரிட்ஜில் வைக்கலாம்.

பைனாபிள் - நன்கு பழுத்த பிறகு பிரிட்ஜில் 3 - 5 நாட்கள்.

தர்பூசணி துண்டு - பிரிட்ஜில் 6 - 8 நாட்கள் வைக்கலாம்.

எலுமிச்சை - இரண்டு வாரம் வைக்கலாம்.

பெர்ரி பழ வகைகள் - பிளாஸ்டிக் பையில் போட்டு 2-3 நாட்கள் வைக்கலாம்.

பேரிக்காய், சப்போட்டா, கொய்யா போன்றவைகள் - பழுக்கும்வரை வெளியில் வைத்திருந்து பிறகு பிரிட்ஜில் 3 -5 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்.

திராட்சை, பேரிக்காய், பிளம்ஸ் 3-5 நாட்கள்.

காய்கறிகள் :

பீன்ஸ் - இதை நன்கு கழுவி, துடைத்து விட்டு பிரிட்ஜில் வைத்திருந்து 3 - 5 நாட்களுக்குள் பயன்படுத்தவேண்டும்.

கத்தரிகாய் - இதை வெளியிலும் வைக்கலாம், பிரிட்ஜில் வைப்பதானால் பிளாஸ்டிக் பையில் போட்டு 3 - 4 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்.

தக்காளி - வெளியில், பிரிட்ஜ் இரண்டு இடத்திலும் வைக்கலாம். ஆனால் ஒரு வாரத்திற்குள் பயன்படுத்த வேண்டும்.

கேரட் - நன்கு கழுவி, தலைப் பாகத்தை நீக்கிவிட்டு பிளாஸ்டிக் பையில் போட்டு பிரிட்ஜில் இரண்டு வாரம் வைத்திருக்கலாம்.

பீட்ருட் - இரண்டு வாரம் வைத்திருக்கலாம்.

காலிபிளவர், முள்ளங்கி - இரண்டு வாரம் பிரிட்ஜில் வைத்திருக்கலாம்.

வெண்டைக்காய் - 5 - 7 நாட்கள் பிரிட்ஜில் வைக்கலாம்

உருளைக்கிழங்கு - வெளியில் காற்றோட்டமான இடத்தில் இரண்டு மாதம் வைக்கலாம்

வெங்காயம் - வெளியில் காற்றோட்டமான இடத்தில் ஒரு மாதம் வைக்கலாம்.

குடமிளகாய் - நன்கு கழுவி உலர்த்திய பிறகு பிளாஸ்டிக் பையில் போட்டு ஒரு வாரம் வைக்கலாம்.

கீரை வகைகள் - பிளாஸ்டிக் பையில் 3 - 5 நாட்கள் வைக்கலாம்.

முட்டகோஸ், செல்லரி - பிளாஸ்டிக் பையில் 2 வாரங்கள் வைக்கலாம்.

மஷ்ரும் - அதிகபட்சம் 2 - 3 நாட்கள் வைக்கலாம்.

பூசணிக்காய், வெள்ளரிக்காய் - ஒரு வாரம் வைக்கலாம்.

அசைவ உணவுகள் :

முட்டை - பிரிட்ஜில் 3 -5 வாரங்கள் வைக்கலாம் அல்லது காலாவதியாகும் நாட்களுக்குள் பயன்படுத்துவது நல்லது.

வேக வைத்த முட்டை - பிரிட்ஜில் 5 - 6 நாட்களுக்குள் பயன்படுத்த வேண்டும்.

முட்டை வெள்ளைக்கரு - பிரிட்ஜில் 2 - 3 நாட்களுக்குள் முட்டையின் மஞ்சள் கரு 2 - 4 நாட்களுக்குள் பயன்படுத்திவிட வேண்டும்.

பிரஷ் சிக்கன், தோல் நீக்காதது - 1 - 2 நாட்கள் வைத்திருக்கலாம்.

பிரஷ் மட்டன், பீஃப் - 1 -3 நாட்கள் வைக்கலாம்.

மீன்- 1 - 2 நாட்கள் வைக்கலாம்.

இறால், நண்டு - பிரிட்ஜில் இரண்டு நாட்கள் வைக்கலாம்.

சமைத்த இறைச்சி - நான்கு நாட்களுக்குள் பயன்படுத்திவிட வேண்டும்.

வறுத்த இறைச்சி மற்றும் கிரேவி 2-3 நாட்கள்.

சமைத்த மீன் 3-4 நாட்கள் பிரஷ் மீன் 1-2 நாட்கள்.

ஓட்டுடன் கூடிய நண்டு 2 நாட்கள்.

பிரஷ்ஷான இறால்(சமைக்காதது) ஒரு நாள்.

பால் பொருட்கள் :

மற்றபடி பால். தயிர், வெண்ணெய் போன்ற தினமும் / dairy பொருட்களை அவைகள் காலாவதியாகும் நாட்களை கவனித்து வாங்கி அதற்குள் பயன்படுத்திடுவது நல்லது. மேலும் அவைகளை நமது குடும்பத்தின் தேவைக்கேற்ற அளவில் வாங்குவது பண விரயத்தையும் தடுக்கும்.

பால் அல்லது ஆடை நீக்கப்பட்ட பால் ஒரு வாரம்

பதப்படுத்தப்பட்ட பால், சுவீட் கிரீம், சுவையூட்டப்பட்ட பால், அதன் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை தேதியில் இருந்து, 10-14 நாட்கள்

மோர் 2 வாரங்கள்

தயிர் 7-10 நாட்கள்

# உணவு சமைக்கும்போது... செய்யும் தவறுகள்!

சத்தான உணவு வகைகளை தேர்ந்தெடுத்து சாப்பிடுவதில் காண்பிக்கும் ஆர்வத்தை அவைகளை சமைக்கும் பக்குவத்திலும் வெளிப்படுத்த வேண்டும்.

சமைக்கும் உணவு எவ்வளவு ருசியானதாக இருந்தாலும் அது சரியான முறையில் சமைக்கப்படாவிட்டால் உடல் ஆரோக்கியத்திற்கு நலம் சேர்க்காது. உணவுவகைகளை சமைக்கும்போது செய்யும் தவறுகள் குறித்து பார்ப்போம்!



★ உணவை சமைக்கும் பாத்திரங்கள் தேர்விலும் கவனம் செலுத்த வேண்டும். நான்ஸ்டிக் பாத்திரங்களை பயன்படுத்தவே பெரும்பாலானோர் விரும்புகிறார்கள். அதில் டெப்லான், பெர்பிளுரோ ஆக்டனோயிக் அமிலம் உள்ளிட்ட ரசாயனங்கள் கலந்திருக்கின்றன. தொடர்ந்து நான்ஸ்டிக் பாத்திரங்களை பயன்படுத்தி சமைக்கும் போது கல்லீரல் பாதிப்புக்குள்ளாவதற்கு வாய்ப்பிருக்கிறது. இரும்பு, பீங்கான், கண்ணாடி பாத்திரங்களை பயன்படுத்துவது உடலுக்கு நலம் சேர்க்கும்.

★ காய்கறிகளை வேக வைப்பதற்கு நீண்ட நேரம் எடுத்துகொள்ளக்கூடாது. அதிலிருக்கும் நீர்ச்சத்து விரயமாகி ஊட்டச்சத்துக்கள் வீணாகிபோய்விடும். காய்கறிகளை மிதமான சூட்டில் சூப்பாக தயாரித்து குடிப்பது நல்லது.

★ ஒருசில காய்கறிகளின் தோல் பகுதியில்அதிக ஊட்டச்சத்துக்கள் இருக்கும். குறிப்பாக உருளைக்கிழங்கு, கேரட், பூசணிக்காய், வெள்ளரிக்காய், ஆப்பிள் ஆகியவற்றின் தோல் பகுதியில் நிறைய வைட்டமின்கள், கூடுதல் கனிமங்கள் நிறைந்திருக்கின்றன. மேலும் தோல் பகுதியில் இருக்கும் நார்சத்து, செரிமானம் சீராக நடைபெற உதவி புரியும்.

★ தேன் இயற்கையாகவே இனிப்பு சுவை கொண்டது. அதை சூடுபடுத்தி பயன்படுத்தக் கூடாது. சூடுபடுத்தினால் அதிலிருக்கும் மருத்துவ குணங்கள் வீணாகிவிடும். எதிர்மறையான ரசாயன மாற்றமும், கசப்பு தன்மையும் தோன்றும்.

★ சமையல் எண்ணெய் வகைகளை அதிக வெப்பநிலையில் சூடுபடுத்திவிடக் கூடாது. ஆலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்றவைகளை புகை வெளியேறும் அளவுக்கு சூடாக்கினால் அதிலிருக்கும் ஊட்டச்சத்துக்கள் அழிந்துபோய் விடும்.

★ வறுத்து சாப்பிடும் உணவுகள் ருசியாக இருக்கலாம். ஆனால் அவை உடல் ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. அவைகளில் கொழுப்பு அழையா விருந்தாளியாக சேர்ந்திருக்கும். இதன் மூலம் நீரிழிவு மற்றும் இதயநோய் பாதிப்புகள் உருவாகும்.

# வீட்டிலிருக்கும் மூலிகைகள்

நாகரிகம் என்ற பெயரில் இன்றைக்கு பலரும் துரித உணவுகள் பக்கம் திரும்பி விட்டனர். இதனால், நோய்கள் புற்றீசல் போன்று புறப்பட்டு விட்டன. மனித உடலானது, நோய்களின் கூடாரமாகி விட்டது.

இதையெல்லாம் கட்டுப்படுத்த மூலிகைகள் பற்றி அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். அதிலும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் வீட்டில் உள்ள உணவு பொருட்களிலேயே ஏகப்பட்ட நன்மைகள் உள்ளன.

கறிவேப்பிலை, இஞ்சி, சீரகம் இவற்றை தண்ணீரில் கொதிக்கவைத்து, ஆறவைக்க வேண்டும். அந்த நீரை வடிகட்டி குடித்தால் அஜீரணத்திலிருந்து நிவாரணம் கிட்டும். அஜீரணம், வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், வயிற்றுவலி போன்றவற்றை குறைக்க மிளகு அருமருந்து. உணவில் மிளகைச் சேர்த்துக் கொள்வதால் இவை ஏற்படாமல் தவிர்க்கப்படும்.

மிளகு சாப்பிடுவதால் வயிற்றில் ஹைட்ரோ குளோரிக் அமிலம் சுரக்கிறது. அது வயிற்றில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை சரிசெய்கிறது. வெந்தயம் வயிற்றுப்போக்கை கட்டுப்படுத்தும்.

சிறிதளவு வெந்தயத்தை வறுத்து, சோம்பும், உப்பும் சேர்த்து அரைத்து மோரில் கலந்து குடித்தால் வயிற்றுப் போக்கு நிற்கும். கசகசாவை நன்கு ஊறவைத்து அரைத்து மோருடன் கலந்து குடித்து வந்தால் சீதபேதி கட்டுப்படும்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் பாகற்காய், அவரைப்பிஞ்சு ஆகியவற்றை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்ளவும். இறுக்கமான காலணிகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும்.

நாவல்பழம் அடிக்கடி சாப்பிட, சர்க்கரை நோய் கட்டுப்படும். தினமும் கையளவு நாவல்பழங்களை சாப்பிட்டால், சிறுநீர்க்குழாயில் ஏற்படும் தொற்று குணமாகும். சிறுநீர்க்குழாயில் காணப்படும் பாக்டீரியாவை அழிக்கக்கூடிய ரசாயனங்கள் நாவல் பழத்தில் உள்ளன.

வெந்தயத்தை ஊறவைத்து அரைத்து முகத்தில் பூசி வர பருக்கள் குறையும். பாதாம்பருப்பில் விற்றமின் 'ஈ' சத்து அதிக அளவில் உள்ளது. தினமும் 10 முதல் 15 பாதாம் பருப்புகள் சாப்பிடுவதன் மூலம் சருமம், தலைமுடி, நகங்கள் ஆகியவை பளபளப்பாகும்.

## பொருள் புதிது



### உறுதியான பிளேடு

சாதாரண இரும்பு பிளேடினை விட 5 மடங்கு கூர்மையான பிளேடு. கீசெயினாக பயன்படுத்தலாம். மரங்கள், குச்சிகளை சீவ, மூடிகளை திறக்க என கடின வேலைகளுக்கும் பயன்படுத்தலாம்.

### கணினி தலையணை

பழமை விரும்பிகளை ஈர்க்கும் தலையணைகளை வடிவமைத்துள்ளது ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனம். முதல் கணினி,டிவி, செல்போன் என பல வடிவங்களில் தயாரித்துள்ளது. பாலீதீன் இழைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

### நேரம் கணிக்கும் குடுவை

பழமையான தொழில்நுட்பமான நேரத்தை கணிக்கும் மணல் குடுவையை புதுமையாக தயாரித்துள்ளது ஒருஸ்டார்ட் அப். இதில் நேரத்தை கணிக்க அட்ஜெஸ்ட் செய்யும் வசதி உள்ளது.

## இன்ஸ்டாகிராம் கமென்ட்களில் எமோஜிக்கள்



இன்ஸ்டாகிராம் செயலியில் அவ்வப்போது புதிய அம்சங்கள் சேர்க்கப்படுகிறது. ஃபேஸ்புக் நிறுவனத்தின் இன்ஸ்டாகிராம் செயலியில் இம்முறை தனித்துவம் வாய்ந்த எமோஜி ஷார்ட்கட்கள் சேர்க்கப்பட்டு இருக்கிறது.

இந்த அம்சத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் எமோஜி கீபோர்டின் மேல் வைக்கப்படும். ஆன்ட்ராய்டு மற்றும் ஐ.ஓ.எஸ். இயங்குதளங்களில் புதிய அம்சம் இன்னும் இரு தினங்களில் வழங்கப்பட இருக்கிறது.

எனினும் இந்த அம்சம் கமென்ட்ஸ் பகுதியில் மட்டுமே வேலை செய்கிறது. அந்த வகையில் ஸ்டோரிக்கள் மற்றும் செராந்த போஸ்ட்களில் புதிய அம்சம் பயன்படுத்த முடியாது.

செயலியை லாப நோக்கில் தொடர்ந்து இயங்கச் செய்ய பல்வேறு புதிய விஷயங்களை இன்ஸ்டாகிராம் முயன்று வருகிறது. இதேபோன்று இன்ஸ்டாகிராம் ஷாப்பிங் செய்வதற்கென பிரத்யேக செயலி ஒன்றை உருவாக்கி வருவதாக தகவல் வெளியானது. ஐ.ஜி. ஷாப்பிங் என்ற பெயரில் இந்த செயலி வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயனர்கள் இன்ஸ்டாவில் பின் தொடரும் பக்கம் அல்லது விற்பனையாளரிடம் இருந்து நேரடியாக பொருட்களை வாங்கிட முடியும் என கூறப்படுகிறது. முன்னதாக பெற்றோர் இன்ஸ்டாகிராம் பயன்படுத்த ஏதுவாக பேரென்ட்ஸ் கைடு அறிமுகம் செய்தது.

இந்த கைடு கொண்டு தனியுரிமை, இன்டராக்ஷன்கள் அல்லது நேரத்தை இன்ஸ்டாகிராமில் எவ்வாறு இயக்க வேண்டும் போன்று மூன்று அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுதவிர ஸ்டோரிக்களில் இசையை அறிமுகம் செய்தது, இதில் ஸ்டோரியில் இசையை சேர்க்க முடியும்.

## பயனர் விவரங்களை விற்று சர்ச்சையில் சிக்கிய ஐ.ஓ.எஸ். செயலிகள்

ஐ.ஓ.எஸ். இயங்குதளத்தில் இருக்கும் சில செயலிகள் பயனர்களின் லொகேஷன் விவரங்களை மூன்றாம் தரப்பு நிறுவனங்களுக்கு வழங்கியது சூடோ செக்யூரிட்டி குழுமம் வெளியிட்ட அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

பெரும்பாலும் இதுபோன்ற செயலிகள் வரி விளம்பரங்கள் சார்ந்தவைகளாக இருக்கின்றன. இவை ப்ளூடூத் எல்.இ. பீக்கன் டேட்டா, ஜி.பி.எஸ். லாங்கிடியூட் மற்றும் லேட்டிடியூட், வைபை எஸ்.எஸ்.ஐடி மற்றும் பி.எஸ்.எஸ்.ஐ.டி. உள்ளிட்டவற்றை கொண்டு பயனரின் லொகேஷன் விவரங்கள் சேகரிக்கப்பட்டு இருக்கிறது.



சேகரிக்கப்பட்ட விவரங்களை செயலிகள் மூன்றாம் தரப்பு நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. இந்த நிறுவனங்கள் பயனர் விவரங்களை விற்று வருகின்றன. சில சமயங்களில் இந்த செயலிகள் செல்லுலார் நெட்வொர்க் எம்.சி.சி./எம்.என்.சி, ஜி.பி.எஸ். ஆல்டிடியூட் மற்றும் பல்வேறு விவரங்களை வாடிக்கையாளர்களிடம் தகவல் கொடுக்காமலேயே எடுத்துக் கொள்கின்றன.

செயலிகளின் தன்மை சார்ந்து ஜி.பி.எஸ். விவரங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய காரணத்தை மட்டும் குறிப்பிட்டு, அவை மூன்றாம் தரப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவது குறித்த தகவல்களை பயனர்களுக்கு வழங்காமல் இருப்பதாக கூறப்படுகிறது.

சில செயலிகள் ஜி.பி.எஸ். விவரங்களுடன் அக்செல்லோமீட்டர் விவரங்கள், பேட்டரி சார்ஜ் நிலவரம் மற்றும் ஸ்டேட்டஸ் என பல்வேறு விவரங்களை சேகரிப்பதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் விவரங்களை சேகரிப்பதாக இதுவரை 24 செயலிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக வெளியான தகவல்களில் உள்ளூர் மொழிகளில் செய்திகளை வழங்கும் கிட்டத்தட்ட 100 செயலிகள் வாடிக்கையாளர்களின் தகவல்களை சேகரித்து அவற்றை மூன்றாம் தரப்பு நிறுவனங்களுக்கு வழங்குதாக தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஐ.ஓ.எஸ். சாதனங்களில் நீங்கள் டிராக் செய்யப்படாமல் இருக்க செட்டிங்ஸ் -- பிரைவசி -- அட்வெர்டைசிங் ஆப்ஷன் சென்று லிமிட் ஆட் டிராக்கிங் வசதியை இயக்க வேண்டும். இவ்வாறு செய்யும் போது உங்களது லொகேஷன் விவரங்கள் சேகரிக்கப்படாமல் இருக்கும்.

இத்துடன் லொகேஷன் விவரங்களை சேகரிக்கும் செயலிகள் கூடுதல் விவரங்களுக்கு பிரைவசி பாலிசியை பார்க்கக் கோரும் பட்சத்தில் அதற்கான அனுமதியை வழங்காமல் இருப்பது நல்லது.

## ஜியோபோனில் வாட்ஸ்அப் வசதி

ஓ.எஸ். மூலம் இயங்கும் ஜியோபோன்களுக்கு வாட்ஸ்அப் வசதி சேர்க்கப்படுகிறது. ஜூலை மாதம் நடைபெற்ற ரிலையன்ஸ் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் ஜியோபோனிற்கு வாட்ஸ்அப், யூடியூப் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஃபேஸ்புக் செயலிகள் ஆகஸ்டு 15-ம் தேதி முதல் வழங்கப்படும் என ஜியோ நிறுவனர் முகேஷ் அம்பானி தெரிவித்தார்.


ஒருமாத தாமதத்திற்கு பின் வாட்ஸ்அப் வசதி தற்சமயம் சேர்க்கப்பட்டுள்ளது. கை ஓ.எஸ்.-க்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால் ஜியோபோனில் வாட்ஸ்அப் சேவை சீராக பயன்படுத்த முடியும். ஜியோபோன் மற்றும் ஜியோபோன் 2 மாடல்களுக்கு வாட்ஸ்அப் செயலியை ஜியோ ஆப் ஸ்டோரில் இருந்து டவுன்லோடு செய்து கொள்ள முடியும்.

செப்டம்பர் 20-ம் தேதி முதல் அனைத்து ஜியோபோன்களுக்கும் வாட்ஸ்அப் செயலி வழங்கப்படுகிறது. ஒரு முறை டவுன்லோடு செய்து விட்டால், பயனர்கள் தங்களது மொபைல் போன் நம்பரை ஒருமுறை பயன்படுத்தக்கூடிய கடவுச்சொல் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

மொபைல் நம்பரை வாட்ஸ்அப் செயலியில் உறுதிப்படுத்தியதும் விரும்பியவர்களுடன் சாட் செய்யலாம். ஜியோபோனில் வாட்ஸ்அப் வழங்கப்படுவதைத் தொடர்ந்து கை ஓ.எஸ். மூலம் இயங்கும் நோக்கியா 8110 4ஜி மொபைலிலும் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யூடியூப்பில் புதிய வசதி




யூடியூப்பின் தாய் நிறுவனமான கூகுள், டிஜிட்டல் நல சேவையை அறிமுகம்செய்துள்ளது. இதன்படி, செயலிகள் போன்றவற்றில் அதிக நேரம் செலவிட்டால் அது பற்றி பயனாளிகளுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். மே மாதம் முதல் இந்த வசதி அறிமுகமானது.

இதன் தொடர்ச்சியாகத் தற்போது, யூடியூப் பயனாளிகள் வீடியோ பார்க்கச் செலவிடும் நேரத்தை அறிந்துகொள்வதற்கான வசதியும் அறிமுகம் ஆகியுள்ளது. யூடியூப் கணக்குப் பக்கத்தில், வீடியோ பயன்பாடு பற்றிய விவரத்தை அறியலாம். இதற்கேற்ப யூடியூப்பில் செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

இதற்கான நினைவூட்டல் கெடுவையும் அமைத்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட நேரம் நெருங்கியதும், வீடியோ பார்த்தது போதும் என நினைவூட்டல் திரையில் தோன்றும்.

மேலும் தகவல்களுக்கு: https://bit.ly/2No79HO

## காற்றை அளக்கும் கோள்

காற்று வீசும் திசை யை, வேகத்தை நன்கு புரிந்து கொண்டால், வானிலையை இன்னும் துல்லியமாக கணிக்கலாம். இதற்குத் தான், ஐரோப்பிய விண்வெளி முகமை, இ.எஸ்.ஏ., அண்மையில், 'இயோலஸ்'செயற்கைக்கோளை ஏவியது.

இயோலசில் உள்ள, 'அலாடின்' என்ற நவீன லேசர் கருவி, பூமி மீது லேசர் துடிப்புகளை அனுப்பும். அது, பூமியின் மேல் பட்டு திரும்பும் பாதையில் குறுக்கே வரும் காற்று, அந்த லேசர் கதிரில் மாறுதலை உண்டாக்கும்.

அந்த மாற்றத்தை அளப்பதன் மூலம் காற்றின் திசை, வேகம், வகைகள் போன்றவற்றை விஞ்ஞானிகளால் துல்லியமாக கணிக்க முடியும்.

அடுத்த சில வாரங்களில் முழுமையாக செயல்படவிருக்கும் இயோலஸ், மூன்று ஆண்டுகளுக்கு பூமியின் வளிமண்டலத்தைக் கண்காணிக்கும்.


## அச்சிடப்பட்ட மின்சார மோட்டார்!

ஒரு சிறிய ட்ரோன் பறப்பதற்கு தேவையான கனமில்லாத, மிகச் சிறிய மோட்டார் கிடைக்குமா என்று தேடினார், பொறியாளரான கார்ல் புகேஜா. மத்திய தரைக்கடல் தீவான மால்டாவைச் சேர்ந்த அவர் தேடியது கிடைக்கவில்லை.

செம்புக் கம்பியில் காயில் கட்டி, பியரிங் வைத்து காந்தத்தை உருவாக்கும் போது, எவ்வளவு சிறிய மோட்டாரும் சற்று கனமாகவே இருந்தது.

கார்லுக்கு திடீரென ஒரு யோசனை... சர்க்கியூட் போர்டுகளை அச்சிடுவது போல ஏன், நாமே ஒரு சிறிய மோட்டாரை அச்சிடக் கூடாது? உடனே, முப்பரிமாண அச்சியந்திரத்தை பயன்படுத்தி காயில்களை அச்சிட்டு, பியரிங்கை பொருத்தி இயக்கிப் பார்த்தார்.

பலகீனமான விசையுடன் தான் அது சுழன்றது. பல முறை முயன்ற பின், அவர் அச்சிட்ட மோட்டார், ஒரு ட்ரோனை அந்தரத்தில் பறக்க வைக்கும் அளவுக்கு விசையுள்ளதாக, வெற்றிகரமாக உருவானது.



உண்மையில் கார்ல், ட்ரோன் தயாரிப்பாளரல்ல. காப்புரிமை இல்லாத திறமூல ரோபோக்களை உருவாக்குவதில் தான் அவருக்கு நாட்டம் அதிகம். எனவே, மோட்டாரை அச்சிட்டது போல, ரோபோக்களின் கைகளையும், கால்களையும் இயக்குவதற்குத் தேவையான, 'லீனியர் ஆக்சுவேட்டர்'கள் எனப்படும் விசை முடுக்கிகளையும் இதேபோல அச்சிட முடியுமா என, கார்ல் ஆராய்ந்து வருகிறார்.

## மிதந்தபடி நடக்கும் ரோபோ



டோக்கியோ பல்கலைக்கழகத்தின் ரோபோ வியல் ஆய்வாளர்கள், புதிய வகை ரோபோவை வடிவமைத்து பரிசோதித்து வருகின்றனர். இந்த ரோபோவுக்கு இரண்டு கால்கள் உண்டு. இருந்தாலும், தன் எடையை சுமந்து நடப்பதற்கு, அது தன் கால்களை மட்டும் நம்பவில்லை.

கூடுதலாக அதன் தலையில், 'ட்ரோன்' எனப்படும் குட்டி விமானங்களை பொருத்தியுள்ளனர். எனவே ரோபோவின் எடையில் முக்கால்வாசியை, ட்ரோன் சுமக்க, ரோபோ மிதந்தபடியே இரு கால்களால் நடக்கிறது. தங்கள் கண்டுபிடிப்பிற்கு, 'ஏரியல் பைபெட்' என, டோக்கியோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

இரண்டு கால்களைக் கொண்ட ரோபோக்களை நடக்க வைப்பது மிகவும் சிரமமான காரியம். எடை காரணமாக அவை அடிக்கடி கீழே விழுகின்றன. இதனால் தான், ட்ரோன்களை, கிடங்குகளில் பொருட்களை எடுத்துக் கொடுப்பது, பார்சல்கள் கொண்டுபோய் போடுவது போன்ற வேலைகளுக்கு பயன்படுத்தலாம் என, தொழில்நுட்ப வல்லுனர்கள் பரிசோதித்து வருகின்றனர்.

ஆனால், ஏரியல் பைபெட் ரோபோ, 2 கால்களையும், இறக்கைகளையும் கொண்டிருப்பதால், தடுமாறி விழுவது போன்றவை தவிர்க்கப்படும்.

எனவே இதை, பொருட்களை எடுத்து வரும் எடுபிடி வேலைகளைச் செய்ய வைப்பது முதல் பொழுதுபோக்கு மையங்களில் வேடிக்கை காட்டுவது வரை, பயன்படுத்தலாம் என, அதன் கண்டுபிடிப்பாளர்கள் கருதுகின்றனர்.

## நொக்கியாவின் புதிய படைப்பு




ஐந்து கமரா சென்சார் கொண்ட நோக்கியா ஸ்மார்ட்போனின் விவரங்கள் அவ்வப்போது இணையத்தில் லீக் ஆகிவந்த நிலையில், இம்முறை ஸ்மார்ட்போனின் புகைப்படம் லீக் ஆகியுள்ளது.

முன்னதாக வெளியான தகவல்களில் ஃபாக்ஸ்கான் இந்த ஸ்மார்ட்போனினை வடிவமைத்து உற்பத்தி செய்யும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது. தற்சமயம் ஸ்மார்ட்போனின் ப்ரோடோடைப் புகைப்படம் சீனாவில் லீக் ஆகி இருக்கிறது.

புதிய ப்ரோடோடைப் புகைப்படத்தில் TA-1094 என்ற மாடல் நம்பர் இடம்பெற்றிருக்கும் நிலையில், இந்த ஸ்மார்ட்போன் நோக்கியா 9 என்ற பெயரில் அடுத்த ஆண்டின் துவக்கத்தில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்புறம் ஐந்து கேமரா லென்ஸ் 1-1-3 என்ற அடிப்படையில் பொருத்தப்பட்டு ஒன்றில் எல்.இ.டி. ஃபிளாஷ் இடம்பெற்றுள்ளது. பின்புறம் வட்ட வடிவில் சீராக ஐந்து கேமரா லென்ஸ் மட்டும் காணப்படும் நிலையில், கைரேகை சென்சார் இடம்பெறவில்லை.

அந்த வகையில் ஆப்பிள் நிறுவனம் போன்று 3டி ஃபேஸ் அன்லாக் அல்லது இன்-டிஸ்ப்ளே கைரேகை சென்சார் தொழில்நுட்பம் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறப்பம்சங்களை பொருத்தவரை 5.9 இன்ச் குவாட் ஹெச்.டி. OLED ஸ்கிரீன், ஸ்னாப்டிராகன் 845 பிராசஸர், 8 ஜிபி ரேம் மற்றும் OZO ஆடியோ உள்ளிட்டவை வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமீபத்தில் ஹெச்.எம்.டி. குளோபல் நிறுவனம் பியூர் வியூ பிரான்டை கைப்பற்றியது. இதே பிரான்டினை நோக்கியா விற்பனையை மைக்ரோசாஃப்ட் கைப்பற்றியதும் வாங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கியூப் விளையாட கற்றுத் தரும் கியூப்

பல வண்ண கன சதுரங்களை வைத்து விளையாடும், 'கியூப்' கண்டுபிடிக்கப்பட்டு, 44 ஆண்டுகள் ஆகியும் அதற்கு மவுசு குறையவில்லை. இன்றும் அதற்கான உலக சாம்பியன் போட்டிகள் நடக்கின்றன. இன்றைய தலைமுறையினர், சில நொடிகளில், கலைந்திருக்கும் வண்ணங்களை பக்கத்திற்கு ஒரு வண்ணமாக திருப்பிக் கொண்டு வந்து வெற்றி காண்கிறார்கள்.



இப்போது, போன நூற்றாண்டு கியூபை, 21ஆம் நூற்றாண்டுக்கு அழைத்து வர கோ கியூப் என்ற டிஜிட்டல் கியூபை ஒரு பொம்மை தயாரிக்கும் நிறுவனம் அறிவித்துள்ளது. 'கிக்ஸ்டார்டர்' தளத்தில் அதை அறிவித்தவுடனே, பல ஆயிரம் பேர் வாங்கத் தயாராகிவிட்டனர்.

கோ கியூபில், ஒவ்வொரு வண்ண கன சதுரத்துடனும் உணரிகளும், புத்திசாலி மின்னணு அமைப்பும் உள்ளது. இதை ஒரு மொபைல் செயலியுடன் இணைத்திருக்கின்றனர். இதன் மூலம் கியூப் கற்பவர்களுக்கு, அந்த செயலியே அடுத்த நகர்வுகளை சொல்லித் தருகிறது. அடுத்தாண்டு மார்ச் மாதம்தான் வெளிவரும் என்றாலும் பல்லாயிரம் பேர், மூளைக்கு வேலை தரும் கோ கியூபை வாங்கத் தயாராகிவிட்டனர்.

## மாலுமி இல்லாத படகு




உலகிலேயே முதல் முறையாக, மாலுமி இல்லாத படகு ஒன்று, தானாகவே வட அட்லாண்டிக் கடலைக் கடந்திருக்கிறது.

நார்வேயைச் சேர்ந்த,'ஆப்ஷோர் சென்சிங்' இரண்டு ஆண்டுகளாக இந்த சாதனையை செய்ய முயன்று தோற்றது.

கடந்த ஆண்டு அனுப்பப்பட்ட மாலுமி இல்லாத படகு, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, சில ஆயிரம் கி.மீ., பயணித்த பிறகு, தடுமாறிக் கொண்டிருந்தது. ஒரு மீன்பிடி படகு, அந்த மாலுமி இல்லாத படகை மீட்டு வந்தது.

ஆனால், ஜூன், 7 அன்று நியூபவுண்ட்லாந்திலிருந்து புறப்பட்ட, 'செய்ல் பயோய் மெட்'என்ற மாலுமி இல்லாத படகு, 3,000 கி.மீ.,தொலைவில் உள்ள அயர்லாந்து கடற்கரையை, ஆகஸ்ட், 26 அன்று வந்தடைந்தது.

சூரிய மின் பலகையும், பாய் மரமும் பொருத்தப்பட்ட செய்ல் பயோய் படகில், மாலுமி இல்லாத தொழில்நுட்பக் கருவிகளுடன் கடும் காற்று, காட்டமான அலைகள் என, எல்லாவற்றையும் சமாளித்து கரை சேர்ந்துள்ளது.

ஓட்டுனர் இல்லாத கார்களைப் போலவே, கடலிலும் மாலுமி இல்லாத படகுகள், அடுத்த, 10 ஆண்டுகளுக்குள் வந்துவிடும் என, வல்லுனர்கள் எதிர்பார்க்கின்றனர்.



# கால்களில் உள்ள சுருக்கங்களை நீக்குவது எப்படி?

பொதுவாக சுருக்கங்கள் வருகிறதென்றால் அதற்கு காரணம் வயதாகிவிட்டது என்று அர்த்தம். அவ்வாறு வயதாகி சுருக்கங்கள் வந்துவிட்டால் பெண்கள் பல அழகு நிலையங்களுக்கு சென்று அதனை நீக்கி அழகுப்படுத்திக் கொள்கின்றனர்.

அவ்வாறு அழகுபடுத்தும பெண்கள் முகம், கழுத்து மற்றும் கைகளை மட்டும் தான் பராமரிப்பார்கள். சுருக்கங்களானது முகம், கைகளுக்கு மட்டும் வருவதில்லை, வயதானால் உடல் முழுவதும் தான் வரும். மேலும் சிலருக்கு சுருக்கங்கள் இளம் வயதிலேயே வந்துவிடும். இத்தகைய சுருக்கங்களை அழகு நிலையங்களுக்கு சென்று நீக்குவதை விட, வீட்டில் இருந்தே ஈஸியாக சரிசெய்யலாம்.

சருமத்தில் எப்போதும் ஈரப்பசையானது இருக்க வேண்டும். அதுவும் முகம் மற்றும் கைகளுக்கு மட்டும் அல்ல, கால்களுக்கும் தான். அவ்வாறு ஈரப்பசை இல்லாமல் இருந்தாலும் சுருக்கங்கள் வரும். ஆகவே ஒரு நாளைக்கு இரு முறை உடம்புக்கு தடவும் லோசனை தடவ வேண்டும். அதுவும் காலையில் குளித்த பின்னும் மற்றும் இரவில் படுக்கும் முன்னும் தேய்த்து 15 20 நிமிடம் தேய்த்து, பிறகே ஆடைகளை அணிய வேண்டும். ஏனெனில் லோசனானது சருமத்தில் நுழைய சிறிது நேரம் ஆகும். ஆகவே இவ்வாறு ஒரு மாதம் செய்து வந்தால் நாளடைவில் சுருக்கங்கள் போய் விடும்.

# ஹேர் ஸ்பா வீட்டில் செய்யலாமா?



தற்போது, ‘ஸ்பா ட்ரீட்மென்ட்’ பல்வேறு பார்லர்களில் பரவலாகச் செய்யப்படுகிறது. இந்த ஸ்பாவில், இரண்டு வகை இருக்கிறது.

1. பாடி ஸ்பா
2. ஹேர் ஸ்பா

பாடி ஸ்பாவைவிட, ஹேர் ஸ்பாவையே பலரும் விரும்புகிறார்கள். ஹேர் ஸ்பா என்பது, அவரவரின் ஸ்கால்ப் அல்லது முடிக்கு ஏற்ப செய்யப்படுவது. முதலில் எந்த இடத்தில் பிரச்சனை உள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்னரே, ஸ்பா ட்ரீட்மென்டை ஆரம்பிக்க வேண்டும்.

முடி வளரவே இல்லை எனச் சிலர் சொல்வார்கள். எதனால் முடி வளரவில்லை என்பதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை, பொடுகினால் பிரச்னை ஏற்படலாம். அல்லது ஸ்கால்பில் வேறு ஏதாவது பிரச்னைகள் இருக்கலாம். இன்னும் சிலருக்கு, முடி டிரையாக இருக்கும். ஷைனிங் இல்லாமல் இருக்கலாம். அல்லது முடி பிளவு இருக்கலாம். பிரச்னையைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப செய்ய வேண்டும்.

ஹேர் வாஷ் செய்ய, அவரவர் முடியின் தன்மைக்கு ஏற்ற ஷாம்பு வகைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

1. பியூரிஃபையிங் ஷாம்பு (Purifying Shampoo)
2. டீடாக்ஸ் ஷாம்பு (detox shampoo)

பியூரிஃபையிங் ஷாம்பு என்பது, அதிகம் பொடுகு இருப்பவர்களுக்குப் பயன்படுத்துவது. டீடாக்ஸ் ஷாம்பு என்பது, மற்ற அனைத்து முடிப் பிரச்சனைக்குமானது.

ஷாம்புவைப் பயன்படுத்தி முடியை அலசியதும், அவர்களுக்குத் தேவையான கிரீம் மற்றும் கான்சென்ட்ரேட் (concentrate) இரண்டையும் கலந்து மசாஜ் செய்ய வேண்டும். கிரீம் தேர்ந்தெடுப்பதிலும் கவனம் அவசியம்.

நரேஷிங் கிரீம் பாத் (nourishing cream bath), ஹைடிரேட்டிங் கிரீம் பாத் (hydrating cream bath) போன்ற பல கிரீம் பாத்கள் இருக்கின்றன. அவரவர் முடியின் தன்மைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்க வேண்டும்.

முடி கடினமா இருக்கிறதா, அதிகமாகச் சிதைவடைந்து இருக்கிறதா, அல்லது ஹேர் டிரையாக இருக்கிறதா, இதையெல்லாம் கவனித்து, கிரீமைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர் ஸ்கெல்ப்பில், பொடுகு இருக்கிறதா, ஸ்கெல்ப் காய்ந்து அரிப்பு ஏற்படுதா, அல்லது நீர்ச்சத்து குறைவாக இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

ஸ்கேனரைப் பயன்படுத்தியோ அல்லது மேக்னிஃபையிங் மிரர் (magnifying mirror) பயன்படுத்தியோ ஸ்கால்ப் பிரச்சனைகளைத் தெரிந்துகொள்ளலாம். இவை அனைத்தையும் பரிசோதித்துவிட்டு, பிரச்னைகளுக்கு ஏற்ப ட்ரீட்மென்ட் செய்ய வேண்டும். இது புரொபஷனல் ட்ரீட்மென்ட். இதை வீட்டில் செய்யவே கூடாது. பார்லரில் மட்டுமே செய்துகொள்ள வேண்டும்.

கடைகளில் ஸ்பா ஷாம்பு, கண்டிஷனர் கிடைக்கும். அவற்றை வீட்டில் பயன்படுத்தலாம். ஆனால், புரொபஷனல் ட்ரீட்மென்ட் செய்தால் தீர்வு கிடைக்கும் எனில், நிச்சயம் புரொபஷனலையே அணுக வேண்டும்.

ஹேர் ஸ்பா எடுத்த பின்னர், அவர்கள் பரிந்துரைக்கும் ஷாம்பு மற்றும் கண்டிஷனர்களைப் பயன்படுத்தினால், தொடர்ந்து பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கலாம். அவரவர் பிரச்னைக்கு ஏற்ப, இரண்டு வாரத்துக்கு ஒருமுறையோ, நான்கு வாரத்துக்கு ஒருமுறையோ, ஸ்பா ட்ரீட்மென்ட் செய்துகொள்ள வேண்டும். அன்றாட பராமரிப்புக்கு 15 நாள்களுக்கு ஒருமுறை ஸ்பா ட்ரீட்மென்ட் மேற்கொள்ளலாம்.




# கண்ணுக்கு கீழ் கருவளையம் ஏற்படுவதற்கான காரணங்கள்



கண்ணுக்கு கீழ் ஏற்படும் கண் கருவளையத்தால் பெரும்பாலான பெண்கள் இதனால் பாதிப்படைந்துள்ளனர். அதிலும் திருமணமாகாத பெண்களுக்கு கண் கருவளையம் வந்துவிட்டால் மனதளவில் சோர்வடைய செய்துவிடுவர்.

கண்களுக்குக் கீழ் உள்ள தோலானது 0.5 மி.மீ தடிமனும் மற்ற இடத்தில உள்ள தோல் 2மி. மீ தடிமனும் கொண்டது. அதனால் மற்ற தோலை விட கண்களுக்கு கீழ் உள்ள தோல் மிக விரைவில் பாதிப்படைகிறது. மிக விரைவில் கருவளையத்தை மறைய வைக்கலாம்.

காரணங்கள்:

அதிக வேலைப்பளு காரணமான உடல் சோர்வு நாள் முழுவதும் ஓய்வு இல்லாமல் உழைப்பதனால் நமது உடல் களைப்படைகிறது. உடலுக்கு ஓய்வு தேவை என்பதை கண்களின் கருவளையம் நமக்கு உணர்த்துகிறது.

தூக்கம் நமது உடலுக்கும் கண்களுக்கும் சிறந்த ஓய்வு ஆகும். சரியான நேரத்தில் உறங்காமல் கணினி மற்றும் கைபேசியில் நமது நேரத்தைக் கழித்தால் கண்ணுக்கு கீழ் கருவளையம் கண்டிப்பாக ஏற்படும். ஒரு நாளுக்கு குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்குவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கண்களில் ஏற்படும் தொற்றினால் கண்களில் சில நேரம் அரிப்பு ஏற்படும். இதனால் கண்களை கசக்க நேரிடும். அதிகமாக கண்களை கசக்குவதால் மிகவும் மெல்லிய தோலான கண்களுக்குக் கீழ் உள்ள தோல் கருமையடைகிறது.

சிலருக்கு மரபியல் காரணங்களால் பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு ஏற்படலாம். சத்துக்குறைவினால் சிலருக்கு கண் கருவளையம் தோன்றும். சத்தான உணவு பழக்கவழக்க முறைக்கு மாறுவதே இதற்கு தீர்வு.

பெண்கள் அன்றாடம் முகத்தில் பல கிரீம்களை உபயோகிக்கின்றனர். இது சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. இதனால் மிகவும் மெல்லிய தோலான கண்களுக்கு அடியில் கருமையாக மாறுகிறது

அதிக நேரம் வெயிலில் அலைவதால் உடலும் மிகவும் மென்மையான தோலான கண்களுக்கு அடியில் உள்ள தோலும் பாதிப்படைகிறது. இதனால் கருவளையம் ஏற்படுகிறது. அதனால் வெயில் காலங்களில் கருவளையம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வாரம் ஒரு முறையாவது கண்ணை குளிர்ச்சி படுத்தும் விதமாக கேரட் அல்லது வெள்ளரி பிஞ்சை மெல்லிதாய் நறுக்கி கண்ணின் மேல் வைத்தல் நலம் பயக்கும்.

# நமது அழகை பாதுகாப்பது எப்படி?



அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக இளம்பெண்கள் பலர் எடைக் குறைப்பில் ஈடுபடுகின்றனர். அதன் காரணமாக காலை உணவை தவிர்க்கின்றனர். சிலர் கார்போஹைட்ரேட் உணவுகளையே முழுவதுமாக தவிர்த்து விடுகின்றனர். உணவை தவிர்க்கும் போதோ, இவ்வாறு உணவு முறையில் மாற்றம் கொள்ளும் போதோ வயதான தோற்றம் உண்டாகலாம்.

இவர்கள் இந்த மாதிரியான உணவுப்பழக்கத்தை இரண்டு வருடங்கள் பின்பற்றினால் தலைமுடி கொட்டிப்போதல், கண்களில் குழி விழுதல், கண்களைச் சுற்றிக் கருவளையம், இளநரை போன்ற காரணங்களால் இருபது, இருபத்தி ஐந்து வயதிலேயே நாற்பது வயதைப் போல தோற்றம் அளிப்பார்கள். உடல் சுருக்கம் மற்றும் மார்பகம் தளர்ந்து போதல் போன்றவையும் ஏற்படலாம். அதனால் உணவைத் தவிர்ப்பதை விட்டு முறையான உணவுப் பழக்கவழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

அழகை பராமரிப்பதில் உணவை அடுத்து சுத்தம் பெரும் பங்கு வகிக்கிறது. நம் உடம்பில் 4 வாரங்களுக்கு ஒரு முறை பழைய செல்கள் இறந்து புது செல்கள் உற்பத்தியாகும். தலையில் நாள்தோறும் புது செல்கள் உருவாகும். உதிர்ந்த செல்களை நீக்கினால் தான் புது செல்கள் நன்கு வளர்ச்சி அடையும். அதற்கு ஒருநாள் விட்டு ஒருநாள் தலை குளிப்பது அவசியம். மண்டையோடு சுத்தமாக இல்லாமல் போனால் தலையில் பொடுகு அதிகரிக்கும்.

அதனால் முடி கொட்டும். பொடுகை சொறியும்போது முகத்தில் உதிர்ந்தால் சிலருக்கு முகத்தில் பொரி பொரியாக ஏற்படும். பொடுகினால் ஏற்படும் அந்த மாற்றம் முக அழகைக் கெடுக்கும். தலை சுத்தமாக இல்லாவிட்டால் முக அழகு பாதிக்கப்படும். தலைமுடி சுத்தத்தைப் பேணுவது போல் சருமத்தையும் பராமரிப்பதும் அவசியம். அதற்கு நம் சருமம் எப்படிப்பட்டது என்று நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது எண்ணெய்ப் பசை கொண்ட சருமமா? உலர்ந்த சருமமா அல்லது சென்ஸிடிவ்வான சருமமா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் விளம்பரத்தில் வரும் அழகு சாதனப்பொருட்களோ, நம் தோழிகள் பயன்படுத்தும் அழகுப்பொருட்களோ நமக்கும் பொருந்தும் என்று எண்ணக் கூடாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக சருமம் மாறுபடும். நம் சருமத்துக்குத் தகுந்த அழகு சாதனப் பொருட்களை பயன்படுத்த வேண்டும். அதனால் நமது குடும்ப மருத்துவரிடமோ, ப்யூட்டிஷியன்களிடமோ சென்று நம் சருமம் எப்படிப்பட்டது என்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நம் சருமத்தின் இறந்த செல்களை நீக்குவதற்கு ஃபேஷியல் செய்து கொள்ளலாம். நமது தோலுக்கு தகுந்த மாதிரியான பொருட்களை தேர்ந்தெடுத்து பயன்படுத்த வேண்டும். மாதத்திற்கொரு முறையாவது இறந்த செல்களை நீக்க வேண்டும். பார்லருக்கும் செல்லலாம். ஆனால் நாம் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் தரமானதாக இருக்கவேண்டும். அந்த விஷயத்தில் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

பணத்துக்காகப் பார்த்தால் நம் சருமத்தின் அழகு பாதிக்கப்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.அதற்காக அதிக பணம் செலவழிக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் வாங்கும் காஸ்மெட்டிக்ஸ் தரமானதாக இருக்கிறதா என்று பார்த்து வாங்க வேண்டியது அவசியம். வீட்டிலும் சருமப் பராமரிப்பு மேற்கொள்ளலாம்.

# எளிய முறையில் கண்களுக்கு அலங்காரம் செய்யவது எப்படி?

இன்று, பெரும்பாலான இளம் பெண்கள் மொபைலையும், அலுவலகம் செல்லும் பெண்கள் கம்ப்யூட்டரையும், இல்லத்தரசிகள் டி.வி-யையும் பார்த்துட்டே இருக்காங்க. இதனால் கண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகம்.

கண்களுக்கான ரிலாக்ஸிங் ட்ரீட்மென்ட் ப்ளஸ் கண் கருவளையத்துக்கான சிகிச்சை என டூ இன் ஒன் பார்லர் சிகிச்சையான ‘ஐ ட்ரீட்மென்ட்’ பற்றி இங்கே பார்ப்போம். இதில், முதல்ல கண்களை க்ளென்ஸிங் மூலமா சுத்தப்படுத்தி, ஒரு பேக் போட்டுவிடுவார்கள். அதை அலசிய பிறகு, மசாஜ் க்ரீம் கொண்டு கண்களுக்கு நல்லா மசாஜ் கொடுப்பார்கள் இது முடிஞ்சதும், ஐ ஜெல் மூலம் மசாஜ் கொடுப்பார்கள். மீண்டும் ஒரு பேக் போட்டு விடுவார்கள். இந்த ட்ரீட்மென்ட் காரணமா கண்கள் புத்துணர்ச்சி பெறுவதோட, கருவளையமும் கொஞ்சம் கொஞ்சமா மறைஞ்சுடும். இப்போது தினமும் போடக்கூடிய கண் அலங்காரத்திற்கான டிப்ஸை பார்க்கலாம்.



ஐபுரோ பாலட்: கண், புருவத்துக்கு என ஐபுரோ பாலட்கள் காஸ்மெடிக் கடைகளில் கிடைக்கின்றன. இதில் மூன்று நிறங்கள் இருக்கும். இதில் உள்ள பிரஷ் மூலம், இந்த வண்ணங்களை தேவைக்கு ஏற்ப கலந்து, புருவ முடிகளின் மீது மட்டும் தடவலாம். இது புருவத்தை பளிச்சென்று காட்டும்.

ஐலாஷ்: மார்க்கெட்டில் பலவிதமான செயற்கை இமை முடிகள் கிடைக்கின்றன. இதனுடன் கொடுக்கப்படும் பசையின் உதவியால் இதை கண் இமைகளில் ஒட்டிக்கொண்டால், இமை முடிகள் நீண்டு, அடர்ந்து இருப்பது போன்ற அழகிய தோற்றத்தைக் கொடுக்கும். கவனம் தரமான பிராண்ட் பார்த்து வாங்கவும்.

ஐ ஷேடோ: தரமான ஐ ஷேடோ உபயோகிப்பதால், கண்களில் அலர்ஜி ஏற்படுவதைத் தடுக்கலாம். ஐ ஷேடோக்களின் துகள்கள், கண்களின் உள்ளே போய், அலர்ஜி மற்றும் கட்டியை ஏற்படுத்திவிடும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, கண்களுக்கு ஐ ஷேடோ தடவும் முன்பாக, ஐ ப்ரைமர் தடவிவிட்டு அப்ளை செய்தால், கண் இமைகளை அலர்ஜியில் இருந்து காக்கலாம்.

# பீட்ரூட்டின் நன்மைகள்

கிழங்கு வகைகளிலேயே அதிக ஆரோக்கிய நலன் நிறைந்த உணவாக பீட்ரூட் உள்ளது. இது நம் உடம்பின் ரத்த உற்பத்திக்கு மட்டுமே பயன்தரும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், லிப்ஸ்டிக் என்ற அழகு சாதனப் பொருளாகவும் இது பயன்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?காய்கறிகளிலேயே அதிக இனிப்புச் சுவை கொண்டது பீட்ரூட். ‘பீட்’ என்னும் செடியின் வளர்ந்த வேர்ப்பகுதியையே நாம் ‘பீட்ரூட்’ என்கிறோம். கரும்புக்கு அடுத்தபடியாக இனிப்புக்காக பயன்படுத்தும் சர்க்கரையின் மூலமாக பீட்ரூட் இருந்திருக்கிறது.

இதன் இலை களையும் ஆதிகாலத்தில் சமையலுக்கு பயன்படுத்தி இருக்கிறார்கள். இதை முதலில் உணவுக்காக பயன்படுத்தியவர்கள் ரோமானியர்கள். ரோமானிய நாடோடிகள் மூலமாக வடஐரோப்பாவுக்கு இது உணவுக்காக பயிரிடப்பட்டது.



இதில் உள்ள இனிப்புச் சுவைக்காக குழந்தைகளும் இதை விரும்பி உண்பார்கள். இதை பச்சையாகவும் சாப்பிடலாம். அதனுடைய பலன் முழுமையாக நமக்கு கிடைக்கும். இதனுடைய சத்துக்கள் நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராட உதவுகிறது. நமது உடலில் ரத்த சிவப் பணுக்கள் உற்பத்தியாக அதிக துணை புரிவது பீட்ரூட்டேயாகும். மேலும் இதில் உள்ள ஆன்டி ஆக்ஸிடென்ட் புற்றுநோய்க்கு எதிராக போராட உதவுவதாகச் சொல்கிறார்கள். பொதுவாக சிவப்பு நிறத்தில் காணப்படும் பீட்ரூட் அரிதாக மஞ்சள் மற்றும் வெள்ளை நிறத்திலும் காணப்படுகிறது.

**100 கிராம் பீட்ரூட்டில் உள்ள சத்துக்கள்**

தண்ணீர்- 87.7 விழுக்காடு, புரோட்டீன் - 17 விழுக்காடு, கொழுப்பு - 0.1 விழுக்காடு, தாதுக்கள் - 0.8 விழுக்காடு, நார்ச்சத்து - 0.9 விழுக்காடு, கார்போஹைட்ரேட் - 8.8 விழுக்காடு உள்ளது. மற்றும் கால்சியம் - 18 மில்லி கிராம், பாஸ்பரஸ் - 5.5 மில்லி கிராம், இரும்பு - 10 மில்லி கிராம், வைட்டமின் சி - 10 மில்லி கிராம், வைட்டமின் ஏ மற்றும் பி-1, பி-2, பி-6, நியாசின், வைட்டமின் பி ஆகியவற்றுடன் சோடியம், பொட்டாசியம், சல்பர், குளோரின், அயோடின், காப்பர் போன்ற சத்துக்களும் உள்ளன. இப்படி தலை முதல் பாதம் வரை நமது உடம்பின் அனைத்து உறுப்புகளுக்கும் பயன்தரும் பீட்ரூட் நமது உதட்டுக்கும் நன்மை செய்கிறது என்றால் நம்புவீர்களா? ஆம்! உதட்டுச் சாயம் என்கிற லிப்ஸ்டிக் செய்ய இது பயன்படுகிறது. அதன் செய்முறையை பார்ப்போமா..?

**பீட்ரூட் லிப்ஸ்டிக் செய்முறை...**

ஒரு கிளாஸில் முழுவதுமாக பீட்ரூட் சாறு எடுத்துக்கொள்ளவும். அதில் கால் பங்கு அளவு தேங்காய் எண்ணெயையும், தேன் மெழுகையும் சேர்த்து ஒரு சிறிய ஸ்பூனால் கலக்க வேண்டும். பின் அந்தக் கலவையை ஃப்ரிட்ஜில் வைக்க வேண்டும். ஓரிரு நாளில் இது உறைந்துவிடும். பின் தேவைப்படும்பொழுது அதை உங்கள் உதட்டில் லிப்ஸ்டிக்காக போட்டுக் கொள்ளலாம். உதட்டுக்கு நல்ல சிவப்பு நிறத்தை இது தரும். உங்கள் உதட்டின் கருமை நிறத்தைப் போக்கி ஈரப்பதம் அளிக்கும்.

இது ஒரு அற்புதமான ஸ்கின் டோனர். புற ஊதாக்கதிர் தாக்கத்திலிருந்து நம் உதட்டை பாதுகாத்து மினுமினுப்பை தருவதில் மிகச் சிறந்தது. இந்த பீட்ரூட் லிப்ஸ்டிக். இதைப் பயன்படுத்துவதால் நாளடைவில் நம் உதடுகள் மிக அழகாக மாறிவிடும்.

பொதுவாக கெமிக்கல் கலந்த லிப்ஸ்டிக்கையே இன்றைய டீன் ஏஜ் பெண்கள் விரும்புகிறார்கள். அதனால் உடலுக்கு ஏற்படும் பாதிப்பை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

காய்கறிகள், பழங்களில் உள்ள நன்மைகளைப் பற்றி அவர்கள் அறிந்துகொள்வதில்லை.

ஒரு சிலரே இந்த வழிமுறையை பயன்படுத்துகிறார்கள். நம் உடலுக்கு பாதிப்பு தராத, கெமிக்கல் கலக்காத இந்த இயற்கையான லிப்ஸ்டிக்கை பயன்படுத்தி நலமோடு வாழ்வோம்!

# பறக்கும் குதிரை

ரத்தினபுரி நாட்டை உக்கிரசேனன் ஆண்டுவந்தார். அவர் ஆட்சியில் மக்கள் பயந்துகொண்டே வாழ்ந்தனர். சின்னச் சின்ன தவறுகளுக்குக் கூட சிறைத் தண்டனை வழங்குவது மன்னரின் வழக்கமாக இருந்தது.

ஒரு நாள் உக்கிரசேனனின் கனவில் பறக்கும் குதிரை வந்தது. அதில் ஏறி, வான்வெளியில் உல்லாசமாக வலம் வந்தார். கண் விழித்துப் பார்த்தபோது, தான் கண்டது கனவு என்று புரிந்தது. கனவுதான் என்றாலும் பறக்கும் குதிரையின் மீது பயணம் செய்த அனுபவம் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

உண்மையாகவே பறக்கும் சக்தி உடைய குதிரை உண்டா என்ற கேள்வியும், அதற்கு விடை தேடும் ஆவலும் பிறந்தது.

விடிந்ததும் மந்திரியை அழைத்து, தான் கண்ட கனவையும் அதுபோலப் பறக்கும் குதிரை தனக்கு வேண்டும் என்றும் சொன்னார்.

நாளை நம் மக்களை அரண்மனைக்கு அழையுங்கள். பறக்கும் குதிரையைச் செய்து கொடுக்க முடியும் என்பவர்கள் மட்டுமே நாட்டுக்குள் இருக்கலாம். மற்றவர்களைச் சிறையில் அடையுங்கள் என்றார் உக்கிரசேனன்.

மன்னனின் பிடிவாதக் குணத்தை மந்திரி அறியாதவரல்ல. அவரிடம் வாதம் செய்வது வீண் என்பதால் அமைதியானார். மன்னரின் கட்டளைப்படி அந்தச் செய்தி நாடு முழுதும் அறிவிக்கப்பட்டது. அது மக்கள் மனதில் பீதியை உண்டாக்கியது.

ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு ஒருவர் மன்னரிடம் மாட்டிக் கொண்டு சிறைத் தண்டனைக்கு உள்ளானார்கள்.

அன்று குதிரைகளை வளர்த்துவரும் சிவபிரான் அழைத்து வரப்பட்டிருந்தார்.

நீர் எவ்வளவு காலமாக குதிரை வளர்த்து வருகிறீர்?

மன்னா, இது எனது முப்பாட்டன் காலத்து தொழில்!

அப்படி என்றால் உமக்குப் பறக்கும் குதிரையைப் பற்றித் தெரியுமா?

சிவபிரானுக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது. இல்லை என்று சொன்னால் சி



றைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். உண்டு என்று சொன்னால் உடனே கொண்டு வா என்பார். இதிலிருந்து தப்பிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

என்ன யோசனை?

மன்னிக்க வேண்டும் மன்னா, பறக்கும் குதிரை உள்ளதா என்று தெரியாது. ஆனால் குதிரையைப் பறக்க வைக்கும் உபாயம் உள்ளது.

அப்படியா.. என்ன அது?

அது உடனே செயல்படுத்தக் கூடியது அல்ல மன்னா. ஒரு வருடக் கால அவகாசம் வேண்டும். பல மந்திர உச்சாடணங்கள் செய்ய வேண்டும். குதிரைக்குப் பறப்பதற்கு ஏற்ற உணவு அளிக்க வேண்டும். இவை எல்லாம் சாத்தியப்பபட நீண்ட காலம் ஆகலாம்.

ஒரு வருடக் கால அவகாசம் தருகிறேன். பறக்கும் குதிரையைத் தயார் செய்து கொடு என்று சொல்லி, சிவபிரானை அனுப்பி வைத்தார் மன்னர்.

சிவபிரான் அப்படிச் சொன்னதைக் கேட்டு ஊர் மக்கள் திகைத்தனர். மன்னரிடம் இப்படி மாட்டிக்கொண்டாரே என்று பரிதாபப்பட்டனர். சிவபிரானின் மனைவி கோசலை கோபப்பட்டார்.

குதிரையைப் பறக்க வைப்பது நடக்கக் கூடிய காரியமா?

நான் அப்படிச் சொல்லவில்லை என்றால் மன்னர் சிறையில் தள்ளியிருப்பார். கொட்டத்தில் இருக்கும் குதிரைகளை யார் கவனிப்பது? என்றார் சிவபிரான்.

ஓராண்டு கடந்தது. அன்று அரசவைக்கு வந்தார் கோசலை.

மன்னா, எனக்கு நீதி வேண்டும்.

என்ன பிரச்சினை?

மன்னா, என் சித்தி மகன் விருந்தாளியாக வந்திருந்தான். அவனிடம் என் கணவர் என்ன சொன்னாரோ தெரியவில்லை. ஒரு வாரமாக அவனைக் காணவில்லை. நான் சித்திக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவிக்கிறேன். தாங்கள் என் கணவரைத் தீர விசாரித்து, என் தம்பியை ஒப்படைக்க வேண்டும் என்றார் கோசலை.

மந்திரியாரே, இவர் கணவரை அழைத்து வரச் சொல்லுங்கள்.

சிவபிரானைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவரைப் பார்த்ததும் பறக்கும் குதிரை ஞாபகம் வந்தது.

பறக்கும் குதிரை வேலை முடிந்துவிட்டதா?

மன்னா, என் மீது குற்றம் சுமத்தியிருப்பவர் என் மனைவிதான். காணாமல் போனதாகச் சொன்னது என் மைத்துனனைத்தான். அவன் செய்த தவறுக்குத் தங்கள் முன் நான் குற்றவாளியாக நிற்கிறேன் என்றார் சிவபிரான்.

விளக்கமாக சொல்லுங்கள்.

மன்னா, நான் பறக்கும் குதிரையைத் தயார் செய்யும்போது என் மைத்துனன் பார்த்து விட்டான். எப்படியோ விஷயத்தைத் தெரிந்து கொண்டு, நான் வீட்டில் இல்லாத நேரத்தில் பறக்கும் குதிரையில் ஏறிப் பறந்துவிட்டான். நான் விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பதறிவிட்டேன். ஒரு வாரமாகப் பல ஊர்களில் தேடிப் பார்த்துவிட்டேன். என் மைத்துன



னையும் காணவில்லை, குதிரையையும் காணவில்லை. தன் தம்பி செய்த தவறைப் புரிந்துகொள்ளாமல் என் மீது பழி சொல்கிறார். இதற்குத் தாங்கள்தான் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் மன்னா என்றார் சிவபிரான்.

மன்னருக்கு அச்சம் ஏற்பட்டது. 'பறக்கும் குதிரையில் ஏறிச் சென்றவனைக் காணவில்லை என்றால் அது மாயமாகிவிட்டது என்றுதானே அர்த்தம். அந்தக் குதிரையில் ஏறியிருந்தால் நானும் காணாமல் மாயமாகித்தானே போயிருப்பேன்? இந்த நாட்டுக்கு நான் மன்னனாக இருக்க முடிந்திருக்காதே? இருப்பதை விட்டு விட்டுப் பறப்பதற்கு ஆசைப்படக் கூடாது என்று சொல்வது இதைத்தான் என்று நினைக்கிறேன். இனி எனக்குப் பறக்கும் குதிரை தேவை இல்லை' என்ற முடிவுக்கு வந்தார் மன்னர்.

பறக்கும் குதிரையைச் செய்ய வேண்டாம். சிறையில் இருப்பவர்களை உடனே வெளியே அனுப்புங்கள் என்று மன்னர் ஆணை பிறப்பித்தார்.

மக்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சிவபிரானும் கோசலையும் தங்களின் நாடகம் வெற்றி பெற்றதை நினைத்துச் சிரித்துக்கொண்டே இருந்தனர்.

# உயிர் எங்கே இருக்கிறது?

'நினைவாற்றல்' என்பது மூளை செய்யும் விந்தை; சரியாகப் புலப்படாத புதிர்! இன்னும் இது குறித்து நாம் முழுமையாக அறியவில்லை. இதுவரை தெரிந்தவரை, பெரும்பாலான நினைவுகள் பெருமூளையில்தான் பதிவாகின்றன. அதற்குத் துணைபுரிய ஹிப்போகாம்பஸ், அமிக்டாலா அடங்கிய 'லிம்பிக் சிஸ்டம்' என்ற அமைப்பும் மூளையில் உள்ளது. நினைவாற்றலுக்கும் அறிவாற்றலுக்கும் ஆதாரமாக இருப்பது இதுதான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

நினைவாற்றலில் 'குறுகிய கால நினைவாற்றல்' , 'நீண்ட நாள் நினைவாற்றல்', 'திறமை சார்ந்த நினைவாற்றல்' என மூன்று விதம் உண்டு. நம் புலன்களிலிருந்து வரும் செய்திகளை லிம்பிக் சிஸ்டம் வரவேற்று, பெருமூளையின் முன்பகுதிக்கு அனுப்புகிறது. அந்தச் செய்திகளைப் பெருமூளை ஒலியாகவோ, காட்சியாகவோ, உணர்வாகவோ தற்காலிகமாகச் சேமித்துக்கொள்கிறது.

ஒரே நேரத்தில் 7 செய்திகள் சுமார் ஒரு நிமிட நேரத்துக்கு இங்கே தங்குகின்றன. புதிய செய்திகள் நுழையும்போது பழையவை அழிகின்றன. உதாரணமாக, காலையில் படித்தது நினைவில் இருக்கிறது. முதல் நாள் படித்தது நினைவில் இல்லை. இது, குறுகிய கால நினைவாற்றல்.

அதேநேரத்தில் ஒரு விஷயத்தைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தால், அதே விஷயத்தை அதிக காலம் நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது. இது, நீண்ட நாள் நினைவாற்றல். உதாரணமாக, பரீட்சைக்குப் படித்தது மறக்காமல் இருக்கிறது. ஒரு தூண்டுதல் மூலம் பழைய நினைவுகளைத் திரும்பப் பெறவும் முடிகிறது. 'புத்தகக் காட்சி' என்றதும், முன்பு ஒருமுறை புத்தகக் காட்சிக்குச் சென்றதும், போட்டிகளில் பரிசு பெற்றதும், ஆசிரியர் பாராட்டியதும் ஒரு சங்கிலித் தொடர்போல் நினைவுக்கு வருவது இந்த நினைவாற்றலுக்கு உதாரணம். சந்தோஷமான / துக்கமான சம்பவங்கள் ஆயுள் முழுவதும் நினைவில் நிற்பதும் இப்படித்தான்.

'திறமை சார்ந்த நினைவாற்றல்' சற்றே வித்தியாசமானது. இதற்குச் சிறுமூளைதான் சிறப்பு மையம். சைக்கிள், கார் போன்ற வாகனங்கள் ஓட்டுவது, வீணை, கிடார் போன்ற இசைக் கருவிகள் வாசிப்பது, நீச்சலடிப்பது, டைப் செய்வது போன்றவை இதற்குச் சில உதாரணங்கள். 'தசைகளுக்கு நினைவாற்றல் உண்டு' என்று எழுதியிருந்தேன். மேற்சொன்ன திறமைகளில் பெரும்பாலும் தசைகள்தான் பயிற்சி பெறுகின்றன. அங்குள்ள நரம்பணுக்கள் அந்தப் பயிற்சியை நினைவுகொள்கின்றன.




அந்த நிகழ்வின் ஆரம்பத்தில் மட்டும் தசைகள் மூளையிலிருந்து ஆணையைப் பெறுகின்றன. தொடர்ச்சியாக அங்கிருந்து ஆணைகள் வரவேண்டும் என்று எதிர்பார்க்காமல் தாமாகவே அந்தச் செயல்களைத் தொடர்கின்றன. அதனால்தான் பேசிக்கொண்டே சைக்கிள் ஓட்டவும், கண்களைக் கட்டிக்கொண்டு அந்தரத்தில் கயிற்றின் மேல் நடக்கவும் முடிகிறது. இப்படிச் சொன்னால் இது இன்னும் நன்றாக விளங்கும்: நீச்சல் பயிற்சி பெறாத ஒருவர் நீச்சலடிக்க விரும்பினாலும், உடனே அவரால் நீச்சலடிக்க முடியாது. அவருடைய தசைகளுக்குப் பயிற்சி சார்ந்த நினைவு இல்லை என்பதுதான் அதற்குக் காரணம்.

### அறிவு என்பது என்ன?

முந்தைய அனுபவத்தையும், அதனால் நமக்கு ஏற்பட்ட பாதிப்பையும் பலனையும் நினைவில் கொண்டு, அதன்படி நடந்துகொள்வதுதான் 'அறிவு'. உதாரணமாக, 'பாம்பு கடித்துவிடும்' என்கிற அறிவு நமக்கு ஹிப்போகாம்பஸில் ஏற்படுகிறது. அடுத்தமுறை பாம்பைப் பார்த்ததும் அச்சப்படுகிறோம்; தப்பி ஓடப் பார்க்கிறோம் அல்லது அதை விரட்டுகிறோம். இவற்றைக் கவனித்துக் கொள்வது அமிக்டாலா.

### மறதி என்றால் என்ன?

மூளை சில விஷயங்களைத் தேர்ந்தெடுத்துப் பதிவு செய்துகொள்கிறது. பல விஷயங்களை ஒதுக்கிவிடுகிறது. இதுதான் மறதிக்கு அடிப்படை. நம் பெயர், முகம், முகவரி போன்ற தேவையான விஷயங்களை மூளை எளிதில் மறப்பதில்லை. அதுபோல் நாம் விரும்பிச் செய்யும் செயல்களை மூளை தன்னிடம் எப்போதும் போட்டுக் கொள்கிறது. ஈடுபாடு இல்லாமல் செய்யும் செயல்களை அது விட்டுவிடுகிறது. அதனால்தான் 'கஷ்டப்பட்டுப் படிப்பதைவிட இஷ்டப்பட்டுப் படிப்பவர்களுக்குப் பாடங்கள் மறப்பதில்லை' என்கிறார்கள்.

அடுத்தது, தூக்கம். உடல் செல்களின் ஓய்வுக்கும் புதுப்பித் தலுக்கும் புத்துணர்வுக்கும் 8 மணி நேரத் தூக்கம் தினமும் அவசியம். இரவு வந்ததும், கண்களில் இருந்து ரெட்டிகுலர் அமைப்புக்குச் செய்தி போகிறது. அது ஹைப்போதலாமஸில் உள்ள உயிர்க்கடிகாரம் மூலம் பீனியல் சுரப்பிக்குத் தகவல் அனுப்புகிறது. அது 'மெலட்டோனின்' ஹார்மோனைச் சுரக்கிறது. இது மூளையின் பெரும்பாலான மின்தூண்டல்களைத் தற்காலிகமாக அணைத்துவிடுகிறது. உடனே நம் கண்கள் சொருக, தூக்கம் ஆட்கொள்கிறது.

### உயிர் எங்கே இருக்கிறது?

மூளையில் இருக்கிறது! சுவாசமும் நாடித்துடிப்பும் நின்று போவதை 'இதய இறப்பு' என்கிறோம். மூளை செயலிழந்து போவதை 'மூளை இறப்பு' என்கிறோம். மூளை இறந்துவிட்டால், இதயம் துடித்தாலும் பலன் இல்லை. அதனால்தான் விபத்துகளில் மூளை இறப்புக்கு ஆளானவர்களின் இதயம், நுரையீரல், கல்லீரல், சிறுநீரகம், கண், தோல் போன்ற முக்கிய உறுப்புகளைத் தேவையானவர்களுக்குக் கொடுத்துக் காப்பாற்றுகிறார்கள். ஆகவே, உடலில் உயிர் இருக்கும் இடம் மூளை.

இத்தகைய மகத்துவம் வாய்ந்த மூளையைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமையல்லவா?

சுய சுத்தம் மற்றும் சூழல் காத்தல் வழியாக நோய்த்தொற்றுகளைத் தவிர்த்தல்.

ஆரோக்கியமான உணவு முறை, நாள்தோறும் உடற்பயிற்சி இவற்றின் மூலம் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, உடற்பருமன், இதய நோய் போன்றவற்றை ஓரங்கட்டுதல்.

# 'ஜிப்'பின் வரலாறு

ஜிப் இல்லாத வாழ்க்கையை இன்று நம்மால் நினைத்துப் பார்க்க முடியுமா? புத்தகம், துணி கொண்டு செல்லும் பைகள், பேண்ட், ஜீன்ஸ் போன்ற துணிகள், ஷூ, சூட்கேஸ் என்று நாம் பயன்படுத்தும் பொருட்களில் ஜிப்பின் பயன்பாடு அதிகமாக இருக்கிறது. ஜிப் கண்டுபிடிக்கப்பட்டு சுமார் நூறு ஆண்டுகள்தான் ஆகின்றன. அதற்கு முன் ஜிப்பின் வேலையைச் செய்துகொண்டிருந்தது பட்டன்.

தையல் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு பட்டனின் பயன்பாடு அதிகரித்தது. ஆனால் எளிதில் விழுந்துவிடும், போடுவதற்கு நேரம் பிடிக்கும் என்பது போன்ற பல பிரச்சினைகள் பட்டனில் இருந்தன. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வந்ததுதான் ஜிப்.

1851-ம் ஆண்டு புதிய தையல் இயந்திரத்தை உருவாக்கிய எலியாஸ் ஹோவ், தானாகவே துணிகளை இணைக்கும் ஒரு கருவியையும் உருவாக்கினார். இது சிறந்ததாக இருந்தாலும் அவரால் பெரிய அளவுக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. அவரது தையல் இயந்திரம் அதிக அளவில் விற்பனையானதால், இதை ஒரு பொருட்டாகவும் அவர் நினைக்கவில்லை.

40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு நாள் அமெரிக்காவைச் சேர்ந்த விட்காம்ப் ஜுட்சன், ஷூ லேஸைக் கட்டிக்கொண்டிருந்தார். அது கொஞ்சம் எரிச்சலைக் கொடுத்தது. அப்போதுதான் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. எலியாஸ் ஹோவ்வின் யோசனையைச் சற்று மேம்படுத்தி ஒரு கருவியை உருவாக்கினார்.

அதற்கு 'அன்லாக்கர் ஃபார் ஷூஸ்' என்று பெயரும் சூட்டினார். 'யுனிவர்சல் ஃபாஸ்ட்னர்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தையும் ஆரம்பித்தார். சிகாகோவில் நடைபெற்ற கண்காட்சியில் விற்பனைக்கும் வைத்தார். ஆனால் அது வெற்றியைத் தேடித் தரவில்லை.



1913-ம் ஆண்டு கிடியன் சண்ட்பேக், நவீன ஜிப்பை உருவாக்கினார். 'செபரபிள் ஃபாஸ்ட்னர்' என்ற தன்னுடைய கண்டு பிடிப்புக்கு 1917-ம் ஆண்டு காப்புரிமையும் பெற்றார். சண்ட்பேக் கண்டுபிடித்த இரண்டு வரிசைப் பற்களையும் இணைக்கும் ஜிப், வேகமாக அடுத்தடுத்த முன்னேற்றங்களைக் கண்டது.

சண்ட்பேக் மூலம் ஜிப் உருவானாலும் ஜிப் என்று பெயர்க் காரணம் அவரால் ஏற்படவில்லை. பி.எஃப். குட்ரிச் நிறுவனம், சண்ட்பேக் கருவியைப் பயன்படுத்தி புதுவிதமான ரப்பர் ஷூக்களைக் கொண்டு வந்தது. அவர்கள் அந்தக் கருவிக்கு 'ஸிப்பர்' என்று பெயர் சூட்டினர். பின்னர் ஜிப்பர், ஜிப், ஃப்ளை, ஜிப் ஃபாஸ்ட்னர் என்ற பெயர்களில் அந்தக் கருவி அழைக்கப்பட்டது. ஷூக்களிலும் பைகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்த ஜிப், பின்னர் துணிகளிலும் பயன்படுத்தப்பட்டது.

1934-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஜிப் தயாரிப்பை இன்றுவரை பின்பற்றி வருகிறது அமெரிக்காவின் ஒய்கேகே என்ற ஜிப் நிறுவனம். 1960-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம், உலகின் மிகப் பெரிய ஜிப் உற்பத்தி நிறுவனமாக இன்றும் இருந்துவருகிறது.

# கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்



கீழே உள்ள குறிப்புகளின் உதவியுடன் அவை உணர்த்தும் நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. ஐரோப்பாவின் தென்கிழக்கு மற்றும் மத்தியில் உள்ள நாடு.
2. மிகப் பெரிய நிலப் பகுதிகள் கொண்ட 9-வது நாடு.
3. இதன் தலைநகரம் புக்காரெஸ்ட்.
4. கரன்சி லெவ் (Leu).
5. நீலம், மஞ்சள், சிவப்பு வண்ண நீள் பட்டைகள் இதன் கொடியில் இருக்கின்றன.



6. இங்கே பாயும் டான்யூப், ஐரோப்பாவின் இரண்டாவது நீளமான நதி.
7. ஐரோப்பாவில் தங்கத்துக்கான அருங்காட்சியகம் இந்த நாட்டில் மட்டுமே இருக்கிறது.
8. ஜிம்னாஸ்டிக் வீராங்கனை நாடியா எலனா கொமனசி, 1976-ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களைப் பெற்று இந்த நாட்டுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். இவரே பர்ஃபெக்ட் 10 என்ற இலக்கை அடைந்த முதல் நபர். 14 வயதில் இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.
9. பொன் கழுதைப்புலி, வெள்ளை வால் கழுகு போன்றவை இந்த நாட்டின் சிறப்பு உயிரினங்கள்.
10. அரண்மனையில்தான் இதன் பாராளுமன்றம் அமைந்துள்ளது.

**விடை: ருமேனியா**

# பிரம்மக் கமலம் என்று ஒரு பூ உண்டா?



பிரம்மக் கமலம் ((Epiphyllum oxypetalum) கள்ளி வகையைச் சேர்ந்த ஒரு தாவரம். ஆண்டுக்கு ஒரே ஒரு முறை மட்டுமே பூக்கும் இயல்புடையது. பொதுவாக இரவில் மலரும் பூக்கள் வெள்ளையாக இருக்கும். பிரம்மக் கமலமும் வெள்ளையாகவும் அழகாகவும் இருக்கும்.

இந்தப் பூவின் ஆயுட்காலம் சில மணி நேரம்தான். இமயமலைப் பகுதியில் மட்டுமே காணப்பட்ட இந்தப் பூ, தற்போது தமிழ்நாட்டில் கூடக் காணப்படுகிறது. புராணக் கதையில் இதை, பிரம்மா அமரும் பூ என்கிறார்கள். இந்தச் செடியைக் கிள்ளி வைத்தாலே, புதுச் செடியாக உருவாகிவிடும்.

# மருத்துவர்கள் தாங்கள் எழுதிக் கொடுக்கும் மருந்துகளை ஏன் புரியாத மாதிரி எழுதுகிறார்கள்?

இதற்குப் பிரத்யேகக் காரணங்கள் இல்லை. மருத்துவம் படிப்பவர்களுக்கு நிறைய எழுத்து வேலைகள் இருக்கும். நேரம் குறைவாக இருக்கும். அதனால் வேக வேகமாக எழுதும்போது, கையெழுத்து மற்றவர்களுக்குப் புரியாதது போல் இருக்கும், ஆனால் அவர்களுக்குப் புரியும்.

இப்படியே அவர்கள் 5 ஆண்டுகளும் எழுதிப் பழகி விடுவதால், அவர்களின் கையெழுத்து இயல்பாக மாறிவிடுகிறது. பாடங்களைக் கூட ரெக்கார்ட் செய்துகொண்டு, பிறகு மெதுவாக எழுதும் அளவுக்குத் தொழில்நுட்பம் இப்போது வளர்ந்துவிட்டது. அதனால் இப்போது வரும் மருத்துவர்கள் புரியும்படியே எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய மருத்துவமனைகளில் கம்ப்யூட்டரே மருந்துகளைப் பிரிண்ட் செய்து கொடுத்துவிடுகிறது.

# இவ்வார இராசி பலன்கள்

ஜோதிடர் த.சத்தியதாஸன்




வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகள் நன்மை தரும். ஈடுபடும் கரும காரியங்கள் சிரமமின்றி ஜெயமளிக்கும். செய்தொழில் விருத்தி, மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். வியாபாரிகள் புதிய முதலீடுகளை கூட்டு வாணிபத்தை தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளை பெருக்கலாம்.




இவ்வாரம் செய்யும் தொழிலால் உயர்வு, விருத்தி , இலாபம் சேமிப்புக் கிட்டும். வங்கி வசதிகள் , மன நிறைவைத் தரும். வெளிநாட்டு நிதி வரவுகள் , நற்செய்திகள் நன்மையளிக்கும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப ஆதாய முன்னேற்றம் அடைவர். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகளுக்கு அரச மானியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் குடும்ப நிர்வாகம் திரம்பட நடைபெறும்.




மாதுரு பாவத்தில் ரவியுடன் புதன் ஆட்சி உச்சம் பெறுவதும் புத்தி புத்திரஸ்தானத்தில் குருவுடன் , வெள்ளி ஆட்சி பெறுவதும் யோகமாகும். மாதா நலம், கல்வி விருத்தி, புத்திரர் உதவி அனுகூலம் கிட்டும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமண பேச்சுக்களும் நிகழ்வுகள் இடம்பெறும். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் புது உத்வேகம் கொள்வர். பெண்கள் மாணவர் சௌபாக்கிய யோகம் அடைவர்.




விவேக பாவத்தில் ரவியுடன் புதன் ஆட்சி, உச்சம் பெறுவதால் புத்திச்சாரியம் மிகும். விவேக கூடும். எக்கருமமும் நிதானத்துடன் செயல்பட முடியும். மாதா ஸ்தானத்தில் குரு சுக்கிர சஞ்சாரத்தால் மாதா நலம், கல்வி விருத்தி ,குடும்ப சேமம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு சம்பள உயர்வு, பதவி ஏற்றம் இடமாற்றம் முதலியவற்றுக்கு உயர் அதகாரிகளால் சிபாரிசுகள் ஏற்படும். விவசாயிகள் தம் முதலுக்கேற்ற ஆதாயம் கொள்வர்.




தன பாவத்தில் ரவியுடன் புதன் ஆட்சி உச்சயோக அடைவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் சுகம் உண்டாகும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு , வங்கி வசதிகள் மனநிறைவைக் கொடுக்கும். புருஷன் , மனைவி ஐக்கியம் , அந்நியோன்யம் புத்திரர்களுடன் அன்பு, பாசம் ஏற்படும். குடும்பப் பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர் உதவி அனுகூலமுடன் நன்கு நடைபெறும்.




ஜென்ம ராசியில் ரவி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டாகும். தேகாபிமானம் அவசியம். அல்லாவிடின் வைத்திய செலவை உண்டாக்கும். செய்யும் தொழில் விருத்தி, ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயம் பெறும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைப் பழுவும் மேலதிக வேலையும் கிடைக்கும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் வேலைப்பளு குறையும். வியாபாரிகளை அனுசரித்து நடந்தால் வேலைப்பழு குறையும்.




ஜென்மத்து வியாழ தோஷமுடன் ஜென்ம வெள்ளியும் நடைபெறுவதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மையுண்டு. ஜீவன கர்ம பாவத்தில் உச்ச குஜன் நோக்குவதால் தொழில் உயர்வு, மேன்மை , நிதி வசதிகள் , வங்கியிருப்புக்கள் உண்டாகும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, அதிகாரம் கொள்வர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நன்மை தரும். பழைய கடன் யாவும் வசூலாகும். விவசாயிகளுக்கு அரச மானியம் வந்து சேரும்.




விரய வியாழ , வெள்ளி தோஷமுடன் ஏழரைச் சனி கடைக்கூறு தோஷமும் நடைபெறுவதால் இவ்வாரம் கிரக தோஷ நிவர்த்தி செய்வது நல்லது. வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். உத்தியோகத்தர் தம் பணிகளில் உத்வேகம் கொண்டு ஏற்றம் அடைவர். வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகள் புதிய முதலீடுகளையும் கொள்முதல்களையும் தொடங்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் அவசியம்.




இவ்வாரம் ஜென்மச்சனி, அஷ்டமத்து ராகு (கேது) தோஷம் இருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தல் வேண்டும். செய்தொழில் விருத்தியுண்டு. உத்தியோக பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். விவசாயிகளின் அரச மானியம் உரிய வேளையில் வந்து சேரும். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் நன்கு நடைபெறும். ஆசிரியர், மாணவர் பெற்றோர் உறவு சீராகவே இருக்கும்.




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை வாகன குடும்பம் அபிவிருத்தி பெறும். செய்யும் தொழிலால் இலாபம் சேமிப்பு ஏற்படும். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். உத்தியோகத்தர் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் தம் முயற்சிகேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். விவசாயிகளுக்கு அரச மானியம் வந்து சேரும். பெண்கள், மாணவர் இவ்வாரம் சௌபாக்கிய யோகமடைவர். மாணவர் கல்வியில் ஊக்கமும் விடாமுயற்சியும் பெறுவர்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் சிரமமின்றி நிறைவேறும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, அதிகாரமும் கொள்வர். வியாபாரிகள், விவசாயிகள் தம் முதலுக்கேற்ப இலாப முன்னேற்றம் காண்பர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் புத்திரர் உதவியுடன் நடைபெறும். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு வளரும்.




இவ்வாரம் சப்தம் , அஷ்ட ஸ்தானங்களில் சுபர் சஞ்சரிப்பதால் களத்திர சுகம், இல்லறம் நன்கு அமையும். புருஷன், மனைவி அந்நியோன்யம் நிகழும். பிள்ளைகளுடன் அன்பு, பாசம் நிலவும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோகத்தர்க்கு சக ஊழியர்களின் உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு முதலீடுகளையும் கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம். பெண்கள், மாணவர் சௌபாக்கிய யோகமடைவர்.

# துயரம் தீர்க்கும் துர்க்கை வழிபாடு



மாசி மாதத்தில் சிவனுக்கு உகந்த 'சிவராத்திரி' வருவது போல், புரட்டாசி மாதம் அம்பிகையைக் கொண்டாட உகந்தநாள் 'நவராத்திரி' வருகின்றது. 'நவம்' என்றால் 'ஒன்பது' என்று பொருள். 'ராத்திரி' என்றால் 'இரவு' என்று பொருள். ஒன்பது இரவுகள் விரதம் இருந்து அம்பிகையை வழிபட்டு வந்தால், பொன் - பொருள் குவியும் என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் இந்த மாதம் புரட்டாசியில் நவராத்திரி தொடங்கினாலும், புரட்டாசி 31 -ந் தேதி (17.10.2018) அன்று துர்க்காஷ்டமி வருகின்றது.

ஐப்பசி முதல் நாள் தான் சரஸ்வதி பூஜையும், அடுத்த நாள் விஜயதசமியும் வருகின்றது. இந்த நாட்களில் முப்பெரும் தேவியை வழிபட்டால் ஒப்பற்ற பலன்கள் நமக்குக் கிடைக்கும். இந்த நவராத்திரி நாட்களில் கொலு வைத்து வழிபடுவது வழக்கம். கொலுவில் இடம்பெறும் பொம்மைகள் எல்லாம் ஒவ்வொரு உண்மைகளைச் சொல்லும் விதத்தில் அலங்கரித்து வைத்து, அதற்கு மேலே நடுநாயகமாக ஒவ்வொரு நாளும் அம்பிகையை ஒன்பது வடிவங்களில் அலங்கரித்து விழா கொண்டாடுவது வழக்கம். வீட்டில் கொலு வைத்துக் கொண்டாடுவதன் மூலம், விருந்தினரை உபசரிக்கும் குணம் நமக்கு வருகிறது. வழிபடுவதன் மூலம் வளர்ச்சியும் ஏற்படுகிறது.

கல்வியா? செல்வமா? வீரமா? ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா? என்று கவியரசு கண்ணதாசன் எழுதியிருக்கிறார். ஒருவர் வாழ்க்கையில் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றும் இருந்தால் தான், கல்வியால் ஈட்டிய செல்வத்தை காப்பாற்றி வைத்துக் கொண்டு, வாழ்க்கை நடத்த இயலும். எனவே தான் 'வீரம்' தரும் துர்க்கை அம்மனை முதல் மூன்று நாட்களும், 'செல்வம்' தரும் லட்சுமிதேவியை அடுத்த மூன்று தினங்களும், 'கல்வி' தரும் சரஸ்வதியை அடுத்த மூன்று நாட்களும் முறையாக பூஜை செய்து வழிபட்டால் இல்லத்தில் நல்ல சம்பவங்கள் ஏராளமாக நடைபெறத் தொடங்கும்.

தேவியின் அருள் கிடைக்க, தேவர்கள் கடும் தவம் செய்தனர். இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளின் பேரருளையும் பெற முயற்சி எடுத்தனர். தேவர்கள் உடலை அசைக்காமல் தவம் செய்த நாட்களில், எல்லா பொருட்களும் அசையாமல் இருந்தன. அதன் நினைவாக நாம் கொலு வைத்துக் கொண்டாடுகிறோம். அசையாத பொம்மைகள் மூலம் அசைந்து வரும் வாழ்க்கை உண்மைகளை உலகிற்கு உணர்த்துவதே இந்த நவராத்திரி விழாவாகும்.

ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் மூல காரணமாக விளங்கும் தெய்வங்களான, சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகியோரின் துணைவியர்களான துர்க்கை, சரஸ்வதி, லட்சுமி ஆகிய தெய்வங்களை வழிபட்டால் தடை, தாமதங்கள் அகலும். தனவரவும் கூடும். வாழ்க்கையில் வெற்றி வாய்ப்புகள் வந்துகொண்டே இருக்கும். அந்த அடிப்படையில் உருவானது தான் நவராத்திரி விழா.


கொலு படிகள் ஐந்து, ஏழு, ஒன்பது என்று ஒற்றைப் படையில் அமைக்க வேண்டும். படிக்கட்டுக்களில் வெள்ளை அல்லது மஞ்சள் துணிகளை விரிக்க வேண்டும். முதல் படிக்கட்டில் கலசத்தை வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அம்பிகையை ஒவ்வொரு விதத்தில் அலங்காரங்கள் செய்து நவரத்தின மாலைகள் மற்றும் மலர் மாலைகள் சூட்டி அலங்காரம் செய்து வழிபட வேண்டும்.

நைவேத்தியப் பொருட்களாக வெண் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், சுண்டல், கடலை, பொரி, தேங்காய், பழம் வைக்க வேண்டும். வீட்டிற்கு வருபவர்களுக்கு குங்குமம், புஷ்பம் மற்றும் நைவேத்தியப் பொருட்கள், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை வழங்கி அன்போடு வருபவர்களை உபசரிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் அம்பிகையின் பாடல்களை ஒவ்வொரு ராகத்தில் பாடி அம்பிகையைக் குளிர்விக்க வேண்டும். ஆலயத்திற்குச் சென்றும் நாம் அன்றாடம் அம்பிகையை வழிபட்டு வர வேண்டும்.

கொலு வைக்கும் பொழுது முதல் படியில் ஓரறிவு கொண்ட உயிரினங்களான புல், செடி, கொடி, தாவர வகைகளை வைக்க வேண்டும். இரண்டாவது படியில் இரண்டு அறிவு கொண்ட உயிரினங்களான நத்தை, சிப்பி, சங்கு போன்றவற்றை இடம்பெறச் செய்யவேண்டும். மூன்றாவது படியில் மூன்றறிவு கொண்ட எறும்பு, கரையான் பொம்மைகளை வைக்கவேண்டும். நான்காவது படியில் நான்குஅறிவு கொண்ட உயிரினங்களான நண்டு, வண்டு போன்ற ஜீவ ராசிகளின் பொம்மைகளையும், ஐந்தாவது படியில் ஐந்தறிவு கொண்ட விலங்குகள் மற்றும் பறவைகளின் பொம்மைகளையும், ஆறாவது படியில் ஆறறிவு கொண்ட மனித பொம்மைகள் மற்றும் நாட்டிற்காக உழைத்த தலைவர்களின் பொம்மைகளையும் இடம் பெறச் செய்ய வேண்டும்.

ஏழாவது படியில் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மகான்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். எட்டாவது படியில் தேவர்களின் உருவங்கள், சிறு தெய்வங்கள், நவக்கிரகங்களின் பொம்மைகளை வைக்க வேண்டும். ஒன்பதாவது படியில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளையும், அவர் களின் துணைவிகளான சரஸ்வதி, லட்சுமி, துர்க்கை ஆகியோரது உருவங்களையும் வைக்க வேண்டும். இதற்கெல்லாம் நடுநாயகமாக கொலு பீடத்தில் விநாயகப் பெருமானையும், ஆதிபராசக்தியையும் வைத்து வழிபட வேண்டும்.

துர்க்காஷ்டமி அன்று துயரங்கள் விலக நாம் துர்க்கையை வழிபடுவது அவசியமாகும். வலது கை, இடது கை நீங்கலாக, நம்பிக்கை என்ற 'கை' நமக்குத் தேவை. அந்த நம்பிக்கையை துர்க்கை மீது வைத்து வழிபடுவதற்கு உகந்த நாள் தான் துர்க்காஷ்டமி. செம்பருத்தி, செவ்வரளி மாலை சூட்டி, சிவப்பு நிற வஸ்திரம் அணிவித்து விரதம் இருந்து வழிபட்டு வருவது நல்லது.




# எந்த நிலையிலும் இறைவனை மறக்க வேண்டாம்

ஒருசிலருக்கு எப்போதும் அவசரம். எல்லாவற்றிலும் அவசரம். பொருள் சம்பாதிப்பதில் அவசரம். வாழ்வாதாரங்களையும் வசதி வாய்ப்புகளையும் உருவாக்குவதில் அவசரம். பதவிகளைப் பெறுவதில் அவசரம். வணக்க வழிபாடுகளிலும்கூட அவசரம். அவ்வளவு ஏன் இறைவனிடம் வேண்டும் பிரார்த்தனையிலும் அவசரப்படுகின்றான் மனிதன். ஆம், கேட்டவை அனைத்தும் உடனே கிடைத்துவிட வேண்டும், அனைத்தையும் உடனே இறைவன் அங்கீகரித்துவிட வேண்டும் என்று அவசரப்படுகின்றான் மனிதன்.

மனிதன் பெரிதும் அவசரக்காரனாக இருக்கின்றான் (17:11) என்ற திருக்குர் ஆனின் கூற்று எவ்வளவு உண்மை என்பதைச் சிலருடைய செயல்களில் இருந்து புரிந்துகொள்ளலாம்.

ஒரு சிலர் தொழுகையைக்கூட அவசர அவசரமாகத் தொழுகின்றனர். ஏன் இந்த அவசரம்? உணவுத் துகள்களைக் கோழி கொத்துவதைப் போன்று அவசர அவசரமாக குனிந்து நிமிர்ந்துவிட்டு பள்ளிவாசலை விட்டு ஒரே ஓட்டமாக வெளியே ஓடிவிடுகின்றனர். யாரைத் திருப்திப்படுத்த இந்தத் தொழுகை?, யாரை ஏமாற்ற இந்தத் தொழுகை?

'நிதானமே பிரதானம்' என்பது பொதுவிதி. அவசரம் சைத்தானுடைய பண்பு. எதில் அவசரப்பட வேண்டும், எதில் அவசரப்படக்கூடாது என்று யோசித்து செயல்படுவதே புத்திசாலித்தனம். நல்ல விஷயங்களில் அவசரப்படுவதை இஸ்லாம் ஊக்குவிக்கிறது. அதேநேரம் தீய விஷயங்களில் அவசரப்படுவதை இஸ்லாம் கண்டிக்கிறது.

மனிதனோ தலைகீழாக இருக்கின்றான். நல்லவற்றில் நத்தை போன்று மெதுவாகவும், அல்லாதவற்றில் எலியைப் போன்று அவசரமாகவும் செயல்படுகின்றான்.

'படிமுறை விதி' என்பது பிரபஞ்சத்தின் மாறாத நியதிகளில் ஒன்றாகும். கருவில் மனிதனின் உருவாக்கம் ஒரே இரவில் நடப்பதில்லை. பத்து மாதம் என்ற படிமுறையில் தான் அமைந்துள்ளது. இந்த உலகத்தையும் இறைவன் படிமுறை அமைப்பிலேயே படைத்துள்ளான். வானம் பூமியை ஆறு நாட்களில் படைத்துள்ளதாக இறைவன் குறிப்பிடுகின்றான்.

'ஆகுக' என்ற ஒற்றைச்சொல் மூலம் அனைத்தையும் படைக்க சக்தி பெற்ற ஆண்டவன் எதற்கு ஆறு நாட்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்? அவசரமின்மையே காரணம்.

இஸ்லாமியச் சட்ட விதிகளான; ஹலால் (அனுமதிக்கப்பட்டவை), ஹராம் (தடை செய்யப்பட்டவை), வணக்க வழிபாடுகள் அனைத்தும் படிமுறை அமைப்பிலேயே சட்ட முறைமையாக்கப்பட்டன எனும் உண்மையை திருக்குர்ஆன் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

உதாரணமாக, நோன்பு குறித்து பேசிய ஆரம்ப வசனம் இப்படிக் கூறுகிறது: நோன்பு நோற்க சக்தி பெற்றிருப்பவர்கள் (நோற்காமல் விட்டுவிட்டால் அவர்கள்) மீது 'பித்யா' (பரி காரம்) கடமையாகின்றது. அது (ஒரு நோன்புக்குரிய பரிகாரம்) ஓர் ஏழைக்கு உணவளிப்பதாகும். ஆனால் எவரேனும் விரும்பி அதிக நன்மை செய்தால், அது அவருக்கே சிறந்ததாகும் (2:184)

இதற்குப்பின்னரே நோன்பு கடமையாக்கப்பட்டுவிட்டது எனும் பின்வரும் வசனம் இறங்கியது: எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம் மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும். (2:185)

கடமைகள் இவ்வாறு படிமுறை ஒழுங்கில் விதிக்கப்பட்டதுபோன்று, தடை செய்யப்பட்டவையும் படிமுறை ஒழுங்கிலேயே விதிக்கப்பட்டன. மதுபானத் தடைச்சட்டம் இதற்கு சிறந்த உதாரணமாகும். மதுபானத்தைத் தடை செய்யும் வசனங்கள் குர்ஆனில் மூன்று கட்டங்களாக இறங்கியுள்ளன. மூன்றாம் கட்டமாக இறங்கிய பின்வரும் வசனமே 'மதுவை நெருங்க வேண்டாம்' என்று அறிவித்தது.

மது மற்றும் சூதாட்டத்தின் வாயிலாக உங்களுக்கிடையில் பகைமையையும், வெறுப்பையும் ஏற்படுத்தி அல்லாஹ்வை நினைவுகூர்வதிலிருந்தும், தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடவே சைத்தான் விரும்புகிறான். இதற்குப் பிறகாவது நீங்கள் இவற்றைத் தவிர்த்துக் கொள்வீர்களா? (திருக்குர்ஆன் 5:91)

# நிலைத்திருத்தல் தரும் ஆசீர்வாதம்



'உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; மானிட மகனுடைய (இயேசுவின்) சதையை உண்டு அவருடைய ரத்தத்தைக் குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடையமாட்டீர்கள்'என்கிறது யோவான் 6:53.

படிக்கும் போது ஒரு அதிர்ச்சியை உருவாக்கும் வாசகம் இது. ஆனால், ஆழமான ஆன்மிக அர்த்தங்களைக் கொண்டது.

நான் விண்ணிலிருந்து இறங்கி வந்த உணவு என்றார் இயேசு. யூதர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவர் யோசேப்பின் மகனாகிய இயேசு அல்லவா? இவருடைய தாயும் தந்தையும் நமக்குத் தெரியாதவர்களா? என அவர்கள் முணுமுணுத்தனர்.

'தன்னுடைய உடலை எப்படி இவர் உண்ணத் தரமுடியும்? இதென்ன போதனை…' என இயேசுவுக்கு எதிராக அவர்கள் சிந்தித்தார்கள். அவர்கள் பழைய ஏற்பாட்டு சட்டங்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்கள்.

'ரத்தம் என்பது உயிர், அதை யாரும் சாப்பிடக் கூடாது' என்பதை விவிலியம் சொல்கிறது. 'ரத்தத்தைப் பருகக்கூடாதெனில் எப்படி இயேசுவின் ரத்தத்தைப் பருகுவது? இவர் எப்படி இதைச் சொல்லலாம்' என அவர்கள் சிந்தித்தனர்.

பாவத்தைக் கழுவத்தான் ரத்தம் பயன்பட்டு வந்தது. ஆனால் அது உணவாக உட்கொள்ளக் கூடியது அல்ல. இறைவனின் சமூகத்தில் சிந்தப்பட வேண்டியது மட்டுமே என்பதே வழக்கம்.

இப்போது அது, எனது ரத்தத்தைக் குடியுங்கள் என மாறுகிறது. அதன் பொருள் என்ன? விலங்கின் ரத்தம் நம்மை பாவத்திலிருந்து கழுவியது எனும் நிலை, இன்று இயேசுவின் ரத்தம் பாவத்தைக் கழுவியதுடன் மீட்பும் கொடுத்தது என மாறியது.

அவர் பலியாகப் படைத்த ரத்தம்… அவரது சொந்த ரத்தமே (எபி 9:12) என்கிறது விவிலியம். இது நித்திய மீட்பு. இந்த ரத்தத்தின் வழியாக நாம் கடவுளின் மீட்பில் இணைகிறோம்.

அது நாம் என்றென்றைக்கும் பிழைக்கும்படியான ரத்தமாய் மாறுகிறது. இந்த ரத்தம், தொலைவில் இருந்த நம்மை அருகில் கொண்டு சேர்க்கிறது. அது நம்மை இயேசுவோடு இணைக்கிறது.

ஆலயத்தில் திருவிருந்தில் பங்கு பெறும் முன் நாம் தாழ்மையின் செபத்தைச் சொல்கிறோம். அதன் பொருள், நாம் இறைவனை விட்டுத் தொலைவில் இருக்கிறோம், இப்போது இறைவனுக்கு சமீபமாய் வருகிறோம் என்பது தான்.

நாம் திருச்சபையில் சேர்வதன் அடையாளம் திருமுழுக்கு. சுயமாய் இறைவனோடு இணைவதன் அடையாளம் திரு விருந்து.

இயேசுவின் ரத்தம் நம்மை இறைவனின் அருகில் கொண்டு வருவதுடன், அவரில் நிலைத்திருக்கவும் செய்கிறது.

# விசேட தேவையுடைய மாணவர்களை இணைத்துக் கற்பிப்பதனால் ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்கள்!



**சி.அருள்நேசன்**
**கல்வியியல் சிறப்புக்கற்கை**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

விசேட தேவைகள் சார் கல்விமுறையானது சாதாரண பிள்ளைகளுடன் ஒப்பிடும்போது உடல், உள மற்றும் மனவெழுச்சி ரீதியில் இயலாமை கொண்டோருக்கும் மீத்திறன் கொண்ட பிள்ளைகளுக்கும் வழங்கும் கல்வியையே விசேட தேவைகள் சார்கல்வி என வரைவிலக்கணப்படுத்துவர். சாதாரண பிள்ளைகளுடன் ஒப்படும்போது இவர்களின் இயலாமை காரணமாக கற்றல்சார் செயற்பாடுகள் சுமூகமான முறையில் இடம்பெற முடியாதுள்ளது. அத்துடன் மீத்திறன் கூடிய பிள்ளைகளும் தன்னியல்புக்கு ஏற்ப கற்றல்சார் செயற்பாட்டில் விசேட எதிர்ப்பார்ப்புக்களைக் கொண்டவனாக இருக்கின்றான். அத்தகைய பிள்ளைகளுக்கு வழங்கும் கல்வியையே விசேட தேவைகள் சார் கல்வி எனக் குறிப்பிடுவர். சர்வதேச ரீதியாக கல்வி ஓர் அடிப்படை உரிமை ஆகையால் இயலாமை கொண்டோரும் கல்வியைப் பெறுவதற்கான உரித்துடையவர்கள், இதனாலேயே கல்வித்துறையில் விசேட தேவைகள்சார் கல்வி எண்ணக்கரு முன்னிலைப்படுத்தப்படுவதைக் காணலாம்.

விசேட தேவைசார் கல்வி என்பது உடல், உள, உள சமூக, மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாதாரண மாணவர்களைவிட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றவர்கள். அத்துடன் தேர்ச்சி மட்டத்தினை அடைய முடியாது தத்தளிக்கின்றவர்கள். அவ்வாறான மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியை விசேடதேவைசார் கல்வி என்கின்றனர். வழமையான கல்வி அமைப்புக்களினால் நிறைவேற்றப்பட முடியாத மாணவர்களின் தேவைக்காக திட்டமிடப்பட்ட செயற்பாட்டின் ஓர் அங்கம் விசேடதேவைசார் கல்வி ஆகும். மனத்தடங்கல், கற்;றல் குறைபாடுகள், உறுப்புக்கள் ஊனமுற்ற மற்றும் உணர்வு குழம்புகின்ற மாணவர்களைக்; கையாள்வதற்கான கல்வியே விசேடதேவைசார் கல்வி எனலாம். சாதாரண பிள்ளைகளைவிட வேறுபட்ட தன்மைகளையுடைய பிள்ளைகள் வகுப்பறைக் கற்பித்தல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தங்கள் துலங்கலை ஏற்படுத்த முடியாது அவதியுறுபவர்களாகவும் இவர்களை குறிப்பிடலாம். இவ்வாறான மாணவர்களிடம் சாதாரண மாணவர்களைவிட ஏதோ ஒரு திறன் சிறப்பாக விருத்தி அடைந்;து இருக்கின்றது என்;பதைக் கருத்தில் கொண்டு உடல், உளம் பாதிக்கப்பட்ட அல்லது ஊனமுற்ற பிள்ளைகளை விசேட தேவையுடையோர், மாற்றுதிறனுடையோர், மாற்றுவலுவுள்ளோர் என்;ற மாற்றுச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கின்றனர். அந்தவகையில்; விசேட கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ★ புலன்சார் குறைபாடுகள்
- ★ உடல் மற்றும் ஆரோக்கிய குறைபாடுகள்
- ★ அறிவுசார் குறைபாடுடையோர்
- ★ ஒட்டிச திருசிய ஒழுங்கீனங்கள்
- ★ நடத்தைசார் ஒழுங்கீனங்கள்
- ★ பேச்சு மற்றும் மொழிசார் ஒழுங்கீனங்கள்
- ★ மீத்திறன் மற்றும் திறமை கொண்ட மாணவர்கள்
- ★ கற்றல் இயலாமைகள் (டுனு) மாணவர்கள்

என பல்வேறு பிரிவினர்களை இவ்வகைக்குள் உள்ளடக்குவர்.

குறிப்பாக, அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் தரமான கல்வி என்ற சிந்தனை தற்காலத்தில் அதிகம் பேசப்படுகின்றது. இதனடிப்படையில் கல்வியானது சமத்துவ முறையில் அனைவருக்கும் கிடைக்க வேண்டியது அவசியமாகும் இதனைக் கருத்தில் கொண்டே வகுப்பறையில் சாதாரண மாணவர்களுடன் விசேட தேவையுடைய மாணவர்களையும் இணைத்துக் கற்றல், கற்பித்தல் இடம்பெறுகின்றது. ஆனால் இவ்வாறு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் போது ஆசிரியர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. இவை பல்வேறு காரணங்கள் அடிப்படையில் ஏற்படுவதோடு ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களை இனங்காண வேண்டியது அவசியமாகும். ஆனால் ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களை முழுமையாக இனங்காண முடியாத நிலை காணப்படுகின்றது. ஏனெனில் அவர்களுக்கு விசேட தேவையுடைய மாணவர்களை இனங்காண்பது தொடர்பான பயிற்சி, அனுபவமின்றிக் காணப்படுகின்றமை வகுப்பறை சார்ந்த முக்கியமான சவாலாகும்.

குறிப்பாக விசேட தேவையுடைய பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு முன்னர் குடும்பத்தில் பெற்றோரின் கண்காணிப்பின்;மை, அன்பு போதாமை, பிள்ளையைப் பிரிந்து பெற்றோர் வாழுதல் அல்லது கணவன், மனைவி உறவின் விரிசல்கள் போன்றவையும் இவ்வாறான பிள்ளைகளின் கற்றலை பாதிக்கின்றன. எனினும் இவர்கள் இதேநிலையில் பாடசாலையில் வகுப்பறைக்குள் நுழையும் போது வீடு செல்லும்வரை ஆசிரியர்கள் பாதுகாவலர்களாக இருக்கின்றனர். இந்தவகையில் கற்பித்தலின் போது அதனை உள்ள வாங்கிக் கொள்வதற்கான மனநிலையை பெற்றிருக்காத இம்மாணவர்களில் ஆசிரியர் ஏனைய மாணவர்களின் கற்றலில் கரிசனை கொள்வதிலும் தாமதம் ஏற்படும். இதனால் பெற்;றோர்களின் அசமந்தப்போக்கும் பிள்ளைகளின் கற்றல் மேம்பாடு வீழ்ச்சியடைவதற்கும் அதனை முறைவழிப்படுத்துவதில் ஆசிரியருக்கு பாரிய சவால்நிலை காணப்படுகின்றது.

பாடசாலைகள் பல்வேறு தரங்கள் அடிப்படையிலும் வளர்ச்சி அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டு வருகின்றன. எனினும் சகல பாடசாலைகளிலும் எல்லா வசதிகளும் இருக்கும் என்பதை யாராலும் சுட்டிக்காட்ட முடியாது. ஆகவே விசேட தேவையுடைய மாணவர்கள் குறித்த பாடசாலை சமூகத்தில் இருப்பார்களாயின் அவர்களுக்கான கற்றல் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பாடசாலையின் கடமையாகும். அவ்வாறான நிலையில் ஆசிரியர்கள் முறையாக கற்பிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆசிரியர் தன்னை முழுமையாக அர்ப்பணித்து தனது தொழிலை செய்வதற்கு முன்வரும்போது இவ்வாறான மாணவர்கள் வகுப்பறை மட்டத்தில் சவால்மிக்கவர்களாகவே காணப்;படுகின்றனர். இதனை முறையாக இனங்காண்பது அவசியமாகும்.

இருந்தபோதிலும் பாடசாலையில் குறித்த வகுப்பில் விசேட தேவையுடைய மாணவர்கள் இருப்பார்களாயின் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சவால்களுக்கும் பொறுப்புக்கூறும் நிலைக்கும் தள்ளப்படுகின்றார்கள். இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் சமூகம் எவ்வாறான ஒத்துழைப்பினை வழங்குவார்கள் என்பது முக்கியமான பிரச்சினையாகும். குறித்த மாணவர்கள் சார்ந்த ஆசிரியர்களை தனியாக விடுவது அல்லது இணைந்து செயற்படாமை அவர்களுக்;கு முக்கியமான சவாலாக காணப்படுகின்றது.

பாடசாலையை பொறுத்துவரையில் குறித்த வகுப்பறையில் இவ்வாறான மாணவர்களை இனங்காண்பது முக்கிய பிரச்சினையாக ஆசிரியர்களுக்கு உள்ளது. இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு ஏற்ற வகையில் கற்பித்தலை மேற்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு அனுபவமோ, பயிற்சியோ இல்லாமை மற்றுமொரு சவாலாகும். அதற்கேற்ற ஆயத்தங்களை பாடசாலை நிர்வாகம், கல்வி நிர்வாகிகள் மேற்கொள்ளாமையும் பிரச்சினைகள் ஏற்பட காரணமாகின்றது.

ஆசிரியர்களினால் நாற்பது நிமிட பாட வேளையில் சாதாரண மாணவர்களுடன் வைத்து விசேட தேவையுடைய மாணவர்களை கற்பிப்பதன் காரணமாக உரிய நேரத்திற்கு பாடத்தினை பூர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகின்றமை இதில் முக்கியமானதாகும். இவ்வாறான மாணவர்களுக்கு தனியான வகுப்பறை முறையை ஏற்படுத்துவதால் சமூகத்தில் தனியான சூழலுக்கு தள்ளப்படுவார்கள் என்ற நிலையில் சக மாணவர்களுடன் இணைத்து கற்பித்தலை மேற்கொள்ளும் போது அதற்கான வாய்ப்புக்கள் இல்லாமையும் முக்கியமான பிரச்சினையாகும்.

விசேட தேவையுடையோர் எனும் போது ஒவ்வொருவரும் வித்தியாசமான தேவையையும், குறைபாடுகளைக் கொண்டிருப்பதோடு அதனை ஆசிரியர்கள் ஒரு வகுப்பில் இனங்கண்டு சகலருக்கும் ஒரே விதமான கல்வியை வழங்குவதில் சிக்கல் தன்மை ஏற்படுகின்றது. மாணவர்கள்; மத்தியில் தாழ்வுச்சிக்கல் ஏற்படவும் வாய்ப்பு உண்டாகின்ற அதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட நிலையும் உண்டாகிறது. விசேடதேவையுடைய மாணவர்கள் மற்றவர்களில் தங்கியிருக்கும் நிலை காணப்படுவதால் வகுப்பறையில் ஆசிரியர்களின் முழு கண்காணிப்பில் இருப்பது அவசியமாகும்.

வகுப்பறையில் கற்பிக்கும் போது கற்றலுக்கான சூழலை ஏற்படுத்துவது கொண்டிருக்காமையும் பாரிய பிரச்சினையாகும். இவர்களுக்;கான கற்பித்தலை மேற்கொள்ளக்கூடிய வகையில் கற்பித்தல் உபகரணங்கள், வளங்கள் போதுமானதாக இல்லாமல் இருக்கும் போது ஆசிரியர்கள் முறையாக வகுப்பறைக் கற்பித்தலை மேற்கொள்ள முடியாது. கட்புல சார்ந்த குறைபாடுடைய மாணவர்களுக்கு கற்றல்துணைசாதனங்களை தொட்டுணரச்; செய்வதன் மூலம் கற்பித்தலை மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் ஆனால் இவ்வாறான வசதிகள் பாடசாலையில் ஏற்படுத்தாமல் இருக்கும் போது நேர்த்தியாக கற்பித்தலை ஆசிரியர்களுக்கு மேற்கொள்ள முடியமால் போய்விடுகிறது.

அத்தோடு வகுப்பறை மட்ட விசேட குறிக்கோளை அடைவதற்கு ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்ளும்போது குறித்த வகுப்பில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான முறையான வசதிகள் இல்லாமை மற்றும் வழங்காததன் காரணமாக மாணவர்களின் அடைவுமட்டமானது வீழ்ச்சியடைவதோடு கலைத்திட்டங்களை வடிவமைக்கும் போது இவ்வாறான மாணவர்களை கவனத்தில் கொள்ளாமல் தயாரித்தல் பல்வேறு பிரச்சினைகள் உண்டாகின்றது.

ஒரு வகுப்பில் சாதாரண நிலையிலுள்ள மாணவர்களுக்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்;குமிடையே ஒற்றுமையின்மை, கருத்து முரண்பாடுகள் என்;பன ஒரளவு ஏற்படுவதற்கு வாய்ப்பு காணப்படுகின்றது. உதாரணம்- சாதாரண மாணவர்கள் அனைவரும் அசாதாரண மாணவர்களை ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படாமை, குழு செயற்பாடுகளில் ஈடுபடாமை. குறிப்பாக ஆசிரியரை பொறுத்தவரை சகல மாணவர்களை ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டிய நிலை காணப்பட்டாலும் இவ்வாறான பிரச்சினைகள்; வகுப்பறையில் ஏற்படும் போது சவால் நிறைந்ததாகவே அமைகின்றது.

விசேட தேவையுடைய மாணவர்களின் குறைபாடுகள் சாதாரண மாணவர்களின் கற்றலில் தாக்கத்தினை ஏற்படுத்துவதானது ஆசிரியருக்கு முக்கியமான பிரச்சினையாகும். விசேட தேவையுடையவர்கள் எனும் போது ஒரு பாடத்தை, ஒரே வகுப்பறை மட்டத்தில் மேற்கொள்ளும் போது விசேட தேவையுடைய மாணவர்களை மேலதிகமாக கவனிக்க முற்படும்போது சாதாரண மாணவர்களின் கற்றல் தன்மை தாமதமாக்கப்படுகின்றது. உதாரணம்-: வகுப்பறை செயற்பாடுகள், மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது. ஆகவே ஆசிரியர்கள் தனித்தனியான முறையில் இவ்விரு மாணவர்களுக்கும் கற்றல் அணுகுமுறையை கையாளுவதன் காரணமாகவும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சாதாரண நிலையிலுள்ள மாணவர்களுக்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்குமிடையில் அடைவு மட்டங்களில் வேறுபாடு காணப்படுகின்றது. இவற்றை சமப்படுத்துவதில் காணப்படுகின்ற பிரச்சினை காணப்படுகின்றது. அதாவது விசேட தேவையுடையவர்கள் மெல்ல கற்பவர்களாக இருப்பதோடு உடல், உள ரீதியான குறைபாடுகளை கொண்டவர்களாகவும் கற்பிப்பதை உடனே விளங்கிக்கொள்;ள முடியாத தன்மை காணப்படுகின்றது. உதாரணம் -: குழுச்செயற்பாடுகள் மற்றும் கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனங்களில் இருந்து பயன்பெற முடியாமை. ஆகவே பரீட்சை மற்றும் மதீப்பிடுகளை மேற்கொள்ளும் போது சாதாரண மாணவர்களைப் போல அவர்களுக்கு பிரகாசிக்க முடியாமல் போக வாய்ப்புண்டு இதனால் ஒரு ஆசிரியர் இதனை முறையான விதத்தில் மேற்கொள்வதில் சவால் நிலைக்கு உட்படுகின்றார்.

வகுப்பறையில் விசேட தேவையுடைய மாணவர்களை முறையாக நெறிபடுத்தவதற்கு பயிற்சி இல்லாமை. இவர்களை வழிநடத்துபவர்கள் இன்னொரு பெற்றோர்களாக இருக்க வேண்டும் என்பது அனைவரின் எதிர்ப்பார்ப்பாகும். ஆகவே ஆசிரியர்கள் அனைவரும் இதற்கு பயிற்சிப்பெறுவார்களா என்பது நடக்காத விடயமாகும். ஆகவே சாதாரண மாணவர்களுக்;கு கல்வியை போதிக்கும் ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிதற்கு சிரமங்களை எதிர்க்கொள்வது மற்றுமொரு பிரச்சினையாகும்.

வகுப்பறையில் விசேடதேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு போதுமான நேரம் காணப்படுவதில்லை. காரணம் சாதாரண மாணவர்களுடன் சேர்த்து இவர்களுக்கு கற்பிப்பதால் சாதாரண மாணவர்களின் நிலைக்கு நேரத்தை மதிப்பிட வேண்டியிருக்கின்றது. இதனால் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் தேவை அதிகரித்து காணப்பட்டாலும் அதனை குறித்த பாடநேரத்தில் முழுமையாக அளிக்க முடியாத தன்மை காணப்படுவதோடு சாதாரண மாணவர்களுக்கும் பாடத்திட்டத்தை குறித்த காலத்திற்கு நிறைவேற்ற வேண்டிய தேவையும் ஆசிரியருக்கு காணப்படுகின்றமை முக்கியமானதாகும். இவ்வாறான நிலையில் மேலதிகமான நேரத்தை விசேடதேவையுடைய மாணவர்களுக்கு செலவழிக்க முடியாமை வகுப்பறை அடைவுமட்டத்தில் ஆசிரியருக்கு பிரச்சினையாக காணப்படுகின்றது.

ஆசிரியர்கள் இவ்வாறான மாணவர்களை தமக்கும், வகுப்பறைக்கும் சுமையாக நினைக்கும் போது சவாலான ஒரு காரியமாகவே காணப்படுகின்றது. தமது திறமைக்கும், கற்பித்தல் திறனை வெளிப்படுத்துவதற்கும் முறையான மாணவர்கள் அவசியம் என பாடசாலை மட்டத்தில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் நிலையும் ஏற்படுகின்றது. இதற்கு அதிபர்கள் சரியான நிர்வாகம் மற்றும் கற்பித்தல் திட்டங்களை பங்கிடுதல் அவசியமாகும். வகுப்பறையில் குறித்த மாணவர்களை உள்ளடக்கி கற்பித்தலை மேற்கொள்வதற்கு உடன்பட்டாலும் அதற்கு பாடசாலை நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்காவிட்டால் வகுப்பறை மட்டத்தில் இம்மாணவர்கள் தனித்து விடப்படுதவதற்கான வாய்ப்பு ஏற்படுவதோடு, குறித்த வகுப்பாசிரியருக்கு சவாலாக அமைகின்றது.



மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கற்பித்தல் நடைமுறைகள் காலப்போக்;கில் உருவாக்குவதற்கு இது அனுமதிக்கின்றது. எனவே ஆசிரியர்கள் தங்களை வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்பவர்களாக கருதுவது அவசியமாகும். இது அவர்கள் கற்பிக்கும் மாணவர்களுக்கான முக்கிய சொத்தாகும். குறிப்பாக வகுப்பறையில் விசேட தேவையுடைய மாணவர்கள் ஒவ்;வொரு வகையான குறைபாடுடையவர்களாகவே இருக்கின்றனர். அதனை முறையாக இனங்கண்டு தொடர்ச்சியான அவதானிப்பில் சரியான கல்வி வழிகாட்டலை மேற்கொள்வதற்கு வசதியாக காணப்படும்.

பாடசாலையின் கற்றல் சூழலை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக மாணவர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். மாணவர்களுடன் தொடர்புக் கொள்;வதன் மூலம், ஆசிரியர்கள் மாணவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்;டும் மற்றும் கற்பிக்க வேண்டும், ஏனைய மாணவர்களை அவர்களுடன் இணைத்து கற்பிக்க பழக்கப்படுத்தல் மற்றும் புரிந்து கொள்ளுதல் வேண்டும் என்பதை கற்றுக்; கொள்ள முடியும். வகுப்பறைகளில் விசேட தேவையுடைய மாணவர்களை இணைத்துக் கற்பிப்பதனால் ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்களை முடியுமானவரை குறைத்துக்கொண்டு சிறந்த கற்பித்தல் முறையின் ஊடாக வகுப்பறை மட்ட விசேட குறிக்கோளை அடைவதற்கும் வாய்ப்பாக அமையும்.

# உங்கள் பொருட்கள் அல்லது சேவைகள் வாடிக்கையாளரை அடைய Go-To-Market Strategy உருவாக்குங்கள்

பெரும்பாலான நிறுவனங்கள் தொழில் தொடங்கும் முன் ஒரு விரிவான வணிகத்திட்டத்தை கொண்டிருக்கும். அந்ததிட்டத்தில் எவ்வளவு முதலீடு தேவை, அதை எப்படி பயன்படுத்துவது அலுவலகம், உற்பத்தி, தொழிலின் நோக்கம், பொருட்களின் தேவை, சந்தைவாய்ப்பு, நிதிபோன்ற பல விடயங்கள் அதில் இடம் பெற்றிருக்கும்.

அந்ததொழில் திட்டத்துடன் **(Business Plan)** எப்படி உங்களின் பொருட்கள் அல்லது சேவைகள் வாடிக்கையாளரிடம் அடையும், எப்படி சந்தையில் பொருட்களை நிலை நிறுத்துவீர்கள் என்ற **Go-To-Market Strategy (GTM)** செயல்திட்டத்தை தீட்டவில்லை என்றால் உங்கள் பொருட்கள் இறுதி வாடிக்கையாளர் வரை சென்றடைவது கடினமாகும். ;. **Go-To-Market Strategy** என்பது எப்படி நீங்கள் உங்கள் பொருட்கள் அல்லது சேவையை சந்தைக்கு கொண்டு சேர்ப்பீர்கள், எப்படி வாடிக்கையாளரை ஈர்ப்பீர்கள் **; (attract customers)** என்பதற்கான ஒரு விரிவான மார்க்கெட்டிங் செயல்திட்டம் ஆகும்.

**செல்வி. பாமினா குமரதாசன்**
வர்த்தக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

நிச்சயம் ஒருபொருள் அல்லது சேவை சந்தையில் நிலைத்து நிற்க வாடிக்கையாளர் பொருட்களை வாங்க வேண்டும் என்று நினைக்கும் போது உங்களின் பொருட்கள் அவர்களின் முன் முதலில் நிற்க **Go-To-Market Strategy** வியூகத்தை அமைத்தே ஆக வேண்டும். பெரிய நிறுவனமானாலும் சரிசிறிய தொழிலாக இருந்தாலும் சரி அனைத்து தொழிலுக்கும் இது பயன்படும்.

ஒவ்வொரு தொழிலுக்கு தகுந்தாற்போல் **Go-To-Market Strategy** பற்றி சில பொதுவான அடிப்படைகளை தெரிந்து கொள்வோம்.

### மொத்தசந்தையின் அளவு (Total Available Market TAM)

உங்கள் பொருள் அல்லது சேவைகளுக்கு இருக்கும் மொத்த சந்தையின் அளவை கண்டு பிடிக்க வேண்டும். இதை தயாரிப்பிற்கான மொத்த கிடைக்ககூடிய வருவாய் **(Total Available Revenue)** என்றும் சொல்லலாம். அதிலிருந்து நீங்கள் இலக்கு வைக்ககூடிய சந்தையை **(Target Market)** கண்டு பிடிக்க வேண்டும். எவ்வளவு சந்தையில் உங்கள் பொருட்களை விற்க முடியும். எவ்வளவு வாடிக்கையாளர்களை உங்களால் பெறமுடியும் அந்த சந்தையில் உள்ளவர்களை எப்படி உங்கள் வாடிக்கையாளராக மாற்றுவீர்கள் என்பதை திட்டமிட வேண்டும்.

### பொருட்களின் மதிப்பு (Value Proposition)

ஒருபொருளில் இருக்கும் மதிப்புதான், வாடிக்கையாளர்களை தன்பக்கம் ஈர்க்கும் வாடிக்கையாளர்களிடம் உங்கள் பொருள் அல்லது சேவையின் மதிப்பைப் பற்றி விளக்க வேண்டும். வாடிக்கையாளர்கள் ஏன் உங்கள் பொருட்களை வாங்க வேண்டும்? உங்கள் பொருட்களை அல்லது சேவையை வாங்குவதால் வாடிக்கையாளருக்கு எந்த வகையில் நன்மை? எந்த வகையில் மதிப்புடையது மற்றும் தரமுடையது. உங்கள் போட்டியாளர்களின் பொருட்களை விட உங்கள் பொருட்கள் எவ்வகையில் மேம்பட்டது **(Competitive Advantage)** எந்தவகையில் தனித்தன்மை **(Unique)** வாய்ந்தது என்பதை வாடிக்கையாளரிடம் விளக்க வேண்டும். வாடிக்கையாளர் விலையில், எந்த அளவு பொருளின் மதிப்பை, நன்மையை பெறுகிறார்கள் என்பதை பொறுத்துதான், அந்தபொருளை மீண்டும் வாங்குவார்களா? ஏன்பதை தீர்மானிக்கும்.

### வாடிக்கையாளரைகையகப்படுத்தல் (Customer Acquisition)

எது உங்கள் பொருட்களுக்கான சந்தை, யார் உங்கள் வாடிக்கையாளர்கள் என்பதை கண்டறிந்த பின்பு அந்த வாடிக்கையாளர்களை எப்படி உங்கள் வாடிக்கையாளராக மாற்றுவது **((customer acquisition)** அவர்களை எப்படி உங்கள் பொருட்களை வாங்க வைப்பது என்பதை திட்டமிட வேண்டும். வாடிக்கையாளர்களை கைப்பற்ற எந்தவகையான சந்தைப்படுத்தல் உத்திகள், விளம்பரங்கள், வாடிக்கையாளர் உறவு மேலாண்மை **(Customer Relationship Management)** பொது தொடர்புகள் **(Public Relations)** தேவை என்பதை **Go-To-Market Strategy** இல் திட்டமிட வேண்டும்.

### விற்பனைமற்றும் விநியோகம் (Sales and Distribution)

உங்கள் தயாரிப்பின் விற்பனையை தொடங்கும் முன் எப்படி விற்பனை செய்ய போகிறீர்கள், எந்தமாதிரியான விநியோக மாதிரியை பின்பற்ற போகிறீர்கள் என்பதை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். நேரடியாக விற்பனை செய்ய போகிறீர்களா? மொத்த விற்பனையாளர் அல்லது விநியோகிப்பாளர்கள் **(who leaser/Distributor),** டீலர் சில்லறைக் கடைகளின் **(retail)** மூலமாகவோ, ஆன்லைன் **(online)** வழியாகவோ என்பதை தீர்மானித்து அதை எப்படி செயல்படுத்துவது என்பதை திட்டமிட வேண்டும்.

### கண்காணிப்புமற்றும் அளவிடுதல் (Tracking and Measuring)

உங்கள் பொருட்களின் விற்பனையை தொடங்கியவுடன், அதை கண்காணிக்க வேண்டும். விற்பனையின் முன்னேற்றத்தை அளவிட வேண்டும். நீங்கள் பொருட்களின் விற்பனையை அளவிடவில்லையென்றால், சந்தையில் உங்கள் நிறுவன தயாரிப்பு எவ்வளவு பங்கினை கொண்டுள்ளது என்பதை அறிய முடியாது. முன்பை விட விற்பனை அதிகரித்துள்ளதா? குறைந்துள்ளதா? என்பதை அளவீடுகள் மற்றும் கண்காணிப்புகள் மூலம் தான் தெரிந்து கொள்ள முடியும். நீங்கள் செய்யும் தொழில் சிறியதோ, பெரியதோ உங்கள் தொழிலை வளர்ச்சியடையச் செய்ய **Go-To-Market Strategy (GTM)** வியூகத்தை திட்டமிடுங்கள்.

# மழை கால மருத்துவம்

மழை காலத்தில் தான் அதிகமாக நோய்கள் நம்மை விரைவாக தாக்கும் மழைக் காலத்தில் முடிந்த வரை நாம் கவனமாக இருக்க வேண்டும்.

குளிர், மழைக்காலங்களில் எளிதில் பரவுவது வைரஸ் தொற்றுக்கிருமிகள்தான். கோடை காலத்தில் வருவதை விட, தடிமன் , ப்ளூ காய்ச்சல் போன்றவை குளிர் காலத்தில் சட்டென்று தாக்கிவிடும். குளிர் காலங்களில் முடிந்தவரை வெதுவெதுப்பான சூழ்நிலையில் இருப்பது அவசியம். ஒருவரால், அவரின் எதிர்ப்பு சக்தியை பொறுத்து குளிரை தாங்க முடியும். ஆனால், குளிரால் தொற்றும் தொற்றுக்கிருமியை சாதாரணமாக ஒதுக்க முடியாது. கோடை காலத்தை விட, மழைக்காலம், குளிர் காலத்தில் தான் தொற்றுக்கிருமிகள் எளிதில் பரவும் .

சுத்த இல்லாத குடிநீர் மூலம் கொலரா, வாந்தி,வயிற்றோட்டம் , ப்ளூ காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் தாக்கும். ஆகையால் முடிந்த வரை நன்றாக கொதிக்க வைத்து ஆரிய நீரை மட்டுமே அனைவரும் குடிக்கவேண்டியது அவசியமாகும்

குழந்தைகளுக்கு மழைக் காலத்தில் கதகதப்பான ஆடைகளை அணிவிக்க வேண்டும் ஊர் எங்கும் தேங்கி இருக்கும் நீர் சாக்கடை போல் மாறி விடுகின்றது. வேறு வழியின்றி வீட்டிற்கு வெளியில் அந்த சாக்கடை நீரில் நடந்து செல்கிறோம். இவ்வாறு இருக்கும் போது வைரஸ் கிருமிகள் எளிதில் பரவி நோய்களை ஏற்படுத்துகிறது. வெளியில் இருந்து வீட்டுக் உள்ளே வரும் முன்பு நன்றாக கால்களை அலசிவிட்டு வீட்டுக்குள் செல்லவும். செருப்பு, ஷூ ஆகியவற்றை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்

கடுமையான மழையால் மழை நீர் வீட்டை சுற்றி தேங்கிருக்கும் அதில் உருவாகும் நுளம்புகள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்கள் வரலாம். முடிந்தவரை நுளம்பு வலைக்குள் படுக்க பழகவும். மாலை ஐந்து ஆறு மணிக்குள் வீட்டு ஜன்னல் கதவுகளை அடைத்துவிடவும். இதனால் அதிகமான நுளம்பு வீட்டுக்குள் வராமல் தடுக்கலாம்.

காய்ச்சல், , இருமல் ஏற்படும் போது மருத்துவரிடம் சென்று தகுந்த மருந்துகளை எடுத்து கொள்ளலாம். சரியாகிவிடும் என்று வீட்டிலேயே ஏதேனும் மாத்திரை போட்டுக் கொள்வதை தவிர்க்கவும்.தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில் ரத்தப் பரிசோதனை செய்து என்ன கிருமி தாக்கியுள்ளது என்பதை தெரிந்து கொண்டு, அதற்கு தகுந்தபடி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

கூடுமானவரை பள்ளி, கல்லூரிகள், அலுவலகங்களுக்கு செல்பவர்கள் வீட்டில் கொதித்து ஆறிய தண்ணீரை கொண்டு சென்று குடித்தால் மழை கால நோயில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.வீட்டு கழிவறைகள் மற்றும் வெளியில் பயன்படுத்தும் கழிவறைகள் சுத்தமாக இருந்தால் மட்டுமே பயன்படுத்தவும்.

உணவு சாப்பிடும் முன்பு கட்டாயம் கைகழுவி விட்டு சாப்பிடுவது நல்லது. மழைக் காலத்தில் நாம் சாப்பிடும் உணவில், இனிப்பு அதிகம் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. இரவு தூங்குவதற்கு முன், பாலில் மஞ்சள் தூள், மிளகுத்தூள், பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிடுவது நல்லது. கண்டிப்பாக மழைக் காலத்தில் நம் உணவுப் பதார்த்தங்களில், மிளகு பொடியைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது. சிலருக்கு சளி, இருமல் இருந்தாலும், விட்டமின் 'சி' சத்து ஒத்துப் போகும். சிலருக்கு மழைக்காலம் வந்து விட்டாலே ஒத்துக் கொள்ளாது. எலுமிச்சம், ஆரஞ்சு ஜூஸ் சாப்பிட்டாலும் ஒன்றும் செய்யாது. ஆனால், ஒத்துக் கொள்ளாதவர்கள் கண்டிப்பாக சாப்பிடாமல் இருப்பது நல்லது.

நமது நாட்டில் மின்சாரம் மழை நேரங்களில் அதிகமாகவே தடைப்படும் ஆகையால் முன்னதாகவே டார்ச்சு லைட், செல்போனுக்கு ஜார்ஜ் செய்து வைப்பது நலம்.

மழை நேரத்தில் மாலை நேரத்தில் பொரித்த உணவுகளை சூட சூட சாப்பிட ஆசையாக இருக்கும் ஆனால் எண்ணெயில் பொறித்த வடை, பஜ்ஜினு சாப்பிடாமல் ஆரோக்கியமான சுண்டல், சாலட் போன்று சாப்பிடலாம்.சூடாக தேநீர் பருகலாம் . எந்த வகை உணவாக இருந்தாலும் சூடாக சாப்பிடவும்.

**இரத்தினம் நடராஜன்**

### மழைக்கால பாதிப்பு

டெங்கு ,உணவுப் பாதை நோய்கள், மலேரியா, சரும பாதிப்பு , வைரஸ் சமிபாடு ஆகியவை ஆகும்.

இவைகளை தவிர்க்க:

பழங்களே என்றும் எந்த காலத்திலும் சிறந்த உணவு. உப்பு உணவுகள் உடலில் நீரைத் தங்கச் செய்யும், நோயை கூட்டும், எனவே அதனைத் தவிருங்கள். அதிக அரிசி, தர்பூஸ் இவைகளை தவிர்த்து மூக்கடலை, பருப்பு வகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். சிவப்பு அரிசி, பழுப்பு அரிசி, ஓட்ஸ், பார்லி இவை சிறந்தது. பூண்டினை உணவில் சேருங்கள். பாலுக்குப் பதிலாக தயிர் மற்றும் பாதாம் எடுத்துக் கொள்ளலாம். அதிக கனமுள்ள எண்ணெய்களான கடலை எண்ணெய், நல்ல எண்ணெய் இவற்றினை குறைத்துக் கொள்ளுங்கள். புளி உபயோகத்தினை குறைக்க வேண்டும். அதிக அசைவ உணவுகளைத் தவிர்க்க வேண்டும் பச்சை காய்கறிகளை விட வேக வைத்த காய்கள் இக்காலத்தில் சிறந்தது.

மழைக்கால நீர் சுகாதாரமின்றி இருக்க அநேக வாய்ப்புகள் உண்டு. மழையினால் ஏற்படும் வயிற்றுப் போக்கு அதிக ஆபத்தில் கொண்டு விடலாம். நன்கு கொதித்தாறிய வடிகட்டிய நீரை பயன்படுத்துங்கள். வயிற்றுப் போக்கினை அலட்சியமாக கவனிக்காது விட்டு விடாதீர்கள். தும்மும் பொழுதும், இருமும் பொழுதும் கைதுண்டு கொண்டு வாய், மூக்கினை மூடிக் கொள்வது மற்றவர்களுக்கு கிருமி பரவாதிருக்க உதவும். இந்த நல்ல பழக்கத்தினை இன்றிலிருந்தே செயல்படுத்துங்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் இந்த பழக்கத்தினை ஏற்படுத்துங்கள். லெப்டோஸ்பைரோஸிஸ் எனப்படும் கிருமி பாதிப்பும் சுகாதார மற்ற நீரினாலேயே ஏற்படுகின்றது. மூளைக் காய்ச்சல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரக பாதிப்பு என அனைத்து பாதிப்பினையும் ஏற்படுத்தும் உடனடி அவசர சிகிச்சை என்பது

- ★ இருமல்
- ★ நெஞ்சு வலி
- ★ எச்சிலில் ரத்தம் ஆகும்.

இந்த அறிகுறிகள் இருப்பின் உடனடி மருத்துவரை அணுகவும்.

★ அடிக்கடி முகத்தினை தொட்டுக் கொண்டே இருந்தால் வைரஸ் கிருமிகள் வாய், கண், மூக்கு போன்ற அனைத்து வழிகளிலும் உடலினுள் சென்று விடும். எனவே அடிக்கடி முகத்தினை தொடுவதினை தவிர்க்கவும்.

★ கைகளை சோப் கொண்டு கழுவுவதே முதல் உடல் நல பாதுகாப்பு முறையாகக் கூறப்படுகின்றது. எனவே உணவு உண்ணும் முன்பாக ஒவ்வொரு முறையும் சோப் கொண்டு கை கழுவவும் அதே போன்று சமைக்கும் முன்பும் சவற்காரம் கொண்டு கை கழுவவும்.

மழைக்கால கவனம்: :

★ தெரு ஓரங்களில் இருக்கும் கடைகளில் சாப்பிடுவது குடும்பம் வெளியூரில் இருக்கும் ஆண்களுக்கு அவசியம். உள்ளூரில் இருக்கும் பலருக்கு விருப்பம். ஆனால் தண்ணீரும், காய்கறிகளும் சுத்தமாக இருப்பது மழைக் காலத்தில் கடினம். வயிற்றுப் போக்கு, வாந்தி என கிருமிகளின் பாதிப்பால் அநேகர் பாதிக்கப்படுகின்றனர். கவனம் தேவை.

★ கண்டிப்பாக நுளம்பு மருந்துகளை உபயோகித்தே ஆக வேண்டும். மலேரியா தவிர்ப்பு முறைக்காக மருத்துவ ஆலோசனை பெறவும். நில வேம்பு நீர் குடிக்கவும்.

★ தண்ணீரில் நனைந்து நடப்பது சந்தோசம் தான். கணக்கற்ற சரும வியாதிகள் காலில் வந்து விடும். எனவே நோயை நடந்து வரவேற்காதீர்கள்.

★ குடை, மழைகோட்டு இவை வாசல் அறையிலேயே இருக்கட்டும்.

★ குளிர்ந்த உணவுகள், பானகங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

★ குழந்தைகளை மழையிலோ, மழை நீரிலோ விளையாட விடாதீர்கள்.

★ மழை நீரில் நடக்கும் பொழுது மின்சார கம்பிகள் அதனுள் இருக்கலாம் பிள்ளைகளை எச்சரியுங்கள்.

★ கால்களை எப்பொழுதும் ஈரமில்லாமல் உலர்வாய் துடைத்து வைத்திருங்கள்.

★ சளி, வராது தவிர்க்கவும். வந்தால் உடனடி மருந்து எடுக்கவும். இல்லையெனில் பலநாள் படுக்க வைத்து விடும்.

★ ஏசி அறையினுள் நனைந்த முடி, நனைந்த உடல், ஈர உடை இவற்றுடன் செல்லாதீர்கள்.

★ ஆஸ்த்துமா, சர்க்கரை நோய் உடைய வரா வீட்டில் ஈர சுவர்கள் இருந்தால் எளிதில் பூஞ்சை நோய்கள் தாக்கி விடும். அதிக கவனம் தேவை.

★ அதிக கொழுப்பு உணவு, பாஸ்ட் புட் இவைகளைத் தவிருங்கள். வயிற்றில் எளிதில் கிருமி பாதிப்பு ஏற்படும். இக்காலங்களில் அதாவது மழை நேரங்களில் அதிக ஜீரண கோளாறு ஏற்படும். கிருமிகள் அதிக வீரியம் கொண்டதாக இருக்கும்.

★ மழைக் காலங்களில் பழங்களைத் தவிர்ப்போர். அநேகர் கிடைக்கும் பழங்களை கண்டிப்பாய் உண்ண வேண்டும். இதனால் வைட்டமின் சக்தியும், நோய் எதிர்ப்பு சக்தியும் கூடும்.

★ உலர் பழங்கள், கொட்டைகள் மிகவும் நல்லது.

★ சூப் உட் கொள்ள பழகிக் கொள்ளுங்கள். அதில் பூண்டு, கிராம்பு இவைகளை சேர்ப்பது உடலுக்கு நன்மை பயக்கும்.

★ மழைக்காலம் என்றால் தண்ணீர் குடிப்பது குறைந்து விடும். சுத்தமான எட்டு க்ளாஸ் நீர் உடலுக்கு மிக அவசியம்.

★ மழைக் காலம் என்றால் காரசார உணவுகளும், மசாலா உணவுகளும், உப்பு கூடிய உணவுகளும் அனைவரையும் ஈர்க்கும். ரத்த கொதிப்பு உடையவர்கள் இவ்வகை உணவுகளை தவிர்க்க வேண்டும். அவை அதிக உலர், ரத்த அழுத்தத்தில் கொண்டு விடும்.

★ வேப்பிலை, பாகற்காய் போன்ற கசப்பு உணவுகள் அலர்ஜி, சரும கிருமி பாதிப்பிலிருந்து உதவுவதாக கூறப்படுகின்றது. வேப்பிலை பொடியினை சருமத்தில் சிறிது தடவி குளிக்கலாம்.

★ தண்ணீரை வீட்டிலோ வீட்டை சுற்றியோ தேங்க விடாதீர்கள்.

★ அறைகள் அடைத்து மூடி வைக்காதீர்கள். அறைக்கு வெளிச்சமும் காற்றோட்டமும் அவசியமே.

★ வெதுவெதுப்பான நீரில் குழந்தைகளை குளிக்க வையுங்கள்.

பாதுகாப்பு

★ அவசர நேரங்களில் மின் இணைப்பினை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகளின் சுவிட்சுகள் இருப்பிடம் அமைய வேண்டும்.

★ மின் சாதனங்கள் உபயோகத்தில் இல்லாத பட்சத்தில், சுவிட்சை ஆப் செய்து வைக்கவும்.

★ மின்சார தீவிபத்துக்களுக்குண்டான தீயணைப்பான்களை மட்டுமே மின்சாதனங்களில் தீவிபத்து ஏற்படும்போது பயன்படுத்த வேண்டும். உலர்ந்த மணல், கம்பளிப் போர்வை, உலர்ந்த ரசாயணப் பொடி (ஈஇக)அல்லது கரியமில வாயு (இணி2) ஆகிய தீயணைப்பான்களைப் பயன்படுத்தவும். மின்சாரத்தினால் ஏற்பட்ட தீயினை தண்ணீர் கொண்டு அணைக்க முயற்சிக்க வேண்டாம்.

★ தீ விபத்து மின்சாரத்தினால் ஏற்பட்டதெனில், உடனே மெயின் ஸ்விட்சை நிறுத்திவிட வேண்டும்.

★ எந்த மின் சர்க்யுட்டையும் அளவுக்கு மீறி பளு ஏற்றக் கூடாது. ஸ்விட்ச் மற்றும் பியூஸ் போன்றவைகளை மாற்றும் போது சரியான அதே அளவு திறன் கொண்டவைகளையே பொருத்தவேண்டும்.

★ இடி அல்லது மின்னலின்போது வெட்ட வெளியில் இருக்காதீர்கள். இடி அல்லது மின்னலின்போது உடனடியாக கான்கிரிட் கூரையிலான பெரிய கட்டிடம் வீடு போன்ற பெரிய கட்டிடங்களிலோ, உலோகத்தால் மேலே மூடப்பட்ட பேருந்து, கார், வேன் போன்ற வாகனங்களிலோ தஞ்சமடையுங்கள். இடி அல்லது மின்னலின்போது குடிசை வீட்டிலோ, மரத்தின் அடியிலோ, பேருந்து நிறுத்த நிழற்குடையின் கீழோ, தஞ்சம் புகாதீர்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை விட்டு அகலுங்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது தஞ்சம் அடைய அருகில் எதுவும் இல்லாதபட்சத்தில், மின் கம்பிகள், மின் கம்பங்கள், மரங்கள், உலோக கம்பி வேலி போன்றவை இல்லாத தாழ்வான பகுதிகளை தேர்ந்தெடுங்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது டி.வி., மிக்ஸி, கிரைண்டர், கணினி மற்றும் தொலைபேசி போன்றவற்றை பயன்படுத்தாதீர்கள்.

★ இடி அல்லது மின்னலின்போது திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு போன்றவற்றின் அருகில் இருக்காதீர்கள்

நீர் நிலைகள் மற்றும் ஆறுகளில் இருந்து மிகவும் தொலைதூரத்தில் சென்று குடியிருப்பதன் மூலம் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களை தவிர்த்து விடலாம் என்றாலும் வாழ்க்கைக்குரிய ஆதாரத்தைப் பெறுவதற்கும் பயணம் மற்றும் வர்த்தக வசதிகளின் காரணமாகவும் பன்னெடுங் காலம் தொட்டே மக்கள் நீர்நிலைகளின் அருகிலேயே குடியிருந்து வருகிறார்கள் வெளியில் சென்று வந்தவுடன் கால்களை நன்றாக சவர்க்காரம் போட்டு கழுவுவோம் என்றும் சுத்தமாய் இருந்து நம்மை நாம் பாதுகாப்போம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.